**வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்**

**VALVAI BLUE'S SPORTS CLUB**

1961-2011

வல்வை புளூஸ் பொன் விழா மலர்

வல்வை புளூஸ்

# பொன் விழா மலர்

**1961-2011**

1961 - 2011

VALVAI BLUE'S

GOLDEN JUBILEE

SPORTS CLUB



வல்வை எனும் நாமத்தைப் பொன் எழுத்துக்களால் பொறித்த வெற்றி நாயகர்களுக்குத் தலை வணங்குகின்றோம்.

# சமர்ப்பணம்

ஐம்பது வருடத்துப் பதிவுகள் அடங்கிய இந்த ஆவணம்
வல்வை புளூஸ் கழகத்தின் ஆரம்பகர்த்தாக்களாகவும்,
விளையாட்டு வீரர்களாகவும், ஆதரவாளர்களாகவும்
உயிர்ப்புடன் செயலாற்றி இன்று மரணத்துள்
வாழ்பவர்களின் காலடிகளுக்கு சமர்ப்பணம்!!

# பொருளடக்கம்


1. நுழைவாயில் ........ iii
2. ஆசிச் செய்தி ........ vii
3. கனவு ஒன்று கழகமானது ........ 1
4. ஆதரவாளர்களும் அபிமானிகளும் ........ 2
5. வல்வை புளூஸ் அன்று. இன்று (புகைப் படங்கள்) ........ 10
6. எமது வேண்டுகோள் ........ 12
7. ஆரம்பகால விளையாட்டு வீரர்கள் ........ 13
8. 70களில் விளையாடிய வீரர்கள் ........ 41
9. 80 களில் விளையாடிய வீரர்கள் ........ 89
10. 90களில் விளையாடிய வீரர்கள் ........ 102
11. உயரம் x நிறை சுற்றுப் போட்டி (Hight x Weight) ........ 124
12. கரப்பந்தாட்டம் ........ 125
13. வலைப் பந்தாட்டம் (பெண்கள்) ........ 158
14. கிரிக்கெட் ........ 162
15. ரொரண்டோ புளூஸ் (கனடா) ........ 166
16. வாழ்த்துச் செய்தி நலன்புரிச் சங்கம் -ஐக்கிய இராச்சியம் ........ 173
17. வாழ்த்துச் செய்தி வல்வை புளூஸ் -ஐக்கிய இராச்சியம் ........ 174
18. வல்வை புளூஸ் கழகம் - ஐக்கிய இராச்சியம் ........ 175
19. வல்வை புளூஸ் கழகம் - பிரான்ஸ் ........ 186
20. வல்வை புளூஸ் கழகம் - இராமேஸ்வரம் ........ 187
21. சாதனையாளர்களும், சாதனை முயற்சிகளும் ........ 190
22. தடகளத்தில் நாம் ........ 198
23. நன்றி சொல்வோம் ........ 201
24. சாதனைப் பதிவுகள் ........ 204



Graphics & Layouts : Nisa Arts , +94 773 48 9808, www.nisaart.com
Printed by: Nawasakthi Enterprises +94 112 39 5305


# மைதானத்துக்குள் நுழைவதற்கு முன்னர்...

வல்வை புளூஸ் என்பது வெறுமனே வல்வெட்டித்துறையின் விளையாட்டுக்கான ஒரு கழகம் என்ற நிலையில் இருந்து இந்த ஐம்பது வருட பரிணாமத்தில் வளர்ந்து அது வல்வையின் ஆழமான வாழ்வியலோடு இணைந்ததாக விளங்குகின்றதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. எம் எல்லோரையும் ஒன்றிணைப்பதில் வல்வை புளூஸ் கழகமும் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த வல்வை புளூஸ் கழகம் இப்போது பொன்விழா ஆண்டில் எழுந்து நிற்கின்றது. ஐம்பதாவது ஆண்டுகள் என்பது மிக நீண்ட காலம். அரை நூற்றாண்டு. பலமாற்றங்களைத் தனக்குள்ளே கொண்டிருக்கும் பெரும் காலமிது.. இந்த ஐம்பது ஆண்டுகளில் எத்தனையோ வீரர்கள் வல்வை புளூஸ் கழக அணியில் ஊரிலும் புலத்திலும் விளையாடி இருக்கிறார்கள். இப்போதும் விளையாடி வருகிறார்கள்.

இந்தப் பொன்விழாப் பொழுதில் வல்வை புளூஸ் கழகச் சீருடையுடன் மைதானங்களில் விளையாடிக் கொண்டிருக்கும் வீரர்களின் சிறப்புகளுக்கும், முயற்சிகளுக்கும், வெற்றிகளுக்கும், பின்னால் ஐம்பது ஆண்டுகால வரலாறு கண்ணுக்குத் தெரியாமல் ஒளிவீசிக் கொண்டு இருக்கின்றது. மிகவும் குறைந்தவளங்களுடன் அகில இலங்கை ரீதியான போட்டிகளில் கூட வெற்றி என்ற உச்சத்தைத் தொட்ட ஆரம்பகால வல்வை புளூஸ் வீரர்களின் பெயர்களும், அவர்களின் சாதனைகளும் தெரிய வேண்டியது ஒரு மிகப் பெரும் அவசியமான தேவையாக இருக்கின்றது. மூன்று, நான்கு தலைமுறைகளின் தொடர்ச்சிதான் இன்றைய பொன்விழா ஆண்டு. தந்தையின் தந்தை, தாத்தா, பெரியப்பா இவர்கள் விளையாடியது கூடப் பேரப்பிள்ளைகளுக்கும், பெறாமக்களுக்கும் தெரியாத அளவிலேயே எமது வரலாற்றுப் பதிவு இருந்து வந்துள்ளது. வல்வை புளூஸ் கழகத்துக்கும் இத்தகைய பதிவு முக்கியமானதாக இருக்கின்றது. இந்தப் பொன்விழா ஆண்டில் அதற்காக முயற்சி செய்யும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அலைகள் என்ற இணையத்தில் கி.செ.துரை அவர்கள் எழுதிவரும் கரப்பந்தாட்ட நினைவுக் குறிப்புகளைப் படித்த பின்னர், வல்வை புளூஸ் கழகத்தினது ஐம்பது வருட வரலாற்றையும் அவ்வாறே நாங்கள் எழுதினால் என்ன என்று கட்டி அண்ணாவின் மகன் சங்கர் ஒருநாள் கேட்டார். இப்போது நீங்கள் கையில் வைத்திருக்கும் இந்த ஐம்பது ஆண்டுகால ஆவணத்தைத் தயாரிப்பதற்கான முதற்பொறியும் அதுதான். ஆவணப்படுத்துதலின் முக்கியத்துவம் உணரப்படாததால் கடந்த ஐம்பது ஆண்டுகால ஆவணங்கள், பதிவுகள், சான்றுகள் எவ்வளவு தூரம் பாதுகாப்பானவைகளாக இருக்கும் என்பதே முதல் கேள்வியாகவும், பயமாகவும் இருந்தது. அவற்றைச் சேகரிக்க மிகவும் சிரமப்பட வேண்டி இருக்கும் என்பது இந்தப் புத்தகத்தைச் செதுக்கத் தொடங்க முன்னரேயே புரிந்து கொண்ட ஒரு விடயமாக இருந்தது. ஒருவரோ இருவரோ சேர்ந்து செய்வதை விட, ஒரு கழகத்தின் அனுசரணையுடன் ஒரு குழுவாகச் சேர்ந்து செய்வதே காத்திரமானதாகவும், பிழைகள் குறைவானதாகவும் இருக்கும் என்பதால் முதலில் இங்கிலாந்து வல்வை புளூஸ் கழகப் பொதுக் கூட்டத்தில் இதை நூலாக்குவதற்கும் அதனைத் தயாரிக்கும் குழுவுக்கும் அங்கீகாரமும் அனுமதியும் வழங்கப்பட்டது. தொடர்ந்து தாய் கழகமான

வல்வையில் உள்ள வல்வை புளூஸ் கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு அவர்களுடைய அனுமதியும் பெற்று, கனடாவில் உள்ள ரொரண்டோ புளூஸிற்கும் விபரங்கள் அறிவிக்கப்பட்டு அனைவருடைய ஆதரவுடனும் இவ் வேலைத் திட்டத்தை ஆரம்பித்தோம்.

பொன்விழா நூல் ஆக்கக்குழுவில் ஆரம்பகால உதைப்பந்தாட்டப் போட்டிகள் ஒவ்வொன்றுக்கும் சென்றவரும், வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் விளையாடியவரும், வல்வை புளூஸ் கழக வரலாற்றைத் தரவுகளுடனும், நிகழ்வுகளின் முழுமையுடனும் நினைவில் வைத்திருக்கும் திரு. செ. பிருதுவிராஜன் (துரைமணி). மிகச் சிறியவயதிலிருந்தே ஊர் விடயங்களிலும், நிர்வாகங்களிலும் ஈடுபட்டவரும், உதைபந்தாட்ட வீரரும், ஓட்ட வீரரும், இங்கிலாந்து வல்வை புளூஸ் கழகத்தின் நிர்வாகங்களில் செயற்பட்டு வருபவருமான திரு.க.சதானந்தவேல் (சதான்), 70களின் ஆரம்பங்களிலேயே உதைபந்தாட்டத்தில் ஆழமான ஈடுபாடு கொண்டு வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் விளையாடத் தொடங்கி இன்றுவரை அதன் வீரராகவும், செயற்பாட்டாளராகவும், பயிற்சியாளராகவும், நிர்வாகியாகவும் விளங்கி வரும் திரு. த. உதயணன் (உதயண்ணா), வல்வை புளூஸ் கழகத்தின் உதைபந்தாட்ட அணியில் விளையாடியவரும், புலம்பெயர்ந்து வந்த பின்னரும் உதைபந்தாட்டக் கழகங்களின் நிர்வாகங்களில் அனுபவம் கொண்ட திரு. த.சிவகணேசன் (தங்ககட்டி), உதைபந்தாட்ட வீரரும், புலம்பெயர்ந்து வந்த பின்னரும் நீண்டகாலம் உதைபந்தாட்டக் கழகங்களின் நிர்வாகங்களில் ஈடுபட்டவரும், பயிற்சியாளராக இருந்தவரும், இப்போதும் விளையாட்டுப் போட்டிகளையும் சுற்றுப்போட்டிகளையும் நிர்வாகச் சிறப்புடன் நடாத்தி வரும் திரு.தே.சங்கர் போன்றோருடன் எனது (ச.ச.முத்து) பங்களிப்பும் இடம்பெறுகின்றது.

மிகவும் கடினமானது என்றபோதிலும், எமது நூல் ஆக்கக் குழு ஒரு கூட்டுவேலையாக இதற்குள் இறங்கியது. ஒரு துண்டு ஆவணம் கூடக் கையில் கிடைக்காத நிலையில் ஐம்பது ஆண்டுகாலப் பதிவுகளைத் தேடியது. நூல் ஆக்கக் குழு உறுப்பினர் ஒவ்வொருவரும் தமது கழக எல்லைகளுக்குள்ளும், தமது ஞாபக வட்டத்துக்குள்ளும் பதிவுகளைத் துளாவினார்கள். சங்கர் தொடர்ச்சியாக வல்வைக்கும், அவுஸ்திரேலியாவுக்கும், கனடாவுக்கும் தொடர்பு கொண்டு விடுபட்டுப் போன சான்றுகளையும் வீரர்களின் விபரங்களையும் சேகரித்ததுதான் இந்தப் புத்தகம் இவ்வளவு சிறப்பாக வெளிவரக் காரணமாகும். அதனைப் போலவே ஒவ்வொரு உறுப்பினரும் தமது நேரங்களையும், ஒத்துழைப்பையும், சேகரிப்பையும் வழங்கி இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

அன்பு உறவுகளே,

நூல் ஆக்கக் குழுவினராகிய நாம் சிலவரையறைகளை இந்த நூலுக்காக வகுத்திருந்தோம். கடந்த ஐம்பது ஆண்டுகளாக வல்வையில் வல்வை புளூஸில் விளையாடிய அனைவரின் விபரங்களும் சேகரிக்கப்பட வேண்டும். அவர்களைப் பற்றிய குறிப்புகள் எழுதப்பட வேண்டும். எமக்குக் கிடைக்கும் தகவல்கள், சான்றுகள் அனைத்தும் கூடியவரையில் மீளவும் சரி பார்க்கப்பட வேண்டும். யாருடைய சிறப்புகளையும் குறைத்துக் குறிப்பதோ, அளவுக்கு அதிகமாக மிகைப்படுத்தி எழுதுவதையே தவிர்ப்பது, கூடியவரையில் முந்தைய தலைமுறை விளையாட்டு வீரர்களைப் பற்றிய குறிப்புகளை விபரமாக எழுதுவது என்பனதான் அந்த வரையறைகள். எம்மால் முடிந்த அளவுக்கும், அதற்கும் அதிகமான முயற்சி எடுத்தே இந்த ஆவணங்களைத் திரட்டி இங்கு அச்சிட்டு உள்ளோம். அப்படியும் சில வீரர்களின் விபரங்கள் இங்கு தவறுதலாக விடுபட்டுப் போயிருக்கலாம். அதற்காக நாம் வருந்துகின்றோம். அப்படியானவர்கள் தமது விபரங்களையோ,



தமக்குத் தெரிந்தவர்களின் விபரங்களையோ கீழே உள்ள மின்னஞ்சல்களுக்கு அனுப்பினால் இனிவரும் பதிவுகளில் நிச்சயமாகச் சேர்த்துக் கொள்ளுவோம்.

Shankar.t@hotmail.co.uk அல்லது ilamparavai@hotmail.com

இதனை ஒரு முழுமையான ஆவணப் பதிவாகவோ, அனைத்தும் தேதிவாரியாகப் பதிவு செய்யப்பட்ட ஒன்றாகவோ நாம் பிரகடனப்படுத்தப்போவது இல்லை. இது ஒரு முயற்சி. பல நூற்றுக்கணக்கான மணித்தியாலங்களை எழுதுவதற்கும், தொடர்புகளைப் பெறுவதற்கும் பழைய வீரர்களுடன் கதைப்பதற்கும், புகைப்படங்களைத் திரட்டுவதற்கும், புத்தகத்தை வடிவமைக்கவும், சரிபார்க்கவும், செலவிட்டுத்தான் இந்தப் புத்தகத்தை உங்களின் கைகளில் தவழவிட்டுள்ளோம். இதனை ஒரு முன்முயற்சியாகக் கொண்டு இனிவரும் காலங்களில் இதனைவிடச் சிறப்பான பதிவுகள் எமது கழகத்துக்கு செய்ய வேண்டும் என்பதே எமது விருப்பு. இந்த ஆவணப் புத்தகம் உங்கள் கையில் அழகான அச்சுடன் வல்வை புளூஸ் கழக ஐம்பது ஆண்டுகால நினைவை மீட்டுவதற்காக ஒத்துழைப்புத் தந்த அனைவருக்கும் பொன்விழா நூல் ஆக்கக் குழுவினரின் சார்பில் நன்றிகள்.

*பொன்விழா மலர் ஆக்கக் குழுவின் சார்பில்*
*ச. ச. முத்து*

## பொன்விழா மலர் ஆக்கக்குழு


செ. பிருதுவிராஜன்


த.உதயணன்


த.சிவகணேசன்


க.சதானந்தவேல்


ச.ச.முத்து


தே.சங்கர்

# ஆசிச் செய்தி



மேற்படி கழகம் ஆரம்பித்து ஐம்பது ஆண்டுகள் நிறைவடைந்ததையிட்டு மிகவும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். எங்கள் ஊரில் பல சிறிய கழகங்கள் உருவாகி வெளியூர் கழகங்களுடன் விளையாடும் பொழுது கூடுதலான தோல்விகளைத் தான் அடைந்தோம்.

ஆகவே, உள்ளூரில் உள்ள சிறந்த வீரர்களை ஒன்று திரட்டி ஒரு கழகம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் நினைவில் உருவானது தான் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம். இக்கழகம் உருவாகக் காரணமாக இருந்தவர்கள் எல்லோரையும் என்னால் நினைவு கூர முடியவில்லை. இருந்தும், ஒரு சிலரை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

| | |
|---|---|
| திரு. ஏ.வி. அருணாசலம், | திரு. எம். தங்கவேல், |
| திரு. எஸ். இராமநாதன் | திரு. என். தனபாலசிங்கம் |
| திரு. எஸ். அருட்பிரகாசம் | திரு. எஸ். அழகரெத்தினம் |
| திரு. கே. அருமைச்செல்வம் | திரு. எஸ். தர்மரெத்தினம் |
| திரு. கே. சண்முகானந்தம் | திரு. வி. அரசரெத்தினம் |
| திரு. எஸ். சந்திரலிங்கம் | திரு. சு. பூரணச்சந்திரன் |
| திரு. எஸ். ராஜேந்திரன் | திரு. மயிலேறும்பெருமாள் ஆகியோர். |

வல்வை புளூஸின் ஆரம்ப கால கட்டத்தில் கழகங்களிற்கு இடையிலான 4x440- அஞ்சல் ஓட்டப் போட்டி மும்முரமாக நடைபெற்ற காலம். சிறிது காலத்திற்குப் பின் இப் போட்டியை நிறுத்தி விட்டார்கள். இப் போட்டி நடைபெற்ற கால கட்டங்களில் வல்வை புளூஸ் எங்கு எந்தப் போட்டியில் கலந்தாலும் முதல் இடத்தையே பெற்று வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், வல்வை புளூஸ் கழகம் சிறப்புடையதாகச் செயல்பட்டு மேலும் மேலும் பாராட்டுக்களைப் பெற்று சிறந்து விளங்க வேண்டும் என்று விரும்பி முழு மனத்துடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இவன்

*இ. சுந்தரலிங்கம்*

# ஆசிச் செய்தி



**வல்வை புளூஸ் நண்பர்களுக்கு வணக்கம்.**

கடந்த ஐம்பது வருடங்களாக ஏற்படுத்திய சாதனைகளை நினைவு கூர்வதற்காகவும், கடந்தகால வீரர்களைக் கௌரவிப்பதற்காகவும், இனிவரும் ஆண்டுகளில் சிறப்பாகச் செயல்படுவதற்கு ஊக்கம் அளிக்கும் நோக்கத்திற்காகவும் ஒரு சிறப்பு மலரை வெளியிடுவதற்கு லண்டன் வாழ் வல்வை புளூஸ் அங்கத்தினர் முன் வந்திருப்பதற்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

பல தலைமுறைகளுக்கிடையே ஒரு புரிந்துணர்வையும் நட்புணர்வையும் ஏற்படுத்தியதோடு பல நாடுகளில் வசித்து வரும் வல்வையருடன் ஊரிலுள்ள இளைஞர்கள் ஒரு உறவுப்பாலத்தைக் கட்டி எழுப்புவதற்கும் வல்வை புளூஸ் கழகம் உறுதுணையாக விளங்கியுள்ளது. இளைஞர்களுக்குள்ளே மறைந்து கிடந்த திறமைகளை வெளிக் கொண்டுவந்து அவர்களின் சக்தி அளவைக் (Energy Level) கூட்டுவதில் வல்வை புளூஸ் பெரும் பங்கு வகித்துள்ளது. மாணவர்கள் கல்வி கற்பதற்கும் மற்றவர்கள் தாங்கள் செய்யும் தொழிலில் ஆர்வத்துடன் செயல்படுவதற்கும் இந்தச் சக்தியானது உதவி புரிந்துள்ளது. அத்துடன், மற்றைய ஊரவர்களுடனும் சமூகங்களுடனும் ஒரு நட்பான உறவை வளர்த்துக் கொள்வதிலும் பெரும் பங்கு வகித்துள்ளது.

இப்படியான பல நன்மைகளைச் செய்து வருகிறோம் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்வதற்காகவும், தொடர்ந்தும் ஊக்கத்துடன் செயல்பட வேண்டுமென்ற தாகத்தை ஏற்படுத்துவதற்காகவும் மலரை வெளியிடுவதில் உற்சாகத்துடன் செயல்பட்டு வரும் நண்பர்களைப் பாராட்டுகிறேன்.

இந்த நேரத்தில் ஒரு வேண்டுகோள், லண்டன் முதலான பல வெளிநாடுகளில் செயல்பட்டுவரும் வல்வை புளூஸ் வீரர்களுக்கு உள்ள பல வசதிகள், சாதனங்கள் ஊரிலுள்ள வீரர்களுக்கு இல்லை. இடைவெளி மிக அதிகமாக உள்ளது. ஊரிலுள்ள வீரர்களுக்கான வசதிகளை மேம்படுத்திக் கொடுக்கும் கடமை வெளிநாடுகளில் வசிக்கும் வல்வை புளூஸ் அபிமானிகளுக்கு இருக்கிறது. ஐம்பது ஆண்டுகள்

நிறைவைக் கொண்டாடும் இந்த நிகழ்வு ஏற்படுத்திக் கொடுக்கும் உற்சாகம் இதற்கு உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

வல்வை புளூஸை ஆரம்பித்து அது வேகமாக வளர்ந்து வருவதற்குக் காரணமாக இருந்த நண்பர்கள் கூட்டத்தில் நானும் ஒருவன் என்பதில் பெருமைப்படுகிறேன். ஆனாலும் அந்த நண்பர்கள் கூட்டத்தில் இன்று பலர் எம்முடன் இல்லை. வல்வை புளூஸ் மேன்மேலும் வளர்ந்து உலகத்தரம் வாய்ந்த வீரர்களை உருவாக்குவதற்கும் ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை ஏற்படுவதற்கும் பங்காற்ற வேண்டுமென்று எனது நண்பர்கள் சார்பிலும் வேண்டிக் கொள்கிறேன்.

இந்த மலரை வெளியிடுவதில் உற்சாகமுடன் ஈடுபட்ட குழுவினரையும், உதவியாக இருந்த புளூஸ் வீரர்களையும் அபிமானிகளையும் மீண்டும் பாராட்டுகிறேன்.

அன்புடன்
*சபா. ராஜேந்திரன்*



# ஆசிச் செய்தி



**வணக்கம்!**

ஐம்பது ஆண்டுகள் ஓடி விட்டன. நேற்று போல இருக்கின்றது வல்வை புளூஸ் தொடங்கப்பட்ட அந்தநாள். அஞ்சல் ஓட்டத்துக்காக ஆரம்பிக்கப்பட்டு இன்று நீண்ட ஓட்டம் ஓடி விழுதுகள் எறிந்து சடைத்து நிற்கின்றது, வல்வை புளூஸ். மிகவும் சந்தோசமாக இருக்கின்றது. இதன் வளர்ச்சிக்காக இதனை வழிநடாத்தியவர்கள், இதன் ஆதரவாளர்கள் அனைவரதும் ஒன்றிணைந்த கூட்டு முயற்சிதான் இன்றைய வல்வை புளூஸின் வளர்ச்சி.

இதில் எவருடைய முயற்சியையும் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடியது அல்ல. அனைவரும் முழுமனதுடன் செயற்பட்டதை நான் புளூஸ் கழகத்தை வழி நடாத்திய காலங்களில் கண்டு இருக்கின்றேன். வல்வை புளூஸ் கழகத்தின் வெற்றியே ஒற்றுமை என்ற மந்திரம்தான். ஐம்பது ஆண்டுகளை வெற்றிகரமாகத் தொட்டு நிற்கும் வல்வை புளூஸ் கழகத்தின் ஆரம்பகால வீரர்கள் அந்த நேரம் இருந்த மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை வைத்துக் கொண்டு அதனுடன் தமது உச்சமான ஈடுபாட்டையும் வழங்கி வெற்றிகளை குவித்தார்கள். அவர்களின் ஈடுபாட்டையும், ஆற்றலையும் பாடங்களாகக் கொண்டு புதிய தலைமுறை வீரர்களுக்காக முழுமூச்சுடன் மைதானங்களில் சிறப்பாக விளையாட வேண்டும். இதன் மூலம் இன்னும் நூறு வருடங்களுக்கு பின்னரும் வல்வை புளூஸ் கழகத்தின் கொடி வெற்றிகளுடன் பறக்க வைக்க முடியும் என நம்புகின்றேன்.

மென்மேலும் வல்வை புளூஸ் கழகம் தனது நீண்ட பயணத்தில் வெற்றிகளுடன் தொடர வேண்டும் என்று மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

நன்றி
அன்புடன்
*இ.சிவகுரு (தாத்தா)*

# ஆசிச் செய்தி



இப் பொன் விழாவை என் விழாவாக, எம்மவர்களின் விழாவாக நினைத்துப் பெருமைப்படுகிறேன். யாழ் மாவட்டத்தின் சிறந்த கரப்பந்தாட்ட வீரராக, உதைபந்தாட்ட வீரராக, சிறந்த விளையாட்டு வீரராக உலகெலாம் வாழும் வல்வெட்டித்துறை மக்களுக்கும், மற்றவர்களுக்கும் என்னை இனம் காட்டித் தந்த பெருமை வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்திற்கே உரியதாகும். எனக்கும் புளூஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் உள்ள உறவு தந்தை, தாய், மகன் உறவு போன்றது. தந்தையாகத் தாயாக இருந்து யாழ் மாவட்டத்தின் தலை சிறந்த விளையாட்டு வீரனாக என்னை ஆக்கிக் கொடுத்தது வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம். கிட்டத்தட்ட 28 வருடங்கள் கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், அஞ்சல் ஓட்டம், குண்டெறிதல், நீளம் தாண்டுதல், பூப்பந்தாட்டம் மற்றும் பல போட்டிகளில் பங்கு பற்றி வல்வை புளூசின் வெற்றிக்காக உழைத்துப் பெருமை சேர்த்துக் கொடுத்து மகனாக எனது கடமையைச் செய்துள்ளேன். வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகம் ஆரம்பித்த காலம் முதல் இன்றுவரை வல்வை புளூஸ் விளையாட்டுக்கழக வளர்ச்சிக்காகிய பங்களிப்பை என்னால் முடிந்தவரை செய்து வருகின்றேன்.

நாட்டின் நிலைமை சீர் இல்லாத காரணத்தால் எத்தனையோ இடர்கள் வந்த போதும் வல்வெட்டித்துறையில் அணையாத ஒளிவிளக்காய் பிரகாசிக்கும் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வழிநடத்தி வந்த திரு. சிவகுரு (தாத்தா அப்பா) அவர்கள், தம்பிமார் தங்கவேல், குணநாதன், தனபாலசிங்கம், (குட்டித்தம்பி), குமாரவேல் இன்னும் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட இப்போதும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகம் பேரும் புகழும் பெற உறுதுணையாயிருந்த, இருக்கும் வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து விளையாட்டுக் கழகங்களிற்கும் எனது நன்றியைத் தெரியப்படுத்த கடமைப்பட்டவனாவேன். வல்வை மண்ணின் பெருமையை உயர்த்த லண்டனில் பொன் விழாக் கொண்டாட்டத்தை நடாத்தி மலர் வெளியீட்டினை நடத்த முனைந்த எம் மண்ணின் மைந்தர்களுக்கும், குறிப்பாக நிர்வாகத்தில் பங்காற்றி விழாவுக்காக அயராது உழைத்து வரும்

உதயணன், சரவணமுத்து, சதான், தங்கக்கட்டி, பிருதிவீராஜன், எனது மகன் சங்கர் ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். லண்டன், கனடா, பிரான்ஸ் என்று உலகமெல்லாம் பரந்துள்ள எமது புளூஸ் விளையாட்டுக் கழகம் மென்மேலும் வளர்ச்சியுற்று பொன் விழாவினைப் போன்று வைர விழாவினையும் கொண்டாட அருள் பாலிக்குமாறு எல்லாம் வல்ல முத்துமாரித்தாயை வேண்டுதல் செய்து அறிவார்ந்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

அன்புடன்
உங்கள் கட்டி அண்ணா
*ச.க.தேவசிகாமணி*






# ஆசிச் செய்தி



வல்வை புளூஸ் தனது பொன் விழா ஆண்டினைக் கொண்டாடும் இவ்வேளை அதன் பரிணாம வளர்ச்சியினைப் பார்த்து பூரித்தவன் என்ற வகையிலும் முடிந்தவரை பங்களிப்பினை நல்கியவன் என்ற வகையிலும் இன்று மிக உளம் மலர பெருமிதம் கொள்கிறேன்.

முந்தைய காலங்களில் கோர்த்து வைத்த முத்து ஆரமென நன்றான அணிகலனாக எங்கும் பிரகாசமாய் ஜொலித்த வண்ணம் இருந்திருந்தோம். கால சூழ்வினையால் அறுந்து சிதறி முத்துக்களாய் ஆளுக்கொரு திக்கெனப் பிரிய நேரிட்டது. ஆயினும் சென்ற இடங்களிலெல்லாம் சிதறி சில முத்துக்கள் ஒன்றாகி அவ்வவ் இடங்களில் எமது திறமையையும் பெருமையையும் குலையாது காத்தும் வந்துள்ளோம்.

பொன் விழாவினைக் கடந்தும் அடுத்து வரும் பவளவிழா. வைரவிழாவென வல்வை புளூஸ் தனது பெயரையும் தற்காத்து வரும் வண்ணம் இனி வரும் இளைய தலைமுறையினர் முன்னிற்க வேண்டி வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்
*மு. தங்கவேல்*

# கனவு ஒன்று கழகமானபோது...





இ.சுந்தரலிங்கம்


சபா. இராஜேந்திரன்


வ. அரசரெட்ணம்


சு. பூரணச்சந்திரன்


A.V. அருணாசலம்


மு.மயிலேறும் பெருமாள்

உலகத்தில் இன்று வெற்றிகரமாகத் திகழும் நிறுவனங்கள், அமைப்புகள், கழகங்கள் ஒவ்வொன்றிற்கும் பின்னால் யாரோ ஒருவரினதோ, பலரதோ கனவுதான் இருக்கிறது. வல்வைக்கு என்று வெற்றிகரமாக ஒருகழகம் தேவை என்ற கனவு வல்வை புளூஸ் கழகமாக அங்குரார்ப்பணம் ஆகியது. அஞ்சல் ஓட்டப் போட்டி ஒன்றுக்காக இ. சுந்தரலிங்கம், (சுந்தரி அண்ணா), சபா. இராஜேந்திரன் (குட்டிமணி அண்ணா), வ. அரசரெட்ணம், சு. பூரணச்சந்திரன், மு.மயிலேறும்பெருமாள், A.V. அருணாசலம் ஆகியோரால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வல்வை புளூஸ் தனது பயணத்தில் வெற்றிகள், சாதனைகள், வளர்ச்சி என்பனவற்றுடன் இன்று பொன்விழா ஆண்டில் பெருமையுடன் நிற்கின்றது.

# வல்லை புளூஸ் விளையாட்டுக்கழக அபிமானிகளும் ஆதரவாளரகளும்





**1961**ம் ஆண்டு சிதம்பராக்கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் கழகங்களுக்காகிய அஞ்சல் ஓட்டப்போட்டியின் போதே புளூஸ் என்னும் கழகப் பெயர் பதியப்பட்டது. புளூஸ் என்பது சிதம்பராக் கல்லூரியின் நிறமான கடும் நீலம், இளம் நீலம் இரண்டையும் சேர்த்தே குறிப்பதாக அமைந்துள்ளது. அந்த அஞ்சல் ஓட்டப் போட்டியில் ஓடிய திரு.இ.சுந்தரலிங்கம், திரு.எஸ். பூரணச்சந்திரன், A.S.இராசேந்திரன், திரு. V. அரசரெத்தினம் இவர்களுடன் திரு. A.V. அருணாசலம், திரு. K.மயிலேறும்பெருமாள், திரு. S.அருட்பிரகாசம், திரு. V. கார்த்திகேயன், திரு. S. யோகச்சந்திரன், திரு. S.தருமரெத்தினம், திரு. K. தேவசிகாமணி என்று அன்று வல்வையில் இருந்த வீரர்கள் மற்றும் இன்னும் பலரது முயற்சியிலே 1962ஆம் ஆண்டு வல்வை புளூஸ், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களை முன்னெடுக்கும் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகமாக மாற்றம் அடைந்தது. 1962ம் ஆண்டு வல்வை புளூஸ் கழகத்திற்குத் தலைவராக திரு.A.V. அமிர்தேஸ்வரராசா அவர்களும் உபதலைவராக திரு. V.முருகுப்பிள்ளை அவர்களும், செயலாளராக திரு.இ. கதிர்காமர் அவர்களும் மற்றும் நிர்வாகத்தினரும் தெரிவு செய்யப்பட்டார்கள். உதைபந்தாட்டக் குழுவுக்குக் காப்டனாக திரு. S.தருமரட்ணம் அவர்களும், கரப்பந்தாட்டக் குழுவிற்கு காப்டனாக திரு. N.குகதாசன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது கழகத்திற்காகிய நிரந்தர வருமானம் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. கழகத்திற்கான செலவீனங்களை வல்வை மக்களே மகிழ்ச்சியுடன் செய்தனர். காரணம் அனைத்து வல்வை புளூஸ் விளையாட்டுக்கழக ஆதரவாளர்களும், அபிமானிகளும், ஊர் மக்களும் எமது விளையாட்டு வீரர்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையுமேயாகும். அந்த நம்பிக்கை வீண் போகாதவாறு வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகம் உண்மையுடனும் மிகுந்த திறமையுடனும் செயல்பட்டு வருவதால்தான் தொடர்ந்தும் வல்வை மக்கள் ஆதரவளித்து வருகிறார்கள். கழகத்திற்குப் பொருள் உதவி செய்தவர்கள் கழகத்தை ஊக்குவித்தவர்கள் எனக் கழக வளர்ச்சிக்காக உழைத்தவர்கள் நிறையப் பேர் உண்டு. எல்லோரையும்



A.V. அமுதேஸ்வரராஜா



வி.முருகுப்பிள்ளை



இ. கதிர்காமர்



நா. சிவசுப்பிரமணியம்





பட்டியலிட முடியாவிட்டாலும் முடிந்த அளவாவது பட்டியலிட்டு எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளலாம் என நினைக்கின்றோம்.

வல்வை புளூஸ் விளையாட்டுக்கழக வளர்ச்சியில் சிதம்பராக் கல்லூரிக்கு நிறையப் பங்குண்டு. சிதம்பராக் கல்லூரியில் பயிற்றுவிக்கப்பட்ட கைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட வீரர்களே பெரும்பாலும் புளூஸ் விளையாட்டுக்கழக வீரர்களாகத் திகழ்ந்தனர். புளூஸ் விளையாட்டுக்கழகம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன் திரு. S.R.அரியரெத்தினம் ஆசிரியர் அவர்கள் சிதம்பராக் கல்லூரியின் உபஅதிபராக இருந்ததுடன் உடற்கல்வி (விளையாட்டு) பொறுப்பாசிரியராகவும் இருந்தார். அதன்பின் திரு. S.தியாகராசா ஆசிரியர் உடற்கல்வி (விளையாட்டு) பொறுப்பாசிரியராக இருந்தார். தொடர்ந்து திரு.S.யோகச்சந்திரன் உடற்கல்வி (விளையாட்டு) ஆசிரியராகவிருந்தார். இவர்கள் மூவரது திறமைமிக்கப் பயிற்சியில் உருவானவர்கள் பலர் புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் சிறந்த கைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட வீரர்களாகப் பல வருடங்கள் விளையாடி வந்துள்ளனர். சிதம்பராக் கல்லூரி கைப்பந்தாட்ட மைதானம்தான் வல்வை புளூசின் கைப்பந்தாட்ட மைதானமாக நெடுங்காலங்கள் பாவிக்கப்பட்டது. அதுபோல சிதம்பராக்கல்லூரியின் உதைபந்தாட்ட மைதானமும் புளூஸ் வீரர்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளது. எனவே எமது கைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட விளையாட்டு வீரர்கள் விளையாட அனுமதி அளித்த சிதம்பராக் கல்லூரி நிர்வாகிகளுக்கும், எங்களைப் பயிற்றுவித்த ஆசிரியப் பெருமக்கள் திரு. A.S.அரியரெத்தினம், திரு. S.தியாகராசா, திரு. S.யோகச்சந்திரன் ஆகியோருக்கும் எமது முதற்கண் நன்றியைத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

1. A.V.அமுதேஸ்வரராஜா 2. வி.முருகுப்பிள்ளை, 3. இ. கதிர்காமர், 4. நா. சிவசுப்பிரமணியம், 5. S. சுந்தரலிங்கம், 6. S. சண்முகசுந்தரம், 7. S.சிவகணேசன், 8. அ. துரைராஜா, 9. A.V.நடராசா, 10. T.சத்தியமூர்த்தி (சாண்டோ) 11. R. யோகானந்தராசா (9990 கார்), 12. V.இரத்தினவடிவேல், 13. சி. விஷ்ணுசுந்தரம், 14. மா. பாலசுப்பிரமணியம் (சின்னக்கிளி அண்ணா), 15. ச. சின்னத்துரை, 16. A. திருச்சிற்றம்பலம் (மணி அண்ணா), 17. க. ஞானசம்பந்தம்பிள்ளை (சாம் அண்ணா), 18. அ. தருமலிங்கம், 19. திரு. சத்தியசீலன் (சின்னக்கிளி மாமா), 20. A. இரத்தினவடிவேல், 21. இ.விஜயரெத்தினம் (இராஜநாயகி தியேட்டர்), 22. அ.சுப்பிரமணியம் (நடுவர் சுப்பண்ணா), 23. கா.மகேந்திரராசா (ஆயக்கிளி), 24. மார்க்கோடம்மூர்த்தி (மார்க்கோடம் சித்தப்பா) 25. V.முருகமூர்த்தி, 26. S. குமாரசாமி (எக்கவுண்டன்), 27. A.மார்கண்டு, 28. இ. சிவகுரு (தாத்தா), 29. இ. அனந்தராசா (அனந்தண்ணா), 30. A.முருகேஸ், 31. மு. அருமைச்செல்வம், 32. இ. ஈஸ்வரபாதம், 33. S.காஞ்சிமாவடிவேல், 34. கு. அப்பாதுரை, 35. சி.சிவனேசன், 36. மு.சுபாஸ் சந்திரபோஸ், 37. திலகரட்ணம், 38. ஆ. ரூபநாதன், 39. சோ. சிவனருள்சுந்தரம், 40. மா.முருகுப்பிள்ளை, 41. சி.தனபாலசிங்கம், 42. மு.பிறேம்குமார் என்று இந்த வரிசை தொடர்கின்றது.

திரு. நாகரெத்தினம், சிவசுப்பிரமணியம் (சிவா அண்ணா) புளூஸ் விளையாட்டுக்கழகத்தின் இடைபட்ட காலத்தில் வல்வை புளூசைப் பொறுப்பேற்றுப் பலவருடங்கள் மிகச் சிறந்த முறையில் வழிநடத்திச் சென்றார். இவர் ஓர் படத்தயாரிப்பாளராக இருந்தபோதும், எமது விளையாட்டு வீரர்களுடன் சகஜமாகப் பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடின்றிப்



S. சுந்தரலிங்கம்



S. சண்முகசுந்தரம்



S.சிவகணேசன்



அ. துரைராஜா

பழகுவார். புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்கு நிதிசேகரிப்பதற்காகச் சினிமாப்படம் ஒன்று எடுத்து வல்லை யோகநாயகி தியேட்டரில் காட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன. திரு.சிவா அண்ணா அவர்கள் இலங்கை சினிமா தயாரிப்பாளர் சங்க அங்கத்தினராக இருந்த காரணத்தினால் சினிமாத் தயாரிப்பாளர் சங்கத்துடன் கதைத்துத் தான் தயாரித்த படங்களில் ஒன்றான 'சத்தபனகாய்' என்னும் படத்தை எதுவித வரியுமின்றி எங்களுக்கு எதுவித செலவுமின்றி திரையிட அனுமதி தந்தார். அதுமட்டுமன்றி வல்லை புளூஸ் நிதி உதவிக்காட்சி என்று ரிக்கற் அச்சிடப்பட்டு ஊர்ப்பிரமுகர்கள், ஆதரவாளர்கள், அனுதாபிகள் அனைவருக்கும் வீடுவீடாகச் சென்று விற்பனை செய்யப்பட்டபோது, சில பிரமுகர்கள் வீட்டுக்குச் சிவா அண்ணா அவர்களும் எங்களுடன் கூட வந்து ரிக்கற் விற்பனையைப் பெருக்க உதவினார். சிவா அண்ணா அவர்கள் தலைவராக இருந்தபோது A.இரத்தினசிங்கம் (A.R. அண்ணா) யாழ்மாவட்டக் கோல்காப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார். திரு.சிவா அண்ணா அவர்கள் வல்லை புளூசுக்குச் செய்த சேவையை வல்லை புளூஸ் விளையாட்டுக்கழகம் என்றும் மறக்காது.

திரு. சிவகுரு (தாத்தா) அவர்கள் பேரக்குழந்தைகளுக்குத் தாத்தா ஆவதற்கு முன்னரே அவரைத் தாத்தா என்று அழைக்கத் தொடங்கிவிட்டார்கள். அந்த நேரத்திலேயே அவரை யார்? ஏன்? தாத்தா என்று அழைத்தார்கள் என்பது புரியவில்லை. அவர் புளூஸ் விளையாட்டுக்கழகத் தலைவராக இருந்த காலங்களில் அவர் இளைஞராகத்தான் செயல்பட்டார். அவரது சுறுசுறுப்பும், வேகமும், செயல்பாடுகளும் ஒரு இளைஞருக்கு இருப்பது போலவே இருந்தது என்பதைப் புளூஸ் விளையாட்டு வீரர்களால் கண்கூடப் பார்க்க முடிந்தது. அவர் வல்லை புளூஸ் தலைவராக இருந்த காலங்களில் வல்லை புளூஸ் கைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட தெரிவுக்குழுத் தலைவராகவும் இருந்தார். பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்டத் தெரிவுக்குழு அங்கத்தவராகவும் இருந்தார். இப்படிப் பல பதவிகளைப் பல வருடங்கள் வகித்தார். தாத்தா காலத்தில் வல்லை புளூஸ் மிகவும் பிரகாசமானதொரு நிலையில் இருந்தது. தாத்தா அவர்கள் அன்பாகவும், பண்பாகவும் பேசுபவர். கட்டி அண்ணா அதை இப்படிச் செய்தால் என்ன? என்ன தங்கண்ணா (தங்கவேல்) இதை இப்படிச் செய்தால் சரிவருமோ? தம்பி பிரேம்குமார் இதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்-என்ன குட்டித்தம்பி இப்படிச் செய்வது சரியோ, பிழையோ. இப்படி மற்றவர்களுக்கு மரியாதை கொடுத்துப் பண்பாகப் பேசுபவர். கைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட விதிகள் நன்கு தெரிந்தபோதும், அதனால் கர்வம் இல்லாதவர்.

வல்லை நெடியகாட்டுச் சுடலையை வல்லை மகளிர் கல்லூரிக்கு எடுக்க வேண்டும் என்னும் பிரேரணையை தாத்தாஅப்பா அவர்கள் தான் கொண்டு வந்தார்கள். அப்போதைய அரசாங்கத்துடன் அதுபற்றிக் கதைத்து அவர்களும் ஆதரவளிப்பதாகக் கூறினர். பெண்பிள்ளைகள் விளையாடும் இடம் வீதியோரம் அமைந்திருப்பதால் அதற்கு ஓர் உயரமான சுவர் வைத்துத்தர வேண்டும் என்ற எங்கள் கோரிக்கையையும் அவர்கள் ஏற்றுக் கொண்டனர். அவர்களே பழனி அண்ணாவுடன் கதைத்து அவரது காணிக்காக வேறு இடத்தில் காணி தருவதாக வாக்குறுதி அளித்ததன் பேரில் பழனி அண்ணாவும் சம்மதம் தெரிவித்தார். இதன்பின்னர் நில அளவையாளர் திரு.ஞானகுரு அவர்கள் காணியை அளந்து தென்மேற்கு மூலையிலிருந்து வடகிழக்கு மூலைவரை 100 யார் ஓடக் கூடியதாக ஒரு மைதானம் அமைக்க ஏற்பாடாகி இருந்தது.

இந்த மைதானம் பற்றி பேசுவதற்காக


A.V.நடராசா


T.சத்தியமூர்த்தி


R. யோகானந்தராசா


V.இரத்தினவடிவேல்





வல்லை புளூஸ் தலைவர் திரு. சிவகுரு (தாத்தா) தலைமையில் கட்டி அண்ணா, தங்கவேல், பிரேம்குமார், தனபாலசிங்கம் (குட்டித்தம்பி) இன்னும் பல புளூஸ் விளையாட்டுக்கழக நிர்வாகசபை அங்கத்தினர் வல்லை மகளிர் கல்லூரிக்குச் சென்று மைதானம் எடுப்பது பற்றிப் பேசியபோது மகளிர் கல்லூரி நிர்வாகம் தாங்கள் இலங்கை அரசாங்கத்திடம் அதைக் கேட்டுப் பெற்றுக் கொள்வோம் என்றும் அது விடயத்தில் புளூஸ் விளையாட்டுக்கழகம் தலையிட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டனர். அதன்பின் புளூஸ் விளையாட்டுக்கழக நிர்வாகம் அத்திட்டத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டது. இருந்தபோதும், இன்று பாடசாலை நிர்வாகத்தின் முயற்சியால் இலங்கை அரசாங்கம் அந்த இடத்தை வல்லை மகளிர் கல்லூரிக்கு ஒதுக்கியதாகக் கேள்விப்படுகின்றோம். மிகுந்த சந்தோசம். வல்லை விளையாட்டுக்கழகம் மைதானத்தைப் பெற்றுத் தந்தாலென்ன, மகளீர் பாடசாலை நிர்வாகம் மைதானத்தைப் பெற்றுத் தந்தாலென்ன, எங்களுக்கு வேண்டுவது வல்லை மகளிர் கல்லூரிக்கு ஒரு மைதானம். அது கிடைத்துவிட்டது மிகுந்த சந்தோசம்.

வல்வெட்டித்துறையில் தகுதியும், தரமும் கொண்ட மைதானம் அமைக்க வேண்டும் என்பது கட்டி அண்ணாவின் நீண்டநாள் ஆசை. கடல்புறா இருந்த இடத்திலிருந்து வீரர்கள் வெளியேறியபின் அனாதையாக இருந்த அந்தப் பங்களாவையும், அதைச் சார்ந்த நிலங்களையும் கையகப்படுத்தி எங்களுக்கு மைதானம் அமைத்துத்தரும்படி அப்போதைய பிரஜைகள்குழுத் தலைவர் திரு. செல்வேந்திரா அவர்களை வல்லை புளூஸ் சார்பாகக் கேட்டுக் கொண்டிருந்தோம். அவரும் அதற்கு ஒப்புக் கொண்டு அதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்தார்கள். இருந்தபோதும் அத்திட்டம் கூடாது போய்விட்டது.

அதன்பின் உள்ளூர் அரசாங்கத்திடம் எங்கள் கோரிக்கை எங்களுக்கு வடக்குத்தெற்காக தகுதியும், தரமும் கொண்ட மைதானம் அமைத்துத்தரவேண்டும். அதனுடன் கைப்பந்தாட்ட மைதானம், கூடைப்பந்தாட்ட மைதானம், வலைப்பந்தாட்ட மைதானம் என்பன உள்ளடக்கியதாகவும் விளையாட்டு உபகரணங்கள் வைத்தெடுக்க அறை, கரம்போட், செஸ் விளையாட மண்டபம், மலசலகூடம் என்பன கட்டுவதற்கு என எல்லாவற்றிற்கும் சேர்த்து நிலம் கையகப்படுத்தித் தர வேண்டும் எனவும் நாங்கள் தெரிவு செய்த இடம் சிதம்பராக் கல்லூரி மைதானம் எனவும் பிரதான வீதியிலிருந்து போட்யாட் கடந்து கடல்வரையும் இப்போது கிழக்கு மேற்காக இருக்கும் மைதானத்தை விடக் கூடுதலாக நிலம் வேண்டும் எனவும், பாடசாலை நடாத்தும் போட்டிகள் தவிர்ந்த வேறு போட்டிகள் நடாத்துவதற்குப் பாடசாலையிடமும், பாடசாலை விரும்பினால் நகரசபையிடமும் முன் அனுமதி பெற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை உள்ளூர் அரசாங்கத்திடம் வைத்தோம். அவர்களும் இது நல்ல திட்டம்தான் என்றும் தாம் அதை முன்னின்று செய்து தருவதாகவும் உறுதியளித்தனர். சிதம்பராக்கல்லூரி மைதானத்தைத் தெரிவு செய்வதற்குரிய காரணம், பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தால் நடாத்தப்படும் வீரர்கள் தெரிவுகள், பயற்சிகள், போட்டிகள் என்பன பாடசாலைகளின் அனுமதி பெற்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்திலும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்திலுமே நடைபெறுகிறது. கூடுதலான வீரர்கள் பங்கு பெறும் வல்வெட்டித்துறையில் பயிற்சிகளோ, போட்டிகளோ நடாத்தப்படுவதில்லை. காரணம் வல்வெட்டித்துறையில் தரமான மைதானம்


சி. விக்ஷ்ணுசுந்தரம்


ச. சின்னத்துரை


க. ஞானசம்பந்தம்பிள்ளை


A.இரத்தினவடிவேல்

இல்லாமையே காரணம். வல்வெட்டித்துறையில் தரமான மைதானம் இருந்திருக்குமாயின் தெரிவுகள், பயிற்சிகள், வெளிமாவட்டங்களுக்கான போட்டிகள் வல்வெட்டித்துறையில் நடைபெற்றிருக்கும். அப்படி நடைபெறும் பட்சத்தில் இன்னும் பல வீரர்கள் திறமைமிக்கவர்களாக உருவாக வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். எனவேதான் வல்வை சிதம்பராக்கல்லூரி மைதானத்தைத் தெரிவு செய்தோம்.

நாங்கள் மைதானம் அளக்க இருந்த நாள், நேரம் என்பனவற்றை உள்ளூர் அரசாங்கத்திடம் முன்கூட்டியே அறிவித்திருந்தோம். அவர்களும் அளக்கும்போது வருவதாகக் கூறியிருந்தனர். எனவே மைதானத்தை அளக்க நில அளவையார் திரு. ஞானகுரு அவர்களுடன், வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தலைவர் திரு. சிவகுரு (தாத்தா), கட்டி அண்ணா, தங்கவேல் அண்ணா இன்னும் பல புளூஸ் விளையாட்டுக்கழக அங்கத்தினரும் மைதானத்திற்குச் சென்று மைதானத்தை அளந்து கொண்டிருந்தோம். அப்போது சுற்றாடலில் உள்ள இளைஞர்கள் எங்களுக்கு அடிக்க வந்துவிட்டார்கள். நாங்கள் செய்வதறியாது நின்ற நேரத்தில் ஊர்ப் பெரியவரும் இன்னும் சிலரும் வண்டியில் வந்து இறங்கினார்கள். நிலைமையைப் பார்த்த அவர்கள் எங்களுக்கு அடிக்க வந்தவர்களிடம் தாங்கள்தான் அளக்க அனுப்பியதாகக் கூறி அவர்களை அனுப்பிவிட்டு, எங்களுடன் கூட நின்று அவர்களும் மைதானத்தை அளக்க உதவினர்.

நாங்கள் மைதானத்துக்கு என்று அளந்த வடகிழக்கு மூலையில் மூன்று கல்லினால் கட்டப்பட்ட வீடுகள் இருந்தன. அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டிய நிலை. இதைக் கட்டியண்ணா வெளிநாட்டில் இருந்த வல்வை புளூஸ் ஸ்தாபகரில் ஒருவரும் கட்டி அண்ணாவின் நண்பருமான திரு.இராசேந்திரன் (குட்டிமணி அண்ணா) அவர்களிடம் நடந்த விபரங்களைக் கூறி மூன்று வீடுகளுக்கும் நஷ்டஈடு கொடுக்க வேண்டிவரும் என்பதையும் தெரியப்படுத்தினார். குட்டிமணி அண்ணா காசு இப்போது பிரச்சினை இல்லை. இப்போது மைதானம் அமைக்காவிட்டால் இனி எப்போதுமே அமைக்கமுடியாது. எனவே மைதானத்துக்கு நிலம் கையகப்படுத்தும் வேலையை நீ பார், ஈட்டுக்காகிய பணத்தை அனுப்பும் வேலையை நான் செய்கின்றேன் என்று உறுதிபடக் கூறிவிட்டார். மைதானம் கிடைத்துவிடப் போகிறது என்ற நம்பிக்கை பிறந்த நேரம் ஊர் நிலைமை, நாட்டு நிலைமை படுவேகமாக மாற்றமடைந்தது. இதன் காரணமாக மைதானத்திற்காகிய வேலைகளைத் தொடர முடியாமற் போய்விட்டது. இப்படியாகப் பலமுற்போக்கு சிந்தனைகளுடன் செயல்பட்டதால் வல்வை புளூஸ் விளையாட்டுக்கழக அணியினர் தாத்தா அவர்களுக்கு முழு ஆதரவு அளித்து வந்தனர். இப்படியாக வல்வை புளூசுக்காக வல்வைக்காக அயராது உழைத்த பெரியவர் தாத்தா அவர்களை வல்வை மக்களும் வல்வை இளைஞர்களும் என்றும் மறக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

திரு. மு.பிரேம்குமார் அவர்கள் வல்வை புளூசுக்காக விளையாடிய விளையாட்டு வீரர்களில் மறக்க முடியாத ஒருவர். இவர் உதைபந்தாட்டப் போட்டிகளில் முன்கள வீரராகவே விளையாடி வந்துள்ளார். இவர் வேகமாகப் பந்தைக் கொண்டு ஓடும் திறமை உள்ளவர். பலவருடங்கள் வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்திற்காக விளையாடியவர். ஈழநாடு பத்தாவது ஆண்டு நிறைவுவிழாவை ஒட்டி நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகள் யாவும் யாழ்ப்பாணம் கோட்டைக்குள் உள்ள மைதானத்திலேயே நடைபெற்றது. இறுதிப்போட்டி



இ.விஜயரெத்தினம்



V.முருகமூர்த்தி



S. குமாரசாமி



இ. சிவகுரு (தாத்தா)





வல்வை புளூசுக்கும் யாழ். சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே நடைபெற்றது. இந்த இறுதிப் போட்டியிலும் தலைவர் பிரேம்குமார் அவர்கள் விளையாடிய விளையாட்டு என்றும் மறக்கமுடியாததாகும். அந்தப் போட்டியில் ஒரு கோலை அடித்துவிட்டு பிரேம்குமார் அவர்கள் துள்ளிய துள்ளு மறக்கமுடியாததாகும். இவர் புளூஸ் கைப்பந்தாட்ட அணியில் இடம்பெறவில்லை. ஆனால் புளூஸ் கைப்பந்தாட்ட அணி விளையாடும் கைப்பந்தாட்டப் போட்டிகளில் ஆறுபேர் கோட்டுக்குள்ளும், ஒருவர் (பிரேம்குமார்) கோட்டுக்கு வெளியிலும் மொத்தம் 7 வீரர்கள் புளூஸ் விளையாட்டுக்கழகத்திற்காக விளையாடுவார்கள். பிரேம்குமார் அவர்கள் மிகவும் விரைவாக உணர்ச்சிவசப்படக் கூடியவர். எமது கைப்பந்தாட்ட அணி சற்றுப் பின்தங்கிய நிலையில் இருந்தால் போதும், சத்தம்போட ஆரம்பித்துவிடுவார். தங்கவடிவேல் அடி, செல்லா, பாலி அடி என உரக்கச் சத்தம் போட்டபடி இருப்பார். இவர் சிலசமயங்களில் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினாலும் ஒருவரும் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. காரணம் இவர் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காகச் செய்த அளப்பரிய சேவைகளே. திரு. அருணாசலண்ணா அவர்களுக்குப் பின்னால் அவரது சேவையைத் திறம்படச் செய்தவர் பிரேம்குமுார் அவர்கள். எங்கள் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு நேரத்தில்தான் வேலை. ஆனால் பிரேம்குமார் அவர்களுக்கு உள்ள நாள் பூராகவும் விளையாட்டு வேலை. கைப்பந்தாட்ட உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே வல்வைச் சந்தி சனசமூக சேவா நிலைய (வாசிகசாலை) முன்பாக விளையாடும் கோஷ்டிகள் விளையாடும் நேரம், விளையாடும் மைதானம் என்பன உள்ளிட்ட அனைத்தும் கரும்பலகையில் எழுதி மக்கள் பார்வைக்கு வைத்துவிடுவார். போட்டிகளுக்காகிய வாகனத்தை ஒழுங்கு செய்துவிடுவார். கைப்பந்தாட்ட, உதைபந்தாட்டப் போட்டிக்கு வான் புறப்படுவதற்க ஒரு மணித்தியாலம் முதலே தலைவர் பிரேம்குமார் ஒரு சைக்கிளிலும், புத்திரசிகாமணி (புத்திங்) ஒரு சைக்கிளிலும் ஒவ்வொரு விளையாட்டு வீரர்களின் வீட்டு வாசல்களிலும் நின்று சைக்கிளில் அவர்களை ஏற்றிவருவார்கள். இப்படியாகப் பலகாலம் புளூசுக்காக உழைத்தார். இவர் போன்ற உணர்வும், ஊர்ப்பற்றும் உள்ளவர்களால்தான் வல்வை புளூஸ் இன்றளவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. திரு.பிரேம்குமார் அவர்களின் சேவையை வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகம் என்றும் நினைவுகூரும் என்பது திண்ணம்.

திரு. தனபாலசிங்கம் (குட்டித்தம்பி) அவர்கள் தொடர்ந்து பல வருடங்கள் புளூஸ் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட கோஷ்டிக்காக விளையாடி வந்தவர். இவர் எப்பொழுதும் வலது புறவெளிக்கள வீரராகவே (றைற்அவுட்) விளையாடி வந்துள்ளார். வேகமாகப் பந்தைக் கொண்டோடும் திறமை உள்ளவர். இவர் அடிக்கும் கோணர்கிக் பிரசித்தமானது. தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் மகாஜனா அணியினருடன் நடந்த போட்டியில் திரு.தனபாலசிங்கம் கடைசி நேரத்தில் அடித்த அருமையான கோணக்கிக்கை தங்கவடிவேல் அவர்கள் தலையால் இடித்துக் கோலாக்கி புளூஸ் விளையாட்டுக்கழகத்தை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றது, இன்றும் மறக்கமுடியாதது. இதுபோன்று தெல்லிப்பளை யூனியன் மைதானத்தில் அப்போதைய மந்திரி திரு.மு.ரத்நாயக்கா அவர்கள் கலந்து கொண்ட வல்வை புளூஸ் கட்டுவன் அணிகளுக்கான போட்டியின் போது இவரது சிறப்பான விளையாட்டை ரசிகர்கள் பாராட்டினார்கள். புத்தூர் எவறஸ்ற் மைதானத்தில் (புத்தூர் சிவன் கோவிலுக்கு முன்னுள்ளது.) எவறெஸ்ற்



இ. அனந்தராசா



A.முருகேஸ்



மு. அருமைச்செல்வம்



இ. ஈஸ்வரபாதம்

கோஷ்டியுடன் நடந்த போட்டியின்போது கோணர்கிக் அடிக்கச் சென்ற குட்டித்தம்பியின் கையைப் பிடித்து அவரைக் கோணர்கிக் அடிக்கத் தடை செய்ததுடன், புளூசைத் தரக்குறைவாகத் திட்டியதால் கோபமடைந்த குட்டித்தம்பி பக்கத்தில் இருந்த கோணர் தடியை இழுத்து அவருக்குக் கொடுத்த அடிகள் மட்டுமல்ல, இடைநிறுத்தப்பட்ட போட்டி திரும்ப ஆரம்பமான மறு நிமிடம் எதிரணியினருக்குக் கோல் அடித்துத் தனது பழியைத் தீர்த்துக் கொண்டார். இவரும் வல்வை புளூசுக்காகப் பல வருடங்கள் விளையாடி நூற்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் விளையாடியவர். வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்திற்கு பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படும் போதெல்லாம் கைகொடுப்பவர் குட்டித்தம்பி. பல உதைபந்தாட்டப் போட்டிகள் குட்டித்தம்பி செலவிலேயே விளையாடி இருக்கின்றோம். பயிற்சி நேரங்களில் இவர் மைதானத்தில் நிற்பதால் பந்து சரியில்லை என்று கண்டவுடன் மறுநாள் புதுப்பந்துடன் மைதானத்திற்கு வருவார். இவருக்கு புளூஸ் விளையாட்டுக்கழகத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் உண்டு. இவரின் சிறப்பான விளையாட்டின் மூலம் புளூஸ் விளையாட்டுக்கழகம் பல வெற்றிகளைப் பெற்றுள்ளது. அவரின் விளையாட்டுத் திறன் பற்றி இன்றும் அவரின் பழைய ஆதரவாளர்கள், அபிமானிகள் கதை கதையாகப் பேசுவதைக் கேட்கமுடிகிறது.

முன் நாள் நகரசபைத்தலைவர் திரு. S.சுந்தரலிங்கம் அவர்கள் வல்வை புளூசின் நிகரற்ற ஆதரவாளராவார். அவர் முன் நாள் கைப்பந்தாட்ட உதைபந்தாட்ட வீரரும் ஆவார். இவர் புளூஸ் ஆரம்பித்தகாலம் முதலே புளூசுக்கு ஆதரவு நல்கியவர். புளூஸ் கைப்பந்தாட்ட அணி விளையாடும் போட்டிகளில் கூடுதலாக இவரைக் காண முடியும். சீனத்தேசிய உதைபந்தாட்ட அணி பருத்தித்துறை மாவட்டத்திற்கு வருகை தருவதற்குக் காரணமாக இருந்த திரு. S. ஆறுமுகம் (கரவெட்டி) அவர்களுடன் தோளோடு தோள் நின்று உழைத்தவர். சீன உதைபந்தாட்டக் குழுவுக்கு வல்வை புளூஸ் சார்பில் காங்கேசந்துறை உணவுவிடுதியில் (Resturant) கொடுக்கப்பட்ட விருந்தை ஒழுங்கு செய்து வல்வை புளூசுக்குப் பெருமை சேர்த்துத் தந்தவராவார்.

திரு.கு.அப்பாத்துரை அவர்கள் வல்வை புளூசுக்குச் செயலாளராக இருந்தவர். எல்லாக்காலங்களிலும் வல்வை புளூசின் ஆதரவாளராக இருந்தவர். வல்வை புளூஸ் நடத்தும் விளையாட்டுப் போட்டிகளுக்கு மட்டுமன்றி, வல்வையில் நடைபெறும் அனைத்தும் விளையாட்டுப் போட்டிகளுக்கும் பதிவாளராக இருந்து உதவிபுரிந்து வருபவர்.

இளம்பறவைகள் என்ற ஒரு நண்பர்கள் குழு, இவர்கள் திரு.சச்சிதானந்தவேல் (சச்சு அண்ணா) அவர்களின் மகன் சரவணமுத்துவும் அவரது நண்பர்களுமாகும். சரவணமுத்துவும் அவரது நண்பர்களும் புளூஸ் வீரர்கள் உதைபந்தாட்டப் போட்டிகள் முடிந்து வல்வைச் சந்தியில் வந்து வானால் இறங்கியதும், ஒவ்வொரு விளையாட்டு வீரரிடமிருந்தும் சீருடைகளை வாங்கிக் கொள்வார்கள். இவர்கள் சீருடைகளைக் கொண்டு சென்று தோய்த்துக் காயவைத்து, அதன்பின் அயேன்செய்து அடுத்த மச்சின்போது வான் புறப்படுவதற்கு முன் அவரவர் யேசிகளை அவரவர்களிடம் கொடுத்துவிடுவார்கள். இவர்கள் இந்தச் சேவையைப் பல வருடங்கள் செய்தார்கள். தொழில் நிமித்தம் அவர்கள் வெளிஇடங்களுக்கச் சென்றபோதும் இதேபோல திரு. சத்தியசீலன் (சின்னக்கிளி மாமா) அவர்களும் யேசியை வேண்டிச் சென்று தோய்த்து அயேன் செய்து கொண்டுவந்து கொடுப்பார். இவர்கள் இதைச் செய்வதற்குக் காரணம் எங்கள் ஊர் விளையாட்டு வீரர்கள மீதும், வல்வை புளூஸ் மீதும் கொண்ட அபிமானமும் அக்கறையுமே. திரு.அனந்தராசா (அனந்தண்ணா) அவர்கள் விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தும் நோக்குடன் கைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட மைதானங்களுக்கு வருவார். இவர் ஓர் கைப்பந்தாட்ட வீரர் மட்டுமல்ல, கைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட விதிகள், முறைகள் நன்கு தெரிந்த விளையாட்டு வீரராவார்.

திரு.மாகோர்க்கடமூர்த்தி (மாகோர்க்கடம் சித்தப்பா) இவர் முன்நாளில் கைப்பந்தாட்டம் (செற்றப், ஓவகேம்) இரண்டிலும் வல்வைக்காக விளையாடியவர். வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகம் எங்கெல்லாம் கைப்பந்தாட்ட, உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்கிறதோ, அந்த விளையாட்டு மைதானங்களில் முதல்முதலில் நிற்கும் வல்வை ஆதரவாளராகும். வெய்யில், மழை எதையும் பொருட்படுத்தாது சைக்கிளிலேயே வதிரி, நெல்லியடி, கரவெட்டி, அச்சுவேலி, ஆவரங்கால் என எல்லா மைதானங்களுக்கும் வந்துவிடுவார். இவர் போன்றதொரு ஆதரவாளரே திரு.சச்சிதானந்தம் அவர்கள் மகன் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சைக்கிளிலேயெ எல்லா மைதானங்களுக்கும் வந்துவிடுவார். இரவு மின்னொளியில் நடக்கும் போட்டியாக இருந்தாலும், இவர்கள் ஒரு போட்டியையும் தவறவிடாது வந்து நின்று விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துவார்கள். போட்டிகளில் தோல்விகண்ட போதெல்லாம் வீரர்களுக்கு ஆறுதல் கூறிச் சாந்தப்படுத்துவார்கள். திரு. மார்க்கண்டண்ணா இவர் வல்வை புளூசுக்கு நடைபெறும் கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் ஒன்றையும் தவறவிடமாட்டார். வழமையாக அவரது காரில் மூன்ற பேர் மட்டுமே பயணிக்க அனுமதிப்பார். காரில் அவ்வளவு கவனம். ஆனால் உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டப் போட்டிகளுக்குப் போகும் போதுமட்டும் காரில் இடமுள்ளவரை ஆதரவாளர்களைக் காரில் ஏற்றிக் கொண்டு மைதானம் வந்துவிடுவார். ஒரு விளையாட்டு வீரர் காலதாமதமாக வருவார் என்று தெரிந்தால் மார்க்கண்டண்ணாவிடம் சொல்லிவிடுவோம். காவல் நின்று அவரை மைதானத்திற்கு அழைத்துக் கொண்டு வந்துவிடுவார். புளூஸ் விளையாட்டுக்கழகம் தோல்விகண்ட போதெல்லாம் விளையாட்டு வீரர்களுக்கு ஆறுதல் கூறுவார். ஆனால் அவரால் தோல்வியைச் சகித்துக் கொள்ளமுடியாது. வீடு சென்றதும் குப்புறப்படுத்துவிடுவார். அன்றிரவு சாப்பாடோ, தேத்தண்ணி கோப்பியோ எதுவும் சாப்பிடமாட்டார். கட்டி அண்ணா மார்க்கண்டண்ணா வீட்டுக்குப் போனால் அக்காச்சி (மார்க்கண்டண்ணாவின் மனைவி) சொல்வது, " தம்பி தோத்துப்போடாதையுங்கோ. தோத்தால் மனுசன் சோறு தண்ணி எதுவுமில்லாமல் குப்புறப்படுத்துவிடுவார்" என்று. இதுபோன்று பல ஆதரவாளர்கள் புளூஸ் விளையாட்டுக்கழகம் தோத்தபோதெல்லாம் இரவு நித்திரை இன்றி அவஸ்தைப்படுவது, புளூஸ் விளையாட்டுக்கழகம் தோல்விகண்ட மறுநாள் சந்தி வாசிகசாலையில் எங்கள் ஆதரவாளர்களின் வேதனை கலந்த புலம்பல்களைக் கேட்க முடியும்.

நாம் முன்னர் குறிப்பிட்டது போல எமது புளூஸ் விளையாட்டுக்கழகத்தை சிறந்ததொரு விளையாட்டுக் கழகமாக்கிய பெருமைக்குரியவர்கள் எமது ஊர்ப் பிரமுகர்களும், ஆதரவாளர்களும், அபிமானிகளுமே. நாம் பல பெரியவர்களுடன் கலந்துரையாடி எமக்குக் கிடைத்த பெயர்கள் அனைத்தையும் பட்டியலிட்டு அனைவருக்கும் பெருமையுடன் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


கு. அப்பாதுரை


சி.சிவனேசன்


மு.சுபாஸ் சந்திரபோஸ்


காஞ்சி மாவடிவேல்


பே. சத்தியசீலன்


சோ. சிவனருள்சுந்தரம்


சி.தனபாலசிங்கம்


மு. பிறேம்குமார்

# 'வல்வை புளூஸ்' அன்று



VAIVKTTITIHURAI "BLUES" SOCCER TEAM - 1964

From Row; (L to R) M.Rathakrishnan, A.Ratnasingam, S.Eswaralingam, T.Sanmugaihas, M.Thangavcl.
Mid. Row, (L to R) N.Appathurai, (asst. Secy.), S.santhiralingarn, S.Arulpiragasam, K.Mylcrumpcrumal, A.Jeyachandran(Capt.)
V.Arunasalam, S.Yogachandran, S.Alagaratnam, K.Sanmuganantham (Hony. Secy).
Back Row; (L to R) S.Inthiralingam, K.Thevasigamany, V.Carthigayan, S.Sivancsan, S.Tharmaratnam, S.Pooranachandran,
A.S.Rajcndran, A.Amirthalingam.





# 'வல்வை புளூஸ்' இன்று


Under 10


Under 12 A


Under 12 B


Under 14


Under 16


Under 19


Canada


Canada


Canada


Open


VVT 1


VVT 2

# எமது வேண்டுகோள்




மேலேயுள்ள படத்தில் இருப்பது பதினொரு நபர்கள் விளையாடக் கூடிய சர்வதேச அளவுத்திட்ட மைதானம் ஆகும். எங்கள் ஊரில் இந்த அளவுத்திட்டத்துக்கு அமைவான மைதானம் எதுவும் இல்லை என்பது வேதனையான உண்மையாகும். இத்தகைய மைதானத்தில் விளையாடும் போது, பயிற்சி எடுக்கும் போது, உதைபந்தாட்டத்தின் தரமும் வேகமும் அதிகரிக்கும்.

மாவட்ட ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் தகமை கொண்ட ஏராளம் வீரர்கள் வல்வையிலிருந்து உருவாகுவார்கள்.

அத்தகைய ஒரு மைதானம் அமைவது, பலரது கனவாக இருந்து கொண்டு இருக்கிறது. இந்தப் பொன்விழா ஆண்டில் அதற்கு அச்சாரமாக இந்தப் புத்தகம் விற்றுக் கிடைக்கும் பணம் முழுமையும் இத்தகு மைதானம் ஒன்றை அமைப்பதற்கான நிதிக்காக வழங்கப்படுகிறது.

இதனை ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு ஒரு கால அட்டவணையை ஏற்படுத்தி அதற்குள்ளாக இத்தகு மைதானத்தை அமைப்பதற்கான அனைத்து வளங்களையும், உதவிகளையும் வல்வையில் உள்ள வல்வை புளூஸ் கழகத்துடன் தொடர்பு கொண்டு செய்யும்படி வேண்டுகிறோம்.

*-பொன்விழா நூல் ஆக்கக் குழு*





1

## பல்கலை வித்தகர்- விளையாட்டுத்துறையின் பன்முகம்

## A.V. அருணாசலம்



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம் ஆரம்பித்த காலம் முதல் கழக வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டவர்களில் முக்கியமானவர் திரு A.V.அருணாசலம் அவர்கள். இவர் பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்தார். பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டியில் V.T.A. விளையாட்டுப் போட்டியில் சிதம்பராக் கல்லூரி சார்பாக விளையாடி திரு. அருணாசலம் அவர்களும், திரு. த.துரைலிங்கம் அவர்களும் சம்பியன் பட்டம் வென்றனர். திரு. அருணாசலண்ணா ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் 880யார் ஓட்டம் ஓடி முதலாவது இடத்தைப் பிடிப்பதற்கு, அவர் அன்று ஓடிய ஓட்டம் இன்றும் என் நினைவில் நிற்கிறது. பாடசாலை உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம் என்பவற்றிற்குக் கப்டனாக இருந்தவர். புளூஸ் விளையாட்டுக் கழகம் ஆரம்பிக்கக் காரணமானவர்களில் இவரும் ஒருவர். இவர் கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், பாஸ்கற்போல், ரெனிஸ் பந்தாட்டம், பிலியட், கரம், டாம், செஸ், நீச்சல் இப்படிப் பல விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கிய வீரராவார். இவர் தானும் ஓயமாட்டார் மற்றவர்களையும் ஓயவிடமாட்டார். எங்கெல்லாம் உதைபந்தாட்ட, கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நடக்க இருக்கிறதோ அங்கெல்லாம் புளூஸ் பெயரைப் பதிவு செய்துவிடுவார். அத்துடன் அங்கெல்லாம் ரீமை அழைத்துச் சென்று விடுவார். ஒவ்வொரு போட்டிக்கும் சென்று வர ஆயிரக்கணக்கான ரூபாய் செலவாகும். இதற்குச் செலவாகும் பணத்தை போட்டிக்குப் புறப்படுவதற்கு முன்னதாகவே எங்கள் ஊர்ப் பிரமுகர்களிடம் சொல்லி அதற்காகிய செலவை வாங்கிக் கொடுத்துவிடுவார். இதில் கௌரவம் பார்க்கமாட்டார். எங்கள் ஊர்ப் பிரமுகர்களும் பந்தடி என்றால் பின்னிற்கமாட்டார்கள் பந்தடிகளில் அவர்களும் ஆர்வம் மிக்கவர்களாக இருந்ததே இதற்குக் காரணம்.

ஒருமுறை கட்டி அண்ணா, ஜெயபாலி அவர்கள், தங்கவேல் அவர்கள் திருச்சியில் (இந்தியாவில்) நிற்பது தெரிந்ததால், பாண்டிச்சேரி சுதந்திரதின விழா நடக்க இருப்பதை அறிந்து விழாக் குழுவினரிடம் அங்கு கைப்பந்தாட்ட செற்றப் கேம் விளையாட எங்கள் அணியின் பெயரை இலங்கை வல்வை புளூஸ் என்று பதிவுசெய்துவிட்டார். பாண்டிச்சேரி சுதந்திர தினத்தன்று நாங்கள் மைதானத்திற்குச் சென்றபோது கூட்டம் அலைமோதியது. கடற்கரை ஓரமாக விழா மேடை. கடலில் பத்துக்கும் மேற்பட்ட நேவிகப்பல்கள், தரையில் ஆமி, நேவி அழகுநடை இப்படியானதொரு இடத்தில் எங்கள் கரப்பந்தாட்டப் போட்டியும் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் நடந்தது. இப்படிப்பட்ட ஒரு பெரிய விழாவில் எங்கள் கோஷ்டியை விளையாட வைக்க திரு அருணாசலம் அவர்கள் முயற்சிகளை எடுத்திருப்பார் என்பதை நினைக்கும்போது இப்போதுகூட ஆச்சரியமாக இருக்கிறது.

திருகோணமலையில் 4 பேர் விளையாடும் பாசிங் (ஓவ கேம்) கேம்ரூணமன்ற். கட்டி அண்ணா, ஜெயபாலசிங்கம், ஆனந்தவேல் ஆகியோரையும் அழைத்துச் சென்று விளையாட வைத்தார். யாழ் Y.M.C.A நடாத்தும் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான

இரட்டையர் இறகுப் பந்துப்போட்டி யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் கட்டி அண்ணாவையும் அழைத்துக் கொண்டு சென்று வல்லை புளூஸ் என்ற பெயரில் விளையாடினார். இறுதிவரை முன்னேறி இறுதிப் போட்டியில் தோல்வி கண்டு இரண்டாம் இடம் கிடைத்தது. வல்வெட்டித்துறையில் அருணாசலம் அண்ணாவும் கட்டிஅண்ணாவும் விளையாடி சம்பியனாக வந்தனர். இப்படியாக யாழ்ப்பாண மாவட்டத்தில் எங்கெல்லாம் கைப்பந்தாட்டம் செற்ரப், ஓவகேம் உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் புளூஸ் பெயரைப் பதிவு செய்து அங்கெல்லாம் புளூஸ் வீரர்களை அழைத்துச் சென்று விளையாட வைத்துவிடுவார். 25 வருடங்களுக்கும்மேல் வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்திற்காக உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம் செற்றப், ஓவகேம், மட்டைப்பந்தாட்டம், என்பவற்றில் விளையாடி புளூசுக்கும், வல்வைக்கும் பெருமை சேர்த்துத் தந்த பெருமகனார் திரு. அருணாசலம் அவர்களை அன்றும், இன்றும், என்றும் நினைவு கூருகின்றோம்.

## 2

## வல்லை புளூஸ் கழகத்தின் பெருமைக்குரியவர்

# சி.தர்மரெத்தினம் (தர்மண்ணா)



இவர் தனது சிறுவயதில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் கல்வி பயின்றார். சிறுவயதிலேயே உதைபந்தாட்டத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். சிதம்பராக் கல்லூரியின் (15 வயதுக்குக் கீழ்) 3வது அணியில் இவர் இடம் பெற்றார். அதன் பின்பு கல்வி கற்பதற்காக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் சேர்ந்தார். அங்கே தனது விளையாட்டுத் திறனால் கல்லூரி யின் பல விதமான விளையாட்டுப் போட்டிகளிலும் விளையாடினார். வடமாகாண பாடசாலைகளுக்கிடையேயான பல சுற்றுப் போட்டிகளிலும் இவருடைய விளையாட்டுத் திறனால் மத்திய கல்லூரிக்கு பல வெற்றிகள் கிடைத்தன. குறிப்பாக கூடைப் பந்தாட்டம், உதைபந்தாட்டம் ஆகிய இரண்டிலும் நன்கு சிறந்து விளங்கினார். கூடைப் பந்தாட்டத்தில் மத்திய கல்லூரியின் தலைவனாகவும், பின்னர் யாழ் மாவட்டத்தின் தலைவனாகவும் சிறந்து விளங்கினார். கல்லூரியில் படித்த காலத்திலேயே வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்தின் உதை பந்தாட்டக் குழுவில் இடம் பெற்றார். இவருடைய சிறப்பான விளையாட்டால் வல்வை புளூஸ் கழகம் பல சுற்றுப் போட்டிகளிலும் வெற்றி வகை சூடியது. இவர் அல்வாய், வதிரி, வல்வெட்டித் துறை, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, தெல்லிப்பளை ஆகிய ஊர்களில் நடைபெற்ற உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்டார். இவருடைய விளையாட்டைப் பார்ப்பதற்கென்றே மக்கள் போட்டிகளைப் பார்க்க வருவார்கள்.

வல்வெட்டித்துறை புளூஸ் கழகத்தைச் சேர்ந்த தர்மரெத்தினம், மயிலேறும் பெருமாள், கார்த்திகேயன் ஆகிய மூவரும் ஒரே நேரத்தில் யாழ் மாவட்டத்துக்கான உதைபந்தாட்டக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். அந்தக் காலக்கட்டத்தில் யாழ்ப்பாணக் கோஷ்டி மிகவும் பலம் வாய்ந்த கோஷ்டியாகத் திகழ்ந்தது. அந்த வருஷம் மாவட்டங்களுக்கிடையே நடந்த சுற்றுப் போட்டியில், யாழ் மாவட்டம் போட்டியிட்ட எல்லாப் போட்டிகளிலும் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. மிகவும் பலம் வாய்ந்த கொழும்பு மாவட்டத்துடன் போட்டியிட்டு, போராடித்தோற்றது. அந்தப் போட்டியில் யாழ் மாவட்டக் குழுவில் தருமரெத்தினம், மயிலேறும் பெருமாள், கார்த்திக்கேயன் ஆகிய மூன்று வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் விளையாடியது குறிப்பிடத்தக்கது. தருமரெத்தினம் தலையால் அடிப்பதும், எதிர்ப் பக்கத்து வீரர்களின் காலில் (Slipt shot) விழுந்து அடிப்பதிலும் பெயர் பெற்றவர். யாரும் எதிர்பாராத நேரத்தில் எதிர்ப்பக்கத்து வீரர்களின் காலுக்கடியில் வீழ்ந்து பந்தை எதிர் வீரர்கள் கொண்டு செல்வதை தடுத்து விடுவார். அதே மாதிரி தலையால் அடிப்பதிலும் மிகவும் சிறந்து விளங்கினார். போட்டிகளில் புளூஸ் கழகத்துக்கு Corner Kick அடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தால் அதை மிகவும் சாதுர்யமாக பயன்படுத்துவார்கள். Corner Kick கிடைக்கும் பொழுது இடது மூலையிலிருந்து அடிப்பதென்றால் இந்திரலிங்கமும் (பழம்) வலது மூலையிலிருந்து அடிப்பதென்றால் மயிலேறும் பெருமாள் அல்லது தேவசிகாமணியும் அடிப்பார்கள். அப்படி அடித்து வரும் பந்தை தருமரெத்தினம், யோகச்சந்திரன், இராசேந்திரன் ஆகியோரும் தங்கள் திறமையால் அதை கோலாக்கி விடுவார்கள். குறிப்பாக தருமரெத்தினம் மிகவும் உயரக் கிளம்பி வரும் பந்தை, உயரக்கிளம்பி தன்னுடைய தலையை பின் இழுத்து பந்தை தலையால் முட்டி அடிப்பதில் மிகவும் சிறந்து விளங்கினார். 1964ம் ஆண்டு அல்வாயில் நடந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக் கழகமும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. அந்தப் போட்டியைப் பற்றி Ceylon Daily News பத்திரிகையில் குறிப்பிடும் பொழுது, தருமரெத்தினம், மயிலேறும் பெருமாள் ஆகியோரைப்பற்றி குறிப்பிட்டு விட்டு, வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக் கழகம் சிறந்த Defense உள்ள கழகம் என்றும், அந்தக் கோஷ்டியை தோற்கடிப்பது மிகவும் கஷ்டம் என்றும் எழுதியிருந்தது. அத்துடன் யாழ் மாவட்டத்தில் வல்வை புளூஸ் உதை பந்தாட்டக்குழு சிறப்பான ஒன்று என்றும், அந்தப் பத்திரிக்கை குறிப்பிட்டிருந்தது.

வல்வெட்டித்துறை புளூஸ் உதைபந்தாட்டக் குழு 1964-ம் ஆண்டு குருநாகல், கண்டி ஆகிய இடங்களுக்கும், 1965ம் ஆண்டு திருகோணமலை, வவுனியாவுக்கும் சென்று வந்தது. அந்த இரண்டு சுற்றுப் பிரயாணத்திலும் தருமரெத்தினம் இடம் பெற்றிருந்தார். குருநாகலில் FECICONS, VYAMBULANKA ஆகிய இரண்டு கோஷ்டிகளுடன் போட்டி போட்டது. இரண்டு கோஷ்டிகளிலும் இலங்கையின் பல முன்னணி விளையாட்டு வீரர்கள் விளையாடியும் அவர்களால் புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வெல்ல முடியவில்லை. கண்டியில் HOT SPURS, KANDY UNIVERSITY ஆகிய இரண்டு கோஷ்டிகளுடன் புளூஸ் விளையாட்டுக்கழகம் விளையாடியது. அந்த இரண்டு போட்டிகளிலும் புளூஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. அடுத்த வருடம் திருகோணமலை சென்ற கோஷ்டி சிறப்பாக விளையாடியும் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. ஆயினும் வவுனியாவில் விளையாடி வெற்றிபெற்றது.

அடுத்து தருமரெத்தினம் வேலை வாய்ப்புக்காக கொழும்பு சென்றார். அவருடைய விளையாட்டுத் திறனைப் பார்த்த கொழும்பு SUNRISE கழகம் இவரைத் தங்கள் கழகத்தில் சேர்த்துக் கொண்டது.

அடுத்து இவர் கூடைப்பந்தாட்டத்தில் விளையாடுவதிலும் மிகவும் சிறந்து விளங்கினார். யாழ் மாவட்டத்துக்குத் தலைமை ஏற்றுப் பல போட்டிகளில் பங்குபற்றினார். ஒரு இறுதிச்சுற்றுப் போட்டியில கொழும்பு மாவட்டத்துடன் போட்டி நடந்தது. அந்த மாவட்டத்துக்கு இலங்கை இராணுவத்தைச் சேர்ந்தவரே தலைவர். இந்தப் போட்டி தருமரெத்தினத்துக்கு மிகவும் பயன் உள்ளதாக அமைந்தது எப்படியென்றால், MILITARY POLICE வேலைக்கு நடந்த நேர்முகப் பரீட்சைக்கு தருமரெத்தினமும் சென்றார். அந்த நேர்முக பரீட்சைக் குழுவில் இவர் முன்னர் விளையாடிய போட்டியின் எதிர்ப் பக்கத்துத் தலைவரே, இந்த குழுவில் தலைவராக இருந்தார். இவருடைய விளையாட்டுத்திறனை அறிந்திருந்த அந்த இராணுவ கப்ரனும் இவரைப் பெரிய பிரச்சினையின்றி வேலையில் சேர்த்துக் கொண்டார்.

இராணுவத்தில் சேர்ந்த பிறகு இராணு வத்துக்கான உதைப்பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம், Rugger ஆகிய விளையாட்டுகளில்

விளையாடினார். கடைசியாக 1970ம் ஆண்டு இராணுவத்துக்காக Rugger விளையாடிய பொழுது எதிர்பாராமல் நடந்த விபத்தில் அவருடைய தலையில் நடந்த விபத்தில் அவருடைய தலை நரம்புகள் விலகியதால் அவரால் தொடர்ந்து எந்தவிதமான போட்டிகளிலும் பங்குபற்ற முடியாமல் போய்விட்டது.

## 3

## அனைத்து விளையாட்டுக்களிலும் ஆளுமை செலுத்திய

# சபா.அருட்பிரகாசம்



ஏதாவது ஒரு விளையாட்டில் மட்டுமே தமது திறமைகளை வெளிக்காட்டி அதிலேயே தமது முத்திரையைப் பதிப்பவர்கள் தான் அதிகமானவர்கள். ஆனால் ஒரு சிலரால் மட்டுமே அனைத்து துறைகளிலும் முழுத்திறமையுடன் பங்கு கொள்ள முடியும். வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆரம்பகால வீரர் திரு. சபா. அருட்பிரகாசம் அத்தகைய சகலகலாவல்லவன் ஆவார். வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட அணியை ஆரம்பித்ததிலும் அதன் முதலாவது ஆட்டத்தில் விளையாடியதும் இவரின் பெருமைகள் ஆகும். உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம், வேக ஓட்டம் என்று சபா. அருட்பிரகாசம் அவர்கள் தமது ஆளுமையைப் பதித்த துறைகள் ஏராளம். வல்லை புளூஸ் விளையாட்டுக்கழகம் ஆரம்பித்த ஒரு வருடத்திலேயே 1962ம் ஆண்டில் அகில இலங்கை ரீதியில் கொழும்பில் நடைபெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிக்குச் சென்ற பருத்தித்துறை வட்டார தெரிவு அணியில் சபா.அருட்பிரகாசமும் ஒருவராவார். (தேவசிகாமணி (கட்டியண்ணா), குகதாஸ் உட்பட).

வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்தில் துடுப்பெடுத்தாட்ட அணியை அங்குரார்ப்பணம் செய்து ஆரம்பித்தவர்களில் சபா. அருட்பிரகாசமும் ஒருவராவார். வல்வை முத்துமாரி அம்மன் திருவிழாவுக்கு அடுத்த வாரம் வருடா வருடம் ஊரில் நடாத்தப்படும் "Blues night" என்ற ஒன்றுகூடலைத் தொடங்கியவர்களிலும் திரு. சபா.அருட்பிரகாசமும் ஒருவராவார். யாழ் மாவட்ட உதைபந்தாட்ட தெரிவு அணிக்கு வல்வையில் இருந்து தெரிவானவர்களிலும் சபா.அருட்பிரகாசமும் அடங்குவார். ஆங்கில மொழியில் அபார ஆற்றலும், அதனைக் கையாள்வதில் திறனும் கொண்டிருந்த சபா. அருட்பிரகாசம் அவர்கள் கட்டியண்ணா சொல்வது போல 'சகலகலாவல்லவன்'தான்.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
VVTUK.com
Valvai Nalanpuri Sankam, UK



## 4

## வல்வை புளூஸ் கழக மூத்தவர்-மருத்துவர்

# Dr. மயிலேறும் பெருமாள்

### (வல்லை புளூஸ் கழக ஆரம்ப காலம் பற்றிய அவரின் நினைவு)



எனது சிறு பிராயத்திலிருந்தே உதை பந்தாட்டத்தில் மிகுந்த நாட்டம். அத்துடன் வல்வையின் உதைப் பந்தாட்டம் என்றால் ஒன்று திரண்டு ஒரே கொண்டாட்டம்.

சிறு வயதில் சிதம்பராக் கல்லூரியில் விளையாடும் பொழுது, கல்லூரி மைதானம் மண் நிறைந்தது. அதில் நான், றிங்கம்மான், அருணாசலம், துரைசிங்கம், கார்த்திகேயன், கலிங், அருட்பிரகாசம் போன்றோருடனும் தருமன் மற்றும் அவனின் சகோதரர்களுடனும் மண்ணுடன் சேர்ந்து கிண்டிக் கிளறி விளையாடுவோம். அப்போது, வதிரியில்தான் பூட்ஸ் வாங்குவது. ஒரு சோடி ரூபா 16 மட்டும். கீழே ஆணி அடித்திருப்பார்கள். எங்கு போனாலும் வல்வை புளூஸ் என்றால் அதற்கென்றோர் தனி அடையாளமும் செல்வாக்கும் இருந்தது.

1961ல் நான் அப்போது பரியோவான் (St Jhon's) கல்லூரியில் படித்த காலம். எங்கள் கழகத்து Match க்காக, பொலிஸ் மைதானத்திற்கு வந்து காத்திருப்பேன். அங்கு கதைப்பார்கள் வல்வை புளூஸைப பாருங்கோடா தட்டிவானிலை வருவாங்கள். நல்ல புண்ணாக்கும் கப்பல் வாழைப்பழமும் சாப்பிட்டு மாடு மாதிரி வந்து விளையாடுவாங்கள் என்று மிகவும் பெருமிதத்துடன் கதைப்பார்கள். எங்களுக்கென்று தனி மரியாதை எல்லா இடங்களிலும் இருந்தது. தனியாக Valvai Blues Relay team கூட இருந்தது. எங்கு போனாலும் வல்வை புளூஸ் என்ற பெயரில் தான் போவோம் வெற்றியும் ஈட்டுவோம். கார்த்திகேசு ஓவசியர் மேல் மாடிதான் வல்வை புளூஸ் காரியாலயம். ஒவ்வொரு நாளும் விளையாட்டுக்குப் பின் அந்த ஓவசியர் வீட்டில்தான் எங்கள் சமா.

1961 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் படித்த காலத்தில்- நான் all Jaffna Football team இல் இருந்தபடியால் எத்தனை clubs – Ariyalai United, பாசையூர் அன்ரனீஸ் போன்ற team என்னை தங்களுக்காக விளையாடும்படி கேட்பார்கள். நான் கூறுவேன். 'விளையாடினால் வல்வை புளூஸுக்குத்தான் விளையாடுவேன். நீங்கள் என்ன சலுகை தந்தாலும் வேறு ஒரு கிளப்பிற்கும் விளையாடமாட்டேன்.' என்று அப்போது அவர்கள் சொல்லுவார்கள். 'வல்வெட்டித்துறையான் வல்வெட்டித்துறையான்தான். அவர்களை விலைக்கு வாங்கமுடியாது' என்று அப்படி ஒரு மண்பற்று அந்தக் காலத்திலேயே இருந்தது.

என்ன தான் நடந்தாலும் வல்வை புளூஸ என்றால் அதற்கொரு தனிச் சிறப்பும் மரியாதையும் வெற்றியும் இருந்தது. முக்கிய காரணம் ஒற்றுமை, ஒருங்கிணைப்பு, ஒழுக்கம், சுயமரியாதை, சுயகௌரவம்,. தலை நிமிர்ந்து நின்றது வல்வை புளூஸ் என்றால் ஊர்ப் பெரியவர்களும் ஏதாவது Match என்றால் வாரி வழங்குவதோடல்லாமல், Match க்கும் வந்து எங்களை மிகவும் உற்சாகப்படுத்துவார்கள்.

இங்கிருந்து 1965 இல் இந்தியா சென்றேன் படிப்பிற்காக, அங்கும் வல்வை புளூஸ் என்ற பெயரில் dark light blue jersey போட்டு விளையாடி, எங்களின் பெயரையும் புகழையும் அங்கும் நிலைநாட்டினேன்.

மதறாஸ் சர்வகலாசாலைக்கும் விளையாடினேன். தஞ்சாவூர் றிசேவ் பொலிஸ்

team க்கும் விளையாடினேன். மருத்துவக் கல்லூரி கப்டன் ஆக இருந்தேன். தஞ்சையில் இருக்கும்போது professional foot baller ஆக விளையாடினேன். காசுக்காக ஒரு Match விளையாடினால் - இரண்டு வேளை சாப்பாடும் ரூபா 15 உம் தருவார்கள்.

வல்லை புளூஸ் தொடர்ந்து ஒரு குடையின் கீழ் சிறகடித்துப் பறக்க வேண்டும் என்பதே 70 வயதிலும் என் ஆசை.

**க.மயிலேறும்பெருமாள்.**
Dr. K.MYLERUMPERUMAL
District Medical Officer, Divisional Hospital
Valvettithurai.

## 5

## வல்வை புளூஸ் கழக ஆரம்ப வீரர்- பல்கலை வித்தகர்

# வெ. கார்த்திகேயன்



திரு. வெங்கடாசலம் கார்த்திகேயன் அவர்கள் வல்வை புளூஸ் ஆரம்பித்தவர்களில் ஒருவர். இவர் சிதம்பராக்கல்லூரியில் கல்வி கற்கும் காலங்களிலேயே சிறந்த உதைபந்தாட்ட வீரராகவும் சிறந்த கைப்பந்தாட்ட வீரராகவும், ஓட்டம், பருதி வட்டம் (டிஸ்கஸ்) எறிதல், கோல் ஊன்றிப் பாய்தல், யவலின் (ஈட்டி எறிதல்) எறிதல் இன்னும் பல விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கினார். பாடசாலை இல்ல விளையாட்டுக்காக ஈட்டி எறிதல் பயிற்சியின் போது திரு.கார்த்தியேன் அவர்கள் எறிந்த ஈட்டி (யவலின்) எதிர்பாராதவிதமாக குறுக்கேவந்த நண்பர் திரு. இராசவடிவேல் அவர்களின் வயிற்றில் பாய்ந்துவிட்டது. இராசவடிவேல் அவர்கள் துடித்ததும், கார்த்திகேயன் அவர்கள் நடுங்கியபடி நின்றதும் இன்றும் கண்முன் நிற்கின்றது. ஆண்டவன் கிருபையால் பல மாதங்கள் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றபின் திரு. இராசவடிவேல் அவர்கள் உயிர் பிழைத்துக் கொண்டார்.

திரு.கார்த்திகேயன் அவர்கள் பாடசாலையில் சேர்ந்த காலங்களிலேயே தன்னைச் சாரணர் இயக்கத்தில் சேர்த்துக் கொண்டார். அவர் தலைமை ஏற்றுப் பல வருடங்கள் சாராணர்களுக்கும் பயிற்சிகள் அளித்திருக்கின்றார். இவர் ஓர் இராணி பட்டயம் (குயின் ஸ்கவுட்) பெற்ற சாரணராவார். இவர் தலைமையில் வல்வை சிதம்பராக்கல்லூரி யாழ் கச்சேரியில் அமைந்துள்ள ஓல்பாக் (பழைய பூங்கா) மைதானத்தில் வருடாவருடம் நடைபெறும் சாரணர்களுக்கான போட்டிகளில் பல வருடங்கள் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. அகில இலங்கை சாரணர் போட்டியிலும் திரு.கார்த்திகேயன் தலைமையிலான சிதம்பராக்கல்லூரி அணி முதலிடத்தைப் பெற்றுள்ளது. சிதம்பராக்கல்லூரியில் நடைபெறும் சாரணர்விழாவின் போது சாரணர்களின் சாதனை விளக்கங்கள் செய்து காட்டப்படும். சாரணர் விழாவின் போது சிதம்பராக்கல்லூரியின் உள்வாசலில் திரு. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட பாலத்தின் மீது ஆசிரியர் திரு. மகாலிங்கம் அவர்கள் மோட்டார் சைக்கிளை ஏற்றி ஓட்டிக்காட்டியது இன்றும் கண்முன் நிழலாடுகிறது. திரு. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் சிதம்பராக்கல்லூரிச் சாரணர்கள் செல்வச்சன்னிதி கோவில் திருவிழாக்களின் போது செய்த தொண்டுகள் என்றும் மறக்க முடியாததாகும்.

திரு.கார்த்திகேயன் அவர்கள் புளூஸ் விளையாட்டுக்கழகம் ஆரம்பித்த காலம் முதல் கைப்பந்தாட்ட அணியிலும் உதைபந்தாட்ட அணியிலும் விளையாடி வந்துள்ளார். காங்கேசந்துறை நகரசபை மைதான (கிழக்க மேற்காக இருந்த சிறிய மைதானம்) திறப்பு விழாவின் சிறப்பு உதைபந்தாட்ட போட்டியின் போது வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்தின் சார்பாக திரு.தருமரெத்தினம், திரு.யோகச்சந்திரன், திரு.இராசதுரை, திரு.தேவசிகாமணி, திரு. கார்த்திகேயன் ஆகியோருடன் மொத்தம் 7 வீரர்கள் கொண்ட குழுவாக விளையாடியது. திரு. கார்த்திகேயன் அவர்கள் கோல்காப்பாளராக விளையாடினார். காங்கேசன்துறை யங் றோயல் ரீம் அந்த நேரத்திலுள்ள சிறந்த கோஷ்டிகளில் ஒன்று வல்வை புளூசும் அவர்களுக்குச் சமமான நிலையிலேயே இருந்தனர். சிறிய மைதானங்களில் விளையாடும் போது கோல்காப்புக் வீரர்களுக்கு நெருக்குதல்கள் அதிகமாகத்தான் இருக்கும். அதிலும் இருகோஷ்டிகளும் சமபலம் கொண்டதாக இருந்ததால் திரு. கார்த்திகேயன் அவர்களுக்குத் தாக்குதல்கள் அதிகமாகத்தான் இருந்தது. புலற் வேகத்தில் வந்தாலும் நான் தடுக்கத் தயார் என்ற நிலையிலேயே கார்த்திகேயன் அவர்கள் இருந்தார்கள். பக்கமாக வரும் பந்துகளைப் பாய்ந்து பிடிப்பது, போஸ்ரருக்கு வரும் பந்துகளைப் பாய்ந்து கையால் மேலே தட்டி வெளியேற்றுவது, வேகமாக உருண்டு வரும் பந்துகளைக் காலை மடக்காது நின்று காலுக்கு முன்வைத்துப் பிடிப்பது என்று பலவிதிமுறைகளிலும் பந்துகளைத் தடுத்துச் சிறந்த முறையில் தன் முழுத்திறமைகளையும் வெளிப்படுத்தி விளையாடினார். போட்டி 3-3 என்ற கோல்க்கணக்கில் சமநிலையில் முடிந்தது. மூன்று கோல்களைக் கார்த்திகேயன் அவர்கள் விட்டார் என்பது கணக்கல்ல. எத்தனை கோல்களைக் கார்த்திகேயன் தடுத்தார் என்பதுதான் கணக்கு. உலகக்கிண்ணத்திற்கான உதைப்பந்தாட்டப் போட்டியில் கோல்விடாத கோலி (கோல் காப்பு வீரர்) யார்? திரு. கார்த்திகேயன் அவர்களின் சிறப்பான கோல்காப்புமுறைகளில் இவர் அகில யாழ் மாவட்டக் கோஷ்டிக்குத் தெரிவாகி இந்தியா சென்று விளையாடி வல்வை புளூஸுக்குப் பெருமை தேடித்தந்தவர். இவரின் டைவ் பண்ணிப் பந்தைப் பிடிக்கும் முறையே பின்னாளில் கோல்காப்பு வீரர்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது.

1964ம் ஆண்டு குருநாகல், கண்டி ஆகிய இடங்களுக்கு வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகம் சுற்றுலாச் சென்றது. இந்த இடங்களில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளுக்கும் திரு.கார்த்திகேயன் அவர்களே கோல்க்காப்பாளராக விளையாடினார். உதைபந்தாட்டத்தின் முக்கிய களநிலையே கோல்காப்புத்தளம்தான். கோல்காப்பு வீரர் கொஞ்சம் அரண்டாலோ, மிரண்டாலோ முடிவு மாறி அமைந்து விடும். மற்ற வீரர்கள் பந்தைத் தவறவிட்டால் துரத்திப் பிடிக்கலாம். இல்லை எமது அணியின் இன்னொரு வீரர் அதைத் துரத்திப் பிடிக்கலாம். ஆனால், கோல்காப்பு வீரர் பந்தைத் தவறவிட்டால்??? அளவு, வேகம் என்பனவற்றை அறியுந்தன்மை முக்கியமானது. பந்து வேகமாக உருண்டு கொண்டு கோல்க்கம்பத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றது எதிர் அணி வீரர் அந்தப் பந்தைக் கோலாக்குவதற்காகத் துரத்திக் கொண்டு வருகிறார். அந்தப் பந்தைக் கோலி எதிர்கொண்டு துரத்திவரும் வீரருக்கு முன் பந்தை அடக்கவோ, இல்லைப் பிடிக்கவோ, முடியுமாயின் முன்னுக்கு ஓடிச் சென்று தாக்கலாம், பிடிக்கலாம். இல்லையேன் தனது எல்லைக்கோட்டுக்குள் (கோல்போஸ்) நின்று எதிர் அணி வீரர் கொண்டுவரும் பந்தைத் தடுப்பதற்காகிய முயற்சிகளை எடுக்க வேண்டும். இதுபோன்று பலபல விஷயங்களை அறிந்து அதனைச் செயல்படுத்திய சிறந்த கோல்காப்புவீரர்தான் திரு.கார்த்திகேயன் அவர்கள். வடமராட்சியில் அவர் விளையாடாத மைதானங்களே இல்லை. அதுபோல யாழ்மாவட்டத்தில் உள்ள அனேக மைதானங்களில் அவர் விளையாடி இருக்கிறார். பலநூறு உதைபந்தாட்டப் போட்டிகளில் வல்வை புளூசுக்கு விளையாடிப் புகழீட்டி இருக்கின்றார்.

உதைபந்தாட்டம் போலவே பலநூறு கைப்பந்தாட்டப் போட்டிகள் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக விளையாடிய பெருமைக்குரியவர் திரு. கார்த்திகேயன் அவர்கள். இவரிடம் ஓரளவு ஸ்பைக்

வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகம்

பண்ணக்கூடிய திறமை இருந்தபோதும் இவர் பெரும்பாலும் செற்ரராகவே விளையாடியுள்ளார். எதிர் அணி வீரர்கள் எத்தனை வேகமாக சேவிஸ் போட்டாலும் அதைத்தன் பத்து விரல்களினாலேயே இலகுவாகப் பிறேக் பண்ணிவிடுவார். இவரது செற்றிங்முறை அலாதியானது. எதிர் அணியினரின் புளக்கிங் எந்த இடத்தில் வீக்காக இருக்கிறதோ அந்த இடத்திற்கு செற்றிங் கொடுத்து புளக்கிங் (கவறிங்) இல்லாது எமது வீரர்கள் அடிக்க வழி வகுத்து விடுவார். ரவல் செற்றிங் கொடுப்பதில் திரு.யோகச்சந்திரன் அவர்களும் திரு.கார்த்திகேயன் அவர்களும் சிறந்தவர்களாகக் காணப்பட்டனர். நெற்றுக்குப் பக்கத்தில் நின்று கொண்டு பக்கக் கோட்டுக்கு ஐந்து அடி முதுகுப்பக்கம் தள்ளி நின்று அடுத்த பக்கக் கோட்டை நோக்கி 20 அடி முதல் 25 அடி வரை பந்தைக் கைகளின் பத்து விரல்களினால் தள்ளிக் கொடுப்பது. அப்படிக் கொடுத்த பந்து 8 அடி உயர நெற்றுக்கு மேலாக 3,4 அடி உயரமாகப் பறந்து வந்து கொண்டிருக்கும் போது எமது வீரர் எங்கள் பக்கக்கோட்டுக்கு வெளியில் நின்று ஓடிவந்தோ அல்லது கோட்டுக்குச் சமீபமாக நின்று ஓடி வந்தோ பாய்ந்து தன் பலம் முழுவதையும் திரட்டி நெற்றுக்கு மேலால் எதிர்அணியினரின் எல்லைக்கள் பந்தை அடிப்பார். பந்தும் எங்கள் அணி வீரரின் கையும் எதிரெதிராகச் சந்திப்பதால் அடிபலத்த சத்தத்துடன் நிலத்தைத் தொட்டோ, இல்லை எதிர் அணியினரின் கையைப் பறித்துக் கொண்டோ சென்றுவிடும். எதிர் அணியினர் இருபது அடிக்கு மேல் செற்றிங் வரும் என்று எதிர்பார்க்கமாட்டார்கள். அதனால் கிடைக்கப்பட்ட பகுதிகளிலேயே புளக்கிங்குக்கு ஆயத்தமாக நிற்பார்கள். ஆனால் அவர்கள் எதிர்பாராத இடத்துக்கு பந்து போனதால் புளக்கிங் இன்றி அடி மின்னல் எனவிழும். திரு. கார்த்திகேயன் அவர்கள் மைதானங்களில் பயிற்சி நேரங்களுக்கு முன் பந்தை கைவிரல்களினால் ஆகாயத்தை நோக்கித் தள்ளிவிடுவார். இப்படி இருபது, இருபத்தைந்து முறைகள் கையால் பந்தைப் பிடிக்காது தூக்கித் தூக்கிவிட்டுக் கொண்டிருப்பார். இந்தப் பந்து விரல்களினால் செய்யப்பட்ட பயிற்சியே திரு.கார்த்திகேயன் அவர்களின் திறமை மிக்க செற்றிங்குக்கு உதவியாக இருந்தது. வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்திற்காகக் கைப்பந்தாட்டப் போட்டிகளில் திருகோணமலை, வவுனியா, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், அச்சுவேலி, காங்கேசன்துறை என வெளிமாவட்டங்களிலும், யாழ் மாவட்டத்திலும் நூற்றுக்கணக்கான போட்டிகளில் விளையாடி வல்வை புளூசைப் பெருமைப்படுத்தியிருக்கிறார். அகில இலங்கை காப்டன், கதிர்காமலிங்கம் (வல்வை புளூஸ் விளையாட்டு வீரர்) திருவாளர்கள் குகதாசன், அருட்பிரகாசம், முத்துச்சாமி, பூரணச்சந்திரன், கட்டி அண்ணா, தங்கவடிவேல், ஜெயபாலசிங்கம் என வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்தின் சிறந்த கைப்பந்தாட்ட வீரர்களுக்கெல்லாம் செற்ராக இருந்து அவர்கள் சிறப்புப் பெற உதவியவராவார்.

## 6

### குருவாகி நின்ற வீரர்-

# செ.யோகச்சந்திரன்



திரு. யோகச்சந்திரன் அவர்கள் புளூஸ் ஆரம்பித்த காலம் முதல் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழத்திற்காக விளையாடி வந்தவர். இவர் பாடசாலையில் படிக்கும்போதே சிறந்த உதைபந்தாட்ட, கைப்பந்தாட்ட வீரராகத் திகழ்ந்தவர்.

அதுபோலவே கிரிக்கற், பற்மின்ரன் என்பவற்றிலும் சிறந்து விளங்கியதோடு அல்லாமல் விளையாட்டுப் போட்டிகளிலும் சிறப்பாக விளையாடினார். இவர் சிதம்பராக் கல்லூரியில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் கம்பூன்றிப் பாய்ந்ததை (கோல் உன்றிப் பாய்தல்) இன்றும் மறக்க முடியாது. மனோகரா மைதானம் இவருக்கு மிகவும் ராசியான மைதானம் அந்த நேர முன்கள வீரர்களாக A. இந்திரலிங்கம் (பழம்) S.யோகச்சந்திரன், A.S இராசேந்திரன், A.அமுதலிங்கம், S. இராசதுரை(பாபு) ஆகியோர் விளையாடி வந்தனர்.

இந்திரலிங்கம்(பழம்) இராசதுரை(பாபு) இருவரில் ஒருவரே கோணர்கிக் அடிப்பார்கள். அந்த கோணகிக்கை (Corner Kick) தலையால் இடித்து கோல் ஆக்குவதில் இவர் ஒரு வல்லுநர், அந்நேரக் கணக்கின்படி வடமராட்சியில் தலையால் அடித்து கோல் அடித்தவர் பட்டியலில் இவர்தான் முதல் இடம் வகிப்பார். இவர் புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக பலநூறு உதைப்பந்தாட்டப் போட்டிகளிலும், கைப்பந்தாட்டப் போட்டிகளிலும் விளையாடி வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தைப் பெருமைப்படுத்தியுள்ளார். கைப்பந்தாட்டத்தில் இவர் லிப்ரராகவே விளையாடினார். இவர் போடும் சேவிஸ்சைக் கண்டு எதிர் அணியினர் கலங்குவார்கள். இவர் கதிர்காமலிங்கத்துக்கு எப்படி லிப்ற் பண்ணவேண்டும், குகதாசுக்கு எப்படி லிப்ற் பண்ணவேண்டும் அருட்பிரகாசத்துக்கு எப்படி லிப்பண்ண வேண்டும் என்பதைத் தெரிந்து அவரவருக்கு ஏற்ற மாதிரி லிப்ற் பண்ணுவார். இவர் ரவல் செற்றிங், சோட்செற்றிங், பாக் செற்றிங் என எல்லாவகையான செற்றிங்கைச் செய்வதிலும் திறமைசாலி. செற்பண்ணக் கொடுக்கும் பந்தை எதிர் அணியினர் எதிர்பாராத விதமாக தன்தலைக்கு மேலால் விரல்களால் தூக்கி அணியினரின் பக்கம் நெற்ருக்குப் பக்கத்தில் பிளேஸ் போட்டுக் கைதட்டல் வாங்கிவிடுவார். இவர் ஹற்றனில் ஆசிரியராக இருந்த காலத்தில் பற்மின்ரனில் பல விருதுகள் பெற்றவர். வல்வையிலும் பல சம்பியன் பட்டம் பெற்றவர். இன்றும் அவர் பற்மின்ரன் விளையாடியதில் நான் மறக்க முடியாதிருப்பது வல்வைச் சந்தியில் சனசமூக நிலையத்திற்கு (வாசிகசாலை) முன்பாக மின்னொளியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் திரு.சிவகணேஸ் அண்ணா மகன் சந்திரனுடன் விளையாடிய போட்டியாகும்.

கட்டி அண்ணாவுக்கு பூப்பந்தாட்டப் பயிற்சி கொடுத்து சிறந்த பூப்பந்தாட்ட வீரராக்கிய பெருமை திரு.யோகச்சந்திரன் அவர்களையே சாரும்.

## 7

### வல்வை புளூஸ் கழக ஆரம்ப வீரர்

# சி.அழகரெத்தினம்



இவர் வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக் கழகம் தொடங்கிய 1961ம் ஆண்டிலிருந்து 1966ம் ஆண்டு வரை பல வித விளையாட்டுக்களிலும் பங்கு பெற்றவர். வல்வெட்டித்துறை புளூஸ் பங்கு பற்றிய சுற்றுப் போட்டிகளிலும் இவருடைய பங்கு அளப்பரியது. உதை பந்தாட்டம் மட்டும் அல்லாமல் கூடைப்பந்தாட்டம், கிரிக்கெட் விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கினார்.


வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

யாழ் மத்திய கல்லூரியில் கல்விகற்ற இவர் கல்லூரிக்காக 1961 முதல் 1964 வரை கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொண்டார். கல்லூரியின் உதைபந்தாட்டக் குழுவிலும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருடைய சிறந்த ஆட்டத்தால் 18 வயதுக்குட்பட்டோர் இலங்கைக்கான உதைபந்தாட்டக் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் வல்வெட்டித்துறை புளூஸ் கழகத்துக்காகப் பருத்தித் துறை, அல்வொய், தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் நடந்த சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்டார். புளூஸ் விளையாட்டுக் கழகம் 1964-1965ம் ஆண்டு குருநாகல், கண்டி ஆகிய இடங்களில் நடந்த உதைபந்தாட்டப் போட்டிகளிலும், கண்டியில் நடந்த இரண்டு போட்டிகளிலும் இவரை விசேடமாக அழைத்து விளையாட வைத்தது அந்த நேரம் இவர் தொழில் காரணமாக ஊரைவிட்டு பல நூறு மைல் அப்பால் சென்றபடியால் தொடர்ந்து போட்டிகளில் பங்கு பற்ற முடியாமல் போய்விட்டது.

யாழ் மத்திய கல்லூரியில் கல்விகற்ற காலத்தில் இவர் கல்லூரியின் கூடைப்பந்தாட்டக் குழுவுக்கு தலைமை ஏற்று விளையாடி வந்தார். அதன் பின்பு யாழ் மாவட்டக் கழகத்தின் கூடைப்பந்தாட்டக் குழுவுக்கும் தலைமை ஏற்று விளையாடினார்.

## 8

### வல்வையின் சிறப்புக்களில் ஒருவர்

# திரு. A.S. இராசேந்திரன்

### (குட்டிமணி அண்ணா)



1961ம் ஆண்டு புளூஸ் விளையாட்டுக் கழகம் எனப்பதியப்பட்டு சிதம்பராக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் போது அஞ்சல் ஓட்டம் ஓடிய வீரர்களில் திரு. A.S.இராசேந்திரன் (குட்டிமணி அண்ணா) அவர்களும் ஒருவர். 1962ம் ஆண்டு புளூஸ் விளையாட்டுக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை புளூஸ் விளையாட்டுக்கழகத்திற்காக உழைத்த மூத்த உறுப்பினராவார். இவர் பாடசாலைகளில் படிக்கும் காலங்களிலேயே சிறந்த உதைபந்தாட்ட, கைப்பந்தாட்ட வீரர் மட்டுமல்லாது மெய்வல்லுனர் விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கியவர். இவரின் தந்தையார் திரு. A.சபாரத்தினம் அவர்கள் தமிழர் விடுதலைக்கூட்டணி அமைவதற்காக அயராது உழைத்தவர்களில் ஒருவர். திரு. ஞானமூரத்தி (முன்னால் நகரசபைத் தலைவர்) அவர்களுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி அமைக்கப் பெரிதும் பாடுபட்டார். அதில் வெற்றியும் கண்டனர். இத்துணை பெருமைமிக்க திரு.சபாரத்தினம் அவர்களின் மகனான குட்டிமணி அண்ணா வல்வை புளூசின் தலைசிறந்த உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட வீரர் A.S.அருட்பிரகாசம் அவர்களின் சகோதரராவார். இவரும் தந்தையைப் போலவே ஊர் பற்றுமிக்கவராகவே இருந்தார். இவர் கண்டி பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற காலத்தில் தான் வல்வெட்டித்துறை (ஊர்) வரும் காலத்தை முன் கூட்டியே அறிவித்து விடுவார், அவர் வரவை மாணவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்கள். ஊர் வந்து நிற்கும் காலங்களில் உயர்தரம்படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடம் சொல்லிக் கொடுப்பார். இவர் தன் கடமைகளில் ஒன்றாக கருதியது, சிதம்பராக்கல்லூரியின் தரத்தை இன்னும் பன்மடங்கு உயர்த்துவது ஆகும்.

திரு.குட்டிமணி அண்ணா கண்டிப் பல்கலைக்கழகத்தில் படித்த காலங்களிலும், கண்டிப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்த காலங்களிலும் ஊர்வரும் நேரங்களிலெல்லாம் புளூஸ் விளையாட்டுக்கழகத்திற்காக உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டப் போட்டிகளில் விளையாடி வல்வை புளூசுக்குப் பெருமை சேர்த்துத் தந்தவர். வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகம் ஆரம்பித்த காலங்களில் வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்தை சிறந்த உதைபந்தாட்டக் கோஷ்டியாக இனம் காட்டிக் கொடுத்த மைதானம் அல்வாய் மனோகரா மைதானம். இங்கு நடைபெறும் போட்டிகளில் குட்டிமணி அண்ணாவும் யோகச்சந்திரன் மாஸ்ரரும் அனேகமாக முன்கள வீரர்களாகவே விளையாடினார்கள். இடதுபுற வீரராக விளையாடிய இந்திரலிங்கம் (பழம்) அடிக்கும் கோணர்க்கிக்கை இவர்கள் தலையால் அடித்துக் கோலாக்குவதில் இருவரும் மிகவும் திறமை மிக்கவராகவே இருந்தனர். நான் முன்னர் குறிப்பிட்டது போல றிபிளிங் செய்வதில் குட்டிமணி அண்ணா சிறந்த கில்லாடி. பந்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு மெதுவாகவோ, வேகமாகவோ பந்தை லாவகமாக உருட்டுவார். இரு கால்களாலும் பந்தை உருட்டும் போதும் இருகால்களுக்கும் இடையில் பந்தை வைத்துக் கொள்வார். அவர் முன்னேறிச் செல்லும் போதும் பந்து அவரது கால்களுக்கு ஒரு அடிக்குள்தான் சென்று கொண்டிருக்கும். எமது அணி வீரர்களுக்குப் பந்தை அனுப்ப முடியாத சூழ்நிலையில் பந்தை எதிர் அணி வீரர்களிடம் பறி கொடுக்காது அவர்களைப் பாடாய்ப்படுத்திவிடுவார்.

1964ம் ஆண்டு புளூஸ் விளையாட்டுக்கழகம் கண்டி, குருநாகல் சுற்றுலா சென்று கண்டியில் இரண்டு போட்டிகளும், குருநாகலில் இரண்டு போட்டிகளிலும் விளையாடியது. கண்டியில் பல்கலைக்கழகத்துடன் விளையாடிய போட்டியில் இவர் பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணிக்காக விளையாடினார். மற்றைய மூன்று போட்டிகளிலும் வல்வை புளூசுக்காக விளையாடினார். வடமராட்சியில் நடைபெறும் கைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட இறுதிப்போட்டிகள் ஞாயிற்றுக்கிழமைகளில்தான் நடைபெறும். எனவே எங்கள் வேண்டுகோளை ஏற்று கண்டியில் இருந்து வந்து புளூஸ் விளையாட்டுக்கழகத்திற்காக இறுதிப் போட்டிகளில் விளையாடி வெற்றிகளுக்காக உழைத்துள்ளார். இவர் கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், மெய்வல்லுனர் விளையாட்டுக்களில் மட்டுமல்லாது பூப்பந்தாட்டம், கிறிக்கற், கரம், செஸ்ற், இன்னும் பல விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கினார்.

## 9

### எங்கள் வல்வை மண்ணினதும், வல்வை புளூஸ் கழகத்தினதும் முகவரி ஒன்று:

# ச. க. தேவசிகாமணி

### கட்டியண்ணா



வல்வை மண்ணில் சுமார் 28 வருடங்கள் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் என்று வல்வை புளூஸ் விளையாட்டு கழகத்திற்காக 1000 போட்டிகளுக்கு மேல் விளையாடி பெருமை சேர்த்த கட்டி அண்ணாவைப் பற்றித் தனிப் புத்தகம் எழுதும் அளவிற்கு விடயங்கள் உண்டு. அவற்றில் இருந்து சில துளிகள் இங்கே.

யாழ் குடாநாட்டின் விளையாட்டு வீரர்களில் சிலருடைய பெயர்களைச் சொன்னால் அதிகமாக எல்லோருக்குமே தெரியும் என்று கூறுவார்கள். இன்றும் புலம் பெயர்ந்து தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் விளையாட்டுத் துறையோடு தொடர்புடைய அனைவரும் அறிந்த ஒருவராகப் பவனி வருபவர் வல்வை புளூஸ் விளையாட்டுக்கழக வீரர் பொட்டுக்கட்டி அண்ணாவாகும். இவரது இயற்பெயர் தேவசிகாமணி. இவர் சிறுவயது முதலே அவர் வீட்டுக்கு அருகாமையிலுள்ள வல்வை வைத்தீஸ்வரன், வல்வை முத்துமாரி அம்மன் கோயில்களுக்குச் சென்று சாமி

தரிசனம் செய்து கொண்டு நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டுதான் பாடசாலை செல்வது வழக்கம். அது போல் அவர் வேறு எங்கு செல்வதானாலும் பொட்டுடனே செல்வதால் கட்டி என்னும் அவருடைய செல்லப் பெயருடன் பொட்டும் சேர்ந்து பொட்டுக் கட்டி என்று அழைக்கப்படுகிறார்.

இவர் சிதம்பராக் கல்லூரியில் படிக்கும் காலங்களில் படிப்பிலுள்ள திறமை போல விளையாட்டிலும் தனது திறமையைக் காட்டி வந்துள்ளார். இவர் உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம், செற்றப், ஓவகேம், இரண்டிலும் கிறிக்கற், பற்வின்ரன், நீச்சல் மெய்வல்லுனர் போட்டிகளில், குண்டெறிதல், பரிதிவட்டம் எறிதல், ஈட்டி எறிதல், நீளம் பாய்தல், ஓட்டம் என்பவற்றில் முத்திரை பதித்தவராவர். 1965ம் ஆண்டு வல்வை சன சமூகசேவா நிலையத்தால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் நீளம் பாய்தலில் 20 அடி பாய்ந்ததுடன் குண்டெறிதல் 38 அடி 9 அங்குலம் எறிந்து திரு.துரைலிங்கம் அவர்களின் சாதனையை முறியடித்து வல்வெட்டித்துறையின் சாதனையாளராகத் தன்னைப் பதிவு செய்து கொண்டார். பாடசாலைக்கான உதைபந்தாட்டத்தில் 3 லெவன், 2லெவன், 1லெவன் என எல்லாப்பிரிவுகளிலும் விளையாடி உள்ளார். அது போலவே கைப்பந்தாட்டத்திலும் 17 வயதிற்குட்பட்டவர் பிரிவிலும் 19 வயதிற்குட்பட்டவர் பிரிவிலும் விளையாடி உள்ளார்.

1961ம் ஆண்டு வடமராச்சி ஆசிரியர் சங்கம் (VTA) நடத்திய பாடசாலைகளுக்காகிய கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் வல்வை சிதம்பராக் கல்லூரியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் மோதின. சிதம்பராக் கல்லூரி சார்பாக தேவசிகாமணி (கட்டி அண்ணா), ஹரிச்சந்திரன், தனபாலசிங்கம், சண்முகானந்தம், அமிர்தலிங்கம், அருமைச் செல்வம், சக்திவேல், ஆகியோர் விளையாடினார்கள். ஹாட்லிக் கல்லூரி சார்பாக சிதம்பராக் கல்லூரியின் பழைய மாணவன் A.S.இராசேந்திரன் (குட்டிமணி அண்ணா) இளம்பூரணன் இன்னும் மற்றவர்களும் விளையாடினார்கள். போட்டி ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக இருந்தது. இரண்டு அணிகளிலும் சமநிலை கொண்ட கோஷ்டிகள். இரு அணிகளும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்னும் அளவுக்கு அடிக்கு அடி புளக்கிங்குக்கு புளக்கிங் எனத் தமது திறமையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். இரண்டு பாடசாலைகளும் 2-2 என்ற எண்ணிக்கையுடன் ஐந்தாவது கேம் ஆரம்பமானது. ஆனால் வெளிச்சம் போதாத காரணத்தால் போட்டி இடைநிறுத்தப்பட்டு வேறொரு நாளில் விளையாட்டு முதலில் இருந்து ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

மறுமுறை குறிப்பிட்ட தேதியில் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இரு அணிகளும் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை அமிர்தலிங்கம் கட்டியிடம் உங்கள் அம்மா ஐயா எல்லாம் வந்திருக்கிறார்கள் என்று கூற அவர் காட்டிய திசையைப் பார்க்கிறார் கட்டி. அவர் காட்டிய திசையில் கூட்டத்தோடு கூட்டமாய் அவர் தாய் தகப்பன் குடும்பமே நின்று கொண்டிருந்தது. கட்டியால் ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. ' பந்தடி சோறு போடாது' என்று அடிக்கடி கூறும் அவர் தாய் கூட மகன் விளையாட்டைப் பார்க்க வந்திருப்பதால் கட்டிக்குத் தலைகால் புரியவில்லை. போட்டி ஆரம்பமாகியது. எதிர் அணியினர் போட்ட சேவீஸ் பந்தை கட்டி இலகுவாக பிரேக் பண்ணி அமிர்தலிங்கத்திடம் கொடுக்க அமிர்தலிங்கம் அருமையான ஒரு லிப்ரிங் கொடுக்கக் கட்டி நல்ல யம்பில் நல்ல உயரத்தில் வைத்து ஒரு அடி பந்து எதிர் அணியினரின் தடுப்புக்களைச் சட்டை செய்யாது அவர்களின் முதல் லைனில் டம் என்னும் சத்தத்துடன் நிலத்தில் விழுந்து பறந்தது. கைதட்டல் கைதட்டல் சிதம்பராக்கல்லூரியின் ஆதரவாளர்கள் என்றால் கேட்கவா வேண்டும். போட்டி தொடர்கிறது. தாய் தந்தையரைக் கண்ட கட்டிக்கு 8 அடி உயர நெற் ஒரு அடி குறைந்து 7 அடியில் கட்டப்பட்டிருப்பதாக ஒரு பிரமை. கட்டி அடித்த பந்துகள் காற்றைக் கிழித்துக் கொண்டு சென்று டும் டும் என்னும் சத்தத்துடன் நிலத்தைத் தொட்டுப் பறக்கின்ற கட்டியின் அடியின் வேகத்தைக கண்ட ஹாட்லிக் கல்லூரி வீரர்கள் நிலைகுலைந்து போனார்கள். சிதம்பராக்கல்லூரி ஆதரவாளர்களுக்கு இந்தப் போட்டி விருந்தாக அமைந்தது. கட்டி அடி கட்டி அடி என்று முழக்கமிட்டவாறே இருந்தனர். கட்டியும் தன் முழுத்திறமையையும் வெளிப்படுத்தி அடிமேல் அடியாக அடித்துக் கொண்டிருந்தார். முடிவு ஐந்து கேமில் முதல் மூன்று கேமையும் தொடர்ச்சியாக எடுத்து சிதம்பராக்கல்லூரி வெற்றி பெற்றது. வடமராட்சி சம்பியன் வந்தது. சிதம்பராக் கல்லூரியின் P.T. மாஸ்டர் திரு. தியாகராசா அவர்கள் கட்டி நின்ற இடத்துக்கு ஓடி வந்து கட்டியின் கையைப் பிடித்துக் கொண்டு 'தேவசிகாமணி தகப்பன் தாயைப் பார்த்தால் பறந்து பறந்து அடிப்பார் என்று தெரிந்திருந்தால் போன மச்சுக்கே தேவசிகாமணியின் தகப்பன் தாயைக் கூட்டி வந்திருப்போம்' என்று சிரித்துக் கொண்டே கூறினார். கட்டி யாழ் மாவட்டத்திலேயே சிறந்த கைப்பந்தாட்ட வீரனாக உருவெடுக்க முதற்படியாக அமைந்தது இந்தச் சிதம்பரா ஹாட்லிக் கல்லூரிப் போட்டிதான்.

சிதம்பராக் கல்லூரி வடமராட்சிச் சம்பியனாக வந்த காரணத்தால் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான கைப்பந்தாட்டப் போட்டியில் பங்கு பெறும் தகமையைப் பெற்றது. இதன் மூலம் சிதம்பராக் கல்லூரி கொழும்பு சென்று விளையாடிய போதும் கட்டி தனது திறமையை வெளிப்படுத்தத் தவறவில்லை. இதனால் 19 வயதுக்குட்பட்டவர்கள் தேசிய அணியில் விளையாட கொழும்பில் பயிற்சிக்கு வரும்படி சிதம்பராக்கல்லூரிக்கு கடித மூலம் அறிவித்தல் அனுப்பியிருந்தது. பயிற்சியாளர் திரு. தியாகராசா அவர்கள் தேவசிகாமணியிடம் அந்தக் கடிதத்தைக் காட்டி கொழும்புக்கு பயிற்சிக்கு அனுப்பி செலவு செய்யும் அளவுக்கு பாடசாலையில் வசதியில்லை. நீ விரும்பினால் கடிதத்துடன் நேரடியாகச் செல்லவும் என்று கூறிவிட்டார். கட்டி அண்ணரின் குடும்பத்தினரிடமும் வசதியில்லாததனால் கொழும்பு செல்லவில்லை. பயிற்சியில் பங்கு பற்றாததனால் வெளிநாடு செல்லும் கட்டி அண்ணாவின் கனவு தகர்ந்தது. இன்றுவரை கட்டி அண்ணாவுக்கு இது மனச் சுமைதான்.

கரப்பந்தாட்டத்தை (செற்றப்) பொறுத்தவரை வல்வை புளூஸ் ஆரம்பித்த 1961 ஆம் ஆண்டில் இருந்து சுமார் 20 வருட காலம் வல்வை புளூசின் பொற்காலம் ஆகும். இக்காலப் பகுதியில் லாலா சோப், ஈழநாடு, காணிவேல்களில் நடக்கும் சுற்றுப் போட்டி என்று யாழ் மாவட்டத்தில் நடந்த அனைத்துப் பாரிய சுற்றுப் போட்டிகளிலும் வல்வை புளூஸ் பெற்ற வெற்றிகளும், அப்போட்டிகளில் அனைத்திலும் விளையாடிய கட்டி அண்ணாவின் விளையாட்டுத் திறமையும், யாராலும் மறக்க முடியாதவையாகும். ஈழநாடு பத்திரிகையின் 10ஆவது ஆண்டு சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற 7 அடி உயரமான வெற்றிக்கேடயத்தை லொறியில் எடுத்து வந்து சந்தி வாசிகசாலையின் கிழக்கு பக்க வாசலில் பார்வைக்கு வைத்திருந்தது, அன்று வல்வையில் வாழ்ந்த அனைவருக்கும் இன்றும் ஞாபகம் இருக்கும்.

1962ம் ஆண்டு பருத்தித்துறை மாவட்டக் கைப்பந்தாட்டத்துக்கு கோஷ்டி மாவட்டங்களுக்கான கைப்பந்தாட்டப் போட்டியில் கொழும்பு சென்று விளையாடிய போது வல்வை புளூஸ் வி. கழத்தைச் சேர்ந்த திரு. என்.குகதாஸ், திரு. ஏ.எஸ். அருட்பிரகாசம், திரு.தேவசிகாமணி (கட்டி அண்ணா) ஆகிய மூவரும் பருத்தித்துறை மாவட்டக் கைப்பந்தாட்டக் கோஷ்டிக்காக விளையாடினார்கள். தொடர்ந்து பருத்தித்துறை மாவட்டக் கைப்பந்தாட்ட அணிக்காக பல வருடங்கள் விளையாடினார். யாழ் மாவட்ட அணியில் விளையாட்டு வீரனாகத் தெரிவு செய்யப்பட்டு பின்பு யாழ் மாவட்டத்திற்கு கப்டனாக நீண்ட காலம் விளையாடினார். பின்நாளில் யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட பயிற்சியாளராகத் தெரிவு செய்யப்பட்டு கடமையாற்றியமை வல்வைக்கு பெருமை தரும் விடயமாகும்.

கட்டி அண்ணா உதைபந்தாட்டத்தில் இரு கால்களாலும் சமனாக விளையாடும் திறமை பெற்றிருந்ததுடன், எல்லா நிலைக்களத்திலும் விளையாடும் தகமை பெற்றிருந்தார். 1962ம் ஆண்டு சிதம்பராக்கல்லூரிக்காக விளையாடிய போது சிதம்பராக் கல்லூரி சாம்பியனாக வந்தது. இவரின் திறமையைப் பாராட்டி 1962ம் ஆண்டு பாடசாலையால் வழங்கப்படும் உயரிய விருதான கொலிஜ்கலர் (College Colour) உதைபந்தாட்டத்திற்கும் கைப்பந்தாட்டத்திற்கும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்டக்

வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

கோஷ்டி சீனத் தேசிய உதைபந்தாட்டக் கோஷ்டியுடன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் விளையாடிய போது கட்டி அண்ணா பரு.மாவட்ட உதைபந்தாட்ட கப்டனாக விளையாடினார். அந்தப் போட்டியில் வல்வை புளூசைச் சேர்ந்த தங்கவடிவேல், செல்வச்சந்திரன், தங்கவேல், குணநாதன், சுந்தரகுமார் ஆகியோரும் விளையாடினர். கட்டியண்ணா தொடர்ந்து பலவருடங்கள் பரு. மாவட்ட உதைபந்தாட்ட குழுவுக்காக விளையாடினார். கட்டி அண்ணா மூன்று முறை யாழ் மாவட்ட உதைபந்தாட்ட கோஷ்டி தெரிவுக்காகிய பயிற்சிக்குச் சென்று மூன்று முறையும் யாழ் மாவட்ட உதைபந்தாட்ட வீரராகத் தெரிவு செய்யப்பட்டார். முதல் முறை கட்டி அண்ணா மட்டும் பயிற்சிக்குச் சென்று தெரிவு செய்யப்பட்டார். இரண்டாம் முறை கட்டி அண்ணாவும் தங்கவடிவேலும் சென்று இருவரும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

மூன்றாம் முறை 80ம் ஆண்டு ரமேஸ் சுந்தரலிங்கம், வேலாயுதம்பிள்ளை, சுப்பிரமணியம் (மணி) ஆகியோர் கட்டியண்ணாவிடம் தாங்கள் யாழ் மாவட்ட உதைபந்தாட்ட பயிற்சிக்குப் போக விரும்புவதாகக் கேட்டுக் கொண்டனர். கட்டி அண்ணா தொழில் நிமித்தம் போக முடியாத நிலையை விளக்கி அதனால் தன்னால் வரமுடியாதென்றும் அவர்களையே போகும்படியும் கூறிவிட்டார். அவர்கள் யாழ் மாவட்ட சங்க நிர்வாகிகள் யாரையுமே தெரியாதென்றும் அதனால் தாங்கள் போய்ப் பயனில்லையென்றும், கட்டியண்ணா வந்தால் மட்டுமே பயிற்சிக்குப் போகப் போவதாகவும் கூறினர். கட்டியண்ணாவுக்கு தர்மசங்கடம். பருத்தித்துறை மாவட்டப் பயிற்சிக்கு நெல்லியடிக்கு சைக்கிளில் போக 15 நிமிடம் வர 15 நிமிடம். ஆனால் யாழ் மாவட்டப் பயிற்சிக்கு யாழ்ப்பாணம் போக பஸ்சுக்கு காத்திருந்து பஸ் ஏறிப் போகக் கிட்டத்தட்ட ஒன்றரை மணித்தியாலங்கள். அதே போல திரும்பி வரும்போது ஒன்றரை மணித்தியாலங்கள் பயிற்சி நேரம் தனி. இதனால் அவரது தொழில் பாதிப்பு ஏற்படும் என்பதாலேயே அவர் பயிற்சிக்கு வர மறுத்தார். ஆனால் கட்டியண்ணா வராவிட்டால் தாங்கள் போகவில்லை என்று கூறிவிட்டார்கள். தன்னால் இவர்களது யாழ் மாவட்ட வீரர் கனவு தகர்ந்து விடக்கூடாது என்று நினைத்த கட்டியண்ணா யாழ் மாவட்டப் பயிற்சிக்கு வர சம்மதித்தார். பயிற்சிக்குச் சென்ற கட்டியண்ணா, ரமேஸ், வேலாயுதம்பிள்ளை, சுப்பிரமணியம் ஆகிய நால்வரும் யாழ் மாவட்டக் கோஷ்டிக்குத் தெரிவு செய்யப்பட்டனர். கட்டியண்ணா வலது பக்க வெளிக்கள (றைட் அவுட்) முன்னணி வீரராக விளையாடினார். 1943ம் ஆண்டு பிறந்த கட்டியண்ணாவுக்கு 80ம் ஆண்டு யாழ் மாவட்ட உதைபந்தாட்டக் கோஷ்டிக்கு விளையாடிய போது வயது 37. ஒரே நேரத்தில் யாழ் மாவட்ட உதைபந்தாட்டக் கோஷ்டிக்கு வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்திலிருந்து நான்கு பேர் தெரிவு செய்யப்பட்டது இதுவே முதல் முறையாகும். யாழ் உதைபந்தாடடக் கோஷ்டியிலிருந்து அகில இலங்கை உதைபந்தாட்ட அணிக்கு தெரிவாகும் பயிற்சிக்கு மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டனர். அந்த மூன்று பேரில் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழக வீரர் ரமேஸ் சுந்தரலிங்கமும் ஒருவராவார்.

பொட்டுக்கட்டியண்ணா புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக 28 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து விளையாடி வந்ததால் புளூஸ் விளையாட்டுக் கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட கண்டி, குருநாகல் உதைபந்தாட்டச் சுற்றுலா, திருகோணமலை உதைபந்தாட்டச் சுற்றுலா, வவுனியா உதைபந்தாட்டச் சுற்றுலா, திருகோணமலை கைப்பந்தாட்டச் சுற்றுலா, வவுனியா கைப்பந்தாட்டச் சுற்றுலா என எல்லாச் சுற்றுலாக்களிலும் பங்கு பற்றி உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டப் போட்டிகளில் விளையாடி வந்துள்ளார். இலங்கையிலுள்ள பெரும்பான்மையான மாவட்டங்களில் உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டப் போட்டிகளில் விளையாடி உள்ளார். அது மட்டுமன்றி, இந்தியாவில் பாண்டிச்சேரியில் சுதந்திர தின விழாவின் போது புளூஸ் என்ற பெயரில் கட்டியண்ணா, அருணாசலண்ணா, தங்கவேல், ஜெயபாலசிங்கம் ஆகியோர் கைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றினர். தமிழ்நாட்டில் திருச்சி உறையூர் மைதானத்தில் 87ம் ஆண்டு நடைபெற்ற 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் புளூஸ் கழகம் சார்பாக கட்டியண்ணா, உதயணன், முரளி, செல்வக்குமார், ஜீவன், கோபி, கண்ணன் ஆகியோர் விளையாடி அரை இறுதி வரை முன்னேறினார்கள். (இந்தப் போட்டியின் சிறந்த விளையாட்டு வீரனாக புளூஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த உதயணன் தெரிவு செய்யப்பட்டார்).

சிதம்பராக் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டிகளில் நீல இல்ல கப்டனாக 1962,63ம் ஆண்டுகளில் இருந்தார். 20 வருடங்கள் சம்பியனாக வர முடியாத நீல இல்லம் கட்டி அண்ணா கப்டனாக இருந்த 62லும் 63லும் இரண்டு வருடமும் சம்பியனாக வந்தது அவரின் திறமைக்கு எடுத்துக்காட்டாகும்.

வல்வை தெணியம்பையில் நடைபெற்ற பற்மின்ரன் (பூப்பந்தாட்டம்) இரட்டையர் பிரிவுப் போட்டியில் கட்டியண்ணா, அருணாசலண்ணா ஜோடி சம்பியன் பட்டம் பெற்றது. யாழ் சுண்டுக்குளி மகளிர் பாடசாலையில் YMCA யால் நடத்தப்பட்ட 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பற்வின்ரன் போட்டியில் புளூஸ் என்ற பெயரில் விளையாடி கட்டியண்ணா, அருணாசலண்ணா ஜோடி இரண்டாம் இடம்பெற்றனர். கட்டியண்ணா நீச்சல் போட்டிகளிலும் பங்கு பற்றி பல பரிசுகள் பெற்றவர். கட்டியண்ணா பல உதைபந்தாட்டப் போட்டிகளில், கைபந்தாட்டப் போட்டிகளில் சிறந்த வீரருக்கான பரிசைப் பெற்றிருக்கிறார். இருந்தபோதும், சிதம்பராக்கல்லூரியில் படித்த போது கல்லூரியால் வழங்கப்பட்ட கைப்பந்தாட்ட, உதைபந்தாட்டக் கலர்கள் (College Colour), வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழக வெள்ளி விழா ஆண்டின் போது வல்வையின் சிறந்த விளையாட்டு வீரனுக்காகிய விருது, கனடாவில் வல்வெட்டித்துறை நலன்புரிச் சங்கக் கிளை 30.12.2006ல் குளிர்கால ஒன்று கூடலில் கட்டியண்ணாவுக்கு அளித்த விருதை அவர் மகள் பானு கனடாவில் பெற்றுக்கொண்டார். வல்வை மக்களால் வழங்கப்பட்ட மூன்று விருதுகளையுமே தனது வாழ்நாள் சிறந்த விருதுகளாக இன்றும் கூறிக் கொண்டிருக்கின்றார். ஆயிரம் போட்டிகளுக்கு மேல் வல்வை புளூஸிற்காக விளையாடி புளூசுக்கும் வல்வைக்கும் பெருமை சேர்த்து தந்தவர் இந்தப் பொட்டுக் கட்டியண்ணாவாகும்.

கட்டி அண்ணாவை வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்தின் ஒரு பெரும் சகாப்தம் என்றே கூறலாம். மிகச் சிறந்த விளையாட்டு வீரரான இவர் புதிய வீரர்களை ஊக்கப்படுத்துவதிலும், தனக்குத் தெரிந்தவற்றை அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதிலும், வல்வைக்கு வெளியே தெரிவு அணிகளில் எமது புளூஸ் வீரர்களைக் கொண்டு போய் சேர்ப்பதிலும் அதி உச்சமான ஆர்வம் காட்டியவர். அவர் தனது திறமையை வளர்ப்பதில் காட்டிய அக்கறையை விடவும் அதிகமான அக்கறையையும், கவனத்தையும் புதிய வீரர்களின் திறமைகளை ஒருங்கிணைப்பதிலும் காட்டியவர். இன்றளவும் அவர் அதிகமான வல்வை புளூஸ் வீரர்களின் விருப்பத்துக்குரியவராகவும், மரியாதைக்குரியவராகவும் இருப்பதற்கு அவரின் இத்தகைய இயல்புகளே காரணம். அவர் என்றும் எங்களின் மரியாதைக்குரியவர்.





வல்வை புளூஸ் பொன் விழா மலர்
1961-2011

# வல்வை புளூஸின் மகத்தான வெற்றிகள்

வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம் 1961ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுப் பல போட்டிகளிலும் விளையாடிக் குறிப்பாக வடமராட்சியிலும் வதிரியிலும் சாதனை படைத்துக் கொண்டிருந்தார்கள். அத்தோடு அன்றைய காலத்தில் 1962, 1963, 1964ம் ஆண்டுகளில் திருகோணமலை, கண்டி, குருநாகல் போன்ற இடங்களுக்கும் சென்று வெற்றிவாகை சூடியது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பகால வீரர்களில் ஏ.வீ. அருணாசலம், தர்மரட்ணம், கே.தேவசிகாமணி (பொட்டுக்கட்டியண்ணா), சபா.இராசேந்திரன் (குட்டிமணியண்ணா), சபா.அருட்பிரகாசம் அபாரமாக விளையாடியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

வல்வை சிதம்பராக்கல்லூரி 1967ம் ஆண்டு யாழ் உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட சுற்றுப் போட்டியில் சாம்பியன் பட்டத்தை வென்றது. அந்த அணிக்கு விளையாடிய ஏ.எஸ்.தங்கவடிவேல், பா. குமாரஸ்ரீதரன், பீ.ரி.பாலச்சந்திரன், மு.தங்கவேல் மற்றும் கோல்க்காப்பாளர் சி.செல்வச்சந்திரன் ஆகியோர் வல்வை புளூஸ் அணிக்காக அபாரமாக விளையாடிப் பல வெற்றிகளுக்குக் காரணமாக விளங்கினார்கள் என்றால் மிகையல்ல. தருமண்ணாவும் அவருடைய சகோதரர்கள் நால்வரும் ஒரு காலகட்டத்தில் வல்வை புளூஸ் அணிக்காக விளையாடியதை என்றுமே மறக்க முடியாது.

வதிரியில் சிவானந்தா, மனோகரா, பொமேர்ஸ், தேவரயாளி, நக்கீரன் ஆகிய மைதானங்களிலும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்திலும் மற்றும் பருத்தித்துறை திக்கமுனை மைதானத்திலும் தொடர்ந்து விளையாடிக் கொண்டிருந்த புளூஸ் அணியினர் பலதடவைகள் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

அன்றைய காலகட்டத்தில் 1969ல் வல்வை புளூஸ் அணி தெல்லிப்பளை, ஈவினை, குரும்பசிட்டி, கட்டுவன் உட்பட யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் சென் அன்ரனீஸ், பாடும்மீன், சென்நிக்கலஸ் அணிகளுடன் மோதிப் பல வெற்றிகளைப் பெற்றார்கள். எழுபதுகளின் முற்பகுதியில் ஈழநாடுப் பத்திரிகை நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டியே யாழ்மாவட்டத்தில் மிகவும் பிரபலம் வாய்ந்த சுற்றுப் போட்டியாகும். அந்தப் போட்டிகளில் வல்வை புளூஸ் அணியைத் தோற்கடிப்பதற்காக இலங்கை கடற்படை அணியில் அங்கம் வகித்த பிரான்சிஸ் மற்றும் இலங்கை விமானப் படையணியில் அங்கம் வகித்த கொன்சலேஸ் ஆகியவர்கள் கொழும்பில் இருந்து வரவழைக்கப்பட்டிருந்தும் வல்வை புளூஸ் அணி ஈழநாடு வெற்றிக் கிண்ணத்தை 1971,1972 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் தொடர்ந்து கைப்பற்றியது மறக்கமுடியாது.








யாழ்ப்பாணத்தில் துரையப்பா விளையாட்டரங்கில் நடந்த ஒரு இறுதியாட்டத்தில் வல்வை புளூஸ் அணி 2-1 என்ற கோல்கணக்கில் பாடும்மீன் அணியை வெற்றி பெற்றுக் கொண்டிருந்தது. போட்டி முடிவதற்கு மூன்று நிமிடங்களுக்கு முன்பு வல்வை புளூஸ் அணியின் வீரர் ஒருவர் பாதணியை (Boots) கழட்டிவிட்டார் என்பதைக் காரணம் காட்டி வல்வை புளூஸ் அணிக்குத் தோல்வி கொடுக்கப்பட்டது. இதே போன்று வதிரி போமேர்ஸ் அணிக்கும் ஒரு போட்டியில் தோல்வி கொடுக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுமுகமாக 1972ல் வடமராட்சியில் இருந்து யாழ் சென்ற அணியினர் ஒன்றுகூடி பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட சங்கம் உருவாக வேண்டுமென்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். முன்னாள் உதைபந்தாட்ட வீரரும் ஓய்வு பெற்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் A.S.P.ஆறுமுகம் என்பவரின் விடா முயற்சியாலும், P.D.F.A உதயமாகியது. கரவெட்டியில் திரு. ஆறுமுகம் வீட்டில் நடந்த கூட்டத்தில் பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தலைவராக திரு. ஆறுமுகம் தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து அணியின் தலைவராக வல்வை புளூஸ் அணியின் கே.தேவசிகாமணி (கட்டியண்ணா), N.C.Cஅணியின் வீரர் ஜோதிரவி (ஆசிரியர்) உபதலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

நெல்லிடிய மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் பருத்தித்துறை மாவட்ட அணி மக்கள் சீனக்குடியரசு அணியோடு மோதிய ஒரு போட்டி மறக்க முடியாதது. இப்போட்டியில் அன்றைய அணித்தலைவர் கே.தேவசிகாமணி (கட்டியண்ணா), சி.செல்வச்சந்திரன் (கோல்காப்பாளர்), ஏ.எஸ்.தங்கவடிவேல், குணநாதன், தங்கவேல் மற்றும் ப.சுந்தரகுமார் ஆகிய ஆறு வீரர்கள் புளூஸ் அணியிலிருந்து விளையாடியது குறிப்பிடத்தக்கது.

வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் 14.01.1973ல் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் கட்டுவன் பாலர் ஞானோதயா அணியை எதிர்த்து விளையாடியது. இவ்விறுதி ஆட்டத்திற்கு அன்றைய விளையாட்டமைச்சர் கே.பீ.இரத்நாயக்கா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வாட்டத்தில் பாலர் ஞானோதயா அணிக்காக கொழும்பு ரட்ணம் அணியில் இருந்து அப்பையா உட்பட ஆறு வீரர்கள் வரவழைக்கப்பட்டு விளையாடினார்கள். இவ்விறுவிறுப்பான ஆட்டத்தில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்கள் போட்டு 2-2 சமநிலையில் முடிவடைந்தது. இறுதியில் முதல் முதலில் யாழ் நகரில் தண்ட உதை அறிமுகப்படுத்தப்பட்டு பாலர் ஞானோதயா அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இச்சுற்றுப் போட்டியில் 11.01.0973ல் அரையிறுதியாட்டத்தில் வல்வை புளூஸ் அணி தெல்லிப்பழை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடி 3-2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. இப்போட்டியே இறுதி ஆட்டத்தை விட அபாரமானதாக இருந்தது. மகாஜனாக் கல்லூரியின் பயிற்சி ஆசிரியர் பத்மநாதன் மற்றும் மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர்கள் தெல்லிப்பழை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியில் விளையாடியது குறிப்பிடத்தக்கது. இச்சுற்றுப் போட்டியில் விளையாடிய வல்வை புளூஸ் வீரர்கள் இரசிகர்களின் அமோக பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.



இரசிகர்களின் அமோக பாராட்டைப் பெற்ற காரணத்தினால் இறுதி ஆட்டத்திற்கு முன்பு காட்சிப் போட்டிக்காக வல்வை புளூஸ் அழைக்கப்பட்டது. தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்ற இக்காட்சிப் போட்டியில் பத்மநாதன் தலைமையிலான மகாஜனாக் கல்லூரி அணியை எதிர்த்து வல்வை புளூஸ் அணி களம் இறங்கியது. அன்றைய ஆட்டத்தில் வல்வை புளூஸ் அணியின் கோல் காப்பாளர் உரிய நேரத்தில் மைதானத்திற்கு வந்து சேராத காரணத்தால் உதவி கோல்காப்பாளர் சீவரெத்தினம் களமிறக்கப்பட்டார்.

அந்த விறுவிறுப்பான போட்டியின் இடைவேளையில் மகாஜனா அணி 3-0 என்ற கோல்க் கணக்கில் முன்னணியில் இருந்தது. இடைவேளைக்குப் பின் வல்வை புளூஸ் அணியின் கோல்காப்பாளர் செல்வச்சந்திரன் களமிறக்கப்பட்டார். அதன்பின் ஆட்டத்தின் போக்கே மாறிவிட்டது. அடுக்கடுக்காக நான்கு கோல்களை புளூஸ் அடித்து இறுதியில் வல்வை புளூஸ் அணி 4-3 கோல் கணக்கில் வெற்றியீட்டியது. இப்போட்டியில் வல்வை அணிக்காக மூன்று கோல்களை ஏ.எஸ். தங்கவடிவேல் அடித்தது மறக்க முடியாத நிகழ்வாகும்.

தொடர்ந்து வெற்றிகளைக் குவித்த வல்வை புளூஸ் அணியோடு காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தின் ஜங்றோயல் கழகத்தினால் நடாத்தப்பட்ட சுற்றுப் போட்டியில் கட்டியண்ணா தலைமையில் இளம் அணியினர் இறக்கப்பட்டனர். அந்தச் சுற்றுப் போட்டியில் வல்வை புளூஸ் அணியை எதிர்த்து பத்மநாதன் ஜங் மகாஜனா அணி மோதியது. அப்போட்டியில் வல்வை புளூஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இதே மைதானத்தில் நடைபெற்ற 7 பேர் கொண்ட சுற்றுப் போட்டியில் வல்வை புளூஸ் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. இறுதியாட்டத்தில் கீரிமலை கருகம் பானை அணியோடு மோதி இடைவேளையின் போது வல்வை புளூஸ் அணி 0-3 என்ற கோல்கணக்கில் பின் தங்கி இருந்தபோதும், இறுதியில் 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தப் போட்டியில் இளம் வீரர்களை வழி நடத்தி அணி வெற்றி பெறக் காரணமாக இருந்த கட்டியண்ணா மற்றும் பிறேம்குமார் என்பவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகம் 1974ம் ஆண்டு பலாலி வசாவிளான் வீதியில் கட்டுவனில் நடாத்திய உதைப்பந்தாட்டப் போட்டியில் வல்வை புளூஸ் அணி சாம்பியன் பட்டம் வென்றது.

இப்போட்டியில் கட்டியண்ணா, தங்கவடிவேல், கோல்காப்பாளர் செல்வச் சந்திரன் ஆகியோர் அபாரமாக விளையாடி இருந்தார்கள். அக்காலத்தில் யாழ் உதைபந்தாட்டப் போட்டிகளில் இவர்களின் பெயர் பிரபலமாகப் பேசப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதே குரும்பசிட்டி 1975ல் நடாத்திய சுற்றுப்போட்டியில் வல்வை புளூஸ் அணி இறுதியாட்டத்திற்கு முன்னேறியிருந்தது. குறிப்பிட்ட திகதியில் ஆட்டம் நடைபெறமாட்டாது எனவும் ஆட்டம் வேறோர் நாளைக்குப் பின் போடப்பட்டுள்ளதாகவும் தந்தி வல்வை புளூஸ் அணிக்கு வந்து சேர்ந்தது. எனவே வல்வை புளூஸ் அணி ஆட்டத்திற்கு செல்லவில்லை. ஆனால் குறித்தபடி இறுதியாட்டத்திற்கு வல்வை புளூஸ் அணி வரவில்லையென அடுத்த அணிக்கு வெற்றி கொடுக்கப்பட்டது. இது சில விசமிகளின் செயல்.



வல்வை புளூஸ் ஆரம்பித்த காலத்தில் இருந்து நாட்டு நிலைமைகள் சீர்குலையும் வரை, யாழ் மாவட்டத்தின் மிகச் சிறந்த உதைபந்தாட்ட அணிகளில் ஒன்றாக வல்வை புளூஸ் இருந்ததை யாவரும் அறிவார்கள்.

**செ.பிருதிவிராஜன்**



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

## 10
## நினைவில் நிற்கும் வீரர் பழமண்ணா
## A. இந்திரலிங்கம்

உதைபந்தாட்ட அணியில் இடதுபக்கத்தில் திறமையாக விளையாடுபவர்கள் மிகமிகக் குறைவு. வல்வை புளூஸ் கழகத்தின் உதைபந்தாட்ட அணியின் இடது முன்னணி (Left Extrime) வீரராக சிறப்பாக விளையாடியவர் பழமண்ணா ஆவார். கட்டுக் குலையாத உடல் அமைப்பைக் கொண்ட பழமண்ணா, ஓடக் கூடியவர். அது மட்டுமல்லாமல் கரப்பந்தாட்டத்திலும் பழமண்ணா சிறப்பு வீரராக விளங்கியவர். இவைகளை விட மல்யுத்தத்தில் பழமண்ணா வல்வையின் எல்லைகளைக் கடந்தும் வல்வைக்கும், வல்லை புளூஸ் கழகத்துக்கும் பெருமையைச் சேர்த்தவர்.

## 11
## பொன்விழாவைக் காணும் கழகத்தின் ஆரம்பகால வீரர்
## A.அமிர்தலிங்கம்



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம் ஆரம்பித்த காலத்தில் அதன் உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட அணிகளில் சிறந்த ஒரு விளையாட்டு வீரராக விளங்கியவர் அமிர்தலிங்கம் ஆவார். பாடசாலையில் படிக்கும் பொழுதிலேயே பாடசாலையின் சார்பில் கொழும்பு சென்ற கரப்பந்தாட்ட அணியில் இடம்பெற்றிருந்த அமிர்தலிங்கம் அவர்கள் கரப்பந்தாட்ட அணியின் அனைத்துப் பிரிவுகளிலும் விளையாடினார். மிகச் சிறந்த Service அடி அமிர்தலிங்கம் அவர்களுடையது. அத்துடன் அதிவேகமாக அடிக்கக் கூடிய வீரர்களுக்கு Lifter ஆகவும் இவர் விளையாடியவர். உதைப்பந்தாட்டத்திலும் அமிர்தலிங்கம் வலது முன்னணி வீரராக வலுச் சேர்த்தார்.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
Apollo Banana Leaf
190 tooting high street , London, SW17 0SF
0208 696 1423, பாலேந்திரராஜா



# வல்வை புளூசுடன் என் நினைவுகள்

வல்வெட்டித்துறையில் விளையாட்டு வளர்ச்சியடைவதற்கு 'வல்வை புளூஸ்' கழகத்தின் ஆரம்பமே முக்கியமானது. ஆரம்பகாலத்தில் வல்வெட்டித்துறையில் பல விளையாட்டுக் கழகங்கள் இருந்தன. ஒவ்வொரு கழகத்திலும் சிறந்த விளையாட்டு வீரர்கள் இருந்தனர். ஆனால் அவர்களின் திறமை வெளியுலகத்திற்குத் தெரியாத நிலமை இருந்தது. அந்த நேரத்தில்தான் வல்வெட்டித்துறையின் மூத்த விளையாட்டு வீரர்களும் விளையாட்டு அபிமானிகளும் ஒன்று சேர்ந்து கழகங்களை ஒற்றுமையாக்கி 'வல்வை புளூஸ்' கழகத்தை உருவாக்கினார்கள்.

இந்த முயற்சியில் காலம் சென்ற A.V. அருணாசலத்தின் பங்கு மிகவும் முக்கியமானது. அந்தக் காலகட்டத்தில் காலம் சென்ற V. அரசரெட்ணம், காலம் சென்ற S.தர்மரெட்ணம், A.S ராஜேந்திரன் போன்றோர் கழகத்தின் வளர்ச்சிக்கு மிகவும் துணையாக இருந்தார்கள். முதற்படியாக சிறந்த வீரர்களைக் கொண்ட உதைபந்தாட்ட அணி உருவாக்கப்பட்டது. அவ்வணியில் காலஞ்சென்ற A.V. அருணாசலம், காலம் சென்ற தர்மரெட்ணம், காலம் சென்ற A. இந்திரலிங்கம் (பழம்), DR. மயிலேறும் பெருமாள் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஆரம்பிக்கப்பட்டபோது, அதே ஆண்டு வெளிமாவட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றி பல வெற்றிகளைப் பெற்றது.

1962 ஆம் ஆண்டு யாழ்மாவட்ட உதைபந்தாட்டக் கழகத்தினால் நடாத்தப்பட்ட சுற்றுப்போட்டியில் ஊர்காவற்றுறை 'றேஞ்சஸ்' கழகத்தை இறுதிப் போட்டியில் வென்று சம்பியனாகியது (champion). அந்தப் போட்டி யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. யாழ் மாவட்டமல்லாது வெளிமாவட்டங்களில் உள்ள தேசிய கழகங்களுடனும் போட்டிகளில் பங்குபற்றியது. குறிப்பாக குருநாகலில் உள்ள சிறந்த அணிகளான 'பெலிகன்' மற்றும் 'வயம்பலங்கா', கண்டி உதைபந்தாட்டக் கழகம், பேராதனை பல்கலைக்கழகம் போன்ற அணிகளுடன் விளையாடி வெற்றிகளைப் பெற்றது.

ஒவ்வொரு காலகட்டத்திலும் பலசிறந்த வீரர்கள் உருவாகிக் கழகத்திற்குப் பெருமை தேடித்தந்தார்கள். DR. மயிலேறும் பெருமாள், S. தர்மரெட்ணம் A. இரத்தினசிங்கம் போன்றோர் யாழ்மாவட்டத் தெரிவுக்குழுவில் இடம்பெற்று மேலும் பெருமையைத் தேடித்தந்தார்கள்.

உதைபந்தாட்டம் மட்டுமன்றி, கரப்பந்தாட்டத்திலும் (set up) ஒரு சிறந்த அணியாக விளங்கியது. அந்த நேரத்தில் யாழ்மாவட்டத்திலும் தேசியமட்டத்திலும் ஒரு சிறந்த அணியாக விளங்கியது. நீண்டகாலமாக யாழ்மாவட்டத்தில் வெல்லமுடியாத அணியாகத் திகழ்ந்தது. அந்த அணியில் சிறந்த வீரர்கள் இருந்தார்கள் அவர்களில் காலம் சென்ற S.கதிர்காமலிங்கம், K. தேவசிகாமணி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். S. கதிர்காமலிங்கம் இலங்கைத் தேசிய அணியில் விளையாடியவர்.

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், மெய் வல்லுனர், (ATHLETIC) உள்ளக விளையாட்டுக்கள் (INDOOR GAME) ஆகியவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து சிறந்த வீரர்களை உருவாக்குவதற்குப் பல போட்டிகளை வைத்து அவர்களின் திறமையை வெளிக்கொண்டுவந்தது.

அத்தகைய சிறப்புக்கள் மிக்க 'வல்வை புளூ'சின் பெருமை இன்று உலக நாடுகளில் உள்ள புலம்பெயர்ந்த எமது இளைஞர்களாலும் அபிமானிகளாலும் மென்மேலும் பெருமையடைந்து கொண்டு இருக்கின்றது. அவர்களால் கொண்டாடப்பட்ட (UK) விளையாட்டு விழாவை நேரடியாகப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த நிகழ்வு வல்வை புளூசின் ஆரம்பகால விளையாட்டு வீரனாகிய எனக்கு மிகவும் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. வல்வை புளூசின் வளர்ச்சிக்காக உள்ளூரில் இக்கட்டான காலக்கட்டத்தில் (90 ஆம் ஆண்டிற்குப் பின்) தொடங்கி இன்றுவரை திரு மு. தங்கவேல் அவர்கள் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றார். அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ற இந்நேரத்தில் 'வல்வை புளூ'சின் பெருமை மென்லேலும் வளர வாழ்த்துகின்றேன்.

**A .அமிர்தலிங்கம்,**
**(முன்னாள் விளையாட்டு வீரர்)**




## 12
## வல்வை புளூஸ் கழக மூத்த உறுப்பினர்
## சி.சந்திரலிங்கம்



இவர் 1961, 1962ம் ஆண்டு வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் உதைபந்தாட்டக் குழுவில் இடம் பெற்றார். இவருடைய ஆட்டத்திறனால் 1961ம் ஆண்டு முதல் 1969ம் ஆண்டு வரை வல்வெட்டித்துறை புளூஸ் கழகத்தின் உதைபந்தாட்டக் குழுவில் நிரந்தரமாக இடம் பெற்றார். திருமணம் செய்த பின்பு 1969ம் ஆண்டு உதைபந்தாட்டப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். 1961 முதல் 1969ம் ஆண்டு வரை புளூஸ் விளையாட்டுக்கழகம் பங்கு பற்றிய சகல உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளிலும் பங்குபற்றினார். அல்வாய் நெல்லியடி, யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் நடந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் மிக ஆர்வத்துடன் கலந்து கொண்டார். 1964-1965ம் ஆண்டு குருநாகல் கண்டி ஆகிய ஊர்களுக்கு சென்ற புளூஸ் உதைபந்தாட்டக் குழுவுக்கு இவர் உபதலைவராகச் சென்றார். 1966ம் ஆண்டு திருகோணமலை, வவுனியா ஆகிய ஊர்களுக்குச் சென்ற உதைபந்தாட்டக் குழுவுக்கும் இவர் உபதலைவராகச் சென்றார்.

அந்தக்கால கட்டத்தில் புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்டக் குழுவில் தர்மரெத்தினம், அழகரத்தினம், சந்திரலிங்கம், இந்திரலிங்கம் ஈஸ்வரலிங்கம் ஆகிய ஐந்து சகோதரர்களும் ஒன்றாக விளையாடினார்கள்.

## 13
### ஆரம்பகால வீரர் பாபு அண்ணா
# சி. இராசதுரை



அனைத்து விளையாட்டுக்களிலும் அதிசிறப்பு தகைமை கொண்ட இன்னுமொரு வீரர் பாபு ஆவார். பாடசாலையின் முதலாம் அணி உதைபந்தாட்ட அணியில் வலது முன்னணி (Right Extrime) வீரராக விளையாடிய இவர் வல்லை புளூஸ் உதைப்பந்தாட்ட அணியிலும் திறமையாக விளையாடியவர். மெய்வல்லுநர் போட்டிகளில் தனது ஆளுமையால் வெற்றிகளைக் குவித்தவர் திரு.பாபு அவர்கள். உதைப்பந்தாட்ட அணியின் முன்ணணி வீரராகச் சிறப்பாக விளையாடிய பொழுதில் கூட கோல்காப்பு வீரராகவும் விளையாடக் கூடிய தகைமை பாபுவுக்கு உரியது.

## 14
### ஆரம்பகால வீரர் ராதா
# ராதாகிருஷ்ணன்

புளூஸ் கழகத்தின் உதைப்பந்தாட்ட அணி ஆரம்பமான போது அதில் விளையாடியவர்களில் ராதாகிருஷ்ணனும் ஒருவராவர்.



பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
For Buying or Selling Homes
Canada
Ragu Paramsothy BSc





## 15
### வல்லை புளூஸ் கழகத்தை ஆரம்பித்தவர்களில் ஒருவரான
# திரு. சு.பூர்ணசந்திரன்



ஐம்பது வருடங்களுக்கு முன்னர் ஒரு அற்புதமான கனவுடன் வல்வை புளூஸ் கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது அதனை ஆரம்பித்த நால்வரில் பூரணசந்திரனும் ஒருவராவர். மிகவும் வேகமாக ஓடக் கூடியவரான இவர் வல்வெட்டித்துறையிலும் அதனைச் சுற்றிவர இருக்கும் பகுதிகளிலும் வடமராச்சிப் பகுதியிலும் நடைபெற்ற அஞ்சல் ஓட்டப் போட்டிகளில் பூர்ணசந்திரனின் மின்னல் வேகம் காலம் கடந்தும் நிற்கும். வல்வை புளூஸ் கழக ஆரம்பகால உதைப்பந்தாட்ட அணியில் பூர்ணசந்திரன் முன்னணி வீரராகச் சிறப்பாக விளையாடினார். 1966ம் ஆண்டு திருகோணமலைக்கு வல்வை புளூஸ் அணி சென்ற போது அந்த அணியில் இடம்பெற்றோரில் பூர்ணச்சந்திரனும் ஒருவராவர். உதைப்பந்தாட்ட அணியில் மட்டுமன்றி, செற்அப் (Set up) கரப்பந்தாட்ட அணியிலும் பூர்ணசந்திரனின் பங்கு மிகப் பெரியது. மிகச் சிறந்த Dasher பூர்ணசந்திரன். இவரின் அடி மிக வேகமாக எதிரணியின் கைகளைப் பறித்தபடி செல்லும். இவர் தொழில் நிமித்தமாக (மருத்துவம்) கொழும்புக்குச் சென்றபோதும் தனது விளையாட்டுப் பங்குபற்றலை குறைத்து விடவில்லை. கொழும்பிலும் உதைப்பந்தாட்ட அணியில் விளையாடிய போது அந்தப் பகுதியில் நடந்த மெய்வல்லுநர் போட்டிகளிலும் பங்கு கொண்டார். 70களில் கொழும்பில் நடந்த மெய்வல்லுநர் போட்டியில் 5’ 11” உயரம் பாய்ந்து சாதனை நிலைநாட்டினார்.

## 16
### வல்லை புளூஸின் ஆரம்ப வீரர்
# சி. சிவநேசன்



வல்வை புளூஸ் கழகத்தின் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம் என்பனவற்றில் விளையாடியவர். (காப்டன்) Capt. சிவநேசன்- பாடசாலையில் படிக்கும் பொழுதிலேயே பதினேழு வயதுக்குட்பட்டோருக்கான கரப்பந்தாட்ட அணியில் மிகச்சிறப்பான முறையில் விளையாடியதுடன் உதைபந்தாட்ட அணியிலும் இணைந்து கொண்டார். வடமராச்சி, தெல்லிப்பளை, காங்கேசன்துறைப் பகுதிகளில் நடந்த போட்டிகளில் மிகவும் ஈடுபாட்டுடன் வல்வை புளூஸ் கழகத்துக்காக விளையாடியவர்.

17

## வல்வை புளூஸ் கழகத்தின் மூன்று தலைமுறையுடன்

# திரு. மு. தங்கவேல்



திரு. மு.தங்கவேலு அவர்கள் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம் ஆரம்பித்த காலத்திற்குச் சிலவருடங்கள் பின்னால் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் விளையாட ஆரம்பித்தார். இவர் சிதம்பராக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் காலத்தில் கல்லூரிக்காக கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் விளையாடி வந்துள்ளார். கல்லூரியில் பல வெற்றிகள் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தார். அதுபோல வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக விளையாடி பல நூற்றுக்கணக்கான போட்டிகளில் வெற்றிகளைப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தவர். 20 வருடங்களுக்கு மேல் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம், விளையாடியவர்களில் திரு.மு.தங்கவேல் திரு.K.தேவசிகாமணி (கட்டிஅண்ணா), திரு A.V அருணாசலம், S. தங்கவடிவேல், போன்றோர் முதன்மையானவர்கள்.

சீன நாட்டின் தேசிய உதைபந்தாட்ட அணி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் 73 ஆம் ஆண்டளவில் விளையாடிய போது வல்வை புளூஸ் விளையாட்டு வீரர் கட்டியண்ணா தலைமையிலான பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்டக் கோஷ்டிக்காக விளையாடியவராவார். அதுமட்டுமன்றி கண்டி, குருநாகல், திருகோணமலை, வவுனியா என வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம் சுற்றுலாச் சென்றபோதெல்லாம் புளூஸ் கோஷ்டியில் அங்கம் வகித்தவர்.

திரு.தங்கவேல் அவர்கள் உதைபந் தாட்டத்தைப் போன்றே கைப்பந்தாட்டம் செற்ரப், ஓவகேம் இரண்டிலும் மிகுந்த திறமை மிக்கவர். ஓவகேமைப் பொறுத்தமட்டில் புளூஸ் விளையாடிய காலங்களில் அடித்து விளையாடுவதில் திரு.சிவநாதன், திரு. தங்கவேல் ஆகியோர் சிறப்பானவர்கள். ஒருமுறை நவஜீவன்ஸ் கைப்பந்தாட்ட மைதானத்தில் வல்வை புளூசுக்கும் இமையாணன் விளையாட்டுக்கழகத்திற்குமாகிய போட்டி. இமயாணன் யாழ் மாவட்டத்திலேயே தலைசிறந்த கோஷ்டி. அதை வெல்வது கடினம். வல்வை புளூசுக்காக திரு சிவநாதன், தங்கவேல், கட்டி அண்ணா, ஜெயபாலசிங்கம், அருணாசலம், செல்லத்துரை மாஸ்ரர் ஆகியோர் விளையாடினர். அந்தப் போட்டியில் திரு.தங்கவேல் அடித்த அடி மறக்க முடியாததாகும். பலத்த போட்டியின் பின் இமயாணன் வெற்றி பெற்றது. இமயாணன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அப்புக்குட்டி (இவர் யாழ்ப்பாணத்திலேயே சிறந்த ஓவர் கேம்பிளேயர்) தங்கவேலுக்குக் கைகொடுக்கும் போது ‘இந்த அடி அடித்தால் நாங்கள் இனி வெல்ல முடியாது தம்பி’ என்று சிரித்துக்கொண்டு சொன்னது இன்றும் நினைவில் உண்டு.

செற்ரப் கேமைப் பொறுத்தமட்டில் இவர் ஓர் சிறந்த லிப்ரர். இவரின் திறமையான லிப்ரிங்கே கட்டிஅண்ணா, தங்கவடிவேல், செல்வச்சந்திரன் ஆகியோரின் சாதனையாகும். நேரத்திற்குத்தக்க, இடத்திற்குத்தக்க மாதிரி சோட், ரவல், சோட் என லிப்ரிங்கை அழகாகச் செய்வார். இவர் விளையாடிய போட்டிகளில் லாலாசோப் போட்டி, ஈழநாடு போட்டி, காங்கேசந்துறைப் போட்டி சாவகச்சேரிப் போட்டி என்பன குறிப்பிடத்தக்கவை. பலநூறு செற்ரப் போட்டிகளில் விளையாடியவர். இவர் லிப்ரிங்கில் கைதட்டல் பெறுவது, கட்டி அண்ணாவும், தங்கவடிவேலுவும், செல்வச்சந்திரனும். இவருக்கு மிஞ்சுவது சத்தமில்லாத சாதனைதான். உதைபந்தாட்டத்திலும் முன்களத்தில் விளையாடிக் கோல் அடிப்பவர்கள் கைதட்டல்கள் பெறுவார்கள். ஆனால் திரு. தங்கவேல் அவர்கள் புல் பாக்சில் நின்று பெறுவது சத்தமில்லாத சாதனைதான். நாட்டின் நிலைமை சீரில்லாத காலங்களிலும் மனம் தளராது வல்வை புளூசைக் கட்டிக்காத்து வந்தார். அதுபோல இன்றுவரை வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தைக் கட்டிக்காத்து வருவதைத் தனது தலையாய கடமையாகக்கொண்டு செயற்பட்டு வருவதை நினைத்துப் பெருமைப்படுகின்றோம்.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
For Mortgages Needs
Canada
416 671 8160, Kumaran Arasaratnam





# வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்துடன் என் நினைவுகள் சில...

1964ஆம் ஆண்டு புளூஸ் விளையாட்டுக் கழகம் புகையிரத வண்டியில் உதைபந்தாட்ட சுற்றுலாச் சென்றோம். அப்போது முதலில் குருநாகல் சென்றோம். குருநாகலில் எமக்கு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஏ.வி. நடராஜா என்பவர் குருநாகல் விளையாட்டு அதிகாரி அவர்களால் தங்குமிடம் சாப்பாட்டு வசதி செய்து தரப்பட்டது. மாலை 4.30 மணியளவில் குருநாகலில் உள்ள ‘பெலிகம்’ (Pelligum) என்ற கழகத்துடன் உதைபந்தாட்டம் விளையாடினோம். அப்போது பெலிகம் என்ற கழகத்தில் குருநாகல் மாவட்ட அணிக்குத் தெரிவானோர். 7 பேர் விளையாடினார்கள். 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் ஆட்டம் முடிவடைந்தது. இதில் கார்த்திகேயன் அவர்கள் கோல் காப்பாளராகச் செயற்பட்டார். அவரின் திறமையாலும் சிவகுரு தர்மரத்தினம் அவர்களின் அற்புத விளையாட்டினாலும், போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

அதன்பின் புகையிரத வண்டி மூலம் கண்டிக்குச் சென்றோம். கண்டி பேராதெனியப் பல்கலைக்கழகத்தில் எமது புளூஸ் மூத்த வீரர் இராஜேந்திரன் (குட்டிமணி) கல்விகற்ற காரணத்தினால் எமக்குத் தங்குமிட வசதி, சாப்பாட்டு வசதி செய்து தரப்பட்டது. மாலை 4.30 மணியளவில் கண்டி பேராதனைப் பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியுடன் போட்டி நடைபெற்றது. இதில் 3-2 என்ற கோல்க் கணக்கில் வெற்றிபெற்றோம். அடுத்தநாள் புகையிரத வண்டி மூலம் குருநாகல் வந்தோம்.

அங்கு (Viampalanara) என்ற கழகத்துடன் விளையாடி வெற்றி பெற்றோம். அதன்பின் ஊரை வந்தடைந்தோம்.

1965-1973 ஆண்டு வரை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் காங்கேசன்துறையைச் சேர்ந்த தனபாலசிங்கம் அவர்களால் புளூஸ் விளையாட்டுக் கழகம் சுற்றுப் போட்டிகளில் பல வெற்றிகளை ஈட்டியுள்ளது. ஒரு முறை மகாநம சமரவீர என்பவர் முன்னிலையில் புளூஸ் விளையாட்டுக் கழகமும் வசாவிளான் கழகமும் இறுதிப் போட்டியில் விளையாடி 1-1 என்ற கோல்க் கணக்கில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. பின்பு தண்ட உதை மூலம் புளூஸ் கழகம் தோல்வியைச் சந்தித்தது. முக்கியமாக வசாவிளான கழகத்திற்குக் கொழும்பு ரெட்ணம் கழகத்தினைச் சேர்ந்த 7 பேர் விளையாடினார். அப்படியிருந்தும் எமது கழக வீரர்கள் திறமையாக விளையாடினார்கள். இப்போட்டியில் செல்வச்சிவம் செல்வச்சந்திரன் கோல்க்காப்பாளராகத் திறம்படச் செயற்பட்டார். சின்னத்துரை தங்கவடிவேல் என்பவரும் திறமையாகச் செயற்பட்டுப் பல கோல்களைச் சுற்றுப்போட்டியில் போட்டார்.

1967ஆம் ஆண்டிலிருந்து 1980ஆம் ஆண்டுரை கரப்பந்தாட்டத்தில் யாழ் மாவட்ட சம்பியனாக தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது. இதில் தேவசிகாமணி (கட்டியண்ணா) திறமையாக விளையாடி எமது புளூஸ் கழபத்தின் பெருமையையும் ஊரின் பெருமையையும் யாழ்ப்பாண ரீதியில் வெளிக்கொண்டு வந்தார்கள்.

குரும்பசிட்டியில் 1968 ஆம் ஆண்டு மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றது. இதில் புளூஸ் கழகம் சம்பியனாகியது. 100m மற்றும் 200m முதலியவற்றில் பரிபூரணநாதன் என்பவர் ஓடி முதலாவது இடத்தினைப் பெற்றார். கோல் ஊன்றிப் பாய்தலில் S.யோகச்சந்திரன், S.பூரணச்சந்திரன், மு.தங்கவேல் ஆகியோர் பாய்ந்து முறையே 1,2,3 இடங்களைப் பெற்றார்கள். மற்றவர்களும் திறமையாக விளையாடி வல்வை புளூஸ் முதலாவது கழகமாக வருவதற்கு உறுதுணையாக இருந்தார்கள். கண்டிச் சுற்றுலா சென்றதற்கு அடையாளமாகப் புளூஸ் கழகத்தின் போட்டோ ஒன்று உள்ளது. 1965 ஆம் ஆண்டு அல்வாய் நண்பர்கள் நடாத்திய சுற்றுப் போட்டியில் புளூஸ் விளையாட்டுக் கழகம் 3-1 என்ற கோல்க்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகவும் தெரிவாகியமையும் குறிப்பிடத்தக்கது.



எமது புளூஸ் கழகத்தால் முத்துமாரியம்மன் தீர்த்தத்திற்கு அடுத்தநாள் சிதம்பராக் கல்லூரியில் புளூஸ் டே என்ற இசைக்கச்சேரியினையும் மிகச் சிறந்த முறையில் நடாத்தியதும் குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

**மு. தங்கவேல்**
**நடராஜா வீதி,**
**வல்வெட்டித்துறை**

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
For Real Estates Needs
Canada
416 568 1924, Athesivan Narayanasamy





## 18
### வல்வை புளூஸ் கழக வீரர் ஆயண்ணா
# சி.இந்திரலிங்கம்

வல்வை புளூஸ் கழகத்தின் ஆரம்பகால உதைபந்தாட்ட அணியில் இவருடைய சகோதர்கள் நால்வருடன் இவரும் ஒரே நேரத்தில் விளையாடியது இன்றுவரை சாதனையாக இருந்து வருகிறது. சி.அழகரெட்ணம், சி.தர்மரட்ணம், சந்திரலிங்கம், சி.ஈஸ்வரலிங்கம் ஆகியோருடன் இவரும் விளையாடியவர். முன்னணி நிலையில் உதைப்பந்தாட்டத்தில் விளையாடிய இவரும் எமது கழகத்தின் வரலாற்றில் முக்கியமானவர்.

FIFA
FIFA(Federation Internationals de football Association)
21ஆம் திகதி 6ம் மாதம் 1904 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

## 19
### வல்வை புளூஸ் கழக ஆரம்பகால வீரர் ரஞ்சன்
# வி.நித்தியானந்தன்



உலக சாதனை வீரரான வல்வை புளூஸ் ஆனந்தனின் சகோதரரான ரஞ்சன் 1966ம் ஆண்டில் வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் சேர்க்கப்பட்டார். இவர் உதைபந்தாட்ட அணியில் சேர்ந்த போது மிக இளவயதினர் இவரே. இவர் விளையாட ஆரம்பித்தபோது தர்மரெத்தினம், A.S.ராஜேந்திரன், பழம் அண்ணா, கார்த்திகேயன் ஆகியோரும் அணியில் விளையாடிக் கொண்டிருந்தனர். இவர் விளையாடிய போது வவுனியா, திருமலை, வசாவிளான் போன்ற இடங்களில் நடந்த சுற்றுப் போட்டிகளில் பங்கு கொண்டார்.

வல்வை புளூஸ் கழக கரப்பந்தாட்ட அணியின் B பிரிவில் விளையாடி இருந்தார். அத்துடன் 1966ம் ஆண்டில் வடமராச்சி பாடசாலைகள் விளையாட்டுப் போட்டியில் இவர் 800m& 1500m ஓட்டங்களில் வெற்றியீட்டிச் சாம்பியனானார்.

## 20
### காலம் கடந்தும் நினைவில் வாழும் 'கலிங்"
# ஆ.ஜெயச்சந்திரன்



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆரம்பகால உதைபந்தாட்ட அணியை கட்டியண்ணா, தங்கவடிவேல், தங்கவேல், குட்டித்தம்பி ஆகியோருடன் ஜெயச்சந்திரன் அவர்களும் சிறப்பித்தவர். அன்புடன் அனைவராலும் ' கலிங்' என்று அழைக்கப்படும், வேகமான ஓட்டம் கொண்ட இந்த வீரர், பருத்தித்துறை வட்டார உதைபந்தாட்டப் போட்டிகளில் தனிமுத்திரையைப் பதித்தவர்.

## 21
### சிறந்த முன்னணி வீரர் வண்ணமண்ணா
# இ.செல்வச்சந்திரன்



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் பெருமைக்கு காரணமான உதைபந்தாட்ட வீரர்களில் வண்ணமண்ணாவும் (செல்வச்சந்திரன்) ஒருவராவார். வேகமாகப் பந்தை எதிர் அணிக்கு ஊடாகக் கொண்டு செல்லும் முன்னணி வீரராக இவர் புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் ஆரம்பகாலத்திலேயே விளையாடியவராவார். பருத்தித்துறை வட்டாரத்துக்குள் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் வதிரி பொம்மர்ஸ், டயமன்ட் மைதானங்கள் வண்ணமண்ணாவின் விளையாட்டுச் சிறப்பை இன்றும் தாங்கி நிற்கின்றன.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
Giggs convenience news
London, UK
0208 644 6982, இ.தெய்வேந்திரன்





## 22
### எல்லாவற்றிலும் சிறந்து விழங்கிய
# செ. ஜெயபாலசிங்கம்



திரு து. ஜெயபாலசிங்கம் அவர்கள் ஓர் சிறந்த கைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட, தடகள விளையாட்டு வீரர். பாடசாலையில் படிக்கும் காலங்களிலேயே சிறந்ததோர் விளையாட்டு வீரனாகத் திகழ்ந்தார். இவர் புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம் செற்றப், ஒவகேம் என்பனவற்றில் திறமைமிக்க விளையாட்டு வீரராகத் திகழந்தவர். புளூஸ் விளையாட்டுக்கழக கைப்பந்தாட்ட அணியில் இவர் ஸ்ரைக்கராக விளையாடினார். இடது கை விளையாட்டு வீரரான இவர் சுறுசுறுப்பான விளையாட்டு வீரராவார். பிரேக்கிங் புளக்கிங் என்பவைகளில் சிறந்து விளங்கியதுடன் பந்தை அடித்து விளையாடுவதிலும் சிறந்து விளங்கினார். உயரம் குறைவானவராக இருந்தபோதும் தனது முயற்சியால் முன்னுக்கு வந்தவர். எதிர் அணியினர் இவரின் அடியை புளக் பண்ணுவது கடினம். காரணம் இவர் பந்தைப் பின்னுக்கு வைத்துத்தான் அடிப்பார். அதனால் புளக்கிங்கிக்கு நிற்காது. புளூஸ் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட, கைப்பந்தாட்டச் சுற்றுலா பலவற்றிலும் பங்கெடுத்து விளையாடி வல்வை புளூசுக்குப் பெயரெடுத்துத் தந்தவர்.

வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தில் உயரம் குறைவாக இருந்தும் சிறந்த ஸ்பைக்கராக விளையாடியவர் இவராகத்தான் இருக்கமுடியும

## 23
### உதைபந்தாட்டத்தில் நவீனமும் வேகமும் புகுத்திய
# எஸ். தங்கவடிவேல்



புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்குக் காலத்திற்குக் காலம் புதிய வரவுகள் வந்து கொண்டிருந்தன. அவர்களில் நிலைத்து நின்று விளையாடியவர்களில் திரு S.தங்கவடிவேல், அவர்களும் ஒருவர். இவர் பாடசாலையில் படிக்கும் காலங்களிலேயே சகலகலா வல்லவனாகத் திகழ்ந்தார். பாட சாலையில் நடைபெறும் எந்தப் போட்டியாக இருந்தாலும் அதில் தங்கவடிவேலின் ஒளி தெரிந்துகொண்டு தான் இருக்கும். உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம் ஓட்டப் போட்டி, உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், தத்திமிதித்துப் பாய்தல், கோலூன்றிப் பாய்தல்

என எல்லாவற்றிலும் சிறந்து விளங்கினார். அத்துடன் சாரணர் இயக்கத்திலும் ஈடுபாடு கொண்ட இளைஞராகத் திகழ்ந்தார்.

வல்வை புளூஸ் விழளையாட்டுக் கழகத்திற்காக உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம் இரண்டிலும் தொடர்ந்து 20 வருடங்களுக்கு மேல் விளையாடிய பெருமைக்குரியவர். அதுபோல பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்டக் கோஷ்டியிலும் பல வருடங்கள் விளையாடியவர். சீன நாட்டின் தேசிய உதைபந்தாட்டக் குழு பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்டக் குழுவுடன் விளையாட வந்தபோது புளூஸ் விளையாட்டுக் கழகத்திலிருந்து திருவாளர்கள் கட்டி அண்ணா, தங்கவேல், தங்கவடிவேல், செல்வச்சந்திரன், குணநாதன், சுந்தரகுமார் ஆகிய ஆறு வீரர்கள் தெரிவாகி இருந்தமை பெருமைக்குரியதாகும். சீன நாட்டுக் கோஷ்டியுடன் விளையாடியபோது 6-3 என்ற கோல்கணக்கில் சீனக் கோஷ்டி வெற்றி பெற்றது.

சீனக் கோஷ்டிக்கு பருத்தித்துறை கோஷ்டியிலிருந்து அடிக்கப்பட்ட 3 கோல்களில் முதல் கோலை அடித்த பெருமைக்குரியவர் திரு. தங்கவடிவேல் அவர்கள். தங்கவடிவேல் யாழ் மாவட்டக் கோஷ்டிக்கு விளையாட விரும்புவதைக் கட்டிஅண்ணாவிடம் கூறினார். கட்டிஅண்ணா முன்பே யாழ் மாவட்டக் கோஷ்டிக்குத் தெரிவாகி விளையாடியவர். தங்கவடிவேலின் விருப்பத்திற்கிணங்க இப்பொழுதும் இருவரும் யாழ் மாவட்டக் கோஷ்டிக்குத் தெரிவானார்கள்.

கட்டி அண்ணா நெடுங்கால விளையாட்டு வீரர். அனுபவத்தினால் எந்தக் கோஷ்டி எப்படி விளையாடும், அந்த அணியில் யார் சிறப்பு விளையாட்டுவீரர், யார் வீக்கான விளையாட்டு வீரர் என்பன தெரிந்தவர். அதனால் புளூஸ் விளையாட்டுக் கழகத்துடன் விளையாடும் அணிகளுக் கேற்ப தமது அணி வீரர்களின் நிலைகளை அமைத்துக் கொள்வார். புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்குத் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் காட்சிப் போட்டி, மயிலிட்டிக் கண்ணகி விளையாட்டுக் கழகத்துடன், போட்டி விறுவிறுப்பாக இருந்தது. கடைசி நேரம்வரை எந்தக் கோஷ்டியும் கோல் போடவில்லை. வடிவேஸ்வரன் என்னும் தூணைத் தாண்டி தங்கவடிவேலால் பந்தைக் கொண்டு செல்ல முடியவில்லை. வடிவேஸ்வரன் யாழ் மாவட்டத்திற்காக விளையாடி வருவதுடன். இலங்கை உதை பந்தாட்டக் கோஷ்டிக்கும் தெரிவானவர். அத்துடன் பருத்தித்துறை மாவட்டத்து வீரரும் ஆவார். கட்டி அண்ணாவுக்கு இரண்டு வேலை. ஒன்று எதிர் அணியினரைக் கோல் அடிக்கவிடாது தடுப்பது. இன்னொன்று பின்னணியில் சுவரென நிற்கும் வடிவேஸ்வரனை முன்னுக்கு வரவழைத்து தங்கவடிவேல் கோல் அடிப்பதற்கு வழிவகுத்துக் கொடுப்பது. கட்டிஅண்ணா மையப்பகுதியில் பந்தை வைத்துக் கொண்டு கண்ணகி விளையாட்டு வீரர்களை றிபிளிங் முறையில் சுத்தவிட்டு கொண்டிருக்கிறார். பார்த்தார் வடிவேஸ்வரன்; பொறுமை இழந்து கொஞ்சம் கொஞ்சமாக முன்நோக்கி வருகிறார்.

தங்கவடிவேல் விபரம் புரிந்து ஆயத்தமாகிவிட்டார். வடிவேஸ்வரன் முன்னுக்கு வந்ததும் பந்தை வடிவேஸ்வரன் தலைக்கு மேலால் தூக்கி எதிர் அணியினரின் கோல் எல்லைக்கும் வடிவேஸ்வரனுக்கும் இடைப்பட்ட வெற்றிடத்தில் கட்டிஅண்ணா போட்டு விட்டார். இதைத்தான் எதிர்பார்த்திருந்தார் தங்கவடிவேல். மின்னல் வேகமாக ஓடிச் சென்று அந்தப் பந்தை தங்கவடிவேல் கோலாக்கிவிட்டார். இவ்வளவு வேகமாக ஓடிச்சென்று அந்தப் பந்தை கோலாக்கும் திறமை அந்த நேரத்து வீரர்களில் தங்கவடிவேலுக்கு மட்டுமே இருந்தது.

தங்கவடிவேல் வேகமாகப் பந்தைக் கொண்டு ஓடும் திறமை மிக்கவர். அத்துடன் நல்ல உயரத்தில் எழுந்து வரும் பந்துகளைத் தலையால் இடித்துக் கோல் ஆக்குவதிலும் வல்லவர். கட்டிஅண்ணா புளூசுக்காக விளையாடிய 25 வருடங்களுக்கு மேற்பட்ட காலங்களில் தலையால் கூடுதலான கோல்கள் அடித்தவரும், கூடுதல் கோல் அடித்தவரும் தங்கவடிவேல் அவர்களாகத் தான் இருக்கும்.

கைப்பந்தாட்டத்திலும் தங்கவடிவேல் ஓர் சிறந்த வீரனே. இவர் நூற்றுக்கணக்கான கைப்பந்தாட்டப் போட்டிகளில் வல்வை புளூசுக்காக விளையாடியுள்ளார். இவரின் கைப்பந்தாட்டத் திறமையினால் வல்வை





நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக வெள்ளி விழா கொண்டாட்டத்தின்போது, வல்வையின் சிறந்த கைப்பந்தாட்ட வீரருக்காகிய விருது திரு. தங்கவடிவேலுக்கு வழங்கப்பட்டது. வல்வையின் சிறந்த விளையாட்டு வீரன் என்ற விருது திரு. கட்டிஅண்ணாவுக்கு வழங்கப்பட்டது, தங்கவடிவேல் ஈழநாடு கைப்பந்தாட்டப் போட்டி, லாலா சோப் கைப்பந்தாட்டப் போட்டி, காங்கேசந்துறைக் கைப்பந்தாட்டப் போட்டி, சாவகச்சேரிக் கைப்பந்தாட்டப் போட்டி, உடப்புக் கோஷ்டிக் கைப்பந்தாட்டப்போட்டி, என எண்ணில் அடங்காத கைப்பந்தாட்டப் போட்டிகளிலும் விளையாடி வல்வை புளூசையும், வல்வை மக்களையும், வல்வெட்டித்துறையையும் பெருமைப்படுத்தியுள்ளார்.

# வல்வை புளூசுடன் என் நினைவுகள்...

நான் உதைபந்தாட்டம் விளையாட ஆரம்பித்தது கிட்டத்தட்ட 1958 இல் என்று எண்ணுகின்றேன். அதுவும் கொத்தியால் ஒழுங்கையில்தான் ஆரம்பமானது. நானும் கதிர்காமலிங்கமும் பழைய துணிகளைப் பந்து போல் சுருட்டிக்கட்டி சீலைப்பந்தில்தான் எனது உதைபந்தாட்ட வாழ்க்கை தொடங்கியது.

சிதம்பராக் கல்லூரியில் சேர்ந்த பின் அங்கு பிய்ந்த பந்தை எடுத்து வந்து அதற்குள் துணிகளை அடைத்து நான், கமலரங்கன், கதிர்காமலிங்கம், சேவற்கொடிவேல் மற்றும் நண்பர்களும் குச்சம் ஒழுங்கையில் அல்லது கடற்கரையில் மாலை நேரங்களில் விளையாடுவோம்.

அப்பொழுது சிதம்பராக் கல்லூரியில் 3rd teamஇற்கு பயிற்சி நடைபெற்றுக் கொண்டு இருந்தது. அதற்கு யோகச்சந்திரன் மாஸ்டர் பயிற்சியாளர். நான் அனைத்துப் பயிற்சிகளையும் தவறாமல் பார்ப்பேன். ஒருநாள் 3rd team இல் உள்ள கம்பர்மலை பொடியன் வரவில்லை. உடனே யோகச்சந்திரன் மாஸ்டர் என்னை Centre forward இல் விளையாடும் படி கூறினார். அன்றில் இருந்து நான் சிதம்பராக் கல்லூரி 3rd team நிரந்தர விளையாட்டு வீரனானேன்.



அதன் பின் சிதம்பராக் கல்லூரியின் 2nd team, 1st team என்று படிப்படியாக முன்னேறி வல்வை புளூசில் விளையாட ஆரம்பித்தேன். யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, காங்கேசன்துறை, மயிலிட்டி, பருத்தித்துறை, கரணவாய், நெல்லியடி என்று வல்வை புளூசுக்காகப் பல போட்டிகள் விளையாடி 100 கோல்களுக்கு மேல் அடித்தேன்.

கரப்பந்தாட்டம் விளையாட ஆரம்பித்ததும் கிட்டத்தட்ட எனது உதைபந்தாட்ட ஆரம்பம் போல்தான். அப்பொழுது பெரியவர்கள் காட்டுவளவு என்னும் இடத்தில்தான் கரப்பந்தாட்டம் விளையாடி வந்தார்கள். எனது வேலை வெளியே போகும் பந்தை எடுத்து வந்து கொடுப்பது. சில நாட்களின் பின் என்னை Permanent net என்ற இடத்தில் போட்டார்கள். எனது வேலை net இல் விழும் பந்தைப் பின்னுக்கு எடுத்துக் கொடுப்பது. அதே நேரத்தில் சில வேளைகளில் மேலே வரும் பந்தைப் பாய்ந்து அடிக்கப் பழகினேன். அதன் பின் தான் பாடசாலை அணியில் இடம்பிடித்தேன். தொடர்ந்து வல்வை புளூஸ் அணியில் இடம் கிடைத்தது. எனது கரப்பந்தாட்ட வாழ்க்கைக்குக் கட்டி அண்ணா (பொட்டுக் கட்டி)தான் Roll Model ஆகும்.

வல்வை புளூஸ் நடாத்திய பல விளையாட்டுப் போட்டிகளில் சாம்பியன் கிண்ணம் வென்றிருக்கின்றேன்.

**சி.தங்கவடிவேல்**

## 24
### சிறந்த விளையாட்டு வீரன்
## சி. தனபாலசிங்கம் (குட்டித்தம்பி)



திரு தனபாலசிங்கம் (குட்டித்தம்பி) அவர்கள் தொடர்ந்து பல வருடங்கள் புளூஸ் விளையாட்டுக் கழக உதைபந்தாட்டக் கோஷ்டிக்காக விளையாடி வந்தவர். இவர் எப்பொழுதும் வலது புற வெளிக்கள வீரராகவே (றைற் அவுட்) விளையாடி வந்துள்ளார்.

வேகமாகப் பந்தைக் கொண்டோடும் திறமை உள்ளவர். இவர் அடிக்கும் கோணர் கிக் பிரசித்தமானது. தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் மகாஜனா அணியினருடன் நடந்த போட்டியில் திரு. தனபாலசிங்கம் கடைசி நேரத்தில் அடித்த அருமையான கோணர்கிக்கைத் தங்கவடிவேல் அவர்கள் தலையால் இடித்து கோல் ஆக்கி புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றது, இன்றும் மறக்கமுடியாதது.

இதுபோன்று தெல்லிப்பழை யூனியன் மைதானத்தில் அப்போதைய மந்திரி திரு. கே.பி. ரத்நாயகா அவர்கள் கலந்து கொண்ட வல்லை புளூஸ், கட்டுவன் அணிகளுக்கான போட்டியின் போது இவரது சிறப்பான விளையாட்டை ரசிகர்கள் பாராட்டினார்கள்.

புத்தூர் எவறஸ்ற் மைதானத்தில் (புத்தூர் சிவன் கோவிலுக்கு முன்னுள்ளது) எவறெஸ்ற் கோஷ்டியுடன் நடந்த போட்டியின் போது கோணர்கிக் அடிக்கச் சென்ற குட்டித்தம்பியின் கையைப் பிடித்து அவரைக் கோணக்கிக் அடிக்காது தடை செய்ததுடன் புளூஸ்சை தரக்குறைவாகத் திட்டியதால் கோபமடைந்த குட்டித்தம்பி பக்கத்தில் இருந்த கோணர் பிளாக்கை (Corner Flag) இழுத்து அவருக்குக் கொடுத்த அடிகள் மட்டுமல்ல, இடைநிறுத்தப்பட்ட போட்டி திரும்ப ஆரம்பமான மறுநிமிடமே எதிரணியினருக்கு கோல் அடித்தும் தனது பழியைத் தீர்த்துக் கொண்டார்.

இவரும் வல்லை புளூசுக்காகப் பலவருடங்கள் விளையாடி நூற்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் விளையாடியவர். வல்லை புளூஸ் விளையாட்டுக்கழகத்திற்கு பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படும் போதெல்லாம் கைகொடுப்பவர் குட்டித்தம்பி. பல உதைபந்தாட்டப் போட்டிகள் குட்டித்தம்பி செலவிலேயே விளையாடி இருக்கின்றோம். பயிற்சி நேரங்களில் இவர் மைதானத்தில் நிற்கும் போது பந்து சரியில்லை என்று கண்டவுடன் மறுநாள் புதுப்பந்துடன் மைதானத்திற்கு வருவார். இவருக்கு புளூஸ் விளையாட்டுக் கழகத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் உண்டு. இவரின் சிறப்பான விளையாட்டின் மூலம் புளூஸ் விளையாட்டுக்கழகம் பல வெற்றிகளைப் பெற்றுள்ளது. அவரின் விளையாட்டைப் பற்றி இன்றும் அவரின் பழைய ஆதரவாளர்கள், அபிமானிகள் கதைகதையாகப் பேசுவதைக் கேட்க முடிகிறது.





வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகம்

## 25
### ஆரம்பகால வீரர்
## வி. விமலநாதன்



வல்லை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் ஆரம்பகால வீரரான விமலநாதன் சிறந்த முன்னணி ஆட்டக்காரராவார்.




## 26
### குறிதவறாத பலமிக்க அடிக்கு
## சு.குகப்பிரதாசன்



வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகம் என்றும் மறக்க முடியாத வீரர் குகப்பிரதாசன்- தெல்லிப்பழையில் நடைபெற்ற சுற்றுப் போட்டியில் குகப்பிரதாசனின் ஆட்டம் மறக்க முடியாதது. மிக உயரமான தோற்றம் கொண்ட குகப்பிரதாசன் கரப்பந்தாட்டப் போட்டியில் வழங்கிய மிகவும் சக்தி மிக்க அடிகள் அணியின் வெற்றிக்கு வழி வகுத்தன. 1969ம் ஆண்டு வடமராச்சி கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் வல்லை புளூஸ் கழகம் வெற்றியீட்டிய போது அந்த அணியில் குகப்பிரதாசனும் பங்கு கொண்டிருந்தார்.



பிரேசில் உலககிண்ணத்தை அதிகமுறை வெற்றிகொண்ட நாடாகும். 5 முறை (1958, 1962, 1970, 1994, 2002)

## 27
## என்றும் நினைவில் நிற்கும் சிறீதரன் மாஸ்டர்
## பா.குமாரசிறீதரன்



வல்வை புளூஸ விளையாட்டுக்கழகத்தின் ஆரம்பகால உதைபந்தாட்ட அணியில் விளையாடியவர்களில் சிறீதரன் மாஸ்டரும் ஒருவர்- பின்னணி வீரர்களில் ஒருவரான இவர் தனது சிறப்பான விளையாட்டினால் கழகத்துக்கு வெற்றிகளை ஈட்டித் தந்தவர்.

69ம் ஆண்டு யாழ் கோட்டை மைதானத்தில் Singing Fish கழகத்துக்கு எதிரான ஆட்டத்தில் இவர் காட்டிய திறனும், ஈடுபாடும் என்றும் மறக்க முடியாதது. அந்தச் சுற்றுப் போட்டியில் முதலாவதாக வெற்றியீட்ட இவரின் விளையாட்டும் காரணங்களில் ஒன்று. பருத்தித்துறை வட்டார உதைப்பந்தாட்டத் தெரிவு அணியில் தெரிவான வல்வை புளூஸ் கழக வீரர்களில் ஒருவர். சிறீதரன் மாஸ்டர். உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய இரண்டு விளையாட்டுக்களிலும் திறமையான ஆற்றல் இவருக்கு உள்ளது.

## 28
## அனைத்து விளையாட்டுக்களிலும் சிறப்பான தகைமை கொண்ட காண்டீபன்
## சோ. சிவனருள்சுந்தரம்



வல்வை புளூஸ் கழகம் பெருமை கொள்பவர்களில் காண்டீபனும் ஒருவராவர்- யாழ் மாவட்டத்திலும், தேசிய அளவிலும் குத்துச் சண்டையில் (Boxing) புகழ்பெற்றிருந்த பயில்வான் சோமசுந்தரத்தின் மகனான இவர் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம் என்பனவற்றுடன் மெய்வல்லுநர் போட்டிகளிலும் சாதனைகளை நிலைநாட்டியவர். வேகமாகப் பந்தைக் கொண்டு செல்லும் திறன் மிகுந்த காண்டீபன் தலையால் பந்தை அடிப்பதிலும் நுணுக்கங்கள் கொண்டவர். ஆரம்பகால சுற்றுப் போட்டிகள் அனைத்திலும் இவர் பங்கு கொண்ட பெருமைமிக்கவர். துடுப்பெடுத்தாட்டத்திலும் சிறந்த Batsman ஆக விளங்கியதுடன் மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சாளர் ஆகவும் சுழற்பந்து வீச்சாளராகவும் ஒரே நேரத்தில் விளங்கியவர்.



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

# என் நினைவின் பசுமை

வல்வை புளூஸ் கழகத்தால் பொன்விழா தினம் கொண்டாடுவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இதன் விழா தொடர்ந்தும் காலாகாலங்களில் கொண்டாடப்பட வேண்டும் என வாழ்த்துவோடு இதில் பங்குபற்றும் முக்கியமானவர்கள் வெளிநாட்டில் அதிகமாக இருப்பதனாலும், அவர்களது சந்ததியினர் வெளிநாட்டில் பிறந்து வளர்வதனாலும் அநேகமாக எங்கள் தலைமுறையினர் முதுமையடைந்து வருவதனாலும் எமது ஊராகிய வல்வை திருநகரைப் பற்றி நான் அறிந்த சில உண்மைகளை இதில் உங்களது மென்மையான கவனத்திற்குக் கொணர்வது நன்றாக அமையும் என்று எண்ணுகின்றேன். வல்வைத் திருநகரம் சரித்திர காலந்தொட்டு முக்கிய பங்கு தமிழ் கூறும் நல்லுலகில் வகித்துள்ளது. எல்லோரும் நன்கறிந்ததே. யாழ்ப்பாண ராச்சியம் ஆரியச் சக்கரவர்த்தி ஆட்சியின் கீழிருந்த மத்திய காலத்தில் தென்னிந்தியாவுடனான தகவல் (அஞ்சல்) பரிமாற்றம் வல்வையின் துறைமுகத்தினூடாக நடைபெற்றதாக அறிந்துள்ளேன். மேலும் 18ம் நூற்றாண்டில் யாழ்குடாநாட்டில் அமைந்தள்ள ஐந்து பெருந்துறைகளில் வல்வெட்டித்துறை ஒன்றாக மிளிர்ந்துள்ளது. இதனது துறைமுகத்தலைவன் (Port Captian) Head of the port) "திரு. வேலாயுதவைரவநாத அடப்பன்" என \Who are the Kumarlo| என்னும் நூலில் 1954ம் ஆண்டு மகிழ்வுடன் குறிப்பதோடு 20ம் நூற்றாண்டில் 1905ம் ஆண்டு இலங்கை கவர்னராக இருந்த Lor Henry Blale வடபகுதித் துறைமுகங்களைப் பார்க்க வந்தார். இவர் வரும் போது கடலில் நங்கூரமிடப்பட்ட 30 பெரும் பாய்க்கப்பல்கள் வரவேற்புக் கொடிகள் பறந்தாடிக் கொண்டிருந்த காட்சியை அவர் பார்த்துக் அகமகிழ்ந்து போனார்.

அவர் வல்வையில் நடந்த கூட்டத்தில் கொழும்பு திருகோணமலையைத் தவிர, இவ்வளவு பெருந்தொகையான கப்பல்களைத் தான் காணவில்லையென வாயாரப் புகழ்ந்து வல்வை மக்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார். மேலும் இந்நகருக்கு இந்தியாவின் தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் இலங்கை வந்தபோது 1930ம் ஆண்டில் வருகை தந்துள்ளார். யோகி சுத்தானந்த பாரதி 1936ம் ஆண்டில் வல்வைக்கு வந்து வல்வெட்டித்துறைக்கு 'சிவபுரம்' எனப் பெயர் சூட்டியுள்ளார். இது போன்ற பல விடயங்களை நாம் நேரடியாக நண்பர்களையும் உறவினர்களையும் அன்பர்களையும் மீண்டும் சந்திக்கும் போது கலந்துரையாட உத்தேசித்துள்ளேன்.

இந்த விழாவில் கலாசாரத்துறை முதலியவற்றிற்குக் கடந்த 50 ஆண்டுகளாக வல்வை புளூஸ் ஆற்றிய சேவையில் சிலவற்றை நினைவு கூர்வது பெருமையளிக்கின்றது. முன்ப திருமுருக கிருபானந்தவாரியார் 1940களில் வல்வெட்டித்துறைக்கு வந்து இங்கிருந்தே பலபகுதிகட்கும் சென்று கதாகாலட்சேபம் செய்தது எங்கள் நினைவில் இன்னும் மறையவில்லை. தியாகராஜபாகவதர், கே.பி.சுந்தராம்பாள், திருவாவடுதுறை ராஜரட்ணபிள்ளை (நாதஸ்வர இசைச் சக்கரவர்த்தி) தவில் வித்வான்களான முத்துவீரபிள்ளை, ராகவபிள்ளை நீடாமங்கலம், சண்முகவடிவேல் போன்றவர்கள் எமது கோவில்களுக்கும் எங்கள் ஊருக்கும் வந்து இசைக்கலை சம்பந்தமான நிகழ்வுகளில் பங்குபற்றி கலை கலாசார உறவுப்பாலமாக வல்வெட்டித்துறையை திகழ வைத்தார்கள். இப்படியான பின்னணியில் விளையாட்டுத்துறை மற்றும் வீரர்களுக்குரிய கலைகள் (marshal art) வல்வெட்டித்துறை 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் சிறப்பாகத் திகழ்ந்தது. வல்வெட்டித்துறையில் மல்யுத்தத்தில் குத்துச்சண்டையில் பயில்வான் சோமசுந்தரம், சாண்டோ தில்லையம்பலம், சிலம்படியில் கார்த்திகேசு வஸ்தாபியார், செல்லக்கண்டு வஸ்தாபியர் சிஷ்யர்களான சிவபாதசுந்தரம் (பழனியண்ணா), சோதிசிவம், வையாபுரிநாதன், க.சபாரட்ணம் போன்றோர் மாகாணரீதியிலும், தேசியரீதியிலும் முன்னணியில் திகழ்ந்தவர்

களாவார்கள். வல்வைத் திருநகரம் யாழ்குடா நாட்டில் கயிறிழுத்தல் போட்டியில் (Tag of war) கரையூர் மக்களுடன் போட்டி போட்டு மாறி மாறி வருடா வருடம் சம்பியனாக வந்துள்ளது. 40களிற்கு முற்பட்ட பகுதியில் கைப்பந்தாட்டத்தில் அருட்பிரகாசம் சபாரெத்தினம், தலைவர் நடராசா, பயில்வான் சோமசுந்தரம் போன்றவர்கள் முன்பு நன்றாகச் செய்துள்ளார்கள். உதைபந்தாட்டத்தில் 40களிற்கு முற்பகுதியில் மேற்கூறியவர்களுடன் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் திறம்பட செயற்பட்டுள்ளார். இவர்களின் பின் வந்தவர்கள் கைப்பந்தாட்டத்தில் சாம்பசிவம் பாலசிங்கம், சோ.சுந்தரலிங்கம், மாரிமுத்து இராசரத்தினம், சாம்பசிவம் பஞ்சலிங்கம் பாலசுப்பிரமணியம் (சின்னக்கிளி), சிவபாதசுந்தரம் (சின்னத்துரை அண்ணா) மகோற்கடமூர்த்தி, S.A.துரைசிங்கம், S.A.இரட்ணசிங்கம், அனந்தராஜா, தியாகராஜா மாஸ்ரர், சி.தேவராஜா போன்றவர்கள் கூடுதலாக கைப்பந்தாட்டத்தில் பிரபலம் வாய்ந்தவர்களாக இருந்துள்ளார்கள். வல்வெட்டித்துறை கைப்பந்தாட்டத்தில் அகில இலங்கை சம்பியனாக 40களின் பிற்பகுதியில் 50களின் முற்பகுதியிலும் வந்துள்ளார்கள். 40களில் உதைபந்தாட்டத்தில் சி.சிவகணேசன், செ.சண்முகசுந்தரம், முருகுப்பிள்ளை, சிவகுமாரசாமி போன்றோரும், கிரிக்கட் விளையாட்டில் ம.ரட்ணகோபால், சி.சிவகுமாரசாமி, சிவராஜதுரை, வ.அரியரட்ணம் போன்றோர் பிரபலமானவர்களாக இருந்துள்ளார்கள்.

கலைக் கலாசாரம், கல்வி, விளையாட்டுத்துறை போன்றவற்றிற்கு வல்வை சிதம்பராக் கல்லூரி அடித்தளம் அமைத்துக் கொடுத்துள்ளது. சிதம்பராக் கல்லூரி கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் கலைத்துறையான நாடகம், சாரணர் இயக்கம் போன்றவற்றில் மாகாணமட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும் சாரணர் இயக்கத்திலும், விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்கியது. ஒரு நாட்டின் உயர்ச்சி கல்வி வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது என பாரதப் பிரதமர் மறைந்த ஜவகர்லால்நேரு கூறியதற்கிணங்க இயற்கையிலேயே மதிநுட்பத்திலும் புத்திஸ ஜீவனத்திலும் வீரத்திலும் வல்வை மக்கள் மிகவும் சிறந்து விளங்கியுள்ளார்கள். திரைகடல் ஓடியும் திரவியம் தேடலில் வல்வை மக்கள் முன் நின்றார்கள். கல்விச்சாலையான சிதம்பராக்கல்லூரி வல்வையின் மூளையாகச் செயற்பட்டது. கல்லூரிக்குக் கொடியின் நிறம் தேர்ந்தெடுக்கும் பொழுது உலகிலே மிகச்சிறந்த கல்விக்கோட்டைகளான Oxford பல்கலைக்கழகம், Cambridge பல்கலைக்கழகத்தினதும் நிறங்கள் இரண்டும் கலந்து கொடியின் நிறமாக மாறியது. அதாவது Dark Blue and Light Blue. அத்தோடு வல்வெட்டித்துறையும் எண்சாத்திரப்படி 8ம் இலக்கத்தைக் கொண்டதாகக் கூறுகின்றார்கள். அந்த 8ம் இலக்கத்திற்குரிய நிறமும், நீலநிறமாக அமைந்துள்ளதாகக் கூறுகிறார்கள். அநேகமாக வல்வை புளூசில் விளையாட்டுத்துறையில் பங்கேற்றவர்கள் எல்லோரும் சிதம்பராக் கல்லூரியின் பழைய மாணவர்களாகவே இருந்துள்ளார்கள். இக்கழகம் 1961ம் ஆண்டு அளவில் உருவாக்கப்பட்ட பொழுது மேலே சொல்லப்பட்ட விதத்தில் இதனுடைய நிறம் Dark Blue and Light Blue ஆக அமைந்ததற்கு மேற்கூறிய காரணங்களே கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. உதைபந்தாட்டத்திலும், கைப்பந்தாட்டத்திலும் யாழ் குடாநாட்டிலேயே முதல்தரக் குழுவாக மிளிர்ந்தது. இதனுடைய போசகர்களாக வழிகாட்டிகளாக வயதிலே மூத்த, மேற்கூறப்பட்ட பெரியோர்களுடன் V. இரட்ணவேல், நகரபிதா நவரட்ணம், நகரபிதா T.S.N. சிவசுப்பிரமணியம் போன்றோரும் இருந்துள்ளார்கள். வருடாவருடம் ஏறத்தாழ 80கள் வரை நெற்கொழு மைதானத்தில் மாரிகால முடிவில் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நடாத்தி வெளியூர்களிலிருந்து வரும் கழங்களையும் போட்டியில் பங்குபற்ற வழிவகுத்துள்ளார்கள். இக்காலங்களில் முருகுப்பிள்ளை சித்தப்பா, செ.சண்முகசுந்தரம், அ.சுப்பிமணியம், ரட்ணவடிவேல் மாஸ்டர், A.S. ராஜேந்திரன், A.S. அருட்பிரகாசம், R. துரைலிங்கம், ராமச்சந்திரன், ராமண்ணா போன்றவர்கள் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களாக பலகாலம் கடமையாற்றி உள்ளார்கள். 1961ம் ஆண்டு நான் மிகவும் சிறுவனாக இருக்கும் போது குரும்பசிட்டியில் நடைபெற்ற பகிரங்க மெய்வல்லுநர் போட்டியில் வல்வை புளூஸ் பங்கு பற்றி மேற்பிரிவில் பரிபூரணானந்தனும் இளநிலைப்பிரிவில் ராசதுரை (பாபு)வும், கனிஸ்ர பிரிவில், S. சிவஞானசுந்தரம் (லெச்சியண்ணா) போன்றோர் 100 யார் ஓட்டத்தில் முதலிடத்தைத் தட்டிக் கொண்டு வந்தது நன்கு நினைவில் உள்ளது. அம் மெய்வல்லுநர் போட்டியிலே R. துரைலிங்கம் குண்டு எறிவதில் (அதிமேற்பிரிவில்) A.S. அருட்பிரகாசம் மேற்பிரிவிலும் குண்டு எறிவதில் முதலிடம் பெற்றதும், V. அருணாசலம் பரிதிவட்டம் (Discus) எறிதலில் முதலிடம் பெற்றதும், கே. சண்முகநாதன் உயரம் பாய்தலில் முதலிடம் பெற்றதும் நினைவில் நீங்காதவையாக உள்ளன. 1965ல் வல்வெட்டித்துறை புளூஸ் நடாத்திய மெய்வல்லுநர் போட்டியில் நெற்கொழு மைதானத்தில் நீளம் பாய்தலில் இளநிலைப் பிரிவில் க.சோ. சிவனருள்சுந்தரம் (காண்டீபன்) 20அடி 8 1/2அங்குலம் பாய்ந்து அப்பிரிவில் அகில இலங்கை பாடசாலைகளின் சாதனையை முறியடித்தார். மேலும் 100 யார் ஓட்டத்தில் அப்பிரிவில் 10.8 செக்கன்களில் ஓடி முடித்து புதிய சாதனையை நிலை நாட்டியதும் குறிப்பிடத்தக்கதாகும். அவ்விளையாட்டுப் போட்டியில் அதிமேற்பிரிவில் க.தேவசிகாமணியும் (கட்டியண்ணா) 20 அடி நீளம் பாய்ந்து சாதனை படைத்தார். வல்வையின் மெய்வல்லுநர் போட்டிக்கு ஒரு புதிய பொலிவையும் ஆக்கத்தையும் புளூஸ் கழகம் ஏற்படுத்தியதை நினைவிற்கொள்ள வேண்டும். கைப்பந்தாட்டத்தில் (Setup) வல்வை புளூஸ் வட மாகாணத்தில் முடிசூடா மன்னர்களாக இருந்தது நினைவிற் கொள்ள வேண்டிய ஒரு காலமாகும். 1965ல் இருந்து 1972 வரை வல்வை புளூஸ் பங்குபற்றாத Volley balll tournament இல்லையென்றே கூறலாம்.

யாழ்குடாநாட்டின் வடமாகாணக் கைப்பந்தாட்டக்குழுவில் A.V. அருணாசலம், தேவசிகாமணி, க.சோ. சிவனருள்சுந்தரம் (காண்டீபன்), ஜெ.ஜெயபாலசிங்கம் என்போர் காலாகாலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு விளையாடியுள்ளார்கள். உதைபந்தாட்டத்தில் A.V. அருணாசலம், S. தாயுமானவர், S.R. அருட்பிரகாசம், S. தர்மரட்ணம், K. மயிலேறும்பெருமாள் (Doctor), S. அழகரத்னம், K. தேவசிகாமணி, M. தங்கவேல் என்போர் 61இலிருந்து 70வரையான காலத்தில் அவ்வப்போது தேர்ந்தெடுக்கப்பட்டு வடமாகாண உதைபந்தாட்டக்குழுவில் விளையாடி உள்ளார்கள். V. கார்த்திகேயன், S. சிவனேசன், S. யோகச்சந்திரன் (மாஸ்ரர்), A. ஜெயச்சந்திரன் (கலிங்) ஆகியோர் முக்கிய பங்கு, உதைபந்தாட்டத்தில் மேலுள்ளவர்களுடன் சேர்ந்து பங்காற்றியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.






V. ரட்ணவடிவேல் (நகரபிதா) தகுதிவாய்ந்த மெய்வல்லுநர் போட்டிக்கான மத்தியஸ்தர் தகுதி பெற்றவராக இருந்துள்ளார். A. சுப்பிரமணியம் தகுதி பெற்ற CFA retru யாக இருந்துள்ளார். S. தர்மரட்ணம் சிறந்த உதைப்பந்தாட்ட வீரராக மாத்திரம் இருந்ததுமட்டுமல்லாமல், மேலும் தகுதி வாய்ந்த கூடைப்பந்து மத்தியஸ்தராகவும் Cricket umpier ஆகவும் Qualificed Bantet refree Cricket umpier ஆகவும் தகுதி பெற்றுள்ளார். N. குகதாஸ், A.V. அருணாசலம், S. சிவனருள்சுந்தரம் (காண்டீபன்), A.S. அருட்பிரகாசம், A.S. ராஜேந்திரன், S. தர்மரட்ணம், S. தங்கவடிவேல், J. ஜெயபாலசிங்கம், S. யோகச்சந்திரன், S. அழகரெட்ணம், S. செல்வச்சந்திரன் போன்ற சிலர் எந்த விளையாட்டானாலும் அதில் பங்குபற்றி நன்றாகச் செயற்படக்கூடியவர்களாக (all rounder) இருந்துள்ளார்கள்.

கிரிக்கட் துறையில் பரிபூரணானந்தன், S. யோகச்சந்திரன், S. அழகரட்ணம் இவர்களுக்கு முன்பு சவராஜதுரை, S. சிவகுமாரசாமி, M. ரட்ணகோபால் போன்றவர்கள் சிறந்த batsman களாக இருந்துளளார்கள். S. சிவனருள்சுந்தரம் (காண்டீபன்), ஞானமூர்த்தி, சோதி, S. அழகரட்ணம் ஆகியோர் batsman ஆகவும், காண்டீபன் சிறந்த வேகப்பந்து வீச்சாளராகவும், சுழல் பந்து வீச்சாளராகவும் பொதுவாக ஒரு all rounder களாக கிரிக்கட்டில் விளையாடியுள்ளார். சமீப காலத்தில் S. குணநாதன், முருகவேல் போன்றோரும் சிவனருள்சுந்தரம், வினோபாவும் சிறந்த all rounder களாக வல்வையில் விளையாடியது குறிப்பிடத்தக்கது. முந்தைய காலத்தில் முருகுப்பிள்ளை சித்தப்பா உதைபந்தாட்ட வீரன் பிரேம்குமாரின் தகப்பனார் பல உதைபந்தாட்டம் சுற்றுப்போட்டி நடாத்தியதும் குறிப்பிடத்தக்கது. புளூஸ் விளையாட்டுக் கழக முன்னேற்றத்தில் எல்லாத்துறைகளிலும் A.S. ராஜேந்திரன் PHD பங்குபற்றியதும் அவர் செய்த பங்களிப்பும் அளப்பரியது. அவர் ஒரு சிறந்த all rounder ஆவார். மேலும் N. குகதாசன் அவர்கள் எவ்வளவு வேகமான பந்து International Sorvici vollay வந்தாலும் அதனைப் பத்து விரல்களால் ferigering செய்வதை நான் பலமுறை பார்த்திருக்கின்றேன். மேலும் A. ரட்ணசிங்கம், A.V. அருணாசலம் போன்றோர் வல்வைக்காக Dr.S.A. துரைசிங்கமும் அவருடைய நண்பருடனும் வல்வை சனசமூக நிலையம் முன்பாக 1964,65 ஆம் ஆண்டுகளில் Batmintor exfetror match நடாத்தியது நாம் நினைவிற் கொள்ள வேண்டும். V.S.C. ஆனந்தன் 1964ம் ஆண்டு, வேலும்மயிலும் என்பவர் ராணுவ ஜீப்பினால் மோதிக் கொலையுண்டபோது அதற்காட்சேபித்து சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த போது யாழ்ப்பாண அரசாங்க அதிபரும் (பின்பு அவர் brigadier பல்தசார்) வந்து சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு இணக்கத்தை ஏற்படுத்தினார்கள். அதில் வல்வை புளூசைச் சேர்ந்த A.S ராஜேந்திரன், A.S ராமநாதன், S. தர்மரட்ணம், S. யோகச்சந்திரன் கதிர்காமர் என்போர் பங்கு பற்றி செயல்பட்டதை நினைவிற் கொள்ளவேண்டும். மேலே கூறப்பட்டவர்களில் பலர் காலமாகியும் விட்டனர். சிலர் அகால மரணமடைந்தும் உள்ளனர். அவர்களை நினைவு கூர்வதோடு, அவர்களின் பங்களிப்பினை தெரிவிப்பதை வெளிநாடு வாழ் புளூஸ் அங்கத்தவர்களும் அவர்கள் பின் சந்ததியினரும் இவற்றை அறிந்திருக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடனும், கைப்பந்தாட்ட, உதைபந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டிகள், கிரிக்கட் விளையாட்டு போன்றவற்றில் சிறப்பெய்தியதை இங்கு குறிப்பிடுவதோடு,








மல்யுத்தப் போட்டிகளில் 60களின் முற்பகுதியில் A. இந்திரலிங்கம் (பழவன்), A.S. அருட்பிரகாசம், T. புத்திரசிகாமணி ஆகியோர் மாவட்டப் போட்டிகளில் வெற்றி பெற்று இருந்துள்ளனர் என்பதையும் தெரிவிப்பதோடு, V. கார்த்திகேயன், A. ரட்ணசிங்கம், T. புத்திரசிகாமணி, S. சிவஞானசுந்தரம், S. செல்வச்சந்திரன் என்போரும், இவர்களுக்கு முந்தியகாலத்தில் A.V. நடராசா, சிவகுருத்தாத்தா போன்றோரும் காப்பாளராக வல்வைக்குச் சிறப்புச் சேவை செய்துள்ளனர். A. இந்திரலிங்கம், A. அமிர்தலிங்கம் போன்றோரும் உதைப்பந்தாட்டத்தில் சிறப்பாக விளையாடி உள்ளனர். இதில் ஒரு குறுகிய காலத்தில் பொன்விழாக் கொண்டாடுவதை அறிந்து என்னையும் ஞாபகத்தில் உள்ளதையும் தெரிவித்துப் போதிய அவசாகசம் இன்மையாலும் இதில் குறிப்பிட வேண்டியவை விடப்பட்டிருந்தாலும், அதனைப் பொருட்படுத்தாது, நல்லவற்றை ஏற்றுக் குறை மறந்து நிறைவை மனதில் கொண்டு என் உள்ளத்துடன் பகிர்ந்து கொள்வீரகளென எதிர்பார்த்து வெளிநாட்டில் உள்ளவர்கள் ஊருக்கு அடிக்கடி வரவேண்டும் என்ற விருப்பத்தையும் தெரிவித்து இவ் விழாவை ஊரிலும் வந்து கொண்டாட வேண்டித் தற்போது புளூஸ் கழகத்தைப் பல துறைகளிலும் கொண்டு நடாத்தி உற்சாகப்படுத்தும் All rounder M.தங்கவேல், குகநாதன், முருகவேல் ஆகியோரின் நீண்டகால விளையாட்டுத்துறை சார்ந்ததும், கலை, கலாசார பங்களிப்பையும் குறிப்பிட்டு அவர்களையும் பாராட்ட வேண்டியும் எங்களுடன் வாழ்ந்து எங்களை விட்டுப்பிரிந்து கடவுளுடன் கலந்துள்ள எமது முன்னோர்களையும் மனதில் நிறுத்தி இச்சிறிய விபரத்தினை அனுப்புவதில் மகிழ்ச்சி அடைந்து இவ்விழா மென்மேலும் சிறப்புற நடைபெற வேண்டுமென வேண்டி வாழ்த்துகின்றேன்.

சோமசுந்தரம், கதிர்காமலிங்கம் (மட்டையண்ணா) இவர் சிதம்பராக் கல்லூரியின் மூலமாக கைப்பந்தாட்டத்தில் புகழ்பெற்று Iyal oya development board ற்கு விளையாடி இலங்கைக் கைப்பந்தாட்டக்குழுவில் இடம்பெற்று சர்வதேசப்போட்டிகளில் பங்குபற்றினார். இவரும் புளூஸ் கைப்பந்தாட்டக் குழுவில் பெரும் பங்காற்றினார்.

1967ம் ஆண்டு வல்வை நெடியகாட்டு இளைஞர் விளையாட்டுப் போட்டியில் விசேட அழைப்பின் பேரில் வந்த ஆசியாவின் ஆணழகன் போட்டியில் 20ம் இடத்தைப் பெற்றுக் கொண்ட M.A. தியாகராஜா விளையாட்டின் மூலமாக என்னுடைய நண்பனாக இருந்தபோது அன்றைய தினம் வல்வெட்டித்துறைப் பிள்ளைகள் பங்குபற்றிய விளையாட்டுக்கள் அனைத்தையும் பார்த்து விசேடமாக வல்வை மக்களினதும் ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகள் எல்லோரினதும் இயற்கையான உடல் அமைப்பைப் பற்றி நன்றாக விமர்சித்து வல்வை மக்களினதும் பிள்ளைகளுடையதும் சிறப்பு அம்சம் என்னவென்றால் அவர்களுடைய கீழ்க்கால் தசை நார்கள் (Caly monut) இயற்கையாகவே அமைந்துள்ளதோடு பலம் மிக்கதாகவும் இருப்பதுவும் முக்கிய ஒரு அம்சமாகும் என்று என்னிடம் கூறியது எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. அப்போது அவர் சொன்னார் a man is as wrong as his will என்பதை உடல் கூற்றியலாளர்கள் phizigologic இதனை a man is as strong an his caly musicls என்று அவர் எனக்குக் கூறியது இன்றும் வல்வை மக்களைப் பற்றி சிந்திக்கும் போது பெருமை அளிக்கின்றது.



**K.S. Sivanarulsundaram**
(Kaandeepan)
attornay at law valvettiturai
Advocate.
Jerman President of
point pedro,
Bar Association.

வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

## 29
### வல்வை புளூஸ் கழக ஆரம்பகால வீரர் குட்டிமான்
# சி. ஈஸ்வரலிங்கம்



வல்வை புளூஸ் கழகம் ஆரம்பித்த காலங்களில் இவரும் உதைபந்தாட்ட அணியில் இடம்பெற்றிருந்தார். வடமராச்சி பகுதி, காங்கேசன்துறை பகுதிகளில் நடந்த சுற்றுப் போட்டிகளில் இவரும் பங்கு கொண்டிருந்தார். வல்வை புளூஸ் கழக ஐம்பது ஆண்டுகால வரலாற்றில் உதைபந்தாட்ட அணியில் ஒரேநேரத்தில் ஒரு குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஐவர் விளையாடியதில் ஈஸ்வரலிங்கத்தின் சகோதரர்கள் அழகரெட்ணம், தர்மரெத்தினம், சந்திரலிங்கம், இந்திரலிங்கம் ஆகியோர் ஆவார்கள்.

## 30
### வல்வை புளூஸ் கழக வீரர்
# மு. பிரேம்குமார்



வல்வை புளூசுக்காக விளையாடிய விளையாட்டு வீரர்களில் மறக்கமுடியாத வீரர்களில் மு.பிரேம்குமாரும் ஒருவர். இவர் உதைப்பந்தாட்டப் போட்டிகளில் முன்கள வீரராகவே விளையாடி வந்துள்ளார். இவர் வேகமாகப் பந்தைக் கொண்டு ஓடும் திறமை உள்ளவர். பலவருடங்கள் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக விளையாடியவர். ஈழநாடு பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகள் யாவும் யாழ்ப்பாணம் கோட்டைக்குள் உள்ள மைதானத்திலேயே நடைபெற்றது. இறுதிப் போட்டி வல்வை புளூசுக்கும் யாழ் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே நடைபெற்றது. இந்த இறுதிப் போட்டியிலும் தலைவர் பிரேம்குமார் அவர்கள் விளையாடிய விளையாட்டு என்றும் மறக்க முடியாததாகும். இவர் புளூஸ் கைப்பந்தாட்ட அணியில் இடம்பெறவில்லை. ஆனால் புளூஸ் கைப்பந்தாட்ட அணி விளையாடும் கைப்பந்தாட்டப் போட்டிகளில் ஆறு பேர் கோட்டுக்குள்ளும் ஒருவர் (பிரேம்குமார்) கோட்டுக்கு வெளியிலுமாக மொத்தம் 7 வீரர்கள் புளூஸ் கழகத்திற்காக விளையாடுவார்கள்.

பிரேம்குமார் அவர்கள் மிகவும் விரைவாக உணர்ச்சிவசப்படக் கூடியவர். எமது கைப்பந்தாட்ட அணி சற்றுப் பின்தங்கிய நிலையில் இருந்தால் போதும் சத்தம் போட ஆரம்பித்துவிடுவார். தங்கவடிவேல் அடி, செல்லா அடி, பாலி அடி என உரக்கச் சத்தம் போட்டபடி இருப்பார். இவர் சில சமயங்களில் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினாலும் ஒருவரும் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. காரணம் இவர் வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்திற்காகச் செய்த அளப்பரிய சேவைகளே. திரு. அருணாசலண்ணா அவர்களுக்குப் பின்னால் அவரது சேவையைத் திறம்படச் செய்தவர் தலைவர் பிரேம்குமார் அவர்கள். எங்கள் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு நேரம் மட்டுந்தான் வேலை, ஆனால் பிரேம்குமார் அவர்களுக்கு உள்ள நாள் பூராகவும் விளையாட்டு வேலை, கைப்பந்தாட்ட, உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே வல்வைச் சந்தி சனசமூக சேவா நிலைய (வாசிகசாலை) முன்பாக விளையாடும் கோஷ்டிகள் விளையாடும் நேரம், விளையாடும் மைதானம் என்பன உள்ளிட்ட அனைத்தும் பிளாக்போட்டில் எழுதி மக்கள் பார்வைக்கு வைத்துவிடுவார். போட்டிகளுக்காகிய ஒழுங்கு செய்துவிடுவார். கைப்பந்தாட்ட, உதைபந்தாட்டப் போட்டிக்கு வான் புறப்படுவதற்கு ஒரு மணித்தியாலம் முதலே தலைவர் பிரேம்குமார் ஒரு சைக்கிள், புத்திரசிகாமணி (புத்திங்) ஒரு சைக்கிள். ஒவ்வொரு விளையாட்டு வீரர்களின் வீட்டு வாசல்களிலும் நின்று சைக்கிளில் அவர்களை ஏற்றி வருவார்கள். இப்படியாகப் பல காலம் புளூசுக்காக உழைத்தார். இவர் போன்ற உணர்வும், ஊர்ப்பற்றும் உள்ளவர்களால் தான் வல்வை புளூஸ் இன்றளவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. திரு. பிரேம்குமார் அவர்களின் சேவையை வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகம் என்றும் நினைவு கூரும் என்பது திண்ணம்.

## 31
### உதைபந்தாட்டத்தில் இன்னொரு அதிசய வீரர்
# A. இரத்தினசிங்கம்



உதைபந்தாட்டத்தில் வேகமான வீரர்களுடன் உதைபந்தாட்டத்தை எழிலுடன் விளையாடும் வீரர்களும் பார்வையாளர்களின் அபிமானங்களைப் பெற்றவர்களாக விளங்குவார்கள். வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் கோல் காப்பு வீரராக விளையாடிய இரத்தினசிங்கம் அவர்கள் அனைவராலும் A.R.என்று இரண்டு எழுத்துக்களில் அழைக்கப்பட்டார். விளையாடிய அனைத்துப் போட்டிகளிலும் AR தனித்து முத்திரையை ஆழமாக பதித்தவர். யாழ் மாவட்ட உதைபந்தாட்ட அணியில் நீண்டகாலம் AR கோல்காப்பு வீரராக விளையாடியவர். அதிலும் யாழ் தெரிவு அணிக்கும் பெங்களூர் அணிக்கும் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் AR அவர்களின் விளையாட்டு இன்றும் அநேகரால் நினைவு கூரப்படுகிறது. பின்னர் குருநாகலில் இவர் வேலை நிமித்தம் இருந்தபோது அங்கும் குருநாகல் மாவட்ட உதைபந்தாட்ட அணியில் கோல்காப்பு வீரராக விளையாடினார்.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
Hayes minimarket
Hayes, UK
0773 753 1646 , Varathan

வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

# ஏ. ஆர். அண்ணா அவர்களின் நினைவலைகள்

(வல்வை புளூஸ் கழகத்தின் ஆரம்பகால உறுப்பினரும், மிகச் சிறந்த கோல்காப்பு வீரருமான ஏ.ஆர் அண்ணா அவர்கள் தன் நினைவுகளை உங்களுடன் பகிர்கிறார்......)

என் அன்பு உள்ளங்களே, வல்வை புளூஸ் என்ற தாய்க்கழகத்துக்கு இன்று ஐம்பது வயது. நினைக்கும் போதே நெஞ்சு சிலிர்க்கிறது. எத்தனை சாதனைகள்! எத்தனை இனிய நினைவுகள்! அந்த இனிய நாட்களை நினைவு கொள்ளும் இந்தவேளையில் நானும் ஏ.ஆர் என்ற 18 வயது கோல்காப்பாளனாக மாறுவதை உணர்கிறேன். இதுதான் வல்வை புளூஸ் எனும் கழகத்தின் பெயருக்கு எப்போதும் ஓடிக் கொண்டிருக்கும் உயிர்ப்பு ஆகும். வல்வை புளூசுடனான ஒவ்வொரு நாட்களும் மறக்கமுடியாதவையாகும். ஒவ்வொரு போட்டியும் எத்தனை காலம் கடந்தாலும் நினைவை விட்டு நீங்காதவைதான். ஆனாலும் நான் ஒரு உதைபந்தாட்ட இறுதிப் போட்டியை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

ஒரு நாற்பது வருடங்களுக்கு முன்னர் இருக்கலாம், ஆண்டு சரியாக ஞாபகத்தில் வரவில்லை. வதிரி டயமண்ட்ஸ் மைதானம். வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி. இறுதிப் போட்டியில் வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகமும், கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக்கழகமும் சந்தித்தது. அந்தக் காலத்தில் கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக்கழகமானது யாழ்மாவட்டத்தின் பலம்பொருந்திய கழகங்களில் ஒன்று. ஜோதிரவி மாஸ்ரர், சிறீதரன் போன்ற மிகத்திறமையான வீரர்கள் அந்தநேரம் கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். இதைப்போன்றே வல்வை புளூஸிலும் அந்நேரம் வேகமும் திறமையும்கொண்ட பலவீரர்கள் யோகண்ணா, தருமண்ணா, பழம்அண்ணா, ஏ.வி.அருணாசலம் அண்ணா போன்றவர்கள் கலந்து கொண்ட போட்டி அது.

ஆட்டம் சரிசமனாகவும், மிகவும் விறுவிறுப்பாகவும் நடந்து கொண்டிருந்தது. முதல் அரைப்பகுதியில் (First half) நாம் ஒரு கோலைப் போட்டு வெற்றியில் நின்றோம். இடைவேளை முடிந்து ஆட்டம் மீண்டும் ஆரம்பமாகியது. எதிரணியினர் மிகவும் கடுமையாக முயன்றனர் ஆட்டத்தைச் சமனாக்குவதற்கு, ஆனால் எங்கள் வீரர்கள் தடுத்தபடியே அவர்களுக்கு மீண்டும் ஒருகோலைப் போடவும் முயன்று கொண்டிருந்தனர். இப்படியாக ஆட்டம் முடிவுக்கு வரும் நேரம் நெருங்கியது. போட்டி முடிய கிட்டத்தட்ட இரண்டுநிமிடங்கள் இருக்கும்போது கரவெட்டி ஸ்பேஸ் அணியின் முன்னணி வீரர் எமது கோல் கம்பத்தை நோக்கிப் பந்தை மிகவேகமாக உதைத்தார். வேகமாக உயர்ந்து வந்த பந்தைத் தட்டுவதற்காக நான் உயரத்துள்ளி எழும்பியபோது ஸ்பேஸ் அணி வீரரான ஜோதிரவி மாஸ்ரர் எனது காலைத் தட்டிவிட்டார். பந்தைத் தட்டிவிட்டு நான் நிலைதடுமாறி கீழே விழுந்துவிட்டேன். காலில் பலத்த அடி. இதைப் பார்த்த எமது அணி வீரர்களான கட்டி அண்ணாவும், தங்கவேல் அண்ணாவும் ஸ்பேஸ் அணி வீரரை முறைத்தபடி தாக்க முயன்றனர். இதனைக் கண்ட மத்தியஸ்தர் இதற்குத் தண்டனையாக எமக்கு எதிராகப் பனால்டி அடி (Penalty kick) தந்துவிட்டார்.

இந்த நேரத்தில் எமது புளூஸ் கழகத்தின் வீரர்களுக்கிடையிலான உறவு முறைபற்றி உங்களுடன் பகிரவேண்டும். பொதுவாகவே எங்கள் ஊரின் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு முறையில் ஒருவருக்கு ஒருவர் உறவுமுறை கொண்டவர்கள்தான். அதிலும் உதைபந்தாட்டத்தில் ஏதேனும் சிறுபிரச்சினை என்றாலும் எமது வீரர்கள் உடனேயே ஒன்று பட்டு நின்றுவிடுவார்கள். தமது அதிசிறப்பான விளையாட்டினால் அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய எமது வீரர்கள் கூட, எமது அணி வீரருக்கு ஒரு பிரச்சினை என்றால் கோபத்துடன் எதிரணியுடன் முறைக்கவும், கோபத்தை வெளிக்காட்டாவும் தொடங்கிவிடுவார்கள். இது ஒரு கழகத்தின் ஒரே அணியின் வீரர்களுக்கிடையில் இருக்கும் சாதாரண உறவைவிட மேலானது. இதுதான் எமது கழகத்தின் வெற்றிகளின் வேர்.

சரி, இனி போட்டிக்கு வருவோம். மத்தியஸ்தர் எமக்கு எதிரான பனால்டி உதையைத் தந்துவிட்டார். எனக்கோ காலில் பயங்கரமான வலி. ஆனால் எமது அணி வீரர்கள் என்னை ஊக்கப்படுத்தினார்கள். “ தம்பி உன்னாலை முடியும். நீதான் பிடிக்கவேணும். நீயே நில்’’ என்று என் முதுகைத் தட்டிக் கொடுத்தார்கள். அத்துடன் மைதானத்தில் திரண்டு நின்ற வல்வை மக்களும் தமது கைகளைத் தட்டி என்னை ஊக்கப்படுத்தினார்கள், ஆர்ப்பரித்தார்கள்.



பனால்டி அடிப்பதற்காக எதிர்த்தரப்பிலிருந்து வந்தவர் வேறுயாருமல்ல, எனக்குக் காலில் அடித்த ஜோதிரவி மாஸ்ரர் தான். ரசிகர்களின் ஆரவாரங்களுக்கு மத்தியில் பனால்டி அடிக்க அவர் தயாராக அதைப்பிடிப்பதற்கு நான் கோல்கம்பங்களுக்கு நடுவில் கண் காது மனம் எல்லாவற்றையும் பந்தை நோக்கியே கூர்மைப்படுத்தி நின்றேன். மத்தியஸ்தர் விசிலை ஊத அவர் பந்தை அடிக்கிறார். பந்து மிகவேகமாக வந்து கொண்டிருந்தது. நானும் பறந்தேனோ என்னவோ எனக்கே தெரியாது. பந்து என் கைகளுக்குள் வந்துவிட்டது. பந்தைப் பிடித்துவிட்டேன். கணப்பொழுதில் விசில் மீண்டும் ஊதப்பட்டது. ஆட்டம் முடிவடைந்த விசில் அது. வெற்றி எமக்கே. அன்று அந்த மைதானத்தில் எமது அணிவீரர்களும் எமது ஊரவர்களும் அடைந்த மகிழ்ச்சிக்கு இணையேது.

இன்றுவரை மறக்க முடியாத அற்புதப் பொழுது அது. என்னுடைய பெருமையை சொல்வதற்காகவோ, புகழைப் பாட வேண்டும் என்பதற்காகவோ இதனை நான் எழுதவில்லை. எமது வல்வை புளூஸின் சாதனைகளையும், ஆரம்பகாலங்களில் விளையாடிய வீரர்களைப் பற்றியும் எதிர்காலச் சந்ததி அறிந்திடவேண்டும் என்பதற்காகவே இதனை எழுதுகின்றேன்.

இப்போது வல்வைபுளூஸ் விளையாட்டுக் கழகத்தின் ஐம்பதாவது மலருக்கு இந்த நினைவை எழுதி அனுப்ப உட்கார்ந்த பின்னர் கடந்த சில நாட்களாக அந்தப் பழைய நாட்களும், ஆரம்பகால வீரர்களும், அவர்களின் வெற்றிகளும் சாதனைகளும் நெஞ்சு நிறையச் சுற்றிச் சுற்றி வருகின்றது.

ஒரு பெரிய ஆலமரம்போல இந்த வல்வைபுளூஸ் இப்போது நிமிர்ந்து நிற்கிறது. அதனைச் சுற்றி ஆயிரமாயிரம் விழுதுகள். அதன் வேர் ஆழமாக மண்ணுக்குள் நிற்கிறது. சந்தோசமாக இருக்கிறது. அனைவருக்கும் நன்றிகள்!

வாழ்க வல்வை புளூஸ்!
வளர்க வல்வை செல்வங்கள்!!

**பொன்விழாக் காணும் கழகத்தை வாழ்த்தும்**

**சகோதரன் ஏ.ஆர்**

வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

## 32

### உதைப்பந்தாட்ட வீரர்

# வே. சிவனடியார்

உதைப்பந்தாட்டத்தில் மிகச் சிறப்பான தடுப்பு வீரராகவும் முன்னணி வீரராகவும் விளங்கியவர் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் சிவனடியார். வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சியிலும் அதன் மீது அபிமானமும் என்றும் கொண்டிருந்தவர் இவர். 80களின் ஆரம்பத்தில் வல்வை புளூஸ் உதைபந்தாட்ட அணி முல்லைத்தீவு மாவட்டம், மன்னார் மாவட்டத்துக்கு விளையாடச் சென்ற போது எமது வீரர்களைச் சிறப்பாக பராமரித்து அனுப்பியவர் சிவனடியார்.

## 33

### உதைப்பந்தாட்ட வீரர்

# செ. செல்வச்சந்திரன்

### (செல்லண்ணா)



யாழ் மாவட்டத்தின் புகழ் மிக்க மறக்கமுடியாத விளையாட்டு வீரர்களில் வல்வை புளூஸ் வி.கழகத்தைச் சேர்ந்த செல்வச்சந்திரன் அவர்களும் ஒருவராவார். எதிரிகளால் பாராட்டப்படும் போதுதான் ஒருவன் உண்மையான வீரானாகிறான். அதுபோல ஒரு தமிழனை சிங்களவர் மனதாரப் புகழ்வது அது இன்னொரு சாதனையாகும். இந்த இரண்டையும் ஒன்றாகப் பெற்ற சாதனையாளரே இந்தச் செல்லண்ணா. இவர் சிதம்பராக் கல்லூரியில் படிக்கும் காலங்களில் உதைப்பந்தாட்டம், கைப்பந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டிகள் என்பவற்றிலும் சிறந்து விளங்கினார். இவர் சிதம்பராக் கல்லூரியின் உதைப்பந்தாட்ட, கைப்பந்தாட்டக் கப்டனாக இருந்துள்ளார். இவர் உதைப்பந்தாட்டத்தில் இடது, வலது என இருகால்களாலும் சமமாக விளையாடக் கூடிய திறமையைப் பெற்றிருந்ததுடன் திறமையான கோல்காப்பாளராகவும் விளையாடியுள்ளார். ஒரு கோல் காப்பாளருக்குத் துணிவு, விரைவு, சுறுசுறுப்பு, கூர்ந்தபார்வை, பாய்ந்து பந்தைத் தடுக்குமுறை, மேலால் வரும் பந்தை கைளினால் இடித்து கோல் போகாது வெளியேற்றும் திறமை வேகமாக வரும் பந்தின் வேகத்தைக் கணக்கிட்டு அப்பந்தைக் கோல் போகாது தடுப்பதற்கேற்ப உடனடி முடிவெடுக்கும் திறமை ஆகியவை முக்கியமானவையாகும். இவை அனைத்தும் செல்வச்சந்திரனிடம் இருந்தது. இதனாலேயே இவர் வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்தின் பருத்தித்துறை மாவட்ட விளையாட்டுக் கழகத்தின் யாழ் மாவட்ட உதைப் பந்தாட்டக் கழகத்தின் தலை சிறந்த கோல் காப்பாளராக ஔிர முடிந்தது.

ஒரு தடவை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் மின் ஒளியில் நடைபெற்ற இறுதியாட்டப் பரிசளிப்பின் போது சினேகபூர்வ ஆட்டமாக வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகமும், மகாஜனாத் தெரிவுக் கோஷ்டியும் மோதியது. எமது கோல்க் காப்பாளர் செல்வச்சந்திரன் தவிர்க்க முடியாத காரணத்தினால் வரத் தாமதமாகி விட்டது. செல்வச்சந்திரன் மைதானத்துக்கு வந்து இறங்கிய போது மகாஜனா அணி 3-0 என்ற கோல்கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது. செல்வச்சந்திரன் கோல் காப்பில் வந்தபின்னர் அவர்களால் ஒரு கோல் கூடப் போட முடியவில்லை.ஆனால் வல்வை புளூஸ் கோஷ்டி செல்வச்சந்திரன் வந்துவிட்ட உற்சாகத்துடன் விளையாடி 4 கோல் அடித்து 3-4 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது. இந்த வெற்றிக்கு செல்லண்ணாவின் திறமை மிக்க கோல் காப்பே காரணமாகும். மகாஜனா அணிக் கப்டன் திரு. T.பத்மநாதன் அவர்கள் போட்டி முடிவில் எங்கள் அணி வீரர்களுக்கு கை கொடுக்கும் போது கோலி கோலி தான் வல்வெட்டித்துறை வல்வெட்டித்துறை தான் என்று கூறியது எங்கள்வீரர்களுக்குப் பெருமையாக இருந்தது. ஆதரவாளர்களும் அபிமானிகளும் செல்லண்ணாவைப் பெரிதும் பாராட்டினார்கள்.

1972ம் ஆண்டு சீன நாட்டின் தேசிய உதைப்பந்தாட்டக் கோஷ்டி இலங்கைக்கு விஜயம் செய்த போது பருத்தித்துறை மாவட்டக் கோஷ்டியுடன் ஒரு போட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. பருத்தித்துறை மாவட்டக் கோஷ்டிக்கு வல்வை புளூஸ் விளையாட்டுக் கழக வீரர் தேவசிகாமணி (கட்டியண்ணா) அவர்கள் கப்டனாக விளையாடினார். புளூஸ் விளையாட்டுக் கழகத்திலிருந்து செல்வச்சந்திரன் (கோல்காப்பாளர்) தங்கவடிவேல், தங்கவேல், குணநாதன், சுந்தரகுமார் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். போட்டி ஆரம்பம் முதலே வீரர்களின் தாக்குதல்கள் அதிகமாக இருந்தது. புயல் வேகத்தில் கோல்கம்பத்தை நோக்கி பந்துகள் வந்து கொண்டிருந்தன. செல்வச்சந்திரன் சிறிதும் மனம் தளரவில்லை. நிலத்துடன் வரும் பந்துகளைப் பிடித்தும், பக்கமாக வரும் பந்துகளை Dive பண்ணிப் பிடித்தும், வெளியில் தட்டிவிட்டும், மணிக்கட்டால் குத்தி வெளியேற்றியும் மேலால் வரும் பந்துகளை உயரப் பாய்ந்து விரல்களினால் பின்புறமாகத் தட்டிவிட்டும், பம்பரம் போல் சுழன்று சுழன்று ரசிகர்களின் கைதட்டலைப்

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
Win Rich Ltd
13 Boundary Business Court, Mitcham , surrey, UK
0774 046 3223

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
JENKINS news & offline
Wimbledon, UK
0778 813 4915 ஆ.குகானந்தஜோதி

பெற்றுக் கொண்டிருந்தார். இறுதியில் 6-3 என்ற கோல்க் கணக்கில் சீனக் கோஷ்டி வெற்றி பெற்றது. சீன வீரர்களும், எமது ஆதரவாளர்களும் செல்வச்சந்திரனைப் பெரிதும் பாராட்டினார்கள். செல்வச்சந்திரன் 6 கோல்களை விட்டார் என்பது கணக்கல்ல அவர் எத்தனை கோல்களைத் தடுத்தார் என்பதே கணக்கு.

1973 ம் ஆண்டு தெல்லிப்பளை யூனியன் மைதானத்தில் நடைபெற்ற உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் வல்வை புளூஸ் அணியும் கட்டுவன் அணியும் மோதிக் கொண்டன. கட்டுவன் அணி வல்வை புளூஸ் அணியை எப்படியாவது வெல்ல வேண்டும் என்னும் குறிக்கோளுடன் கொழும்பு ரெட்ணம்ஸ்கழக வீரர்கள் ஐந்து பேரை அழைத்து வந்திருந்தனர். ஆரம்பம் முதலே போட்டியின் வேகம் சூடு பறந்தபடியே இருந்தது. புளூஸ் கோல்க் காப்பாளர் செல்லண்ணாவை நோக்கி புல்லற் வேகத்தில் பந்துகள் வந்தவண்ணமே இருந்தன. இருந்த போதும் எதிர் அணியினர் மலைத்துப் போகும் அளவிற்கு செல்லண்ணாவின் தடுப்பு முறைகள் இருந்தன. போட்டி சம நிலையில் முடிவடைந்தது. பனால்ரி முறையில் முடிவு எடுக்கப்பட வேண்டிய நிலை. கட்டுவன் அணி சார்பில் அகில இலங்கை விளையாட்டு வீரர் அப்பையா முதற் பந்தை அடித்துக் கோல் ஆக்குகிறார். அது போல் எங்கள் அணி சார்பில் எங்கள் நம்பிக்கை நட்சத்திரம் தங்கவடிவேல் முதலாவது பனால்ரியை அடித்துக் கோலாக்கினார்.

தொடர்ந்து அடிக்கப்பட்ட பனால்ரிகளில் இரு கோஷ்டிகளும் 4-4 என்ற சமநிலையிலேயே இருந்தன. ஐந்தாவது பனால்ரியைக் கட்டுவன் வீரர் அடிக்கிறார். பந்து செல்லண்ணாவின் வலது பக்கமாகக் கோல்க் கம்பத்தை நெருங்குகிறது, செல்லண்ணா நின்ற இடத்தில் தன் கால்களுக்கு வலுவை ஏத்திக் கொண்டு ஒரு பாய்ச்சல் (டைவ்). பந்து அவர் கையில் பட்டு தெறித்து வெளியே போகிறது. ஆதரவாளர் கரகோஷம் செய்து ஆரவாரம் செய்கிறார்கள். புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காகிய ஐந்தாவது பனால்ரியைச் செல்வச்சந்திரன் அடிக்கிறார். பந்து நிலத்தை உரசிக் கொண்டு மிக வேகமாக இடதுபுற கோல்க் கம்பத்திற்கு ஒரு அடி உள் சென்று கோல் ஆகிறது. ஆரவாரமோ ஆரவாரம்! எமது அணி வெற்றி பெற்ற ஆனந்தக் களிப்பில் எமது ஆதரவாளர்கள் செல்லண்ணாவைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆடித் தமது அன்பை வெளிப்படுத்தினர். விழாவுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை அமைச்சர் திரு.பி.ரத்நாயக்கா அவர்கள் செல்வச்சந்திரனைப் பெரிதும் பாராட்டிப் பேசியதுடன் சிறந்த விளையாட்டு வீரனுக்காகிய விருதையும் செல்வச்சந்திரனுக்கு வழங்கிக் கௌரவித்தார். அகில இலங்கை விளையாட்டு வீரன் அப்பையா விளையாடிய போட்டியில் எங்கள் அணி செல்வச்சந்திரனுக்கு சிறந்த விளையாட்டு வீரருக்காகிய விருது வழங்கப்பட்டது. எங்கள் எல்லோருக்கும் பெருமையாக இருந்தது. செல்வச்சந்திரனின் திறமையை நேரில் கண்ட கொழும்பு ரட்ணம்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் தங்கள் கோஷ்டிக்கு விளையாடும் படியும், கொழும்பில் நல்ல வேலை வாங்கித் தருவதாகவும் கேட்டுக் கொண்டனர். இது போன்ற நூற்றுக் கணக்கான உதைப்பந்தாட்டப் போட்டிகளில் விளையாடி வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்குப் பெருமை சேர்த்துத் தந்துள்ளார். செல்வச்சந்திரன் உதைப்பந்தாட்டத்தைப் போல கைப்பந்தாட்டத்திலும் (செற்அப்) சிறந்து விளங்கியவர். இவர் அச்சுவேலி லாலா சோப் கைப்பந்தாட்டப் போட்டி, ஈழநாடு பத்தாவது ஆண்டு நிறைவு விழாக் கைப்பந்தாட்டப் போட்டி, வருடா வருடம் நடைபெறும் YMCA நடத்திய கைப்பந்தாட்டப் போட்டி காங்கேசன்துறை, நெல்லியடி, அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், மட்டுவில் மோகனதாஸ், சாவகச்சேரி ஆகிய இடங்களில் வருடாவருடம் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டிகள் என நூற்றுக்கணக்கான போட்டிகளில் விளையாடி வல்வை புளூசுக்குப் பெருமை சேர்த்துத் தந்துள்ளார்.

வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக உதைப்பந்தாட்டம் விளையாடியதன் மூலம் பருத்தித்துறை மாவட்டக் கோஷ்டிக்குத் தெரிவாகி விளையாடியதுடன் அதன் மூலம் அகில யாழ்ப்பாண மாவட்ட உதைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் விளையாடியது பெருமைக்குரியதே.






## 34

### உதைபந்தாட்ட வீரர் "கட்டி"

### சு. சிவானந்தன்



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட அணியில் விளையாடியவர் கட்டி என்று அழைக்கப்படும் சிவானந்தம் ஆவார். இவர் உதைபந்தாட்ட அணியில் விளையாடிய காலத்தைவிட உதைபந்தாட்ட அணிக்கு புது வீரர்களை உற்சாகப்படுத்துவதிலும் கழக நிர்வாகத்திலும் தனது செயற்பாடுகளை வழங்கியவர்.

## 35

### எல்லாப் போட்டியிலும் ஆகக் குறைந்தது ஒரு கோல் அடித்த

### வி. குணநாதன்



மிகச் சிறந்த நுணுக்கங்களுடன் பந்தை சுழற்றி காலில் தட்டி எப்படியும் ஒரு கோலை அனைத்துப் போட்டிகளிலும் போடத் தவறாதவர் குணநாதன். இவரைத் தடுக்க முடியாமல் எதிர் அணியினர் தடுமாறும் தருணங்களே அதிகம். நமது உதைபந்தாட்ட அணி யாழ்ப்பாணம், வடமராச்சி, காங்கேசன்துறை, தெல்லிப்பளை போன்ற இடங்களுக்குச் சென்று வெற்றியீட்டிய போது அந்த அணியில் இடம்பெற்றவருள் குணநாதனும் ஒருவராவார்.

## 36
### மிகச் சிறந்த வீரர்களில் ஒருவர்
P.T. பாலன்
## த.பாலசந்திரன்



இவருடைய முழுப் பெயர் தெரியாதவர்கள் கூட இவரை P.T. பாலன் என்று அழைக்கும் அளவுக்கு மைதானத்தில் சிறந்த வீரனாக வலம் வந்தவர். இவருடைய விளையாட்டில் இன்றும் நினைவில் நிற்க கூடியது, 1973ம் ஆண்டு தெல்லிப்பழையில் நடைபெற்ற சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கு எதிராக விளையாடிய போது அடித்த Turn Kick ஒன்று. கோல்காப்பு வீரரையும் கடந்து பந்து போனபோது P.T. பாலன் அவர்கள் வேகமாக ஓடிச் சென்று அடித்தார். மிக வேகமான ஓட்டக்காரரான இவர் அஞ்சல் ஓட்டப் போட்டிகளில் புளூஸ் அணியின் வெற்றிகளுக்கு உதவியவர்.

## 37
### முன்னணி வீரர்
## ப.விஜயகுமார்



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆரம்பகால உதைபந்தாட்ட அணிக்கு அடுத்ததாக மைதானத்துள் விளையாட உள்நுழைந்த சிறந்த வீரர் விஜயகுமார் ஆவார். இடது வெளி முன்னணி வீரராக விளையாடிய விஜயகுமார் சிறந்த நுணுக்கங்கள் கொண்டவர். இவரின் விளையாட்டு வரலாற்றில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற சுற்றுப்போட்டியில் அப்போதைய விளையாட்டுத் துறை அமைச்சர் K.P. இரத்நாயக்கா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இறுதிப் போட்டியில் கட்டுவன் பாலர் ஞானோதயாக் கழகத்தை எதிர்த்து விளையாடியது குறிப்பிடத்தக்கது.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
**Worldman**
111 Knyvett House, Causeway, Staines,
TW19 3BA





## 38
### வல்வை புளூஸ் கழக கோல்காப்பு வீரர்களில் ஒருவர்
## சீவரெட்ணம்

வல்வை புளூஸ் கழகம் கொடிகட்டிப் பறந்த காலத்தில் செல்லண்ணா (செல்வச்சந்திரன்) கோல்காப்பு வீரராக இருந்த போது சீவரெட்ணமும் கோல்காப்பு வீரராக விளையாடியவர்.

## 39
### ஆட்ட நுணுக்கங்களுடன்
## அ. கதிர்காமலிங்கம்



உதைபந்தாட்டத்தின் இன்னுமொரு மறக்கமுடியாத வீரர் கதிர்காமலிங்கம் ஆவார். உதைபந்தாட்ட அணியின் வலது இடைநிலை முன்னணி (Right Way) வீரரான இவர் யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகை நிறுவனம் நடாத்திய பிரபலமான ஈழநாடு கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டியில் 1971ம் ஆண்டு வல்வை புளூஸ் கழகம் வெற்றியீட்டிய போது கதிர்காமலிங்கத்தின் பங்கும் சிறப்பானது. 1969ம் ஆண்டு வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்ட அணியின் சார்பில் கதிர்காமலிங்கம் விளையாடிய போது எமது அணி முதலாவதாக வெற்றியீட்டியது.

## 40
### வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட வீரர்
## ப.சுந்தரகுமார்



வல்வை புளூஸ் கழக கோல்காப்பு வீரர்களின் சிறப்பான அணியின் வரிசையில் சுந்தரகுமார் முக்கியமானவர். அத்துடன் இவர் முன்னணி வீரரும் ஆவார். 1972 ம் ஆண்டு சீனாதேசத்து தேசிய உதைபந்தாட்ட அணி நெல்லியடிக்கு வந்தபோது, பருத்தித்துறை தெரிவு அணியில் இவரும் தெரிவாகி முன்னணியில் விளையாடியது இவரின் விளையாட்டுச் சரித்திரத்தில் மிக முக்கியமானது ஆகும்.

## 41

### அழகாக பந்தைக் கட்டுப்படுத்தும் மணிக்குட்டி

## த.சிவகணேசன்



மணிக்குட்டி அண்ணா பந்தைக் கட்டுப்படுத்தும் அழகும் வேகமும் காலம் கடந்தும் நிலைத்து இருக்கிறது. இடது உள் முன்னணி வீரரான இவர் யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகை நடாத்திய சுற்றுப் போட்டியில் புளூஸ் அணி வெற்றியீட்டிய போது சிறப்பாக விளையாடியவர் ஆவார்.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்

Kaanthan enterprises

Tooting, UK
Murugarajah

## 42

### இரண்டு கால்களையும் திறமையாகப் பாவிக்கக் கூடிய MTT மணி

## த.தேவசிகாமணி



உதைபந்தாட்டத்தில் இரண்டு கால்களையும் திறமையாகப் பாவிக்கக் கூடியவர்கள் மிகக் குறைவானவர்களே. MTT மணி அத்தகைய ஆற்றல் உள்ள ஒரு புளூஸ் வீரர். வேகமாக ஓடக் கூடியவரான இவர் எந்த வீரரையும் தடுத்து நிறுத்தக் கூடியவர். 75ம் ஆண்டு காலப் பகுதியில் காங்கேசன்துறை மைதானத்தில் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம் Grasskopers கழகத்தை எதிர்த்து விளையாடியபோது அதில் விளையாடிய இலங்கை தெரிவு அணி வீரர் 'முயல்' என்பவரை தடுத்து நிறுத்திய MTT மணியின் விளையாட்டு இன்றும் நினைவில் நிற்கிறது.

**முதலாவது உலகக்கிண்ண கால்ப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி 1930 ஆம் ஆண்டு உருகுவேயில் நடாத்தப்பட்டது. இச்சுற்றுப் போட்டில் 13 நாடுகள் பங்குபற்றின.**







## 43

### வேகமான வீரர்களில் ஒருவர் கு.சுகுமாரசாமி...

## சுகுமாரி



வல்வை புளூஸ் கழகத்தின் half Line ல் விளையாடக் கூடியவர்களில் சுகுமாரும் ஒருவர். மிகவும் வேகமாக ஓடக் கூடியவரான இவர் கட்டுவன், குப்பிளான், தெல்லிப்பளைப் பகுதிகளில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் சிறப்பான விளையாட்டை வெளிப்படுத்தினார்.

## 45

### உதைபந்தாட்ட வீரர்

## எஸ். அழகதுரை

(அழகன்)

## 44

### வல்வை புளூஸ் கழக வீரர் மோக்குட்டி

## சு.மோகனதாஸ்

வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் இடது முனை முன்னணி வீரரான இவர் 1968ம் ஆண்டில் வதிரி மனோகரா மைதானத்தில் நடந்த இறுதிப் போட்டியில் விளையாடிய விளையாட்டு மிகச் சிறப்பானது.

மிகச் சிறந்த ஆட்ட வீரரான இவர் பருத்தித்துறை காட்லிக் கல்லூரி உதைபந்தாட்ட அணியின் Vice Captain ஆக 1969ல் பங்கு கொண்டிருந்தார்.

**இதுவரை நடைபெற்ற 19 உலககிண்ண சுற்றுப் போட்டியிலும் பங்குபற்றிய ஒரேநாடு பிரேசில் ஆகும்.**

மிகச் சிறந்த தடுப்புப் பின்னணி வீரரான அழகன் அவர்கள் 70ம் ஆண்டிலிருந்து 73 ஆம் ஆண்டு காலம் வரை தனது விளையாட்டால் வெற்றிக்கு வழிவகுத்தார்.

## 46
### வல்வை புளூஸ் கழக வீரர்
# கி.சுந்தரலிங்கம்
(மோகன்)

மிகத் திறமை மிகுந்த கோல்காப்பு வீரர்கள் அழகுபடுத்திய வல்வை புளூஸ் அணியில் மிக இடைக்காலத்தில் பங்கேற்றவர் சுந்தரலிங்கம்- இவரின் உதைபந்தாட்டப் பயணம் இன்னும் டென்மார்க்கில் தொடர்கிறது.

## 47
### உதைபந்தாட்ட வீரர்
# க.சின்னராசா
(சின்னான் அண்ணா)



உதைபந்தாட்டத்தில் இரண்டு கால்களையும் பாவிக்கக் கூடியவர்களில் சின்னராசாவும் ஒருவராவர். முன்னணி வீரர்களுக்கும், பாதுகாப்பு பின்னணி வீரர்களுக்கும் இடையில் மத்தியில் நின்று விளையாடும் ஆற்றல் இவருடையது.

## 48
### சிறந்த முன்னணி வீரர்
# ஆ.ராமகிருஷ்ணன்

**ஜேர்மனி 3 தடவை உலக கிண்ணத்தை வென்றுள்ளது.**
**(1954, 1974, 1990)**

சிறந்த பந்துக் கட்டுப்பாடும் வேகமும் ஒன்று சேர்ந்த வீரர் ராமகிருஷ்ணன்- வடமராச்சிப் பகுதிகளில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளிலும், காங்கேசன்துறை, தெல்லிப்பளைப் பகுதிகளில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளிலும் இவர் மிகச் சிறந்த பெயர் பெற்று இருந்தார். நெஞ்சின் உயரத்துக்கு மேலாக வரும் பந்துகளை லாவகமாக (காலால்) கட்டுப்படுத்தும் ஆற்றல் இவருடையது.



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

## 49
### உதைபந்தாட்ட வீரர்
# ந.ராமகிருஷ்ணன்
(ராமு அண்ணா)

உதைபந்தாட்ட அணியின் வலது களமுனையில் சிறப்பாக விளையாடியவர்களில் ராமகிருஷ்ணனும் ஒருவராவர்.

## 50
### உதைபந்தாட்டத்தின் மிகச் சிறந்த வீரர்
# சி.மனோகரன்
(மனோகரி)



உதைபந்தாட்டத்தில் எல்லா நிலைகளிலும் (Position) மிகத் திறமையாக விளையாடக் கூடிய ஆற்றல் ஒரு சிலருக்கு மாத்திரமே உரியது. மனோகரன் அத்தகைய ஆற்றல் நிறைந்தவர். அவருக்கே உரிய நிலை வலது உள் முன்னணி ஆகும்.

## 51
### வல்வை புளூசுக்குப் பெருமை சேர்த்த
# சி.பாஸ்கரன்
(பாஸ்கரி)



**இத்தாலி 4 தடவைகள் உலககிண்ணத்தை வென்றுள்ளது.**
**(1934,1938,1982,2006)**

மிகவேகமாக நீண்ட தூரம் போகக் கூடிய (Throw) எறிதலைச் செய்யக் கூடிய ஆற்றல் பாஸ்கரனுக்கு உரியது. தலையால் பந்தைக் குறிதவறாது இடிக்கும் திறமையும் இவருக்கு உள்ளது. இவர் விளையாடும் உதைபந்தாட்டப் போட்டிகளில் அணியின் நிலையை, வேகத்தைத் தீர்மானிப்பவராவர். தெல்லிப்பளையில் 73ம் ஆண்டு நடைபெற்ற சுற்றுப் போட்டியில் இளம் வீரராக விளையாடிய பாஸ்கரன் மிக நீண்டகாலம் தொடர்ந்து விளையாடினார்.

## 52
### உதைபந்தாட்ட வீரர்
## உ.சந்திரகுமார்
## (U. Sri)



வலுவான எதிர்ப்பை வெளிப்படுத்தும் பின்னணி வீரர்களின் பலம் வல்வை புளூஸ் கழகத்திற்கே உரியது. அதில் சந்திரகுமாரும் ஒருவராவர். நீண்டகாலம் வல்வை புளூஸ் கழகத்தின் பார்வையாளராக இருந்த இவர் தற்செயலாக ஒரு போட்டியில் விளையாடத் தொடங்கியவர். அதன் பின்னர் அவரை உதைப்பந்தாட்டத்திலிருந்து விலத்த முடியாத அளவுக்குத் திறமையான விளையாட்டு வீரர்.

**உருகுவே 2 தடவை (1930, 1953) ஆஜென்ரீனா 2 தடவை (1978,1986) உலகிண்ணத்தை வென்றுள்ளன.**

## 53
### கோல்காப்பு வீரர் சந்திரன் சாத்திரி
## தி.யோகச்சந்திரன்

வல்வை புளூஸ் கழகத்தின் உதைபந்தாட்ட அணியின் கோல்காப்பு வீரர்கள்எப்போதும் தமது சிறந்த விளையாட்டையும், ஈடுபாட்டையும் வழங்கி வந்தனர். அவர்களில் சந்திரன் சாத்திரியும் ஒருவராவர்.

## 54
### உதைபந்தாட்ட வீரர்
## சா.பரமன்

இரண்டு கால்களாலும் பந்தை மறித்துத் திருப்பி அனுப்பக் கூடியவர் பரமன். தலையால் பந்தைத் தடுக்கவும் திருப்பி இடிக்கவும் கூடியவர். வல்வை புளூஸ் கழக உதைப்பந்தாட்ட அணியில் பரமனும் இடம்பெற்றிருந்தார்.





## 55
### வல்வை புளூஸ் கழகத்தின் வீரர் நடனி
## செ.நடனலிங்கம்

எல்லா விதமாக விளையாட்டுக்களுக்கும் ஏற்ற உடல்வாகும் திறனும் கொண்டவர் நடனலிங்கம் (நடனி). உதைபந்தாட்டத்தில் பின்னணி வீரராக விளையாடிய இவர் கரப்பந்தாட்டத்தின் மிகச் சிறந்த வீரர் ஆவார்.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்

**Kadhambam Grill & Spice**

37 London road, Tooting, UK
0208 685 1885,
கண்ணன்

## 56
### வல்வை புளூஸ் என்றும் பெருமை கொள்ளும் வீரன்
## கா.சிவசண்முகநாதன்
### "சிவத்தான்"



செல்லண்ணா என்ற அற்புதமான கோல்காப்பு வீரர் வல்வை புளூஸ் கழக உதை பந்தாட்ட அணிக்கு விளையாடிச் சென்ற பின்னர் அந்த இடத்தை நிரப்பிய இன்னுமொரு ஆளுமை கொண்ட கோல்காப்பு வீரன் சிவத்தான்- 1976ம் ஆண்டு காங்கேசன்துறை யங் ரோயல் கழகம் நடாத்திய '7' நபருக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கட்டியண்ணா தலைமையிலான அணியின் கோல்காப்பு வீரராக சிவத்தான் வெகு சிறப்பாக விளையாடினார். இறுதிப் போட்டியில் வல்வை புளூஸ் அணிக்கும் கருகம்பானை அணிக்கும் நடைபெற்ற போட்டியில் கருகம்பாணை அணியில் கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆறு வீரர்கள் விளையாடினார்கள். மிக அழகான முறையில் தனது விளையாட்டை அனைவரும் ரசிக்கத்தக்கதாக அமைத்துக் கொண்ட சிவத்தானுக்கு அவர் செல்லும் இடங்கள் எல்லாம் ரசிகர்களும், ரசிகைகளும் திரண்டனர். இவருடைய அற்புதமான ஆட்டத்தால் ஈர்க்கப்பட்ட பருத்தித்துறை வட்டார அணி தெரிவுக் குழுவினர் இவரையும் உதைபந்தாட்ட அணியில் இணைத்தனர். கரப்பந்தாட்டத்திலும் வல்வை புளூஸ் அணியில்

இவர் மிகச் சிறப்பாக விளையாடியவர். யாழ் மாவட்டத்தில் மிகவும் பெயர் பெற்ற லாலா சோப் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய அணிக்காக சிவத்தானும் விளையாடியது குறிப்பிடத்தக்கது.

## 57
### உதைபந்தாட்ட வீரன்
## தே.சரட்சந்திரன்

வேகமாக வரும் பந்தை மறித்துக் குறி தவறாது திரும்ப எமது அணி வீரர்களுக்கு நீண்ட தூரம் கடந்து அடிக்கக் கூடியவர் சரட்சந்திரன். வடமராச்சிப் பகுதியில் நடைபெற்ற போட்டிகளில் இவர் விளையாடினார்.

## 58
### உதைபந்தாட்ட வீரர்
## ஆ.செல்லகிருஷ்ணன்



வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் முன்னணி வீரர்களில் செல்லக் கிருஷ்ணனும் ஒருவர். பருத்தித்துறை வட்டார தெரிவு அணிக்கு விளையாடிய வல்வை புளூஸ் வீரர்களில் இவரும் ஒருவர்.

**உருகுவே 2 தடவை (1930, 1953) ஆஜென்ரீனா 2 தடவை (1978,1986) இங்கிலாந்து (1966),பிரான்ஸ் (1998), ஸ்பெயின் (2010) ஆகியநாடுகள் தலா ஒருமுறை உலககிண்ணத்தை வென்றுள்ளன.**

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
Kanmany Jewellers
225A, the Broadway, Southall, UK
S.Srimurugan





## 59
### வல்வை புளூஸ் வீரர்
## P.அருளானந்தசாமி
(சாமி அண்ணா)



உதைப்பந்தாட்ட அணியின் முன்னணி நிலை வீரரான சாமி அண்ணா வல்வை புளூஸ் கழகத்துக்காக வல்வைக்கு வெளியே சென்று சுற்றுப் போட்டிகளில் பங்கு கொண்டவர்.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
Kerthy Agency
Hayes, UK
0208 573 1161,
Mukunthan

## 60
### வல்வை புளூஸ் கழகத்தின்
### "ஜெகன்"
## ச.ஜெகதீசன்



வல்வை புளூஸ் கழகத்தின் உதைபந்தாட்ட அணியில் இவர் விளையாட உள்வந்த போது அப்போது விளையாடிக் கொண்டிருந்தவர்களில் மிகச் சிறிய வயதினராக இவரே இருந்தார். உதைபந்தாட்டத்தில் இடது காலால் திறமையாக விளையாடக் கூடியவர்கள் மிகமிகச் சிலர்தான். ஜெகன் இடதுபக்க முன்னணி நிலையில் அதி சிறப்பான ஆட்டத்தை வழங்கக் கூடியவர். கரப்பந்தாட்டத்திலும் சிறப்பான தகுதிகள் இவருக்கு உள்ளது.

கட்டியண்ணா தலைமையிலான கரப்பந்தாட்ட அணியிலும் 72,73ம் ஆண்டுகளில் விளையாடினார்.

இங்கிலாந்து வல்வை புளூஸ் கழகத்தின் தலைவராக இவரே செயற்பட்டு வருகிறார். மைதானத்துக்கு உள்ளே வல்வை புளூஸுக்காகச் சிறப்பாக விளையாடிய இவர், இப்போதும் மைதானத்துக்கு வெளியே வல்வை புளூஸ் கழக நிர்வாகத்தில் ஈடுபாட்டுடன் செயற்படுவது நன்றியுடன் நினைவு கொள்ளத்தக்கது.

## 61
உதைபந்தாட்ட வீரர்
### செ.நித்தியானந்தலிங்கம்
(வண்ணமண்ணா)



உதைபந்தாட்டத்தின் பின்னணி வீரரான வண்ணமண்ணா வடமராச்சிப் பகுதியில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளில் விளையாடினார். வசாவிளானில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற உதைப்பந்தாட்டப் போட்டியில் என்றும் மறக்க முடியாத ஆட்டம் வண்ணமண்ணாவினுடையது.

## 62
வல்வை புளூஸ் கழக வீரர்
### ஐ.சண்முகராசா
சண் அப்பா



உதைபந்தாட்டம் என்பது சரியான நேரத்துக்குப் பந்தை பெறுவதும், பந்தை வழங்குவதும் ஆகும். சண்முகராசாவின் சிறப்பு, சரியான நேரத்துக்கு பந்தைப் பெறுவது ஆகும். வலது களமுனையில் விளையாடிய இவர் தனது விளையாட்டு எல்லையைக் கடந்து மற்றவர்களின் விளையாட்டில் புகாமல் விளையாடக் கூடியவர். பந்துக்காகத் திடீர் வேகம் கொள்ளக் கூடியவர் சண்முகராசா.

## 63
வல்வை புளூஸ் கழக
### கு.தர்மரெத்தினம்
(வண்ணமண்ணா)



Pele உலகக்கிண்ணசுற்றுப் போட்டியில் மிகக் குறைந்தவயதில் கோல் அடித்தவீரர் ஆவார். (17 வயது 239 நாள்)

மிகவும் உயரமான தோற்றம் கொண்ட தர்மரெத்தினம் இடதுகாலால் விளையாடக் கூடியவர். இவருக்கு ஊடாக எதிரணியினர் பந்தைக் கொண்டு செல்வது மிகக் கடினமானது ஆகும். 70களின் நடுவில் காங்கேசன்துறை, தெல்லிப்பளைப் பகுதிகளில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளில் வண்ணமண்ணா சிறப்பாக விளையாடியவர்.





# Blues- விளையாட்டுக் கழகம் VVT

1968, 69களில் மிக நன்கு விளையாடிய தேவசிகாமணி, தர்மரெட்ணம், A.S.ரஜேந்திரன், யோகச்சந்திரன், கார்த்திகேயன் ஆகியவர்களுடன் குறிப்பிடத்தக்கவர்கள், ஜெயச்சந்திரன் (கலிங்கண்), இந்திரலிங்கம் (பழமண்ணா) ஆகியவர்கள்.

தெல்லிப்பளையில் ஒவ்வொரு நாளும் உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறும். அப்போட்டிகளில் பெரும்பாலான வெற்றிக் கோப்பைகளை நாங்கள் வென்றுள்ளோம். அவற்றில் மிக நன்றாக விளையாடியவர்கள் தங்கவடிவேல், குணநாதன், குகபிரதாசன் மற்றும் கதிர்காமலிங்கம் ஆகியோராவர். ஒரு மிகச் சிறந்த கழகத்துடன் நாம் இறுதிப் போட்டியில் விளையாடிய பொழுது, ஆறுக்குப் பூச்சியம் (6-0) என்ற வித்தியாசத்தில் வென்றோம். அவ் ஆறு கோல் (Goal) களையும் அடித்தவர் தங்கவடிவேல் ஆவார். இச்சாதனையைப் புரிவதற்கு இவருக்கு மிகவும் உறுதுணையாக இருந்தவர்கள் குணநாதன், கதிர்காமலிங்கம் மற்றும் ஜெயபாலசிங்கம் ஆகியோராவார்கள்.

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், செல்வச்சந்திரன், தங்கவேல் அண்ணாவின் தோள் மீது ஏறி நின்று கோலுக்கான பந்தைப் பிடித்தார். எமக்கு எதிராக விளையாடியவர்களில் கொழும்பு இரட்ணம் கழகத்தைச் சேர்ந்த 'அப்பையா' குறிப்பிடத்தக்கவர். எம் கழக உறுப்பினர்கள் பலமுறை பல்வேறு இலங்கையின் முன்னணிக் கழகங்களால் தமக்கு விளையாடுமாறு அணுகப்பட்டும் எமது கழக உறுப்பினர்கள் எவரும் Blues ஐ விட்டு விலகவில்லை.

அந்நாட்களில் புத்தூரில் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் பலவற்றிலும் எமது கழகம் பல வெற்றி ஈட்டியுள்ளது. குறிப்பாக ஓர் போட்டியில் மிகச் சிறந்த எதிரணியுடன் விளையாடி 12-1 என்ற வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம். இவ்வெற்றிக்கு குணநாதனின் அபார ஆட்டமே காரணமாகும்.

பிரசித்தி பெற்ற வதிரி DIAMONDS, BOMBERS ஆகியவற்றுடன் விளையாடிப் பல வெற்றிகளைக் குவித்தோம். இப்போட்டிகளில் குறிப்பிடத்தக்க சாதனைபுரிந்தவர்கள் தேவசிகாமணி, A.ரட்ணசிங்கம் மற்றும் யோகச்சந்திரன்.

வடமராட்சியில் மட்டுமன்றி யாழ்ப்பாணத்தின் பல சிறந்த கழகங்களுடனும் பல போட்டிகள் சிறப்பாக விளையாடியுள்ளது. இப்போட்டிகளில் மயிலேறும்பெருமாள், தர்மரட்ணம், A.S.ராஜேந்திரன், யோகச்சந்திரன் மற்றும் A.ரட்ணசிங்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இப்போட்டிகளில் சிறப்பான திறமையை வெளிப்படுத்தியதன் மூலம் யாழ் மாகாண உதைபந்தாட்ட அணிக்கு கோல் காப்பாளராக (Goal Keeper) தெரிவு செய்யப்பட்டார்.

உதயணன், அன்பழகன், வேலாயுதபிள்ளை, ரமேஸ் சுந்தரலிங்கம் போன்ற சிறந்த வீரர்கள் Blues கழகத்தினூடாகத் தமது திறமையை 1970களில் வெளிப்படுத்தத் தொடங்கினார்கள். இவர்களுள் உதயணன் அகில இலங்கை ரீதியில் சிறந்த வீரராக ஊடகங்களால் கணிக்கப் பெற்றார்.

திரு.மயிலேறும் பெருமாள் அவர்கள் தமிழ்நாட்டில் பல்கலைக்கழக அணிக்காகவும் விளையாடியுள்ளார். மற்றும் A.S.ராஜேந்திரன் கண்டி மாகாண அணிக்காகவும் திரு. ரமேஷ் மன்னார் மாவட்ட பாடசாலைகள் அணிக்காக விளையாடியுள்ளார்கள்.



பா. குமாரசிறீதரன்

## 64

### வல்வை புளூஸ் வீரர்
### விசிபாங்க்
## பொ. விசியகுமார்

கார்த்திகேயன், A.R. இரத்தின சிங்கம், செல்வ சந்திரன், சீவரெட்ணம், சிவசண்முகநாதன் என்ற 'அற்புதமான' கோல்காப்பு வீரர்களின் வரிசையில் வல்வை புளூசுக்குக் கிடைத்த இன்னொரு வீரர்தான் விசிபாங்க். வல்வை புளூஸ் கழகம் வடமராச்சிப் பகுதியில் விளையாடிய போட்டிகளில் இவர் விளையாடியவர். வல்வை புளூஸ் கழகத்துக்குப் புதிய தலைமுறை வீரர்களை அறிமுகப்படுத்தி உற்சாகப்படுத்தியதில் விசிபாங்க், ஆயக்கிளி, (மகேந்திரன்), புத்திங் (புத்திரசிகாமணி) ஆகியோரும் நினைவில் வைத்திருக்க வேண்டியவர்கள்.

**மிக அதிக வயதில் உலகக்கிண்ணப் போட்டியில் கோல் அடித்தவீரர் Roger Milla (Cameroon) 42 வயது 39 நாள் (Cameroon Vs Russsia, 1994)**

## 65

### உதைபந்தாட்ட வீரர்
### ஆலடி ரவி
## தெ. இரவீந்திரசிகாமணி

வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் கோல்காப்பு வீரராக இருந்தவர்களில் ஆலடிரவியும் ஒருவர்.

## 66

### வல்வை புளூஸ்
### உதைபந்தாட்ட வீரர்
## கு.ஜெயராஜ்

வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் ஜெயராஜ் அவர்களும் விளையாடியவர்.





## 67

### உதைபந்தாட்ட வீரர் குட்டிப்பாலி
## சி.பாலச்சந்திரன்



அதிவேகமான ஓட்டமும் இடது காலால் பந்தைக் கட்டுப்படுத்திச் செலுத்தவும் கூடியவர் பாலச்சந்திரன். உதைபந்தாட்டத்தை வெகு அழகாகவும் வேகமாகவும் விளையாடிக் காட்டிய இவர் வடமராச்சிப் பகுதியில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளில் விளையாடினார்.


பொன் விழா காணும் வல்வை
புளூஸ் விளையாட்டுக் கழகத்தை
வாழ்த்துகின்றோம்

KPS Money Transfer

Tooting, UK
0208 682 9686
C.K. சுந்தரேசன்


## 68

### நினைவில் நிற்கும்
### விளையாட்டின் மத்தியூஸ்
## ஆ.எமேசன் மத்தியூஸ்



உதைபந்தாட்ட முன்னணி வீரராகவும், மத்திய நிலை வீரராகவும் மிகச் சிறப்பான வேகமும் திறனும் கொண்டவர் மத்தியூஸ். வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட அணியில் இவர் விளையாடிய போட்டிகள் மிகவும் சிறப்பானவை. 78ம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் மின்னொளியில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியிலும் நெல்லியடி NCC அணியினுடனான போட்டியிலும் மத்தியூஸ் முக்கியமான பங்கு கொண்டவர். ஏழுநபர் கொண்ட உதைபந்தாட்ட போட்டிகளில் மத்தியூஸ் நுணுக்கமான விளையாட்டுத் திறனை வெளிக்காட்டியவர். இவர் விளையாடிய காலங்களில் எந்தவொரு தண்டனை அட்டையும் பெற்றுக் கொள்ளவில்லை என்பது இவரின் விளையாட்டுத் திறனுக்குச் சான்றாகும்.

**அதிகஉலகக்கிண்ணப் போட்டிகளில் விளையாடியவீரர் Lothar Matthas (ஜேர்மனி) 25 போட்டிகள்.**

## 69
### உதைபந்தாட்டத்தில் சிறந்து விளங்கிய “பாலேந்திரா”
# பா.பாலேந்திரராசா



இன்றும் தமிழர்களின் உதைபந்தாட்டத்தில் இவரைப் போன்ற “Throw" எறியக் கூடியவர்கள் மிகச் சிலரே. பாலேந்திரா மிகச் சிறப்பாக Crossing செய்யக் கூடியவர். இவர் செய்யும் Crossing களைப் பெற்றுக் கொண்டால் கோல் நிச்சயமாகும்.

யாழ் மாவட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனா வெற்றியீட்டிய போது அதில் பாலேந்திராவும் விளையாடியவர்.

அத்துடன் பருத்தித்துறை வட்டாரத் தெரிவு அணியில் தெரிவான வல்வை புளூஸ் வீரர்களில் பாலேந்திராவும் ஒருவர்.

## 70
### சிறந்த உதைபந்தாட்ட வீரர்
# இ. அருணாசலம்



உதைபந்தாட்டத்தில் இடதுகாலால் பந்தை கட்டுப்படுத்தி விளையாடும் ஆற்றல் கொண்ட அருணாசலம் இடது களமுனை நிலையில் விளையாடினார்- வல்வை புளூஸ் கழகத்தின் உதைபந்தாட்ட அணியில் இவர் விளையாடும்போது யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போட்டியொன்றில் மூலை அடியொன்றின் மூலம் நேரடியாக கோல் அடித்த பெருமைக்குரியவர். வடமராட்சியில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளிலும் காங்கேசன்துறைப் பகுதியில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளிலும் இவர் தனது காலத்தில் விளையாடியவர்.


பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்

**K.S Windows Coverings**

Canada

416 270 9643, Kannan and Sangeetha




வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

## 71
### அழகானதும் நுணுக்கங்கள் நிறைந்ததுமான விளையாட்டுக்கு
# S. வேலாயுதபிள்ளை
### (வேலா)



வேலாயுதபிள்ளை பாடசாலையில் படிக்கும் காலங்களிலேயே சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ்ந்தார். ஓர் சிறந்த வீரனுக்கு இருக்கும் உடல்வாகு இல்லாத போதும் தனது முயற்சியால் திறமையால் மக்கள் மனதில் பதியக்கூடிய சிறந்த விளையாட்டு வீரரானார். இவர் மைதானத்துக்கு வெளியில் நிற்கும் போது புதிய ஒருவரிடம் இவர் சிறந்த உதைபந்தாட்ட வீரர் என்று கூறினால் நம்பக் கஷ்டப்படுவார்கள். ஆனால் மைதானத்துக்கு நடுவில் இவர் விளையாடும் முறைகள், திறமைகளைப் பார்த்தால் அடே அப்பா!!! எப்படி இந்தச் சின்னப் பொடியன் இப்படிப் பெரிய விளையாட்டு விளையாடுகிறான் என்று ஆச்சரியப்படுவார்கள்.

1972-1976 சிதம்பராக் கல்லூரியில் படித்த போது சிதம்பராக் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டியில் சிறப்பாக விளையாடிக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துத் தந்ததுடன் இளவாலை சென்ஹென்றீசில் படித்த போது அக்கல்லூரிக்காகச் சிறப்பாக விளையாடி அக்கல்லூரிக்குப் பெருமை சேர்த்துத் தந்தார். இவரது சிறப்பான ஆட்டம் காரணமாக 1976ம் ஆண்டு சென்ஹென்றீசில் படித்துக் கொண்டிருந்த போது யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கான உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டியில் விளையாடி யாழ் மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்துத் தந்தார். 1975-1981 வரை பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்டக் கோஷ்டிக்காக (P.D.F.A) விளையாடினார். மாவட்டக் கோஷ்டிக்கு ஒருமுறை இருமுறை தெரிவானதே கடினம். ஆனால் தொடர்ந்து ஏழு வருடங்கள் பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்டத் தெரிவுக்குழுவுக்காகப் பல மாவட்டங்களுக்குச் சென்று விளையாடி வந்துள்ளார். இவர் பந்துகளை ஸ்ரொப் (Stop- நிறுத்தும்) பண்ணும் முறைகள் அலாதியானது. எத்தனை வேகமாகப் பந்துகள் வந்தாலும், எந்த முறைகளில் பந்து வந்தாலும், அந்தப் பந்துகளை இலகுவாக நிறுத்திவிடுவார். நெஞ்சுக்கு நேரே வரும் பந்துகளை எதுவித தயக்கமுமின்றி கைகளை முன்னுக்கு உயர்த்தி வைத்துக் கொண்டு கையில் படாதவாறு நெஞ்சில் வேண்டி அதனைத் தன் தொடைக்கு இறக்கி பின் தன் கால்களின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்துவிடுவார். நெஞ்சு, வயிறு, தொடை, இடைக்கால்கள், ஆங்கிள், மேல்ப்பாதம், கீழ்ப்பாதம் என எல்லா அங்கத்தாலும் பந்தை நிறுத்தக் கூடிய ஆற்றல் பெற்றமை இவரின் தனிச்சிறப்பாகும். (இதே போன்று பந்துகளை இலகுவாக நிறுத்தி லாவகமாகப் பந்துகளைக் கொண்டு செல்லும் இன்னொரு திறமை உள்ளவர், வல்வை புளூசின் சிறந்த விளையாட்டு வீரர்களில் ஒருவரான அன்பழகன் ஆவார்.)

1980ம் ஆண்டு யாழ் மாவட்ட உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டியில் (J.D.F.A) வல்வை புளூஸ் விளையாட்டு வீரர்களான வேலாயுதபிள்ளை, ரமேஸ்சுந்தரலிங்கம், கட்டியண்ணா, சுப்பிரமணியம் (மணி) ஆகிய நால்வரும் தெரிவாகி இருந்தனர். யாழ் மாவட்ட உதைபந்தாட்டக் கோஷ்டி பயிற்சிக்காக யாழ் மாவட்டத்தில் உள்ள சிறந்த அணிகளுடன் சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகளில் விளையாடுவது வழக்கம். வல்வை புளூஸ் உதைபந்தாட்ட அணி யாழ் மாவட்டத்தில் சிறந்த அணியாகக் கருதப்படுவதாலும் யாழ் மாவட்டக் கோஷ்டிக்கு புளூஸ் விளையாட்டுக் கழகத்திலிருந்து நான்கு பேர் தெரிவாகி இருந்த காரணத்தினாலும் யாழ் மாவட்ட

உதைபந்தாட்ட சங்கத் தலைவர் திரு. டொக்டர். பிலிப் அவர்களும் பயிற்சியாளர் திரு. தம்பிராசா அவர்களும் வல்வை புளூசுடன் வல்வெட்டித்துறையில் ஒரு போட்டி விளையாட விரும்புவதாகவும் அதற்காகிய ஒழுங்குகளைச் செய்யும்படியும் யாழ்மாவட்டக் கோஷ்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட நால்வரையும் கேட்டுக் கொண்டார். அந் நால்வரும் வல்வெட்டித்துறையில் ஒரு தரமான உதைபந்தாட்ட மைதானம் இல்லையென்பதை மனவேதனையுடன் கூறி விளையாட முடியாமைக்கு வருத்தம் தெரிவித்ததோடு டொக்டர் பிலிப் அவர்களுக்குப் பயிற்சியாளர் திரு.தம்பிராசா அவர்களுக்கும் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை விளையாட அழைத்ததற்காக புளூஸ் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். யாழ்மாவட்டக் கோஷ்டி யாழ் சென் பீற்றஸ் கல்லூரி மைதானத்தில் சென்பற்றிக்ஸ் கல்லூரியுடன் சினேகபூர்வ போட்டியில் விளையாடிய போது வல்வை புளூசைச் சேர்ந்த ரமேஸ் சுந்தரலிங்கம் புல்பாக்கிலும், கட்டியண்ணா றைட் அவுட்டிலும் வேலாயுதபிள்ளை றைட்இன்னாகவும் விளையாடினர். அந்தப் போட்டியின் போது கட்டியண்ணா றையிட்டில் இருந்து கொடுத்த பந்தை வேலாயுதபிள்ளை நெஞ்சில் வாங்கி அந்தப் பந்தைத் தொடைக்கு இறக்கி அது நிலத்தில் விழவிடாது எயார் சொட்டாக அடித்து இடது பக்க மூலையில் கோல் ஆக்கிய அழகு இன்றும் கண்முன் நிற்கும் காட்சியாக உள்ளது. இது போன்று மன்னாரில் யாழ்மாவட்டம் விளையாடிய போது வேலாயுதபிள்ளை மிகவும் சிறப்பாக விளையாடிப் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்.

1973-1983 வரை வல்லை புளூசுக்காக விளையாடி வந்துள்ளார். இவர் புளூசுக்காக விளையாடிய காலங்களில் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம் விளையாடிய பெரும்பான்மையான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் சாம்பியனாக வந்துள்ளது. வேலாயுதபிள்ளை பல போட்டிகளில் சிறந்த விளையாட்டு வீரனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் பெரும்பாலும் முன்கள வீரராகவும் (சென்ரபோவேட்) நடுக்கள வீரராகவுமே (சென்ரகாவ்) விளையாடியுள்ளார். இவர் கோல் அடிப்பதில் திறமையுள்ளவராக இருந்தது போலவே பனால்ரி அடிப்பதிலும் மிகவும் திறமையுள்ளவராக இருந்து புளூசுக்குப் பெருமை சேர்த்துத் தந்துள்ளார். இவர் ஒரு பற்மின்ரன் விளையாட்டு வீருமாவார்.

எவ்வளவு தூரத்தில் சுற்றுப்போட்டிகள் நடந்தாலும், உதைபந்தாட்ட பயிற்சி நடந்தாலும் அதற்க எந்தவித சோர்வும் இன்றிச் சென்று விளையாடக் கூடிய இவரின் தன்மை வியப்புக்குரியது.

வல்வையின் உதைபந்தாட்ட வரலாற்றில் இவரின் விளையாட்டும் நுணுக்கங்களும் புதிய ஒரு பரிணாமத்தை ஏற்படுத்தின.

**16ஆம் திகதி யூலை,1950 இல் பிரேசிலுக்கும் உருகுவேக்கும் இடையிலான உலகக் கிண்ணபோட்டியின் போது மைதானத்தில் இருந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை 199,854 (MaracanaStadium, Brazil)**



பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
KV Money Transfer
Southall, UK
0208 606 8693, Jegan







## 72
## மைதான ஆளுமைக்கு பெயர்பெற்ற
# அ.அன்பழகன்



அன்பழகன் பாடசாலையில் படிக்கும் காலங்களில் பாடசாலை பங்கு பற்றிய பல போட்டிகளிலும் விளையாடித் தன் விளையாட்டுத் திறமையை வெளிப்படுத்தி வந்தார். 1976-1977 அன்பழகன் விளையாடிய சென் ஹென்றீஸ் (St. Hentrys's) கல்லூரி 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அகில இலங்கை சாம்பியனாக வந்தது. அன்பழகன் 1976ம் ஆண்டு யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கான உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டிக்காக விளையாடினார். இவரின் உதைபந்தாட்டக் காலத்தில் இவரின் சிறப்பான விளையாட்டைப் பாராட்டி 1978ம் ஆண்டு வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வல்வெட்டித்துறையின் சிறந்த உதைபந்தாட்ட வீரருக்காகிய சிறப்பு விருதை (Award) வழங்கிக் கௌரவித்தது. 1972-1982 வரை இவர் புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக விளையாடிய காலங்களில் இவரின் ஒளிமயமான காலங்களாகும். இக்காலத்தில் புளூஸ் விளையாட்டுக் கழகம் விளையாடிய பெரும்பான்மையான போட்டிகளில் இவர் விளையாடி வெற்றிக்காக உழைத்ததுடன் பல போட்டிகளில் சாம்பியனாக வரவும் உதவினார். இந்தப் போட்டிகளில் விளையாடிய அன்பழகனுக்கு பல போட்டிகளில் சிறந்த உதைபந்தாட்ட வீரருக்காகிய விருதும் வழங்கப்பட்டது.

அன்பழகன் ஆரம்ப காலங்களில் Centre forward விளையாடினார். பின்னர் இடைநிலை (half) பின்களம் (Back) என விளையாடிய போதும் கூடுதலாக முன்களம் (Center forward) ஆகவே விளையாடியுள்ளார். இவர் விளையாடும் போது பந்து இவர் கால்களிலிருந்து ஒன்றரை அடிக்குள் அவரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து கொண்டிருக்கும். குட்டிமணி அண்ணா போன்று ஆறுதலாக, நிதானமாக, எதிர் அணி வீரர்களிடம் பந்தைப் பறிகொடுக்காது தனது இரண்டு கால்களின் நடுவில் பந்தைக் கொண்டு செல்வார். தமது அணி வீரர்களுக்குப் பந்தைப் பாஸ் செய்வதற்காக எதிரணி வீரர்களுக்குப் போக்குக் காட்டிவிட்டு யாரும் எதிர்பார்க்காதவிதமாக கோல்க் கம்பத்தை நோக்கி அடித்துக் கோல் ஆக்கி விடுவார். எத்தனை வேகமாக வரும் பந்துகளையும் நெஞ்சு, வயிறு, தொடை, கால்கள், மேல்ப்பாதம், கீழ்ப்பாதம் என எல்லா அங்கங்களினாலும் திறமையாக ஸ்ரொப் (Stop) பண்ணிவிடுவார். இவர் கோல் அடிப்பதில் திறமைசாலி. அதேபோன்று பனால்ரி அடிப்பதிலும் திறமை மிக்கவராகவே திகழ்ந்தார்.

அன்பழகன் உதைபந்தாட்டத்தில் மாத்திரமல்ல, கைப்பந்தாட்டம், கிறிக்கற், பற்வின்ரன், மெய்வல்லுனர் போட்டிகள் எனப் பல விளையாட்டுக்களில் சிறந்த வீரராவார். 1977ம் ஆண்டு முதல் கட்டியண்ணாவின் பயிற்சியுடன் வல்வை புளூஸ் கைபந்தாட்ட செற்றப் கேம் அணியில் விளையாடியுள்ளார். 1972-1979 வரை வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக கிறிக்கற் போட்டிகளில் விளையாடி வந்துள்ளார். (Middle order batsman and medium fast ball) 16,17,19 வயதுக்குட்பட்ட யாழ்மாவட்ட பாடசாலைகள் மெய்வல்லுனர் போட்டிகளிலும் இன்னும் பல போட்டிகளிலும் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். மெய்வல்லுனர் போட்டிகளில் 800 மீற்றர் ஓட்டம், 1500 மீற்றர் ஓட்டம், கோலூன்றிப் பாய்தல், உயரம் தாண்டுதல் என்பன இவரின் சிறப்ப

விளையாட்டுக்களாகும்.

Wattala anthamees விளையாட்டுக் கழகத்திற்காக 1979ம் ஆண்டு முதல் 1982ம் ஆண்டு வரை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் விளையாடி வந்துள்ளார். 1982ம் ஆண்டு முதல் 1988ம் ஆண்டு வரை சவுதி அரேபியாவில் அவர் வேலை செய்த கம்பனிக்காக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் விளையாடி வந்துள்ளதுடன், சிறந்த கிறிக்கற் போட்டிகளிலும் கலந்து கொண்டுள்ளார். 1989-1993 வரை N.S.W. பெடரேசன் சுற்றுப் போட்டிகளில் (Sydney Australia) அவுஸ்திரேலியாவில் விளையாடியுள்ளார். 1993ல் இருந்து இன்று வரை பற்மின்ரன் அவுஸ்திரேலியாவில் விளையாடிக் கொண்டிருக்கின்றார் என்பது வல்லைக்குப் பெருமையே.

இவரிடம் இருந்து வல்வையின் வருங்காலச் சந்ததி கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. மைதான ஒழுக்கம், நேரம் தவறாமை, தனது அணியினருடன் ஆழமான நட்பு என்பன இவரின் முக்கியமான சிறப்பியல்புகளாகும்.

---

## 73
## ஊரின் எல்லை கடந்தும் வல்வை புளூஸின் புகழை நீட்டிய
# ரமேஸ் சுந்தரலிங்கம்



ரமேசின் தந்தையார் திரு. சுந்தரலிங்கம் அவர்கள் சிதம்பராக் கல்லூரியில் படிக்கும் காலங்களில் சிறந்த உதைபந்தாட்ட, கைப்பந்தாட்ட (ஓவகேம்) வீரர் மட்டுமல்லாது மெய்வல்லுனர் போட்டிகளிலும் சிறந்த வீரராகத் திகழ்ந்தவர். சிதம்பராக் கல்லூரி அகில இலங்கையிலேயே இரண்டாம் இடம் கிடைத்தது. அதுமட்டுமன்றி வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகத்திற்காக திரு. சுந்தரலிங்கம் அவர்கள் கைப்பந்தாட்டம் விளையாடிய போது ஒரு முறை அகில இலங்கை சாம்பியனாகவும் இரு முறை ரன்னராகவும் (இரண்டாம் இடம்) வந்து வல்வெட்டித்துறைக்கும் பெருமை சேர்த்துத்தந்தவர். வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகம் ஆரம்பித்தபின்னர் புளூஸ் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை காட்டி வந்தவர். இத்தகைய பெருமை மிக்க விளையாட்டு வீரரின் மகனே ரமேஸ் சுந்தரலிங்கம்.

ரமேஸ் பாடசாலையில் படிக்கும் காலங்களிலேயே விளையாட்டுக்களில் சிறந்து விளங்கினார். சிதம்பராக் கல்லூரியில் படித்த காலங்களில் 1972-1973ம் ஆண்டுகளில் சிதம்பராக் கல்லூரிக்காக உதைபந்தாட்டப் போட்டிகளில் விளையாடியுள்ளார். அந்த நேரத்திலேயே புளூஸ் விளையாட்டுக் கழகத்துக்காக Whight X Height உதைபந்தாட்டப் போட்டியில் விளையாட ஆரம்பித்து 1980ம் ஆண்டு வரை வல்வை புளூசுக்காக உதைபந்தாட்டப் போட்டிகளிலும் கைப்பந்தாட்டப் போட்டிகளிலும் விளையாடி வல்வை புளூசுக்குப் பெருமை சேர்த்துத் தந்ததுடன் தன் தனித்திறமையையும் வெளிப்படுத்தி தனக்குப் புகழ் சேர்த்துள்ளார். இவர Centre Half, Right half, Left Half, Back ஆகிய நிலைக்களங்களிலேயே கூடுதலாக விளையாடி வந்துள்ளார். இவர் புளூசுக்காக உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம் விளையாடிய காலங்களில் பல போட்டிகளில் புளூஸ் சாம்பியனாக வந்துள்ளது. ரமேஸ் உதைபந்தாட்டத்தில் பல போட்டிகளில் சிறந்த வீரருக்கான விருதைப் பெற்றிருக்கிறார்.

டெயிலி நியூஸ் கப் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான போட்டி ஆகும். இந்தப் போட்டி யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் 1975ம், 1976ம் ஆண்டுகள் நடைபெற்ற போது யாழ் மாவட்டப் பாடசாலைகள் சார்பாக ரமேஸ் விளையாடினார். 1975ம் ஆண்டு ரமேஸ் விளையாடிய யாழ் மாவட்டப் பாடசாலை அணி சாம்பியனாக வந்ததுடன், 1976ம் ஆண்டு ரமேஸ் காப்டனாக விளையாடிய போது யாழ்மாவட்டப் பாடசாலைகள் அணி இரண்டாம் (ரன்னர்) இடம் பெற்றது. இது போன்று 18 வயதுக்குட்பட்ட பருத்தித்துறை மாவட்டப் பாடசாலை அணிக்கு விளையாடியதால் அகில இலங்கை 18 வயதுக்குட்பட்ட பருத்தித்துறை மாவட்டப் பாடசாலைஅணித் தெரிவுக்கு அழைக்கப்பட்டார். 1977ம் ஆண்டு மன்னார் St.Savior's கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது ரமேஸ் விளையாடிய கல்லூரி வவுனியா மாவட்டத்தையும் திருகோணமலை மாவட்டத்தையும் வென்று சாம்பியனாக வந்தது.

1980ம் ஆண்டு வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்திலிருந்து யாழ் மாவட்ட உதைபந்தட்டத் தெரிவுக் கோஷ்டிப் பயிற்சிக்குச் சென்ற ரமேஸ் சுந்தரலிங்கம், வேலாயுதபிள்ளை, சுப்பிரமணியம் (மணி), கட்டியண்ணா ஆகிய நால்வரும் யாழ் தெரிவுக் கோஷ்டிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள். யாழ் மாவட்டத்துக்கு நடைபெற்ற எல்லாப் போட்டிகளிலும் ரமேஸ் மிகவும் சிறப்பாக விளையாடினார். இவரின் சிறப்பான விளையாட்டின் காரணமாக அகில இலங்கை உதைபந்தாட்டத் தெரிவுக்காகிய பயிற்சிக்குச் செல்ல யாழ் மாவட்டக் கோஷ்டியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மூவரில் ரமேஸ் சுந்தரலிங்கமும் ஒருவராவார். 1980-1983 வரை JABARJEE BROTHER அணிக்காக மேக்கன்ரயில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியிலும் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளிலும் விளையாடியுள்ளார். 1986ம் ஆண்டு கனடா ரொரன்ரோ புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக விளையாடி உள்ளார்.

ரமேஸ் 2001ம் ஆண்டு ஒன்ராறியோ உதைபந்தாட்டச் சங்கத்தால் பயிற்சியாளராக அங்கீகரிக்கப்பட்டதுடன் 2002ம் ஆண்டு மத்தியஸ்தராக (Referee) பதிவு செய்யப்பட்டார். இவரால் பயிற்றுவிக்கப்பட்ட Maltion Soccer club 2004ம் ஆண்டுகளில் கனடாவிலும் அமெரிக்காவிலும் பல சுற்றப் போட்டிகளில் விளையாடி வெற்றி பெற்றுள்ளது. 2005ம் ஆண்டு U 15 உதைபந்தாட்டக் கோஷ்டி USA Cup உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. 2005ம், 2006ம் ஆண்டுகளில் ரொரண்டோ புளூஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குப் பயிற்சியாளராக இருந்தார். ரமேசால் பயிற்றுவிக்கப்பட்ட Canadian Tamils all star team 2007ம் ஆண்டு ஏசியன் கப் சுற்றுப் போட்டியில் சம்பியினாக வந்தது. இவரால் பயிற்றுவிக்கப்பட்ட இதே ரீம் லண்டன் இங்கிலாந்து (U.K) சென்று விளையாடிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரண்டாம் இடம் (ரன்னர்) பெற்றது. ரமேஸ் சுந்தரலிங்கம் அவர்கள் கைப்பந்தாட்ட வீரராக, உதைபந்தாட்ட வீரராக, உதைபந்தாட்டப் பயிற்சியாளராக, உதைபந்தாட்ட மத்தியஸ்தராக, இப்படிப் பலவற்றிலும் சிறந்து விளங்கி வல்வை புளூசுக்கும், வல்வெட்டித்துறைக்கும் பெருமை சேர்த்துத் தந்த வீரராவார்.

ரமேஸ் உதைபந்தாட்டம் விளையாடிய பொழுதுகளில் அவரின் அழகான விளையாட்டுக்காக என்றே ஏராளம், ரசிக, ரசிகைகள் ஒவ்வொரு போட்டிக்கும் வந்தனர். வேகம், நிதானம், பலம் இவைதான் ரமேஸின் உதைபந்தாட்ட அணுகுமுறை. இவற்றை இவர் பயன்படுத்த வேண்டிய தருணங்களில் பொருத்தமாகப் பயன்படுத்துவதால் இவரின் விளையாட்டு மேன்மை பெற்றது.

ரமேஸ் ஒரு சாகப்தம்தான்.

வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

## 74
## ஓய்வின்றித் தொடரும் உதைபந்தாட்டப் பயணத்தில்
# த. உதயணன்



பாடசாலையில் படிக்கும் காலங்களிலேயே சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ்ந்தார். 1976ம் ஆண்டு சென்கென்றிசில் படித்துக் கொண்டிருந்த போது அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான ANCLசுற்றுப் போட்டியின் காலிறுதியில் கோல்க் காப்பாளராக மிகச் சிறப்பாக விளையாடினார். மறுநாள் பத்திரிகையில் சென்கென்றீஸ் கோல்க்கீப்பரும் சென்ஜோசப் கல்லூரியும் என உதயணின் கோல் காக்கும் திறமையைப் புகழ்ந்து எழுதியிருந்தது. இறுதிப் போட்டியில் சென்பற்றிக்ஸ் கல்லூரியுடன் விளையாடி சென்கென்றிஸ் சாம்பியனாக வந்தது. இவரின் கோல்க்காப்புத் திறமையைப் பாராட்டி சிறந்த கோல்க் காப்பு வீரர் விருது வழங்கப்பட்டது.

1977ம் ஆண்டு 19 வயதிற்குட்பட்டவர் பிரிவில் யாழ் மாவட்டப் பாடசாலைக்கான தெரிவுக் குழுவில் விளையாடினார். 1977ல் 19 வயதுக்குட்பட்டோருக்கான இலங்கை யூத் அணிக்குத் தெரிவு செய்யப்பட்ட போதும் தவிர்க்க முடியாத காரணங்களால் அணியில் விளையாட முடியாமற் போய்விட்டது. எடைXஉயரம் (Weight X Height) என மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளில் ஆரம்பித்து இன்றுவரை புளூசுக்காகப் பல நாடுகளிலும் விளையாடி வருகின்றார். 1972 முதல் 1982 வரை புளூசுக்காக இலங்கையிலும் 1982 முதல் 1990 வரை இந்தியாவிலும் 1990 முதல் இன்று வரை இங்கிலாந்திலும் விளையாடியவர். நீண்டகாலமாக இங்கிலாந்தில் புளூஸ் பயிற்சியாளராகவும், நடத்துநராகவும் பணியாற்றிக் கொண்டே விளையாடுகிறார்.

இவர் விளையாடிய போட்டிகளில் 1979ம் ஆண்டு காங்கேசன்துறை யங்றோயல் வி.கழகத்தினரால் யாழ் மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட பதினொரு பேர் விளையாடும் சுற்றுப் போட்டியில் சம்பியனாக வந்தது. பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய 7பேர் விளையாட்டு சுற்றுப் போட்டியில் சம்பியனாக வந்தது. யாழ் ஜொலிஸ்ரார் வி. கழகத்தினால் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின் ஒளியில் நடத்தப்பட்ட 7பேர் விளையாடும் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றது. புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்ட 11 பேர் விளையாடும் போட்டியில் சம்பியனாக வந்தது. வதிரி டயமன்ஸ் வி.கழகம் நடத்திய 7 பேர் கொண்ட போட்டியில் சம்பியனாக வந்தது. லண்டனில் பிரபலமான TSSA சுற்றுப்போட்டியில் 1994ம், 1995ம், 2003ம், 2004ம் ஆண்டுகளில் சம்பயினாக வந்தது. லண்டனில் பிரபலமான TRO சுற்றுப்போட்டியில் 1994ம், 1995ம் ஆண்டுகளில் சம்பியனாக வந்தது. இப்படியாக இன்னும் பல போட்டிகளில் உதயண்ணனுக்குச் சிறப்புச் சேர்த்து தந்த போட்டிகளாகும்.

1987ம் ஆண்டு திருச்சி உறையூர் பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற 7பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் புளூஸ் என்ற பெயரில் உதயணன் தலைமையில் கட்டியண்ணா, முரளி, செல்வக்குமார், ஜீவன், கோபி, கண்ணன் ஆகியோர் விளையாடினார்கள். புளூஸ் விளையாட்டுக் கழகம் அரையிறுதி வரை முன்னேறியது. அரையிறுதி ஆட்ட ஆரம்பத்தில் உதயண்ணன் கோல்காப்பாளராக விளையாடினார். இடைவேளை வரை புளூஸ் வி.கழகம் 3-0 என்ற கோல் கணக்கில் பின் தங்கி இருந்தது. இடைவேளையின் பின் போட்டி ஆரம்பமானது. உதயண்ணன் முரளி ஓடு செல்லக்குமார் ஓடு என்று சத்தம் வைத்தபடியே இருந்தார். புளூஸ் அணி கோல் அடிப்பதாக இல்லை. பொறுமை இழந்துவிட்டார். கட்டி அண்ணாவைக் கூப்பிட்டு கோபியைக் கோலிக்கு விட்டுவிட்டு தான் முன்னுக்குப் போகப் போவதாகக் கூறினார். கட்டி அண்ணா தானே கீப்பராக நிற்பதாகக் கூறி உதயண்ணனை முன்னுக்கு விளையாட அனுப்பிவிட்டார். புயல் போன்ற வேகத்துடன் ஓடுகின்றார். மானைத் துரத்தும் சிங்கம் போல பந்து எங்கெல்லாம் போகின்றதோ உதயண்ணன் அங்கெல்லாம் ஓடி ஓடி விளையாடிக் கொண்டிருந்தார். இந்தப் போஸ்ரிலிருந்து அந்தப் போஸ்ரிற்கு அந்தப் போஸ்ரிலிருந்து இந்தப் போஸ்ரிற்கு என்று துரத்தித் துரத்திப் பந்துகளைப் பறித்து எமது வீரர்களிடம் கொடுத்துக்கொண்டிருந்தார். அவரது முயற்சி வீண் போகவில்லை. புளூஸ் வி.கழகம் அடுத்தடுத்து இரண்டு கோல்கள். கோல் எண்ணிக்கையை 3-2 ஆகியது கடைசி நேரத்தில்.

எதிர் அணியினர் ஒரு கோல் அடித்து 4-2 என்ற கோல்க் கணக்கில் போட்டி முடிவடைந்தது. புளூஸ் அணி அரை இறுதியுடன் வெளியேறிய போதும் அந்தச் சுற்றுப் போட்டியின் சிறந்த விளையாட்டு வீரனாக உதயண்ணன் தெரிவு செய்யப்பட்டார். புளூஸ் அணிக்குக் கிடைத்த பெருமையே உதயண்ணன்.

1993ம் ஆண்டு டென்மார்க்கில், 1994ம் ஆண்டு நோர்வேயில், 1994 இங்கிலாந்தில் (Sebtion) நடந்த சுற்றுப் போட்டியிலும் சிறந்த கோல்க்காப்பாளருக்கான விருதையும் 2003ம் ஆண்டு மொன்றியலில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் சிறந்த உதைபந்தாட்ட வீரருக்கான விருதையும் பெற்றுக் கொண்டார். இவர் இலங்கை, இந்தியா, டென்மார்க், நோர்வே, கனடா எனப் பல நாடுகளிலும் விளையாடி புளூசுக்குப் பெருமை சேர்த்துத் தந்த வீரராவார்.

இங்கிலாந்தில் தமிழருக்கான ஒரு தேசிய அணி தெரிவு செய்யப்பட்ட போது அவ் அணியில் உதயணனுடன் இணைந்து அவருடைய மகன் மதன் தெரிவு செய்யப்பட்டு மகனுடன் இணைந்து போட்டிகளில் விளையாடியது உதயணனின் உதைந்தாட்ட வாழ்வின் மகிழ்ச்சிகரமான தருணங்களில் ஒன்றாகும். புளூஸ் கழக வரலாற்றில் தந்தையும் மக்களும் ஒரே சமயத்தில் மைதானத்தில் வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் விளையாடியது உதயணனும் மதனும் குட்டியும் ஆகும்.

## 75
## மிகச் சிறந்த வீரர்களில் ஒருவரான
# இ.சுப்பிரமணியம்
## (மணி)



இவரின் தந்தையார் இராஜரட்ணம் சிதம்பராக் கல்லூரியில் படித்த காலத்தில் சிதம்பராக் கல்லூரிக் கைப்பந்தாட்டக் கோஷ்டி அகில இலங்கைப் பாடசாலைகள் பங்குபற்றின. அந்தக் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இராசரட்ணம் அவர்கள் கப்டனாக விளையாடி சிதம்பராக் கல்லூரி அகில இலங்கைச் சாம்பியனாக வந்தது. திரு. இராசரட்ணம் அவர்கள் கைப்பந்தாட்டத்தில் மட்டுமன்றி, உதைபந்தாட்டம், ஓட்டம் இன்னும் பல விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கினார். சுப்பிரமணியத்தின் சகோதரர்கள் விஜயரட்ணம், அரசரட்ணம், அருணாசலம் ஆகியோரும் சிறந்த வீரர்களே.

இத்தகைய சிறந்த விளையாட்டுக் குடும்பத்தில் பிறந்த சுப்பிரமணியம் சிறுவயது முதலே விளையாட்டுக்களில் ஆர்வமுள்ளவராக இருந்தார். கல்லூரியில் படிக்கும் காலங்களில் தனது விளையாட்டுத் திறமைகளை வளர்த்துக் கொண்டார். இவர்

உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம், ஓட்டம், பற்வின்ரன், கிறிக்கற் போட்டிகள் எனப் பல விளையாட்டுக்களிலும் திறமைமிக்கவராகத் திகழ்ந்தார். இவர் மகாஜனாக் கல்லூரியில் படிக்கும் காலத்தில் அக்கல்லூரிக்காக விளையாடியுள்ளார். 1977ம் ஆண்டு அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான 19 வயதுக்குட்பட்டவர்கள் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் (Singer Shield) இவர் விளையாடிய மகாஜனாக் கல்லூரி அகில இலங்கைச் சம்பியனாக வந்தது. மகாஜனாக் கல்லூரியின் சிறந்த விளையாட்டு வீரரான இவருக்கு 1978ம் ஆண்டு கல்லூரியின் சிறந்த விளையாட்டு வீரருக்கான கலர் (Soccer Colour) உம் மெய் வல்லுனருக்கான சிறந்த விருதும் (Athelti Colour) கொடுத்து இவரைக் கௌரவித்தது.

1977ம் ஆண்டு யாழ் மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத் தலைவராக டொக்டர் பிலிப் அவர்களும் பயிற்சியாளராக திரு. தம்பிராசா அவர்களும் இருந்தனர். இந்த 1980ம் ஆண்டு யாழ் மாவட்ட உதைபந்தாட்டத் தெரிவுக் குழுப் பயிற்சிக்காக வல்வை புளூஸிலிருந்து சுப்பிரமணியம், வேலாயுதம்பிள்ளை, ரமேஸ், கட்டியண்ணா ஆகிய நால்வரும் சென்றனர். முதல் நாள் பயிற்சி ஆரம்பித்தபோது யாழ் துரையப்பா விளையாட்டரங்கை எட்டு (8) முறை சுற்றிவர வேண்டும் என அறிவித்தனர். 50 பேருக்குமேல் பங்குபற்றி அந்த ஓட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்றவரை விட 100 யாருக்குமேல் முன்னுக்கு வந்து சுப்பிரமணியம் முதலிடத்தைப் பெற்றார். டாக்டர் பிலிப் அவர்கள் கட்டியண்ணாவிடம் "என்ன கட்டியண்ணா நீங்கள் கையில் சவுக்கு வைத்துள்ளீர்களோ? பொடியன் (சுப்பிரமணியம்) உங்களைப் பார்த்துப் பார்த்து இந்த ஓட்டம் ஓடுகின்றான்" என்று கூறி ஜோக் அடித்தார்... இந்தப் பயிற்சிக்குச் சென்ற சுப்பிரமணியம், வேலாயுதபிள்ளை, ரமேஸ் சுந்தரலிங்கம், கட்டியண்ணா ஆகிய நால்வரும் அந்த வருடத்திற்கான யாழ் மாவட்ட உதைபந்தாட்டத் தெரிவுக்குழுவுக்கு (கோஷ்டி) தெரிவு செய்யப்பட்டமை வல்வை புளூசுக்குக் கிடைத்த பெருமையே.

சுப்பிரமணியம் ஆரம்பகாலத்தில் முன்னணி வீரராகவும் (Forward) பின்னர் நடுக்களவீரராகவும் (Half), பின்னணித் தடுப்பாட்ட வீரராகவும், கோல் காப்பாளராகவும் என எல்லா நிலைக்களத்திலும் விளையாடியுள்ளார். இவர் பந்தைக் கொண்டு ஓடும் வேகம் எதிரணியினர் துரத்தி வரும்போது திடீரென அந்தப் பந்தை நிறுத்தி இரண்டு அடிகள் கால்களினால் பின்னுக்கு இழுப்பது எதிரணியினர் மணி பின்னுக்கு இழுத்து பந்தை வேறுபக்கம் கொண்டு ஓடுவார் என எதிர்பார்த்தவேளை அதே திசையில் பந்தை முன்னோக்கிக் கொண்டு ஓடுவது இவரின் தனிச் சிறப்பாகும். இவர் முன்னுக்கும் பின்னுக்கும் பந்தை இழுத்து இழுத்து விளையாடுவது பார்ப்பதற்கு மிகவும் சுவாரஸ்யமானது. எதிர் அணியினர் வேகமாகக் கொண்டுவரும் பந்துகளை அவர்களுடனேயே வேகமாக ஓடித் தனது நீண்டகால்களினால் இலகுவாகப் பறித்துவிடுவார். இதனால் இவரைத் தாண்டி எதிர் அணியினர் பந்து கொண்டு போவது மிகவும் சிரமமானதாகும்.

சுப்பிரமணியம் (மணி) விளையாடிய உதைபந்தாட்டப் போட்டிகளில் மிகச் சிறப்பாகக் கருதப்படுவன 1979ம் ஆண்டு காங்கேசன்துறை யங்றோயல் விளையாட்டுக் கழகத்தினால் யாழ் மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சம்பியனாக வந்தது. பருத்தித்துறை யுனைற்றற் விளையாட்டுக் கழகம் நடத்திய 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சம்பியனாக வந்தது. யாழ் ஜொலிஸ்ரார் வி.கழகத்தினால் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின் ஒளியில் நடத்தப்பட்ட 7 பேர் விளையாடும் போட்டியில் இரண்டாம் இடம்பெற்றது. புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தினரால் நடத்தப்பட்ட 11 பேர் விளையாடும் போட்டியில் சம்பியனாக வந்தது. வதிரி டயமன்ஸ் வி.கழகம் நடத்திய 7 பேர் கொண்ட போட்டியில் சம்பியனாக வந்தது. இலண்டன் TRO, TSSA போன்ற நிறுவனங்களால் நடத்தப்பட்ட 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்காகிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் சம்பியனாக வந்தது எனச் சொல்லிக் கொண்டே போகலாம். மணி 2000ம் ஆண்டு முதல் 2007ம் ஆண்டு வரை லண்டன் புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக விளையாடிப் பெருமை சேர்த்துத் தந்தவர்.





இவர் காலத்தில் பனாஸ்ரி அடிப்பதில் சிறந்த வீரராகக் கருதப்பட்டார்.

கிரிக்கெட்டும் சிறப்பாக விளையாடக் கூடியவர் சுப்பிரமணியம். சென்.ஜோன்ஸ், யாழ் இந்துக்கல்லூரி, யாழ் பல்கலைக்கழகம் போன்ற அணிகளுக்கு எதிராக விளையாடிய போட்டிகள் மிகவும் சுவாரஸ்யமானது.

இப்படி உதைபந்தாட்டம், துடுப் பெடுத் தாட்டம், பற்மின்ரன், தடகளம் என்று பல விளையாட்டுக்களில் முத்திரை பதித்து வல்வை மண்ணுக்குப் பெருமை சேர்த்த வீரர் ஆவார்.

## 76

## வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட வீரர்

# து.ஸ்ரீகணேஸ்



மிக வேகமான முன்னணி வீரர் ஸ்ரீகணேஸ். வல்வை புளூஸின் தலைமுறை தலைமுறையான சிறந்த முன்னணி வீரர்களில் சிறிகணேஸும் குறிப்பிடத் தகுந்தவர். வலது முனை முன்னணி வீரர் நிலையில் நின்று விளையாடக் கூடிய திறமையும், வேகமாகப் பந்தை மிக குறுகிய இடத்துக்குள் நின்று அடிக்கக் கூடிய திறமையும் உடையவர் இவர். 1979ம் ஆண்டு காங்கேசன்துறை யங்றோயல் சுற்றுப் போட்டியில் வல்வை புளூஸ் அணி வெற்றியீட்டிய போது அதன் வெற்றிக்கு உதவியவருள் ஸ்ரீகணேஸும் ஒருவராவார்.

## 77

## உதைபந்தாட்ட வீரர்

# சி. லிங்கராஜா

## (லிங்கம்)



உதைபந்தாட்டத்தில் வலது பின்னணி வீரரான இவர் எவ்வளவு வேகமாக வரும் பந்தையும் தன் தலையால் மறிக்கவும் இடிக்கவும் கூடிய திறமைகள் கொண்டவர். வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் பல சுற்றுப் போட்டிகளில் விளையாடியவர். அவர் திருச்சியில் வல்வை புளூஸ் ஆரம்பித்தவர்களில் ஒருவர். திருச்சியில் மட்டுமல்லாது கனடாவிலும் ரொறோண்டோ புளூஸ்சுக்காக ஆரம்பகாலத்தில் பல போட்டிகளில் விளையாடியவர். பின்னர் பயிற்சியாளராகவும் கடமையாற்றினார். இப்பொழுதும் ரொறோண்டோ புளூசின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

# வல்லை சிதம்பராக் கல்லூரியும் வல்லை புளூசும்

வல்லை புளூஸ் கழகத்தின் பிறப்பிடமே வல்லை சிதம்பராக் கல்லூரி மைதானமாக இருந்தது மட்டுமல்ல, ஆரம்பித்த அனைவருமே வல்லை சிதமபராக் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.



வல்லை சிதம்பராக் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுனர்ப் போட்டியில் நடாத்தப்படம் 4x440m அஞ்சலோட்டப் போட்டியில் வெற்றியைப் பெறுவதோடு ஊருக்கும் பெருமை சேர்க்கும் முகமாக 1961ம் ஆண்டு உதயமான வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகம் இன்று பொன் விழாவை உலகின் பல நாடுகளிலும் கொண்டாடும் அளவிற்கு விருட்சமாக வளர்ந்திருப்பது வல்லையர் அனைவருக்குமே பெருமை சேர்க்கும் விடயமாகும்.

வல்லை சிதம்பராக் கல்லூரி உதைபந்தாட்டத்திலும் கரப்பந்தாட்டத்திலும் முன்னணியில் இருந்த காலகட்டத்தில் யாழ் மாவட்ட ரீதியில் வல்லை புளூஸ் கழகமும் உதை பந்தாட்டத்திலும் கரப் பந்தாட்டத்திலும் தொடர்ந்து பல வெற்றிகளை ஈட்டியது குறிப்பிடத்தக்க விடயமாகும். காரணம் வல்லை சிதம்பராக் கல்லூரியில் விளையாடிய அத்தனை வீரர்களும் தொடர்ந்து வல்லை புளூஸ் கழகத்திற்கு விளையாடி வந்தார்கள். எண்பதுகளின் முற்பகுதியில் பல காரணங்களால் வல்லை சிதம்பரக் கல்லூரியின் கரப்பந்தாட்ட (Setup Game) அணி பலமிழந்து காணப்பட்டது. அதன் காரணமாக வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் அணிக்கு விளையாட்டுவதற்கு வீரர்கள் கணிசமாகக் குறைந்து விட்டார்கள். ஒரு பாடசாலையின் பங்களிப்பு அந்தப் பகுதியின் அத்தனை வளர்ச்சியிலும் முக்கியம் வகிக்கின்றது என்பதற்கு இதுவும் ஒரு உதாரணமாகும்.

இன்றைய காலகட்டத்தில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற அனைத்து வல்லையர்களும் வல்வைச் சிதம்பராக் கல்லூரியையும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தையும் இரண்டு கண்களைப் போல பேணிப் பாதுகாத்து வருவதனால் எமது வருங்காலச் சந்ததியினருக்கும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தினதும் வல்லை சிதம்பரக் கல்லூரியினதும் முக்கியத்துவத்தினை உணரவைக்கக் கூடியதாக இருக்கின்றது.

பிரித்தானியாவில் தமிழ்ப் பாடசாலைகளின் ஒன்றியத்தால் கடந்த இருபது ஆண்டுகளாக நடாத்தப்படும் பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் (TSSA) குறிப்பாக வயதுக்கட்டுப்பாடற்ற பிரிவில் வல்லை சிதம்பராக் கல்லூரி அணி நான்கு தடவைகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் (TRO) நடாத்தப்பட்டு வந்த போட்டிகளில் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழக அணி ஐந்து தடவைகளும் வெற்றியீட்டியது. (சிதம்பராக் கல்லூரி அணி, வல்லை புளூஸ் அணி இரண்டும் ஒன்றுதான்) இவ்விரண்டு சுற்றுப் போட்டிகளுமே பிரித்தானியாவில் நீண்டகாலமாக நடைபெறும் (சுமார் 20 ஆண்டுகள்). உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியாகும். இந்த இரண்டு சுற்றுப் போட்டிகளிலும் மொத்தமாக ஒன்பது தடவைகள் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்ற ஒரே அணி எமது வல்லை புளூஸ் அணி என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். பிரித்தானியத் தமிழர் உதைபந்தாட்ட வரலாற்றில் இத ஒரு மகத்தான சாதனையாகும்.



அதுமட்டுமல்ல, பிரித்தானியாவில் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகமும், வல்லை சிதம்பராக் கல்லூரியும், உதைபந்தாட்டத்தில் அனைத்துப் பிரிவுகளிலும் (Under 10, 12, 14, 16, 19, Adulet& Over 40) அணிகளைக் கொண்ட அணிகள் என்பதும் பெருமைக்குரிய விடயமாகும். அனைத்துப் பிரிவுகளும் குறிப்பிடத்தக்க வெற்றிகளை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வல்லையைச் சேர்ந்தவர்கள் யாழ் மாவட்டத்தில் பல பாடசாலைகளில் கல்வி பயின்ற காலங்களில் அந்தந்த பாடசாலைகளுக்காகப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றதன் மூலம் தாம் படிக்கும் பாடசாலைக்கும் தாம் பிறந்த ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள். இன்றைய காலகட்டத்தில் புலம் பெயர்ந்து வாழும் புதிய தலைமுறையினருக்குப் பெற்றோர்கள் அனைவரும் எமதூருக்கும் அயல் கிராமத்தினருக்கும் சிதம்பராக் கல்லூரியின் தேவையினைத் தெரிய வைத்து அங்கே கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஓரளவிற்காவது உதவி புரியும் மனோபாவத்தை உருவாக்க வேண்டும். அதுவே நாம் எமதூருக்கும் நாம் படித்த பாடசாலைக்கும் செய்யும் கைமாறாகும்.

**- சதானந்தவேல்**

**78**

**வல்லை புளூஸ் கழக வீரர்களில் ஒருவரான**

## வே. ராதாகிருஸ்ணன்

மெய்வல்லுனர் போட்டிகளில் வேக ஓட்டம், உயரம் பாய்தல் என்பனவற்றில் தனது திறமைகளை வெளிக்காட்டிய ராதா அவர்கள் வல்லை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் வலது முன்னணி ஓரத்தில் விளையாடும் திறன் கொண்டவர். ஆனாலும் கோல்காப்பு நிலையில் இவர் இன்னும் அதிகமான திறமைகளையும் ஈடுபாட்டையும் கொண்டிருந்தார். வல்லை புளூஸ் கழகத்தின் சிறந்த கோல்க்காப்பு வீரர்களின் வரிசை கார்த்திகேயன் அண்ணாவில் ஆரம்பித்து ராதவையும் அதில் சிறப்பானவராக அடையாளம் காட்டியது. வடமராட்சி, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், அச்சுவேலிப் பகுதிகளில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளில் ராதா வல்லை புளூஸ் அணியின் வெற்றிக்காகத் தனது பங்களிப்பைச் சிறப்பாக வழங்கியவர்.

## 79
### சிறந்த தடுப்பு வீரர்
## செ. ஜெயமனோகர்
(பழத்தான்)



உதைபந்தாட்டத்தில் முன்னணியில் விளையாடும் வீரர்கள்தான் மிகவும் பிரபலமாக விளங்குவதுண்டு. ஆனால் பின்னணியில் தடுப்பு வீரராக விளையாடிய பழத்தான் தனது வேகத்தாலும் துணிவான விளையாட்டினாலும் மிகப் பிரபலமானவர். 1978ம் ஆண்டு தெல்லிப்பளையில் நட்புரீதியாக இடம்பெற்ற காட்சிப் போட்டியில், ஜெயமனோகரின் விளையாட்டு அவரின் விளையாட்டு மைல்கற்களில் ஒன்றாகும்.

## 80
### வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட வீரர்
## த.சிவகணேசன்
(தங்கக்கட்டி)



வேகமாக வரும் எந்த வீரரையும் உதைபந்தாட்டத்தில் தடுத்து நிறுத்திப் பந்தை மறித்து திரும்பவும் தனது அணி வீரர்களுக்கு அழகாக வழங்கக் கூடியவர் சிவகணேசன் (தங்கக்கட்டி). 80களின் ஆரம்பத்தில் வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் பங்கு கொண்டு வன்னிக்கு சென்றபோது தங்கக்கட்டியும் அவர்களில் ஒருவராக இடம்பெற்றார். வடமராச்சி, தெல்லிப்பளை, காங்கேசன்துறைப் பகுதிகளில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளில் வல்வை புளூஸ் உதைபந்தாட்ட அணியின் சார்பில் சிறப்பாக விளையாடிய இவர் சிறந்த நிர்வாகியும் ஆவர்.

## 81
### உதைபந்தாட்ட வீரர்
## நா.மோகன்

உயர்ந்த தோற்றமும் வேகமும் நிறைந்த வீரர் நா.மோகன்- உதைப்பந்தாட்டத்தை அழகாகவும் நளினமாகவும் விளையாடக் கூடியவர் மோகன்.



## 82
### வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட வீரர்
## ஹரீந்திரன்
(கொறயா)



வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட வீரராக விளங்கிய ஹரீந்திரன் (கொறயா) அதிவேகமான ஓட்டத்துடன் பந்தையும் வேகமாகக் கட்டுப்பாட்டுடன் தட்டிக் கொண்டு செல்லக் கூடியவர். உதைபந்தாட்ட அணியில் வலது முன்னிலை வீரரான இவர் வடமராட்சிப் பகுதியில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளிலும் காங்கேசன்துறைப்பகுதியில் நடைபெற்ற போட்டிகளிலும் வல்வை புளூஸ் கழக அணியில் சிறப்பாக விளையாடியவர்.

## 83
### வல்வை புளூஸ் கழக வீரர்களில் ஒருவரான
## சாம் ஜெயக்குமார்



வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் மிகச்சிறப்பான பின்னிலை வீரர்களின் வரிசையில் சாம் ஜெயக்குமாரும் ஒருவராவார். எதிர் அணியினர் கொண்டு வரும் பந்துகளைப் பறித்து மீண்டும் எமது அணிவீரர்களிடம் கொடுத்து ஆட்டத்தின் திசையை மாற்றுவதில் இவர் வல்லவர். வடமராச்சி, புத்தூர் பகுதிகளில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளில் இவர் எமது அணியில் சிறப்பாக ஆடினார்.

**வல்வை புளூஸ் ஆரம்பிக்கப்பட்ட போது ஒரு அணி. ஆனால் இன்று சுமார் 20 அணிகள் (Teams) வல்வை புளூஸ் பெயரில் உலகம் முழுவதும் விளையாடிக் கொண்டு இருக்கின்றன.**



## 84
### வேகமான உதைபந்தாட்ட வீரர்
## ம.ரஞ்சிதலிங்கம்



இயல்பாகவே வேகமாக ஓடும் ஆற்றல் கொண்ட ரஞ்சிதலிங்கம் உதைப்பந்தாட்டத்திலும் வலது முனை முன்னணி வீரராக விளையாடியவர். இவரும் வடமராய்ச்சி, காங்கேசன்துறை பகுதியில் நடந்த சுற்றுப் போட்டிகளில் விளையாடியவர்.

## 86
### வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட வீரர்
## க.முருகவேல்

உதைப்பந்தாட்ட அணியில் மத்திய நிலை வீரராக வல்வை புளூஸ் அணியில் 70களின் இறுதியிலும் 80களின் ஆரம்பங்களிலும் விளையாடியவர்- இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நடுவராக இன்றும் விளையாட்டுத் துறையில், உதைபந்தாட்ட மைதானத்தில் முருகவேல் நிற்கிறார் என்பது எமக்குப் பெருமையானது.

## 85
### வல்வை புளூஸ் கழகத்தின் சிறந்த வீரரும் நடத்துநரும்...
## திரு.பிரேமகாந்தன்
(வரதன்)



வல்வை புளூஸ் கழகத்தின் ஒரு தலைமுறையின் (இடைக்காலம்) உதைபந்தாட்ட அணியின் மிகச் சிறந்த தடுப்பு (Defend) வீரர் வரதன். 1977ம் ஆண்டில் காங்கேசன்துறையில் நடைபெற்ற சுற்றுப் போட்டி ஒன்றில் Young Mahajana அணிக்கு எதிரான போட்டியில் வரதனின் ஆட்டம் இன்றும் சிறப்பானது. வடமராச்சி, தெல்லிப்பளை, காங்கேசன்துறைப் பகுதிகளில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகள் எல்லாவற்றிலும் இவரின் பங்கு மிகப் பெரியது. 80களின் ஆரம்பத்தில் வன்னிக்குச் சென்ற உதைப்பந்தாட்ட அணியில் வரதனும் ஒருவர்.





## 87
### வல்வை புளூஸ் கழகத்தின் உதைப்பந்தாட்ட வீரர் நீதவான்
## த.அற்புதசிகாமணி



ஏழு நபர் கொண்ட உதைபந்தாட்டங்களில் வேகமாகவும், நிதானமாகவும், களைப்படையாமலும் விளையாடக் கூடியவர் நீதவான். வடமராச்சி, தெல்லிப்பளை, காங்கேசன்துறைப் பகுதிகளிலும் வன்னியிலும் புளூஸ் கழகத்தின் பெயரை நிலைநாட்டியவர் அற்புதசிகாமணி (நீதவான்). 80களின் ஆரம்பத்தில் காங்கேசன்துறையில் நடந்த பிரபல சுற்றுப் போட்டியில் கீரிமலை கருகம்பானை அணிக்கு எதிராக நடந்த இறுதிப் போட்டியில் நீதவானின் விளையாட்டு எமது அணிக்கு வெற்றியை ஈட்டித் தந்தது.

வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் இடைக்காலமொன்றில் பின்னணி வீரராக விளையாடியவர் உ.பிரதீப்குமார். வடமராச்சி, காங்கேசன்துறைப் பகுதிகளில் நடந்த உதைபந்தாட்ட போட்டிகளில் இவரும் விளையாடியவர்.

## 88
### வல்வை புளூஸ் உதைபந்தாட்ட வீரர்
## அ. சக்திவேல்



சிறப்பான விளையாட்டும், தகுந்த நேரத்தில் வேகமாகப் பந்தை அடிக்கும் ஆற்றலும் நிறைந்தவர் அ.சக்திவேல்.

## 89
### வல்வை புளூஸ் உதைபந்தாட்ட வீரர்
## உ. பிரதீப்குமார்



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

## 90

### வல்வை புளூஸின் பெருமைகளில் ஒருவர் சாந்தன்

# ச.சாந்தசிவம்



வல்வை புளூஸ் கழகம் இன்றும் பெருமையுடன் நினைக்கும் உதைபந்தாட்ட வீரர்களில் சாந்தன் முக்கியமானவர். சாந்தனின் உதைபந்தாட்டத் திறமைகளையும், ஆற்றலையும் எழுதுவதும் ஆய்வதும் முடியாது. முன்னணி நிலையில் நின்று விளையாடும் இவர் பந்தை மிக நிதானமாக கால்களுக்கு இடையில் தட்டிக் கொண்டு ஓடும் போது இவர் எந்தத் திசையில் பந்தைத் தட்டப் போகிறார் என்பது யாராலும் தீர்மானிக்க முடியாது. இவர் பந்தைத் தன் கால்களால் கட்டுப்படுத்துவதும் பின்னுக்கு இழுப்பதும் அழகான காட்சி ஆகும். வடமராச்சி, தெல்லிப்பளை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணப் பகுதிகளில் நடந்த சுற்றுப் போட்டிகளில் சாந்தன் தன் ஆளுமை மிக்க விளையாட்டால் அனைவரையும் கவர்ந்தவர். எவ்வளவு உயரத்தில் இருந்து வரும் பந்தையும் பந்து தடுமாறாமல் கட்டுப்படுத்தி நிறுத்தும் திறமை இவருக்கு உள்ளது. மூலைப் பந்தை (Corner) அடிப்பதிலும் இவர் மிகவும் சிறப்பான தகுதிமிக்கவர்.

மிக அதிகமான கோல்களைத் தனது காலத்தில் அடித்த சாந்தன் வல்வை புளூஸ் கழக ஐம்பதாண்டு நிறைவில் என்றும் நினைக்கப்படுவார்.

## 91

### வேகமான பந்து

# ஐ. தங்கத்துரையின்

### சிறப்பு

வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் காலத்துக்குக் காலம் மிகச் சிறந்த முன்னணி வீரர்கள் ஜொலிப்பார்கள். தங்கத்துரை அத்தகைய வீரர்களில் முக்கியமானவர். இடதுகாலால் சிறப்பாக விளையாடும் ஆற்றல் மிகுந்த வீரர்கள் மிகமிகக் குறைவு. தங்கத்துரையில் மிகவும் சிறப்பானது அவரின் இடதுகால் பாவனை ஆகும். மிக வேகமாக பந்தை மிகத் தூரத்தில் இருந்தும் அடிக்கும் இவரின் நுணுக்கம் மெச்சத்தக்கது. கால்களால் ஒருவர் பந்து அடிக்கும் தூரத்துக்குச் சமனான தூரத்துக்கு தங்கத்துரை Throw எறிவார். இடது முனை முன்னணி வீரராக இவரின் ஆட்டம் காலம் கடந்தும் நிற்கும்.

**Dr. மயிலேறும் பெருமாள் அவர்கள் 1965 இல் இந்தியாவில் தொழில்முறை விளையாட்டு வீரராக விளையாடியுள்ளார். ஒரு போட்டிக்கு 15 ரூபா வழங்கப்பட்டது.**

## 92

### வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட வீரர்

# அ.சோமசுந்தரம்

### (சோமு)

வல்வை புளூஸ் கழக உதைப்பந்தாட்ட அணியில் பின்னணித் தடுப்பு வீரராக விளையாடியவர் சோமு. வேகமாக வரும் பந்தையும் தலையால் அடிக்கும் சிறப்புத் திறமை மிகுந்தவர். வடமராச்சி பகுதியில் நடந்த சுற்றுப் போட்டிகளில் சிறப்பாக விளையாடியவர் இவர்.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்

Leema Sound & DJ

London, UK
07890185111,
Rishi

## 93

### இன்றும் தொடரும் பயணம் முரளியினது...!

# சு.இந்திரலிங்கம்



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை 1961ம் ஆண்டு ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்தவர்களில் ஒருவரான சுந்தரி அண்ணாவின் மூத்தமகனான முரளி எமது கழக உதைபந்தாட்ட அணியின் முக்கியமான ஒருவர். மத்திய முன்னணி வீரரான இவர் மிக வேகமாக ஓடக் கூடியவர். நடேஸ்வராக் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியில் மிகச் சிறப்பாக விளையாடி எமக்கு பெருமை சேர்த்தவர். அத்துடன் நடேஸ்வராக் கல்லூரியின் மெய்வல்லுநர் அணியின் தலைவராகவும் இருந்தவர்.

வடமராச்சி, காங்கேசன்துறை, தெல்லிப்பளைப் பகுதிகளில் நடந்த சுற்றுப் போட்டிகளில் முரளி சிறப்பாக விளையாடியவர். அதன் பிறகு 85ம் ஆண்டில் தமிழ்நாடு திருச்சியில் வல்வை புளூஸ் கழகத்தை ஆரம்பித்தவர்களில் இவரும் ஒருவர். திருச்சியிலும் புளூஸ் கழக நீலநிறச் சீருடையுடன் விசேட காவல்துறை அணியுடன் விளையாடியதில் முரளியும் ஒருவராவர்.

இங்கிலாந்தில் வல்வை புளூஸ் கழகம் ஆரம்பித்தவர்களில் முரளியும் ஒருவராவார்.

இவர் வல்வை புளூஸ் அணியில் விளையாடிய போது TRO சுற்றுப் போட்டியில் 3 முறையும், TSSA சுற்றுப் போட்டியில் 2 முறையும், லீக் சுற்றுப் போட்டியில் 1 முறையும் எமது கழகம் வெற்றியீட்டியது.

இவர் வல்வை புளூஸ் கழக பயிற்சியாளராகவும், நடத்துநராகவும் பணி ஆற்றியவர். மிகவும் அர்ப்பணிப்புடன் தனது நேரத்தை இன்றும் வல்வை புளூஸ் கழக உதைப்பந்தாட்டத்துக்குச் செலவழித்து செயற்படுபவர்களில் முரளியும் ஒருவர்.

உதைபந்தாட்டத்தில் திறமை, அர்ப்பணிப்பு என்பனவற்றுடன் நேரம் தவறாமையும் முரளியிடம் வருங்கால தலைமுறை கற்றுக் கொள்ள வேண்டியவை.

---

## 94

### வல்வை புளூஸ் வீரர்

## விக்னராஜா.செ



எமது உதைப்பந்தாட்ட அணியின் பாதுகாப்புப் பின்னணி வீரராக விளையாடிய இவர் தனது வேகமான ஓட்டத்தினால் எதிர் அணி வீரரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தக் கூடியவர். வடமராச்சி, காங்கேசன்துறைப் பகுதிகளில் நடந்த சுற்றுப் போட்டிகளில் இவர் பங்கு கொண்டு சிறப்பாக விளையாடினார்.

## 95

### வல்வை புளூஸ் கழக வீரர்

## த.ஜீவகன்



சிறந்த கோல்காப்பு வீரரான இவர் பின்னணித் தடுப்பு வீரராகவும் விளையாடக் கூடியவர். இயல்பாகவே வேகமான ஓட்டம் ஓடக் கூடிய இவரால் உதைபந்தாட்டத்தின் அனைத்து நிலைகளிலும் விளையாட முடியும். வல்வை புளூஸ் உதைபந்தாட்ட அணி வன்னிக்குச் சென்ற போது இவரும் அந்த அணியில் இடம் பெற்றிருந்தார். துரையப்பா மைதானத்தில் மூலைப்பந்து அடி மூலம் இவர் அடித்த கோல் இவரின் விளையாட்டு மைற்கற்களில் ஒன்றாகும். அத்துடன் இங்கிலாந்து புளூஸ் அணியிலும் இவர் விளையாடினார்.





## 96

### வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட வீரர்

## த. ஆனந்தவடிவேல்

(சிவம்)



எமது உதைப்பந்தாட்ட அணியின் பின்னணி வீரராக விளையாடிய இவர் வேகமாகப் பந்தைக் கட்டுப்படுத்தக் கூடியவர். வடமராச்சிப் பகுதியில் நடந்த சுற்றுப் போட்டிகளில் தனது சிறப்பான விளையாட்டினால், எமது புளூஸ் கழகம் வெற்றி பெற வழி வகுத்தார். கட்டியண்ணாவுடனும் ஏராளமான போட்டிகள் இவர் விளையாடி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## 97

### வல்வை புளூஸ் கழகத்தின் வீரர்

## அ.அருச்சுனன்



கட்டுறுதியான உடலும் அதிகூடிய வேகமும் கொண்ட அருச்சுனன் வல்வை புளூஸின் சிறந்த பின்னணி தடுப்பு வீரர்களின் வரிசையில் மிகவும் குறிப்பிடத்தக்கவர். உயரம் X நிறை சுற்றுப் போட்டியின் மூலம் வல்வை புளூஸ் உதைபந்தாட்ட அணியில் தொடங்கிய அருச்சுனனின் விளையாட்டு மிகவும் மெருகு கூடி உச்சத்தில் நின்றது. இவர் வடமராச்சி பகுதியில் நடந்த போட்டிகளில் வல்வை புளூஸ் கழக வெற்றிக்குத் தனது விளையாட்டை வழங்கியவர்.

## 98

### வல்வை புளூஸ் உதைபந்தாட்ட வீரர் நவம்

## த. நவகுலராசா

வல்வை புளூஸ் உதைபந்தாட்ட அணியில் இடம்பெற்றிருந்த நவம் வலது முனை முன்னணி வீரராக விளையாடியவர். உதைபந்தாட்ட மைதானத்தின் அனைத்து முனைகளிலும் விளையாடக் கூடியவர் நவம். வடமராச்சிப் பகுதியில் நடைபெற்ற உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் இவரின் சிறப்பான ஆட்டம் கவனிக்கத்தக்கது.

## 99
### வல்வை புளூஸ் உதைப்பந்தாட்ட வீரர்
## தி. சிவஞானம்



வல்வை புளூஸ் உதைபந்தாட்ட அணியில் சிவஞானம் மறக்க முடியாத வீரர் ஆவார். வல்வை புளூஸ் அணிக்காக நிறைய ஆட்டங்களில் விளையாடி இருந்தார். எவ்வளவு வேகமாக வரும் பந்தையும் தனது ஓட்டத்துடனே வேகத்தை குறைக்காமல் அதிவேகமாக அடிக்கக் கூடியவர். வல்வை எல்லைகளை கடந்து வடமராச்சி, தெல்லிப்பளை, காங்கேசன்துறை பகுதிகளில் எமது உதைப்பந்தாட்ட அணிக்காக விளையாடினார்.

## 100
### வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட வீரர்
## K.பிறேம்குமார் (K.P)



யாழ்ப்பாணத்தின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் பிரபலமான ஒன்றான ஈழநாடு சுற்றுப் போட்டியில் இளைய வீரராக களம் இறங்கியவர் K.பிறேம்குமார். (K.P)

வடமராச்சிப் பகுதியில் நடந்த சுற்றுப் போட்டிகளிலும், தெல்லிப்பளை, காங்கேசன்துறைப் பகுதியில் நடந்த போட்டிகளிலும் இடது முனை (Lift Extrem) முன்னணி வீரராக இவர் சிறப்பாக விளையாடியவர்.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
Maaruthy Cleaning Services Inc
Canada
416-804-9070, Nanthan





## 101
### வல்வை புளூஸ் உதைபந்தாட்ட வீரர்
## ச.ராஜிகுமார்

வல்வை புளூஸ் உதைப்பந்தாட்ட அணியில் வலது முனை முன்ணணி வீரராக விளையாடியவர் ராஜ்குமார். வடமராச்சி பகுதியில் நடந்த சுற்றுப் போட்டிகளில் இவரும் பங்கு கொண்டிருந்தார்.

## 102
### வல்வை புளூஸ் கழக வீரர் ரவி
## T. இரவீந்திரன்



## 102
### வல்வை புளூஸ் கழக வீரர் பரம்
## த. பரமானந்தராஜா

சிறந்த பின்னணி வீரரான (Defend) இவர் தனது சிறந்த ஆட்டத்தை ஒவ்வொரு போட்டியிலும் வெளிக்காட்டியவர். வதிரி மைதானத்தில் கோல்காப்பு வீரரையும் விட்டு, கோல் கோடுகளை நோக்கிச் சென்றபோது பரம் மிகவேகமாக ஓடிச் சென்று கோலை காப்பாற்றியவர். வடமராச்சிப் பகுதிகளில் நடந்த சுற்றுப் போட்டிகளில் எல்லாம் இவரும் பங்கு கொண்டிருந்தார்.

---

வல்வை சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் ஒவ்வொரு வாரமும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நடந்து கொண்டிருந்த காலம் அது. ஒருநாள் சுற்றுப் போட்டிகள் எப்போதும் அந்த மைதானத்தில் களைகட்டும்- மைதானத்துக்கு மிக அருகில் வசித்த ரவிக்கு உதைபந்தாட்டம் ரத்தத்தில் ஊறியதில் அதிசயம் ஏதும் இல்லை. வலது முன்னணி வீரரான இவர் வடமராச்சிப் பகுதியில் நடந்த போட்டிகளில் பங்கு கொண்டிருந்தார். புலம்பெயர்ந்து வந்த பின்னரும் சுவிஸ் நாட்டின் தமிழர் கழகம் ஒன்றில் விளையாடினார்.

# 104
## மைதானத்தில் தொடரும் மகேந்திரியின் பயணம்
## இ.மகேந்திரன்



வல்லை புளூஸ் என்றும் பெருமை கொள்ளும் வீரர்களில் இ.மகேந்திரனும் ஒருவராவார். இளமையிலேயே விளையாட்டுத்துறையில் மிகுந்த ஈடுபாடும் ஆர்வமும் கொண்டிருந்த மகேந்திரன் நீண்ட தூர ஓட்டம், சாதனை நிலை நாட்டுதல், என்பனவற்றில் தன்னை முழுதாக ஈடுபடுத்தி இருந்தார். எந்த நேரமும் மைதான நிகழ்வுகளிலும் பயிற்சிகளிலும் ஈடுபட்டு இருந்த இவர் வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் 80களின் ஆரம்பத்தில் இணைந்து கொண்டார். மிகச் சிறந்த உதைபந்தாட்ட நுட்பமும், வேகமும் கொண்ட இவர் முன்னணி வீரராக (Rights Extreme) விளையாடினார். 80ல் இருந்து 84 வரை வடமராச்சி, தெல்லிப்பளை, காங்கேசன்துறை பகுதிகளில் நடந்த போட்டிகளில் சிறப்பாக விளையாடியவர்.

அதன் பின்னர் திருச்சியில் வல்வை புளூஸ் கழகத்தை உருவாக்கியவர்களில் இவரும் ஒருவராவர். திருச்சியில் நடந்த பல சுற்றுப் போட்டிகளில் வல்வை புளூஸ் கழகத்துக்காக விளையாடி இருந்தார்.

டென்மார்க்குக்கு இடம்பெயர்ந்த பின்னர் டென்மார்க் தமிழர் உதைபந்தாட்டத்தில் ஆரம்பத்தில் தொடங்கி இன்று வரை விளையாடி வருகின்றார். அத்துடன் 25 வருடங்களாக டெனிஸ் உதைப்பந்தாட்ட லீக்கில் விளையாடி வருகிறார். அது வல்வை புளூஸ் கழகம் பெருமை கொள்ளும் சாதனைகளில் ஒன்று. அத்துடன் இங்கிலாந்து வல்வை புளூஸ் கழகத்தின் சார்பிலும் 1991ம் ஆண்டிலிருந்து உதைபந்தாட்டத்தில் பங்கு கொண்டு சிறப்பாக விளையாடியவர். அதிலிருந்து இன்றுவரை இங்கிலாந்து புளூஸ் உதைப்பந்தாட்ட அணியில் விளையாடி வருகிறார். 40 வயதுக்கு மேற்பட்டவருக்கான போட்டிகளில் (Football) பங்கு கொள்வதற்காக இன்று கூட விமானத்தில் வந்து விளையாடித் திரும்பும் இவரின் ஆர்வம் தலைவணங்கத்தக்கது.

உதைப்பந்தாட்டத்தில் மட்டுமல்லாமல் வடமராச்சி, தெல்லிப்பளை, காங்கேசன்துறைப் பகுதிகளில் நடந்த நீண்டதூரம் (மரதன்) ஓடும் போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றிகளைக் குவித்தவர். அத்துடன் பருத்தித்துறை யுனைரெட் நடாத்திய விளையாட்டுப் போட்டியில் மூன்று கால் ஓட்டத்தில் இவரும் ஸ்ரீசர்வானந்தாவும் தொடர்ந்து மூன்றுமுறை முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். நீண்ட தூர ஓட்டம், நீண்ட தூர சைக்கிள் ஓட்டம் என்பனவற்றிலும் மகேந்திரன் சிறந்து விளங்கினார்.

அதுமட்டும் அல்லாமல் ஆழிக்குமரனின் அடிச்சுவட்டில் உலக சாதனை நிலைநாட்டும் முயற்சியிலும் மகேந்திரன் ஈடுபட்டவர். (Skipping) கயிறு அடித்தலில் உலகசாதனை முறியடிப்பதற்கான முயற்சியில் 3 மணி நேரத்தில் 15000 தடவை கயிறு அடித்து முயற்சி செய்தார்.

அத்துடன் 1991ம் ஆண்டிலிருந்து டென்மார்க்கில் ஆழிக்குமரன் ஆனந்தன் நினைவுக் கிண்ணத்துக்கான ஐரோப்பா தழுவிய உதைப்பந்தாட்டப் போட்டிகளை நடாத்தி வருவதும் இவரின் விளையாட்டு ஆர்வத்துக்கு ஓர் உதாரணம்.



வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகம்

# 105
## வல்வை புளூஸ் கழக வீரர்
## க.சேகர்



வல்வை புளூஸ் கழகத்தின் ஆரம்பகால வீரரும், அகில இலங்கைக் கரப்பந்தாட்ட அணியின் தலைவருமான கதிர்காமலிங்கம் அவர்களின் (மட்டையண்ணா) மகனான சேகர் உதைபந்தாட்டத்தில் சிறந்த ஒரு வீரராவர். உதைபந்தாட்டத்தில் (பின்னணி (Defend) வீரரான இவர் வல்வை புளூஸ் உதைபந்தாட்ட அணியில் மட்டுமல்லாமல் உதைபந்தாட்டத்தில் சிறந்த சென்.கென்றீஸ் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியிலும் இடம் பெற்றிருந்தார். பந்தை தலையால் திருப்பி அடித்து மறிப்பதிலும், திருப்பி அடிப்பதிலும் சிறந்தவராக விளங்கியவர்- இங்கிலாந்து வல்வை புளூஸ் அணியிலும் கனடாவின் ரொறோன்டோ புளூஸ் அணியிலும் இடம்பெற்றிருந்தார். மிகவும் தூரத்துக்குப் பந்தை திருப்பி அடிப்பதிலும் தலையால் இடிப்பதிலும் சிறந்தவர்- அத்துடன் பூப்பந்து விளையாடுவதிலும் சிறந்தவராக விளங்கினார்.

# 106
## வல்வை புளூஸ் கழக வீரர்
## ச.ஸ்ரீசர்வானந்தா

மிக வேகமாக ஓடக் கூடிய ஸ்ரீசர்வானந்தா வல்வை புளூஸ் கழக இடைநிலை வீரராக விளையாடியவர். எதிர் அணியினர் கொண்டு வரும் பந்துகளை மறித்து திருப்பி அனுப்பிவிடும் திறமை கொண்டவர் ஸ்ரீசர்வானந்தா. வடமராச்சி, தெல்லிப்பளை, காங்கேசன்துறை பகுதிகளில் நடந்த போட்டிகளில் இவர் சிறப்பாக விளையாடினார்.

பொன் விழா காணும் வல்லை
புளூஸ் விளையாட்டுக் கழகத்தை
வாழ்த்துகின்றோம்

Makkal Kadai
274
Mithcham road,
Tooting, SW17
9NT, UK
0208 682 3138,
Vasi

## 107

வல்வை புளூஸ் வீரர்

# மு.பிரேம்நசீர்

(நசீர்)



வல்லை புளூஸ் உதைபந்தாட்ட அணியில் ஒரு இடைப்பட்ட காலமான 1980-1985ல் பின்னணி வீரராக இடம்பெற்று இருந்தார் பிரேம் நசீர். வடமராச்சி, தெல்லிப்பளை, காங்கேசன்துறைப் பகுதிகளில் இடம்பெற்ற சுற்றுப் போட்டிகளில் இவர் விளையாடி இருந்தவர். இவரும் மத்திய நிலையிலும், முன்னணி நிலையிலும் வல்லை புளூஸ் உதைபந்தாட்ட அணியில் விளையாடியவர். Weight & Height Football Tournament களில் இவர் விளையாடினார்.

## 108

வல்வை புளூஸ் கழக வீரர்

# வி. ரவிதாஸ்

(அட்டன்)



வல்லை புளூஸ் கழகத்தின் திறமையான பின்னணி வீரர்களின் வரிசையில் அட்டனும் ஒருவராவார். வலுவான ஓட்டமும், பலமான உதையும் கொண்ட இவரைத் தாண்டிப் பந்தைக் கொண்டு போவது எதிர் அணிக்கு சிரமமானதாகும். மிகச் சிறந்த அணித் தோழமை (team Sprit) இவரின் சிறப்பு ஆகும். வடமராச்சி, தெல்லிப்பளை, காங்கேசன்துறை, பாசையூர் பகுதிகளில் நடந்த சுற்றுப் போட்டிகளில் விளையாடியவர். புலம்பெயர்ந்து வந்த பின்னரும் Germany Bielfied தமிழ் அணிக்கு விளையாடியவர்.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்

Marine Wealth Inc

Canada

647-889-8426, Rajan





## 109

வல்வை புளூஸ் வீரர்

# கு.மகேந்திரன்

(இந்தி)



வல்லை புளூஸ் உதைபந்தாட்ட அணியின் முன்னணி வீரரான இவர் மகாஜனாக் கல்லூரி அணியிலும் இடம்பெற்று இருந்தவர். ஆரம்பத்தில் உயரம் x நிறை சுற்றுப் போட்டிகளில் பங்கு கொண்ட இவர் நீண்ட காலத்துக்கு புளூஸ் அணியிலும் விளையாடியவர். அதன் பின்னர் அவுஸ்திரேலியாவில் தமிழர் உதைபந்தாட்ட அணி ஒன்றிலும் விளையாடியவர்.

## 110

வல்வை புளூஸ் விளையாட்டு வீரர்

# மு.பிரேம் நவாஸ்

(நவாஸ்)



மிக வேகமாக ஓடக் கூடிய நவாஸ் உதைபந்தாட்ட அணியின் முன்னணி ஆட்ட வீரராக விளையாடி இருந்தார். இவர் 81, 82ம் ஆண்டுகளில் வல்லை புளூஸ் உதைபந்தாட்ட அணியில் இடம்பெற்றிருந்தார். டையமன்ட்ஸ் மைதானம், நெல்லியடி மைதானம் என்பனவற்றில் எமது உதைப்பந்தாட்ட அணியில் விளையாடினார்.

## 111

வல்வை புளூஸ் விளையாட்டு வீரர்

# அரங்கண்ணன்



வல்லை புளூஸ் கழக கோல்காப்பு வீரர்களின் வரிசையில் பிந்திய காலங்களில் அரங்கண்ணல் சிறந்த கோல்காப்பு வீரராக விளங்கியவர். ஹாட்லிக் கல்லூரியின் உதைப்பந்தாட்ட அணியின் மத்திய அணி வீரராக விளையாடியவர். வடமராச்சி, கலட்டி, யாழ்ப்பாணப் பகுதிகளில் நடந்த போட்டிகளில் சிறப்பாக விளையாடினார். பருத்தித்துறை வட்டார அணிக்காகவும் விளையாடியவர்.

## 112

### வல்வை புளூஸ் வீரர் வசந்தன்

# ச.வசந்தகுமார்



வல்வை புளூஸ் கழக உதைப்பந்தாட்ட அணியில் 70களின் நடுப்பகுதியில் இருந்து விளையாடிய இவர் மகாஜனாக் கல்லூரி உதைப்பந்தாட்ட அணியில் நீண்டகாலம் பங்கு கொண்டிருந்தார். உதைப்பந்தாட்ட அணியின் மத்திய நிலையில் இவர் விளையாடுவதில் வல்லவர். இவர் மகாஜனாவில் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது (யாழ் மாவட்ட ஹொக்கி அணிக்கு (16 வயது) தெரிவாகியது இவரின் விளையாட்டு பாதையின் மைல்கல் ஆகும்- வல்வை புளூஸ் விளையாடிய தெல்லிப்பளை, காங்கேசன்துறை, வசாவிளான் சுற்றுப் போட்டிகளில் விளையாடினார்.

வல்வை புளூஸ் கழக துடுப்பெடுத்தாட்ட அணியில் இடம்பெற்று இருந்தார். அத்துடன் யாழ் மாவட்ட துடுப்பெடுத்தாட்ட அணியில் இரண்டு வருடங்கள் (2003,2004) விளையாடினார்.

இன்றும் இங்கிலாந்து வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணி ஒன்றுக்கு (சிறுவர்கள்) இவர் பயிற்சியாளராகவும் இருக்கிறார்.

## 113

### வல்வை புளூஸ் உதைபந்தாட்ட வீரர்

# வே.ரகுபதி



எதிர் அணியினரைப் பந்துடன் உள்நுழையவிடாமல் தடுத்து பந்தை பறித்து மீண்டும் எமது அணி வீரர்களுக்கே திருப்பிக் கொடுக்கும் வேகமும் திறமையும் மிகுந்த பின்னணி தடுப்பு வீரர்களின் வரிசையில் ரகுபதியும் ஒருவராவார். வடமராட்சிப் பகுதியில் நடந்த சுற்றுப் போட்டிகளிலும் தெல்லிப்பளை, காங்கேசன்துறைப் பகுதி சுற்றுப் போட்டிகளிலும் ரகுபதி வல்வை புளூஸ் கழகத்துக்காக விளையாடினார். புலம்பெயர்ந்த பின்னரும் கனடாவிலும் உதைபந்தாட்டத்திலும் ஈடுபாடு கொண்டவராக ரகுபதி இருந்திருக்கிறார்.

**1980 களில் தன் சிறந்த விளையாட்டின் மூலம் உலகில் அதிக உதைபந்தாட்ட ரசிகர்களை கொண்டிருந்த மரடோனாவின் உயரம் 5 அடி 5 அங்குலம்.**

## 114

### வல்வை புளூஸ் கழக வீரர்

# சோ. கிருஷ்ணகுமார்

(கிட்டிணி)



வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் முன்னணி நிலையில் வலது முனை வீரராக விளையாடியவர். வடமராச்சி பகுதியில் நடந்த சுற்றுப் போட்டிகளிலும், தெல்லிப்பளை, காங்கேசன்துறை பகுதியில் நடந்த சுற்றுப் போட்டிகளிலும் சிறப்பாக விளையாடியவர். அத்துடன் 90-91ம் ஆண்டுப் பகுதியில் வல்லை புளூஸ் கழகத்தின் பயிற்சியாளராகவும் இவர் வல்வையில் பங்கு கொண்டவர்.

**Pele மூன்று உலகக்கிண்ணங்களை வென்றஒரே வீரர் (1956,1962,1970)**

## 115

### வல்வை புளூஸ் வீரர்

# ஜெயக்குமார்.கு



இன்றுவரை உதைபந்தாட்டத்தின் ஏதாவது ஒரு செயற்பாட்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டே இருப்பவர் ஜெயக்குமார். வல்வை புளூஸ் கழக உதைப்பந்தாட்ட அணியில் மத்திய முன்னணி வீரராக விளையாடிய இவர் மிகச் சிறந்த ஆட்டக்காரர் ஆவார். வடமராச்சி, தெல்லிப்பளை, காங்கேசன்துறை பகுதிகளில் நடந்த சுற்றுப் போட்டிகளில் இவர் விளையாடியவர்-

இப்போதும் இங்கிலாந்து புளூஸ் கழகத்தின் சிறுவர்க்கான உதைப்பந்தாட்ட பயிற்சியாளராக பணியாற்றுவது சிறப்பானது. ஹாட்லிக் கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவுக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வல்வை புளூஸ் சாம்பியனாக வெற்றியீட்டியபோது ஜெயக்குமார் விளையாடினார்.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
M.K.M Mini Market
London, UK
0208 540 6767, Murali

## 116
### வல்வை புளூஸ் கழக வீரர்
## சி. சுதர்சன்
(குயிலி)



வலுவான அடி வழங்க கூடிய சுதர்சன் வல்வை புளூஸ் கழகத்தின் உதைபந்தாட்ட அணியின் இடைநிலை வீரராக விளையாடினார். வடமராச்சி பகுதியில் நடந்த சுற்றுப் போட்டிகளிலும், வன்னிப் பகுதிகளில் நடக்கும் போட்டிகளிலும் விளையாடினார். அத்துடன் தமிழ்நாடு மண்டபம் பகுதியிலும், திருச்சியிலும் வல்வை புளூஸ் சார்பாக விளையாடியவர்.

புலம் பெயர்ந்து வந்த பின்னரும் இங்கிலாந்தில் வல்வை புளூஸ் உதைபந்தாட்ட அணியில் இடம்பெற்றிருந்தார். அதன் பின்னர் இன்றுவரை சிறுவர்களுக்கான பயிற்சியாளராகவும் வல்வை புளூஸில் கடமை ஆற்றுகிறார்.

## 117
### வல்வை புளூஸ் கழக விளையாட்டு வீரர்- மாறன்
## சி.செல்வதயாளன்



வல்வை புளூஸ் கழகத்தின் அடுத்த தலைமுறை உதைபந்தாட்ட வீரர்களில் மாறன் குறிப்பிடத்தக்கவர். முன்னணி வலது முனை வீரராக விளையாடக் கூடிய இவர் வடமராச்சிப் பகுதிகளில் நடைபெற்ற அனைத்துப் போட்டிகளிலும் பங்கு கொண்டிருந்தார்.

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற சுற்றுப் போட்டிக்கு 89ம் ஆண்டு வடமராச்சி உதைபந்தாட்ட தெரிவு அணி சார்பில் விளையாடினார். கிளிநொச்சி மாவட்டத்துடன் நடைபெற்ற போட்டியில் வடமராச்சி சார்பில் விளையாடினார். அத்துடன் ஹாட்லிக் கல்லூரியின் 150ம் ஆண்டு நிறைவுக்கான சுற்றுப் போட்டியில் வல்வை புளூஸ் கழகத்துக்காக விளையாடினார்.


பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்

**New Tamilini Jewellers**

Southall, UK

0208 574 6766, நேசன்




வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

## 118
### வல்வை புளூஸ் கழக வீரர்
## சிவகுமாரன்



வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம் என்பனவற்றில் சிறப்பாக விளையாடியவர் சிவகுமாரன். உதைபந்தாட்டத்தில் பின்னணி தடுப்பு வீரராக விளையாடியவர் இவர். வடமராச்சிப் பகுதிகளில் நடைபெற்ற அனைத்து சுற்றுப் போட்டிகளிலும் சிவகுமாரன் விளையாடினார்- வல்வை புளூஸ் கழகத்தின் துடுப்பெடுத்தாட்ட அணியிலும் இவர் சிறப்பாக விளையாடினார்.

## 120
### வல்வை புளூஸ் கழக வீரர்
## சிவானந்தம்



## 119
### வல்வை புளூஸ் கழக வீரர்
## காந்தன்



வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்டத்தின் இன்னுமொரு புதிய தலைமுறை வீரர் காந்தன்- மிகச் சிறந்த பின்னணி தடுப்பு வீரரான இவர் வேகமான ஓட்டமும், வேகமாக வரும் பந்துகளையும் தலையால் அடித்து திருப்பி அனுப்பும் திறமைகள் ஒருங்கு சேர அமைந்தவர்.

வடமராச்சி பகுதிகளில் நடைபெற்ற போட்டிகளில் இவர் விளையாடி இருந்தார். அத்துடன் புத்தூர் எவரெஸ்ட், புத்தூர் வீனஸ் மைதானங்களிலும் இவர் விளையாடினார்.

---

வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் விளையாடிய சிவானந்தம் சிறந்த வீரர் ஆவார்- வடமராச்சி பகுதியில் நடந்த சுற்றுப் போட்டிகளில் விளையாடியவர்- உதைபந்தாட்ட அணியின் எல்லா நிலைகளிலும் விளையாடியாவர் சிவானந்தம்.

## 121
### வல்வை புளூஸ் கழகத்தின் பெருமைகளில் ஒன்று
(சிதம்பராக் கல்லூரி மைதான முரளி)
## T. முரளி



சிதம்பராக் கல்லூரி மைதானத்தின் அருகில் வசித்ததால் இவரின் சிறுவயதில் இருந்தே உதைப்பந்தாட்டமும் அதன் நுட்பங்களும் மனதில் பதிந்து இருந்தன. உதைப்பந்தாட்டத்தில் முரளி மிகுந்த வேகமும் பந்தை கட்டுப்படுத்தி கால்களில் வைத்திருக்கும் ஆற்றல் நிறைந்தவருமாவார். வல்வை புளூஸின் ஐம்பது வருட நீண்ட பாதையில் முரளியின் வருகையும், விளையாட்டும் புதிய ஒரு தலைமுறையின் அடையாளம் ஆகும். வடமராச்சி பகுதிகளில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளிலும் தெல்லிப்பளை, காங்கேசன்துறை பகுதிகளில் நடந்த போட்டிகளிலும் சிறப்பான விளையாட்டை வெளிப்படுத்தி இருந்தார். அத்துடன் கனடாவில் ரொரோன்டோ புளூஸ் கழகத்தை ஆரம்பித்தவர்களில் முரளியும் ஒருவர் ஆவார். கனடா ரொரோன்டோ புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் ஆரம்ப வீரராகத் தொடங்கி நீண்ட காலம் அந்த அணியின் வெற்றிகளுக்கு காரணமானவராகவும் திகழ்ந்தவர். எமது மண்ணை விட்டு வந்த பின்னரும் வல்வை புளூஸ் கழக வேர்களை புலம் பெயர்ந்த மண்ணில் வளர்க்கவும் பாடுபட்ட முரளியை நினைத்து வல்வை புளூஸ் என்றும் பெருமை கொள்ளும்.

## 122
### வல்வை புளூஸ் பெருமை கொள்ளும் செல்ற்ரன் 'ரவி"
## சு. ஒலிவர் நிக்கலஸ் செல்ற்ரன்



ஐம்பது ஆண்டு வல்வை புளூஸ் வரலாற்றில் எமது கழகம் மிகவும் பெருமை கொள்ளும் வீரர்களில் செல்ற்ரன் ' ரவி'யும் ஒருவராவார். மிக வேகமாக ஓடும் திறனும் உதைபந்தாட்டத்தில் ஆழமான ஆர்வமும் கொண்டிருந்த செல்ற்ரன் 'ரவி' மிகச் சிறந்த முன்னணி வீரர் ஆவார். இவர் படித்துக் கொண்டிருந்த போதே சென். கென்றீஸ் கல்லூரி உதைபந்தாட்ட அணியின் (1980) அணித்தலைவராக இருந்தவர். சென்.கென்றீஸ் கல்லூரியின் பதினான்கு வயதுக்குட்பட்ட அணியில் இவர் விளையாடிய போது அகில இலங்கை சாம்பியன்களாக வந்தார்கள். அந்தப் போட்டிகளில் செல்ற்ரன் 'ரவி'யின் விளையாட்டு அந்த நேரங்களில் சிறப்பாகப் பேசப்பட்டது.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியில் 1987ம் ஆண்டிலிருந்து 1990ம் ஆண்டு வரை இடம்பெற்றிருந்தார். 1988ம் ஆண்டு பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணித் தலைவராகவும் இருந்துள்ளார். அத்துடன் தமிழ்நாடு உதைபந்தாட்ட அணியிலும் 1988ம் ஆண்டு இடம்பெற்றிருந்தார். அதன் அணியின் பிரதி தலைவராகவும் இடம்பெற்று இருந்தார்.





அதன் பின் புலம் பெயர்ந்து இங்கிலாந்து வந்த பின்னரும் வல்வை புளூஸ் உதைபந்தாட்ட அணியில் விளையாடினார். மிகச் சிறப்பான ஆட்டத்தால் இவர் விளையாடிய போது மூன்று முறை TRO சுற்றுப் போட்டியில் வல்வை புளூஸ் கழகம் சாம்பியனாக வந்தது.

பல சுற்றுப் போட்டிகளல் இவர் விளையாடிய போது வல்வை புளூஸ் வெற்றியீட்டியது, TSSA சுற்றுப் போட்டியிலும் வெற்றியீட்டியது. செல்ற்ரன் ரவி இன்றும் தொடர்ந்து உதைபந்தாட்ட மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறார். வல்வை புளூஸ் செல்ற்ரன் ரவி எங்கள் வீரர் என்று பெருமை கொள்ளும்.

## 123
### வல்வை புளூஸ் வீரர்
## ரா.சுதாகர்



வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் பின்கள (Defender) வீரரான இவர் வடமராச்சி பகுதியில் நடந்த போட்டிகளில் வல்வை புளூஸ் அணிக்காக விளையாடினார்.

## 124
### வல்வை புளூஸ் கழக வீரர்
## ச. ஸ்ரீபாலன்



வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் பின்கள (Defence) வீரரான ஸ்ரீபாலன் வடமராச்சி பகுதியில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளில் பங்கு கொண்டிருந்தார். அத்துடன் இவர் புலம்பெயர்ந்து கனடா வந்த பின்னரும் கனடா, ரொறன்ரோ புளூஸ் கழக நிர்வாகங்களிலும் பங்கு கொண்டிருந்தார்.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
Niru Convenience Store
Tooting, London
0208 672 3200, ஈ.கிருஷ்ணலிங்கம்

### 125
### வல்வை புளூஸ் கழக வீரர்
## தி.சித்திரவேல்



வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் பின்னணி தடுப்பு வீரர்களின் வரிசை அற்புதமானது. 50 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்து இன்று வரை சிறந்த தடுப்பு வீரர்களின் விளையாட்டுக்களால் வெற்றிகளை குவித்து வருகின்றது. அதில் சித்திரவேலும் ஒருவராவார். மிக வேகமாக வரும் பந்தையும் மறித்து தடுத்து தமது அணி வீரர்களிடம் வழங்கும் சிறப்பு இவருடையது. வடமராச்சியில் நடந்த சுற்றுப் போட்டிகளில் விளையாடி இருந்தார்.

**செல்டன் அவர்கள் தமிழ்நாடு உதைபந்தாட்ட அணியில் விளையாடியுள்ளார். உதவி தலைவராகவும் (Vice Captian) இருந்துள்ளார்.**

### 126
### வல்வை புளூஸ் கழக வீரர்
## பொ.கலைச்செல்வன்



வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் வலது இடை நிலை முன்னணி வீரரான கலைச்செல்வனின் விளையாட்டு மிகச் சிறப்பானது. இவர் விளையாடிய காலத்தில் வடமராச்சியில் நடந்த சுற்றுப் போட்டிகள் அனைத்திலும் பங்கு கொண்டிருந்தார்.

### 127
### வல்வை புளூஸ் கழக வீரர்
## த.குகராஜா



வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் விளையாடிய குகராஜா வடமராச்சி பகுதியில் நடந்த சுற்றுப் போட்டிகளில் பங்கு கொண்டிருந்தார்.







# என் நினைவிலிருந்து...

-சிவகுரு

வல்வெட்டித்துறையின் சமகால விளையாட்டைப் பற்றி எழுதுவதென்றால், தற்கால விளையாட்டுக்களாகிய கைப்பந்து (Volley Ball), உதைபந்து (Football), மட்டையடி (Cricket) போன்ற விளையாட்டுக்கள் எவ்விதம் எங்களது பகுதிக்கு வந்தன என்பதைத் தெரிந்து கொள்வது அவசியமாகும். எம்மவர்களில் வசதிபடைத்தோர், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ், சென்.ஜோன்ஸ் போன்ற கல்லூரிகளில் படித்து வந்ததும், கொழும்பில் உத்தியோகம் பார்க்கச் சென்று வந்ததும், தாங்கள் அவ்விடங்களில் விளையாடிய விளையாட்டுக்களை இங்கு வந்து விளையாடியதாலும், இவ் விளையாட்டுக்கள் எமது பாரம்பரிய விளையாட்டுக்களான கிட்டிப்புள், கிளித்தட்டு போன்றவற்றைப் பின்தள்ளி முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டன.

ஒவ்வொரு ஊரிலும் அந்த ஊரிலுள்ள பாடசாலைகளின் கல்வித்தரம், விளையாட்டுத் தரங்கள் உயர, அந்த ஊரின் சகலவற்றினதும் தரங்களும் தானாகவே உயர்வது நியதி. இதன் காரணமாக 1930களில் சிதம்பராக் கல்லூரியில் மற்றிக்குலேசன் (Matriculation) வகுப்பு ஆரம்பித்ததும் உடனடியாக நல்ல பெறுபேறுகள் கிடைத்ததனால் வடமராட்சியின் பல பகுதிகளிலிருந்தும், அச்சுவேலி, புத்தூர் போன்ற இடங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து பாடசாலைக்கு அருகாமையில் உள்ள வீடுகளில் தங்கிக் கல்வி பயின்றார்கள்.

சிதம்பராக் கல்லூரியில் முன்பிருந்தே பிரித்தானிய அரசரின் பிறந்த நாள், முடிசூட்டிய நாள் ஆகியவற்றில்தான் மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெற்று வந்தன. 1930ஆம் ஆண்டு நடுப்பகுதியில் வடமராட்சி ஆசிரியர் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, காலஞ் சென்ற திரு. M.A.தங்கராசா (Bsc) ஆசிரியர் சங்கத்தின் செயலாளராகவும், எமது கல்லூரியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியராகவும் பதவி ஏற்றுக் கடமை புரிந்தார். இச் சங்கத்தினரால் 1938, 1939 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட கனிஷ்ட, சிரேஷ்டப் பிரிவு கைப்பந்தாட்டப் போட்டிகளில் எங்கள் பாடசாலை முதலிடத்தைக் கைப்பற்றிக் கொண்டது. அத்துடன் அவ்வாண்டுகளில் நடத்தப்பட்ட மெய்வல்லுனர் போட்டிகளிலும் முதலிடம் பெற்றுக் கொண்டது. இச்சம்பவங்கள் அதுவரை காலமும் முதன்மையிடம் பெற்றுவந்த ஹாட்லி கல்லூரிக்குப் பெரிய

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
Ove Telecom
Uk
0208 414 0004, Atputhasathananthavel

சவாலாக இருந்தது. இப்போட்டிகளில் எமது பாடசாலையைச் சேர்ந்த (Accountant) சி.குமாரசாமி கனிஸ்ட பிரிவில் சகல ஓட்டப் பந்தயங்களிலும் முதலிடம் பெற்றார் என்பது எனக்கு நல்ல ஞாபகமாக இருக்கின்றது. இவர் இப்பொழுது அவுஸ்திரேலியா சிட்னி நகரில் வசித்து வருகின்றார். அப்பொழுது நடைபெற்ற கைப்பந்தாட்ட கனிஸ்ட பிரிவுக் குழுவிற்கு திரு.பொ. பாலசுப்பிரமணியமும் (பாலா மாஸ்டர்), சிரேஸ்ட பிரிவுக் குழுவிற்கு திரு. மா. இராசரத்தினம் அவர்களும் தலைவர்களாக இருந்தனர்.

திரு. எஸ்.ஆர். அரியரத்தினம் ஆசிரியர் அவர்கள் 1939ம் ஆண்டு மர்ரிகுலேசன் பரீட்சையில் சித்தியடைந்து 1940ம் ஆண்டு தொடக்கம் இப்பாடசாலையிலேயே ஆசிரியராகவும் விளையாட்டுப் பொறுப்பாசிரியராகவும் கடமையாற்றத் தொடங்கினார். அவரின் வருகையால் எங்கள் பாடசாலை விளையாட்டுத்துறையில் புதுப் பரிமாணங்களைப் பெற ஆரம்பித்தது. 1949ம் ஆண்டு யாழ்மாவட்டப் பாடசாலை விளையாட்டுக் கழகத்தில் எமது கல்லூரி அங்கத்துவம் பெற்று இந்த ஆண்டே உதைபந்தாட்டப் போட்டிகளிலும் பங்குபற்றினோம். அந்த உதைபந்தாட்டக் குழுவிற்கு திரு.சிவகணேஷன் தலைவராக இருந்தார். இச்சம்பவம் எங்கள் எல்லோருக்கும் ஊருக்கும் பெரு மகிழ்ச்சியாகவும் இருந்தது. முதன்முறை நாங்கள் தோற்றாலும் ஒவ்வொரு பாடசாலைக்கு எதிராகவும் ஒவ்வொரு கோல் திரு.எஸ்.சிவகணேசன் அடித்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முதல் முறையாகச் சிவப்பு பச்சை நீலம் மஞ்சள் ஆகிய இல்லங்களாக எமது மாணவர்களைப் பிரித்து சகல துறைகளிலும் இல்லங்களுக்கிடையேயான போட்டிகள் நடத்தப்பட்டன. ஒரு வீட்டில் வெவ்வேறு இல்லங்களில் இருக்கும் சகோதரர்களுக்கிடையே போட்டிகளும் சண்டைகளும் வந்ததனால் இயலுமானவரை ஒவ்வோர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒரே இல்லத்தில் வரத் தகுந்ததாய் இல்லப் பிரிவுகள் மாற்றியமைக்கப்பட்டது.

பாடசாலையில் இந்த நடவடிக்கையின் காரணமாக ஊரில் ஒரு புத்துணர்ச்சி ஏற்படத் தொடங்கியது. இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் பொழுது ஒவ்வோர் இல்லத்தைச் சேர்ந்தவர்களின் தாய்மார்கள் சகோதரிகள் அந்தந்த இல்லக் கலரிலேயெ சேலைகள் அணியத் தொடங்கினார்கள். இதே போன்று ஒவ்வொரு இல்லமும் கூடாரங்கள் அமைத்து தமது இல்லம் குறிக்கும் வர்ணங்களினால் அலங்காரம் செய்திருப்பார்கள். இந்த இல்லப் போட்டிகள் தொடங்கிய ஆண்டு அவ்வளவாக ஞாபகம் இல்லாவிடினும் பின்னர் வருடா வருடம் பாடசாலை விளையாட்டுப் போட்டியைத் தொடர்ந்து ஒவ்வொரு தெருக்கள் ஒழுங்கைகள் மூலை முடுக்குகள் எல்லாம் வர்ண வர்ணக் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டு இல்லங்களாகப் பிரித்து விளையாட்டுப் போட்டிகளை நடத்துவார்கள். இப்படி நடத்தப்படும் போட்டிகளின் காரணங்களினால் இப்பொழுதிருக்கும் விளையாட்டுக் கழகங்கள் உருவாகின என்றால் மிகையாகாது. அந்தந்த பகுதிகளின் மூலைமுடுக்குகளில் உள்ளவர்களை ஒன்றிணைத்து சங்கமிக்க வைத்து இப்பொழுதுள்ள கழகங்களை உருவாக்கப் பல ஆண்டுகள் அதாவது கிட்டத்தட்ட 15 வருடங்கள் சென்றன.

நான் பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்டு அஞ்சல் அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த வேளையில் இலங்கை








அஞ்சல் அலுவலகத்திற்காகக் கைப்பந்து, உதைபந்துப் போட்டிகளில் பங்குபற்றிக் கொண்டிருந்தேன். அவ்வேளையில் K.Y.M.A. என்னும் கைப்பந்தாட்டக் கழகத்தில் இணைந்து கொழும்பு மற்றும் அகில இலங்கைப் போட்டிகளில் பங்குபற்றிக் கொண்டிருந்தேன். அக்கழகத்தின் தலைவராக இருந்தவர் முன்னாள் கொழும்பு மேயரும் பின்னாளில் அமைச்சராக இருந்தவருமான திரு. வி.ஏ.சுகததாசா அவர்களாவர். அணித்தலைவர் திரு. தர்மலிங்கம் என்பவராகும். அந்தக் காலத்தில் 9 பேர்கள் கொண்ட கழகங்களுக்கு ஒரு சம்மேளனும் 6 பேர் கொண்ட கழகங்களுக்கு இன்னொரு சம்மேளனமுமாக இரு சம்மேளனங்கள் இருந்தன. அச்சம்மேளனத்தின் செயலாளர் அங்கத்தவர்கள் எனக்கு நன்கு தெரிந்தவர்களாய் இருந்தார்கள். நான் கொழும்பில் விளையாடிக் கொண்டிருந்த போது ஊரில் உள்ளபோது என்னுடன் திறமையாக விளையாடியவர்களையும் உள்ளடக்கி வல்வை டயனமோஸ் என்ற கழகத்தை உருவாக்கி அக்கழகத்தை யாழ்ப்பாணத்தின் வெற்றியாளர் என அறிமுகம் செய்து 1946ம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற 6 பேர் கொண்ட கைப்பந்தாட்டப் போட்டியில் எமக்குப் பங்குபெற சந்தர்ப்பம் கிடைத்தது. முதல் கால் இறுதியில் பொரளை ரேஞ்சேர்ஸ் உடன் விளையாடி அதனை வென்று அரை இறுதியாட்டத்தில் அகில இலங்கை பொலிசாருடன் போட்டியிட்டு அவர்களையும் வென்றோம். இறுதியில் வெள்ளவத்தைத் தமிழர்களுடன் விளையாடி முதன்முறையா அகில இலங்கை ரீதியில் 'சம்பியன்' பட்டம் வென்றோம். எங்கள் கழகத்தில் திரு. மா. இராசரத்தினம் தலைமையில் திரு. சா.கணேசமூர்த்தி, திரு. ச.பஞ்சலிங்கம் (மாஸ்டர்), திரு.பொ. நாகரத்தினம், திரு. எஸ். சிவக்கொழுந்து (மாஸ்டர்), சின்னச்சட்டம்பியார், திரு. எஸ்.தியாகராஜா (மாஸ்டர்) ஆகியோர் விளையாடினார்கள். வெள்ளவத்தை தமிழர் குழுவிற்கு எமது ஊரின் சார்பாக திரு. பாலசிங்கமும், கீச்சியங்காட்டு கே. சங்கரப்பிள்ளையும் விளையாடினார்கள். திரு.பாலசிங்கம், வல்வை டயனமோஸிற்கு விளையாடிய திரு. கணேசமூர்த்தி, திரு. பஞ்சலிங்கம் ஆகியோரின் மூத்த சகோதரர்ராவார். இதே போல் அடுத்த இரண்டு ஆண்டுகளில் மூன்று முறை இறுதிக்கு வந்தும் எம்மால் வெற்றி கொள்ள முடியவில்லை. காலையில் கொழும்பு வந்து மாலையில் ரயில் எடுத்து ஊர் போக வேண்டிய கட்டாயத்தில் இருந்ததனால் எம்மால் வெற்றி பெறமுடியவில்லை.

இதேபோல 1949ம் ஆண்டு திரு. எஸ். தேவராசா (போஸட் மாஸ்டர்) தலைமையில் வந்த சிதம்பராக் கல்லூரியின் கைப்பந்தாட்டக்குழு முதன்முறை அகில இலங்கைப் பட்டத்தை வென்று தினகரன் கிண்ணத்தைப் பெற்றது.

இதற்குப்பின் 1951ல் திரு.எஸ். துரைசிங்கத்தின் தலைமையில் சர்வதேச முறையிலான (செட்அப்) போட்டியில் பங்குபற்றி முதலிடம் வென்றோம். இப்போட்டியில் திருவாளர்கள் எஸ்.ஏ. துரைசிங்கம், எஸ். பி.நாதன், விஜயன், பி.சபாபதிப்பிள்ளை, கதிர்காமலிங்கம், இன்னும் சிலர் பங்குபற்றி இருந்தார்கள். நாங்கள் தெற்கே பிரபலமான சென்ற் ஜோன்ஸ் பொஸ்கோவை வென்றோம். அடுத்த ஆண்டு அவர்கள் எம்மை வென்றார்கள். வல்வெட்டித்துறை டயனமோஸ் என்று 1946ல் ஆரம்பித்து நாங்கள் இறுதிப் போட்டிக்கு வந்தபோது அப்போட்டியை நடத்தியவர்கள் இறுதிப்போட்டியில் பங்குபற்றிய கழகங்களின்



கொடிகளை மைதானத்தில் பறக்க விடுவதற்காக எமது கழகம் கொடியைக் கேட்டார்கள். நாங்கள் கடல் ஆகாய நீலங்களைக் கொண்டு நடுவில் ஒரு கப்பல் சின்னத்தையும் பதித்து எமது கழகத்தின் கொடியை அவர்களிடம் கொடுத்தோம். எம்மவரின் வாழ்வு கடலின்மேல் ஆகாயத்தின் கீழ் எப்பொழுதும் நடப்பதால் அந்த நீல நிறங்களையும் எங்கள் தொழிலின் சின்னமான கப்பல் சின்னத்தையும் பதிந்து எமது கொடியை உருவாக்கி இருந்தோம். இது அவசரமாக அமைத்துக் கொடுத்தாலும் இக்கொடி பல காலம் என்னிடமிருந்து பெற்று ஊரில் பொது வைபவங்களிற்கும் விளையாட்டுப் போட்டிக்கும் பறக்க விடுவதற்காக உபயோகிக்கப்பட்டது. வல்வை விளையாட்டுக் கழகத்தின் பெயர் வல்வை டயனமோஸ், வல்வை புளூஸ், இப்பொழுத வல்லை விளையாட்டுக் கழகம் ஆக மாறினாலும் அதன் கப்பல் சின்னத்துடன் ஆன இரு நீல நிறக் கொடி எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கின்றது.

1953ம் ஆண்டு நான் ஊருக்கு மாற்றலாகி வந்த காலத்தில் இந்தியாவிலுள்ள உத்தரப் பிரதேச ஆண்கள், மகளீர் அணிகள் யாழ்ப்பாணம் வருவதையொட்டி அகில இலங்கைக் கைப்பந்தாட்ட சம்மேளனத்தின் வேண்டுகோளுக்கிணங்கப் பருத்தித்துறை மாவட்ட விளையாட்டுக் கழகம் என்ற அமைப்பை நிறுவினோம். அதில் திரு. எஸ்.ஆர்.அரியரத்தினம் தலைவராகவும் நான் செயலாளராகவும், திரு. சின்னத்தம்பி (விக்னேஸ்வரா ஆசிரியர்) இணைச் செயலாளராகவும் மற்றும் வதிரி எஸ். அண்ணாச்சாமி ஆசிரியர் இன்னும் வேறு சிலர் (பெயர்கள் ஞாபகத்தில் இல்லை) கொண்ட சபையை அமைத்து இந்திய வீரர்களின் வருகைக்காக ஆயத்த வேலைகளில் ஈடுபட்டோம். 1950ம் ஆண்டு சென்னையிலிருந்து வந்த அணி வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு வராததன் காரணத்தால் Set-Up விளையாட்டு எமது பகுதியினருக்குப் புதிதாகவே இருந்தது. அவர்களின் வருகையால் தென்னிலங்கை அணியினர் ஓரளவுக்கு அந்த விளையாட்டின் தன்மையைப் புரிந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஆசிரியராக இருந்த கேரளாவைச் சேர்ந்த மத்தியூஸ் மாஸ்டரே எங்களுக்கு இவ்விளையாட்டுக்கு உதாரணமாய் இருந்தார்.

உத்தரப் பிரதேச அணியினரை ஊரில் திரு. டி.எஸ்.நாகரத்தினம் அவர்களின் வீட்டில் தங்கவைத்தோம். ஊரில் வசதியான அடக்கமான மைதானம் இல்லாதபடியால் உடுப்பிட்டி மகளிர் அணி பாடசாலையில் இப்போட்டிகள் நடத்தப்பட்டன. மகளிர் அணியினரும் விளையாடுவதால் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கானவர்கள் அங்கு வருகை தந்து போட்டிகளைக் கண்டு களித்தார்கள். மகளிர் அணி ஊரில் இல்லாத படியால் உத்தரபிரதேச மகளிர் அணியினரே இரு அணிகளாகப் பிரிந்து விளையாடிப் பார்வையாளர்களை மகிழ்வித்தனர். எமது ஊரைச் சேர்ந்த ஆண்கள் அணியில் சின்னத்துரை அண்ணா தலைமையில் மத்தியூஸ் மாஸ்டர், சபாபதிப்பிள்ளை, விஜயன் மற்றும் சிலரைக் கொண்ட அணி விளையாடியது. இப்போட்டிகளில் உத்தரப்பிரதேச அணி இலகுவாக எம்மவரை வென்றது. மத்தியூஸ் மாஸ்டர் செற்பண்ணிக் கொடுக்க சின்னத்துரை அண்ணா இரண்டு நல்ல அடிகளை 'நெற்றில்' வைத்து அடித்தார். அது தவிர, நம்மவர்களால் ஒன்றும் செய்ய முடியாமற் போய்விட்டது.








அவர்களுக்கு எங்கள் சாப்பாடு சரிவரவில்லை. அவர்கள் வட இந்தியச் சாப்பாடுகளுக்குப் பழக்கப்பட்டவர்கள். எங்களது பிரியாணி கறிவகைகளைத் தொட்டும் பார்க்கவில்லை. பட்டினிதான். இந்தப் போட்டியால் இந்தக் காலத்தில் சகல செலவுகளும் ரூபா 1200/- போக ரூபா 900/- மிச்சம் வந்தது. இதுதான் எம்மவருக்குக் கிடைத்த முதல் செற்றப் போட்டி அனுபவமாகும்.

அதே காலப்பகுதியில் திருமலையிலிருந்து சிவானந்தா என்ற ஒரு செற்றப் முறை விளையாட்டுக் கோஷ்டி ஒன்று ஆர். அனந்தராவையையும் அங்கத்தவராய்க் கொண்ட ஒரு கோஷ்டி வந்தது. அதில் கேரளாவைச் சேர்ந்தவர்கள் இருந்ததால் அந்த முறையில் நன்றாக விளையாடினார்கள். அவர்களுக்கு எதிராக எம்மவர்கள் உத்தரப்பிரதேச அணியுடன் விளையாடிய அனுபவத்தால் சிறப்பாக விளையாடினார்கள். அதன்பின்னர் புதிதாக அகில இலங்கை சாம்பியன் பட்டம் பெற்ற கம்பஹா கோஸ்டி வந்தபோது எம்மவர்கள் அவர்களுடன் மோதினார்கள். அவர்களை வெற்றி பெறாவிடினும் எம்மவரின் விளையாட்டு சிறப்பாக இருந்தது. இவ்வாறு இந்த 3 கழகங்களின் வருகைக்குப் பின்னர் எங்கள் ஊர் மாத்திரமல்லாது மற்றய ஊர்களிலும் செற்றப் கேம் முறையில் முன்னேற்றம் காணப்பட்டது. இதன்பின் 3 முறை வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகம் செற்றப் கைப்பந்தாட்டப் போட்டியில் பங்கு பற்றியதைக் குறிப்பிட வேண்டும். அவற்றில் எமக்கு வெற்றி கிட்டாவிடினும் பெரும் அனுபவம் கிடைத்தது. இத்துடன் கைப்பந்து விளையாட்டுப் பற்றிய தகவல்களை நிறைவு செய்து உதைபந்தாட்டம் பற்றிய செய்திகளைப் பார்ப்போம்.

1953ம் ஆண்டு உதைபந்தாட்டத்தில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. அந்தக் காலப் பகுதியில் வல்வெட்டித்துறையில் கழகங்கள் தோன்றவில்லை. தேர்ந்தெடுத்த குழுவினர் அவ்வப்போது சில அணியினருடன் போட்டியிட்டனர். இந்நிலையில் திரு.வே. முருகுப்பிள்ளை, இரத்தினவடிவேல் மாஸ்டர், மற்றும் சிலரும் நானும் சேர்ந்து பருத்தித்துறை நெல்லியடி, கரவெட்டி, வதிரி ஆகிய இடங்களில் உள்ள கழகங்களை அழைத்து ஒரு அழைப்புப் போட்டி ஒன்று நடத்தலாம் என்றும் அதில் எம்மவரின் தரத்தை தெரிந்து மேம்படுத்தலாம் என்றும் நினைத்தோம். ஒவ்வொரு கழகமும் தங்கள் கழகத்தில் நான்கு பேருக்கு அதிகம் இல்லாமல் அகில இலங்கையிலிருந்து நல்ல தரம் கொண்டவர்களை அவரவர் அணியில் சேர்த்து போட்டியில் பங்குபெற்றலாம் என முடிவெடுத்து எல்லாக் கழகங்களுக்கும் அறிவித்தோம். இந்த எண்ணத்தை அக்காலத்தில் பிரபலமாக இருந்த பொம்மேர்ஸ் வி.க.டயமன்ஸ் வி.க., பருத்தித்துறை ஒற்றுமைக் கழகம், வல்வெட்டித்துறை டயனமோஸ் கழகம் ஆகிய நான்கும் ஏற்றுக் கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். (இந்த ஒழுங்குமுறை இப்பொழுது இந்தியாவில் நடக்கும் I.P.L முறையை ஒத்தது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட எமது ஒழுங்குமுறையை இப்பொழுதுதான் இந்திய நடைமுறைப்படுத்துகின்றது என்பதில் நாம் பெருமை கொள்ளலாம்.)

இப்போட்டிகளுக்காக வல்வை டயனமோஸ்ஃற்கு விளையாட அந்தக் காலத்தில் திருமலையில் விளையாடிக் கொண்டிருந்த கிருபாகரன் என்பவரும் என்னுடன் யாழ்ப்பாணத்தில் விளையாடிக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த



மரியதாஸ்,ஜேசுதாஸ், துரைராசா போன்றோரும் சம்மதித்தனர். எம்மவர்களில் ஏ.வி.குமாரசாமி, நடராசா, அருணாசலம், எஸ்.தாயுமானவர், இரத்தினவடிவேல் மாஸ்டர் இன்னும் சிலருடன் கோல் காப்பாளராக நானும் விளையாடினோம். இதேபோன்று பொம்மேர்ஜஸ் கழகத்திற்கு பதிரி தாஸ் சகோதரரின் பல்கலைக்கழக நண்பர்கள் அகில இலங்கை உதைபந்தாட்டத் தலைவர் பீட்டர் ரனசிங்காவும் வேறு சிலரும் விளையாடி எமது போட்டிக்கு பெருமை சேர்த்தார்கள். அவர்களின் உள்ளூர் விளையாட்டுக் கழக அங்கத்தவர்கள் ஜோதி ரவி மாஸ்டர், வேதா பர்னம் போன்றவர்களும் விளையாடினார்கள். இதேபோல் பருத்தித்துறைக்கும் வேறு சிலர் விளையாடினார்கள். டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இரத்தினசிங்கம் ஆறுமுகம் போன்றவர்களுடன் பிற இடங்களிலிருந்து வரவழைக்கப்பட்டவர்களும் விளையாடினார்கள். இப்போட்டிகள் நெற்கொழு மைதானத்தில் நடைபெற்றபோது வடமராட்சியிலிருந்து பல்லாயிரக்கணக்கானோர் நடையில் வருகை தந்து தத்தமது கழகங்களுக்கு உற்சாகமும் பாராட்டும் தெரிவித்தார்கள்.

இந்தப் போட்டியில் பொம்மேர்ஸ் விளையாட்டுக்கழகமும் வல்வை டயனமோஸ் விளையாட்டுக் கழகமும் இறுதிப் போட்டியில் விளையாடின. பெரும் பரபரப்பாக நடைபெற்ற இவ்விறுதிப் போட்டியில் வல்வை டயனமோஸ் வெற்றிக்கனியைப் பறித்துக் கொண்டது. இப்பொழுது நடக்கும் I.P.L. போட்டிகளில் எப்படி உள்ளூர் இளம் வீரர்கள் திறமையாக விளையாடி அந்தக் கழகங்களுக்கு வெற்றி பெற்றுக் கொடுத்தார்களோ அதேபோன்று நாம் நடத்திய போட்டியில் பங்கு கொண்ட சகல கழகங்களிலும் விளையாடிய உள்ளூர்க்காரர்கள் வெளியிடங்களிலிருந்து வந்தவர்களுக்கு சளைக்காமல் விளையாடி தத்தமது கழகங்களுக்குப் பெருமை சேர்த்தனர். இந்தமுறை நாம் ஏற்பாடு செய்ததும் இதே நோக்கத்திற்காகத்தான்.

இப்பெரிய போட்டிக்குப் பின்னர் இதேபோன்ற போட்டிகள் உள்ளூர் ஆட்களை மாத்திரம் கொண்டு அடிக்கடி நடத்தப்பட்டு பெரும் வரவேற்பையும் தரத்தையும் தேடித்தந்தது. இத்துடன் எனது நான்கு வருட காலம் முடிவடைந்து நான் மாற்றலாகி அம்பாந்தோட்டைக்குச் சென்றேன். அதன்பின்னர் நான் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்று ஊருக்கு வந்து கழகங்கள் ஒன்றிணைந்து உதைபந்தாட்ட மேம்பாட்டிற்கு ஆற்றிய பங்கைப் பார்க்கலாம்.

அந்தக் காலத்தில் அரியம் மாஸ்ரர் பட்டப்படிப்பிற்காக, இந்தியா சென்றபோது பருத்தித்துறையைச் சேர்ந்த ‘புலிக்குட்டி மாஸ்ரர்’ என அழைக்கப்படும் திரு. நடராசா மாஸ்ரர் விளையாட்டுப் பொறுப்பை ஏற்றார். அவர் ஹாட்லிக் கல்லூரியில் அந்தக் காலத்தில் பயிற்சி பெற்று விளையாடியவராவர். இவரின் வருகையால் சிதம்பராவின் உதைப்பந்தாட்டத் தரம் பெரிதாக உயர்ந்து விட்டது. அவரின் காலத்தில் தேவராசா போஸ்ற் மாஸ்ரர், அனந்தராசா, கார்த்திகேயன், டொக்டர் மயிலேறும் பெருமாள், கம்பர்மலை விஜயன் இன்னும் பலர் பெரிய விளையாட்டு வீரகளானார்கள். யாழ் மாவட்டப் பாடசாலைகளிற்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் ஒரு பகுதிக்கு இரு ஆண்டுகள் முதலிடத்தைப் பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் காலப்பகுதியில்தான் ஓரளவிற்கு உதைபந்தாட்ட முறையைப் பயின்றார்கள் என்பது குறிப்பிட வேண்டியதாகும்.






வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

திரு. நடராசா மாஸ்ரர் இளைப் பாறிய போதுதான் முறையாக இந்தியாவில் P.T.படிப்பை முடித்த எங்களூர் K.தியாகராசா மாஸ்ரர் விளையாட்டுப் பொறுப்பை ஏற்று ஓய்வுபெறும்வரை அதனைக் கவனித்து வந்தார். அதன் பின்னர் நடந்தவை உங்கள் எல்லோருக்கும் தெரிந்தவையாகும்.

உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம் தவிர, எம்மவர்கள் பாடசாலையளவில் மெய்வல்லுனர் போட்டிகளில் யாழ் மாவட்ட மட்டத்திலும் அகில இலங்கை மட்டத்திலும் ஈட்டிச் சாதனைகளைத் தருவது நல்லதென எண்ணுகின்றேன். அந்தவகையில் S.A.இரத்தினசிங்கம் போஸ்ற் மாஸ்ரர் 100 யார் ஓட்டப்பந்தயத்தில் யாழ் மாவட்டத்தில் முதலிடமும் அகில இலங்கை மட்டத்தில் ஒரு இடமும் பெற்றதுடன் அடுத்த வருடம் அவரது தம்பி S.A.துரைசிங்கம் இதேபோன்று வெற்றி பெற்றதையும் குறிப்பிட வேண்டும். சட்டத்தரணி சோ.சிவனருட்சுந்தரம் (காண்டீபன்) யாழ் மாவட்ட மட்டத்திலும், அகில இலங்கை மட்டத்திலும் உயரப் பாய்தலில் சாதனை படைத்திருக்கின்றார். அதைப் திரு. விஜயராஜ், யாழ் மாவட்ட மட்டத்திலும், அகில இலங்கை மட்டத்திலும் இடம்பிடித்திருக்கின்றார். இதேபோல் க.தேவசிகாமணி (கட்டியண்ணா) குண்டெறிதல், நீளம்பாய்தல் ஆகியவற்றில் யாழ் மாவட்ட மட்டத்தில் வெற்றிகளைப் பெற்றுள்ளார். இவரைப் போல் ஊரிக்காடு இ.துரைசிங்கமும் யாழ்மாவட்ட அளவில்வெற்றிகளைப் பெற்றுள்ளார்.

திரு.க.தேவசிகாமணி (கட்டியண்ணா) அவர்கள் வல்வை புளூசுக்கும், பருத்தித்துறை மாவட்ட கோஷ்டிக்கும், யாழ்மாவட்டக் கோஷ்டிக்கும் தெரிவு செய்யப்பட்டு விளையாடி ஊருக்கும் கழகங்களுக்கும் பெருமை தேடித் தந்தவர். அவர் வல்வை வி.க.இற்கு விளையாடி இளைஞர்களை ஊக்குவித்து, அவர்களை முதன்மைப்படுத்தி இந்தியா செல்லும் வரைக்கும் பல வருடங்கள் விளையாடியது எங்கள் வல்வை விளையாட்டுக் கழகத்திற்கும் ஊருக்கும் பெருமைதரும் விடயமாகும். அவரைப் போல் வல்வை புளூசுக்கு விளையாடிய திரு. மு. தங்கவேலையும் மறக்க முடியாது. நான் 1991ஆம் ஆண்டு இந்தியாவிற்குச் சென்றபின் வல்வை விளையாட்டுக் கழகத்தை இன்றும் திறம்பட நடத்திக் கொண்டிருக்கின்றார்.

நான் இருந்த பத்து வருடங்களில் நூறு பேர்களுக்கு மேல் வல்வைக்காக விளையாடி ஊருக்குப் பெரும்பெயரைப் பெற்றத் தந்தார்கள். அத்தனை பெயர்களையும் இதில் அடக்குவது இயலாத காரியமாகும். எனினும் அப்பத்து வருடங்களில் எனக்கு வலது கையாகவிருந்து எனது பாரத்தைப் பகிர்ந்தவர்களை நினைவு படுத்த விரும்புகின்றேன். முதலாவதாக A.S.ஜெயபாலசிங்கத்தின் தம்பி வண்ணத்தைக் குறிப்பிடவேண்டும். தான் விளையாடும் சந்தர்ப்பத்தையும் இழந்து எனக்கு உறுதுணையாகவிருந்தார். எல்லாப் போட்டிகளுக்கும் பூட்சுடனும் கால்சட்டையுடனும் வருவார். யாரும் வராவிட்டால் உடனே விளையாடுவதற்கு ஆயத்தமாயிருப்பதை நான் பலதடவைகள் அவதானிக்கின்றேன். இதேபோன்ற மனப்பக்குவம் எல்லா விளையாட்டு வீரர்களுக்கும் வராது. அடுத்து திரு.M.K.தியாகலிங்கம் அவர்களைக் குறிப்பிட வேண்டும். வல்வை மக்கள் வங்கியில் பாதுகாப்பு அதிகாரியாகவிருந்த இவர் எப்பொழுதும் ஒரு செயலாளர் போல் சகல வேலைகளையும் செய்து பெரும் உதவிகள்



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

செய்திருந்தார். அடுத்து இராசாவின் மகன் அருளாந்தசாமியைக் (வெள்ளையண்ணாவின் மைத்துனர்) குறிப்பிட வேண்டும். அவர் கரவெட்டியில் கொல்லப்படும் வரை பெரும் உதவிகளைச் செய்து கொண்டிருந்தார். அவருக்கும் எனது அனுதாபங்கள். இவர்களைப் போல இன்னும் பலர் உதவியிருக்கின்றார்கள். அருளானந்தசாமியின் மக்கள் இருவரும் வல்வைக்கு விளையாடினார்கள் என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். இவர்களைப் போல் பலர் குடும்பங்களாய் வல்வைக்கு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அதில் முருகுப்பிள்ளைச் சித்தப்பாவின் குடும்பமும் அடக்கம். அவரின் மக்களான பிறேம்குமார் வரதன்,பாபு, பிரேம்நவாஸ், பிரேம்நசீர், விளையாடினார்கள். உதயணனும் ஜீவகனும், ஏ.இரத்தினசிங்கம் (A.R.), ஏ. மகேந்திரராசா (ராசுக்குட்டி)யும், Accountant குமாரசாமியின் மக்கள் இராசேந்திரன், மகேந்திரன், சுரேந்திரன் ஆகியயோரும் விளையாடினார்கள். இவர்களின் மூத்த சகோதரர் இரவீந்திரன் வல்வை அபிமானி, நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மையாக வந்து விடுவார். போட்டியில் வென்றுவிட்டால் விளையாடியவர்கள் தப்பினார்கள். தோற்றால் விளையாடியவர்களை விட்டு வைக்கமாட்டார். திட்டு திட்டென்ற திட்டித் தீர்த்துவிடுவார். இனிமேல் இவ்வாறாகப் போட்டிகளைப் பார்க்க வரமாட்டேன் என்று கூறுவார். ஆனால் அடுத்த போட்டிக்கு அவர்தான் முன்னுக்கு நிற்பார். இவர்களைப் போல் ந.பாலச்சந்திரனும் ந.கணேசரத்தினமும், அருணாசலம் சுப்பிரமணியம் (மணி), உ. சந்திரகுமார் உ. பிரதீப்குமாரும், சி. அரங்கண்ணலும், அவரது தம்பி ஜனார்த்தனனும், கட்டியண்ணாவின் பெறமகன் சேகரும் பிற்காலத்தில் வல்வைக்கு விளையாடினார்கள். அடுத்து தொண்டைமானாற்றை சேர்ந்த மறைந்த வரதனும் அவருடைய தம்பிகளான சின்னவனும், சுப்பையாவும், மதி சகோதரர்களும் வல்வைக்கு விளையாடினார்கள். சத்திவேலின் புத்திரர்களான ஸ்ரீபாலன், பாலமுரளி ஆகியோரும், சிவகணேசனுடைய மக்களும், சிவசுப்பிரமணியத்தின் மக்களும், இவர்களைத் தவிர, டொக்டர் மோகன், வேலாயுதபிள்ளை, முருகவேள், பாலசூரியர் (அப்பர்), டொக்டர் நாகமுத்துவின் சகலன் முத்துக்குமாரின் மக்களும், துரைசாமி வாத்தியாரின் மகன் ஸ்ரீகணேசும், இராமநாதன் மேத்திரியாரின் மக்களும் வல்வைக்கு விளையாடினார்கள். மாணிக்கத் தியாகராசாவின் மகன் ஹரீந்திரன் (கொரியா) விளையாடி தங்களுக்கும் ஊருக்கும் பெயரெடுத்துத் தந்தார்கள். இன்னும் நந்தனாரின் பெறாமகன் காலஞ் சென்ற செல்வனும் விளையாடியுள்ளார். து.சிவகுமரன் சட்டத்தரணி நடேசனின் மூத்தமகன் ரவிசங்கர் ஆகியோரும் வல்வைக்கு விளையாடினார்கள். திருமலை மோகன் முறைப்படி கோல்காப்பாளராகத் திருமலையில் பயிற்சி பெற்றவர். இவர் சிறிது காலம் வல்வைக்கு விளையாடி எல்லோருடைய பாராட்டையும் பெற்றதுடன் ஊருக்கும் பெருமை தேடித்தந்தார். திரு.குழந்தைவேலுவின் மக்களில் சிலர் வல்வைக்கு விளையாடி பெருமை சேர்த்தார்கள். சோமசுந்தரம் (சோமு) வல்வைக்கும் விளையாடினார். அம்புலன்ஸ் தங்கராசுவின் பேரப்பிள்ளைகள் (வாடி ஒழுங்கையிலிருந்தவர்கள்) வல்வைக்கும் விளையாடினார்கள். காலஞ்சென்ற தங்கராசாவின் பிள்ளைகள் அருள்சோதி, அருள்செல்வன், அருள்ஞானம் ஆகியோர் வல்வைக்கு விளையாடியுள்ளார். இத்துடன் கம்பர்மலை அருணகிரி (யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியும் முதலாந்தர உதைபந்தாட்ட நடுவரும்) வல்வைக்கு விளையாடியுள்ளார்கள். இவ்வாறு பலரின்




பங்களிப்பினால் வல்வை விளையாட்டுக்கழகம் பருத்தித்துறைப் பகுதியில் மாத்திரமின்றி யாழ்ப்பாணம், சுன்னாகம், காங்கேசன்துறை போன்ற இடங்களில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றிச் சிறப்பாக விளையாடி, யாழ்ப்பாணத்திலுள்ள பெரும் வீரர்களைச் சந்தித்துப் பல வெற்றிகளை ஈட்டியுள்ளது.

வல்வைக்கு விளையாடிய இன்னும் சிலரையும் நினைவூட்ட விரும்புகின்றேன். தற்போது அவுஸ்திரேலியாவில் வசிக்கும் க.ஜனார்த்தனன் விளையாடினார். இதேபோன்று முருகவேள் விளையாடினார். து.ஸ்ரீகணேசன் வல்வை விளையாட்டுக் கழகத்திற்கும் முன்னணி (தாக்குதல்) யில் விளையாடிப் பல வெற்றிகளுக்குப் பங்காற்றியிருக்கின்றார் என்பது குறிப்பிட வேண்டியதாகும். சந்திரன் (சாஸ்த்திரி) சில சமயங்களில் வல்வைக்கு காப்பாளராய்ச் செயல்பட்டிருந்தார். அத்துடன் அவரின் இரண்டு புதல்வர்களும் வல்வைக்கு விளையாடியிருக்கின்றார்கள். அவர்களுள் மூத்தவர் உதைப்பந்தாட்ட நடுவர் பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளார். அடுத்து வல்வைக்குதலைமை தாங்கிய இராசாராம் அவர்களின் சேவையை மறக்கமுடியாது. அவர் காப்பாளர் ஸ்தானத்திலிருந்து தாக்கும் வரிசை, தடுக்கும் வரிசைகளிலும் சிறப்பாக விளையாடி தான் சேர்ந்த கழகத்திற்கும் ஊருக்கும் பெருமை தேடித் தந்துள்ளார். இவர் தற்போது கனடாவில் வசிக்கின்றார்.

உதைபந்தாட்ட நடுவர்கள் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட நடுவர் பரீட்சையில் திரு. முருகவேளும், திரு. இராசாராமும் மிகச் சிறப்பான முறையில் சித்தியடைந்து பருத்தித்துறை மாவட்ட சங்கப் போட்டிகளில் செயற்பட்டு வந்தார்கள். அவர்களுக்குப் பின் ஆதிகோவிலடி சிவமும் அப்பரீட்சையில் சித்தியடைந்து திறம்படச் செயற்பட்டு வந்தார். இவர்கள் நடுவர்களாகக் கடமையாற்றியதால் வல்வைக்கு விளையாடும் சந்தர்ப்பத்தை இழந்துவிட்டார்கள் என்பதுவும் குறிப்பிடவேண்டும்.

நான் 1991இல் இந்தியாவுக்குச் சென்ற பொழுது 1989ஆம் ஆண்டு திரு. V.K.ஆறுமுகத்தின் மறைவுக்குப் பின் அவர் வகித்த தலைவரின் பதவியையும், வல்வை வி.க.இன் தலைவர் பதவியையும் முறையே திரு. வேதாபரணத்திடமும் திரு.மு.தங்கவேலுவிடமும் ஒப்படைத்து விட்டுச் சென்றேன். அவர்களிருவரும் அப்பதவிகளில் இருந்து திறம்பட செயற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

நான் முன்பு குறிப்பிட்டபடி ஒரு பாடசாலையின் கல்வியோ, விளையாட்டோ தரம் கூடும்போது அந்த ஊரின் கல்வியும் விளையாட்டுத் தரமும் முன்னேறும். திரு. அரியம் மாஸ்ரர் விளையாட்டுப் பொறுப்பாசிரியராகவிருந்த கடைசிக் காலத்தில் கரவெட்டியைச் சேர்ந்த திரு. எஸ். சிவசுப்பிரமணியம் என்பவர் சிலகாலம் ஆசிரியராய்ப் பங்கேற்றிருந்தார். அவர் கயிறிழுத்தல் விளையாட்டில் (Tug of war) சிறப்புப் பயிற்சி பெற்றவர். அந்தப் பயிற்சியை எங்கள் பாடசாலையில் தேர்ந்தெடுத்தக்கப்பட்ட எட்டுப்பேருக்கு பனையில் கயிறு கட்டி சிலகாலம் பயிற்சியளித்தார். அதன் விளைவு நாங்கள் பருத்தித்துறைப் பாடசாலைகளை மட்டுமன்றி, ஒவ்வொரு ஊர்க்காரரையும் வென்று யாழ்ப்பாணத்தில் சிறந்த அணியாகத் திகழ்ந்தோம். பின்னர் சிவசுப்பிரமணியம் ஆசிரியர் சில காலத்தில் அட்வகேற்றுக்குப் படிப்பதற்காய் சட்டக்கல்லூரிக்குச் சென்று



படித்து பெரிய அட்வக்கேற்றாகத் திகழ்ந்தார். நீளம் பாய்தலில் இடம்பெற்றுள்ளார். இவையெல்லாம் பாடசாலை மட்டச் சாதனைகளாகும். இவை கழக மட்டத்தில் எடுத்துச் செல்லப்படவில்லை. கைப்பந்தாட்டமும் உதைபந்தாட்டமும் தான் கழகமட்டங்களில் யாழ்ப்பாண ரீதியிலும் இலங்கை ரீதியிலும் எடுத்துச் செல்லப்பட்டது.

சமீபகாலத்தில் வல்வைக்கு விளையாடிய வர்களில் திரு.நா.பாலேந்திரனின் புத்திரர்கள் ஆனந்தும், வசந்தும் மிகச் சிறப்பாக விளையாடி அவர்கள் படித்த ஹாட்லிக் கல்லூரியின் சார்பில் ஒரு அழைப்புப் போட்டிக்காக கொழும்பு சென்று அங்குள்ள சில பாடசாலைகளுடன் உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்கு கொண்டு, சிறந்த வீரராக வசந்த் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு எங்கள் பாராட்டுக்கள், அவர் தற்போது அவுஸ்திரேலியா சிட்னியில் வசிக்கின்றார்.

வல்வை வி.க. பல ஆண்டுகளாகப் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தால் வருடா வருடம் நடத்தப்பட்ட போட்டிகளில் பல தடவைகள் பங்குபற்றி இறுதிக்கு வந்தும் முதலிடத்தைப் பிடிக்க முடியவில்லை. இந்த அழைப்புப் போட்டிக்கு யாழ்குடா நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கழகங்கள் பங்குபற்றுவது வழக்கம். அவ்வாறு வருபவர்கள் வேறு கழகங்களிலுள்ள சிறந்த விளையாட்டு வீரர்களையும் சேர்த்து விளையாடுவதாலும் நாங்கள் எங்கள் கழக மட்ட வீரர்களுடன் மட்டுமே விளையாடுவதாலும் எம்மால் முதலிடத்தைப் பிடிக்க முடியாமல் போய்விட்டது. இப்போட்டிகளில் யாழ்ப்பாணத்திலுள்ள மிகத் திறமையான உதைபந்தாட்ட வீரர்கள் பங்குபற்றுவது வழக்கம். இந்தப் போட்டிகளினால் பருத்தித்துறை மாவட்டத்தரம் உயர்ந்தது என்பது குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

சிறந்த விளையாட்டு வீரர்களான திரு. கதிர்காமலிங்கம் (திரு செ.யோகச்சந்திரன் அதிபரின் மைத்துனர்) இருதயராசா தங்கத்துரை, கருணாகரன் ஹரிகரன் (கொரியா), செல்வன் என்பவர்களின் அகால மரணங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

எமது கழக செயற்பாடுகட்கு, கொழும்புக்குச் செல்வதற்கும், உள்ளூர்ப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கும் நிதி, வாகனங்கள் தந்துதவியவர்கட்கும் எல்லாவற்றுக்கும் மேலாக வசதி குறைந்தவர்கள் கூட விளையாட்டு ஆர்வத்தாலும், எம் மீதுள்ள அபிமானத்தாலும் ‘குளுக்கோஸ்’ வாங்கி வந்து போட்டி இடைவேளைகளில் விளையாட்டு வீரர்களுக்கு தந்த நல்ல உள்ளங்களுக்கம், மற்றைய சகல உதவி செய்தவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வல்வை விளையாட்டுக் கழகத்தில் நான் கடமையாற்றிய அந்தப் பத்து ஆண்டுகளில் நான் சில நேரங்களில் எடுத்த தப்பான முடிவுகட்கும் என்னை மன்னிக்கும் படியும் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த ஆண்டு ஜுலை மாதக் கடைசிப் பகுதியில் எனது தொண்ணூறாவது அகவையை எட்ட இருக்கும் இந்நேரத்தில் என் சிந்தனைக்கெட்டியபடி ஊரில் நடைபெற்ற விளையாட்டுச் சம்பவங்கள் பலவற்றைத் தந்துள்ளேன். இந் நிகழ்வுகள் தப்பாயிருக்காவிடினும் சில விளையாட்டு வீரர்களும் அவர்கள் விளையாடிய கழகங்களின் விபரங்களிலும் தவறுகள் ஏற்பட்டிருப்பின் அதைத் தெரிந்தவர்கள் திருத்திக் கொள்ளலாம் எனத் தெரியத் தருகின்றேன்.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
Wood street post office and store
Wood street village, Guildford, UK
0148 385 1414, P.Balendhira



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

## 128
### நினைவில் நிற்கும்
## ந.கருணாகரன்



வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் முன்னணி வீரரான கருணாகரன் மிகச் சிறந்த முறையில் பந்தைக் கட்டுப்படுத்தி அணி வீரர்களிடம் கொடுத்து திரும்ப பெற்று கோல் அடிப்பதில் இவரின் ஆற்றல் அபாரமானது. வடமராச்சி பகுதிகளில் நடந்த போட்டிகளில் இவர் பங்கு பற்றி இருந்தார்.

## 129
### வல்வை புளூஸ் கழக வீரர்
## ப.ராஜன்
(ராசா)



வல்வை புளூஸ் உதைபந்தாட்ட அணியில் முன்ணணி வீரராகவும், இடைநிலை வீரராகவும் ராஜன் விளையாடியவர். கோல்காப்பு நிலையை தவிர்ந்த அனைத்து நிலைகளிலும் விளையாடக் கூடியவர் ராஜன். வடமராச்சியில் நடந்த போட்டிகளில் விளையாடியவர். புலம்பெயர்ந்து வந்த பின்பும் இங்கிலாந்து வல்வை புளூஸ் உதைபந்தாட்ட அணியிலும் இடம்பெற்று இருந்தார்.

## 130
### வல்வை புளூஸ் கழக வீரர்
## ச.குமார்



வல்வை புளூஸ் கழக உதைப்பந்தாட்ட அணியின் பின்னணித் தடுப்ப வீரராக விளையாடியவர். வடமராச்சி பகுதிகளில் நடந்த சுற்றுப் போட்டிகளில் விளையாடியவர். புலம் பெயர்ந்து வந்த பின்னர் இங்கிலாந்தில் புளூஸ் உதைபந்தாட்ட அணியில் ஆரம்ப காலங்களில் விளையாடிய போது TSSA, TRO கிண்ணங்களை வல்வை புளூஸ் வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இங்கிலாந்தில் வல்வை புளூஸ் உதைபந்தாட்ட அணியின் பயிற்சியாளராகவும், முகாமையாளராகவும் கடமையாற்றியவர். இன்றுவரை தொடரும் இவரின் புளூஸ் கழக செயற்பாடு பாராட்டத்தக்கது.

## 131
### வல்வை புளூஸ் கழக வீரர்
# இ. பத்மநாதன்
(பப்பன்)

உதைபந்தாட்டத்தின் சிறப்பே பந்தை சரியான நேரத்துக்குக் கொடுப்பதும், சரியான நேரத்துக்கு அடிப்பதும் ஆகும். முன்னணி வீரரான பப்பன் இத்தகைய நேரம் கணிப்பதிலும் பந்தை நோக்கி நகர்வதிலும் அலாதியான திறமை மிகுந்தவர்- வடமராச்சி பகுதிகளில் நடந்த சுற்றுப் போட்டிகளில் விளையாடியவர்- புலம்பெயர்ந்து வந்த பின்னரும் இங்கிலாந்து வல்வை புளூஸ் அணியில் திறமையாக விளையாடினார்.

## 132
### வல்வை புளூஸ் கழக வீரர்
# யோ. கருத்திருமன்
(சிட்டு)

வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் முன்னணி வீரராக விளையாடியவர். உதைபந்தாட்டத்தில் இடது பக்க காலால் விளையாடக் கூடியவர்களில் சிட்டுவும் சிறப்பானவர். நீண்டகாலத்துக்கு பின்னர் வடமராச்சி லீக் வெற்றிக் கிண்ணத்தை வல்வை புளூஸ் வெற்றியீட்டிய போது அந்த அணியில் சிட்டுவும் விளையாடி இருந்தார். வடமராச்சி, யாழ், தெல்லிப்பளை பகுதிகளில் நடந்த சுற்றுப் போட்டிகளில் இவர் விளையாடி இருந்தார்.

## 133
### வல்வை புளூஸ் கழக வீரர்
# சி.கருணாகரன்
(கருணா)

வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் பின்னணி வீரரான இவர் வடமராச்சி பகுதிகளில் நடந்த சுற்றுப் போட்டிகளில் பங்கு கொண்டவர்.

**1972 இல் சீன அணிக்கும் PDFA இற்கும் இடையிலான போட்டியில் சீன அணிக்கு எதிராக முதலாவது கோலை அடித்தவர் திரு. தங்கவடிவேல் ஆகும். இப்போட்டியில் சீன அணி 6-3 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது**



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

## 134
### வல்வை புளூஸ் கழக வீரர்
# த. ராஜிகுமார்
(ராசிக்)



வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் இடை நிலை வீரரான இவர் நீண்ட தூரத்துக்கு பந்தை அடிக்க கூடிய திறமை உள்ளவர். வடமராச்சி லீக் கிண்ணத்தை வெற்றி கொண்ட வல்வை புளூஸ் அணியில் இவரும் விளையாடினார்.

## 135
### வல்வை புளூஸ் கழக வீரர்
# த. ஜெயக்குமார்



உதைபந்தாட்ட அணியில் முன்னணி வலது உள்நிலை வீரரான இவர் வடமராச்சி பகுதிகளில் நடந்த போட்டிகளில் விளையாடி இருந்தார்.

## 136
### வல்வை புளூஸ் வீரர்
# செ.கலையழகன்
(பாஸ்கரன்)



வல்வை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் இடைநிலையில் இடதுபக்கமாக விளையாடுவதில் பாஸ்கரன் சிறப்புமிகுந்தவர். வடமராச்சி லீக் கிண்ணம், ஈழநாதம் கிண்ணம், குமுதினி நினைவுக் கிண்ணம் ஆகியவற்றுடன் வன்னிப் பகுதியில் நடந்த பல சுற்றுப் போட்டிகளில் பங்கு கொண்டவர். அத்துடன் தமிழ்நாடு மண்டபம் பகுதியில் வல்வை புளூஸ் உதைபந்தாட்ட அணியை ஆரம்பித்தவர்களில் பாஸ்கரும் ஒருவராவார். அதன் பின்னர் புலம்பெயர்ந்து வந்த பின்னரும் வல்வை புளூஸ் கழக நிர்வாகங்களில் சிறப்பாகப் பங்கு கொண்டவர் இவர்.

## 137
### வல்லை புளூஸ் வீரர்
### ஜெயக்குட்டி
# வே.ஜெயக்குமார்



வல்லை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியின் இடைக்கள (Midfield) வீரராகவும் முன்கள வீரராகவும் (Centre forward) விளையாடியவர் ஜெயக்குமார். வடமராச்சி பகுதிகளில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளிலும், குருநகர் பகுதிகளில் நடைபெற்ற போட்டிகளிலும் இவர் வல்லை புளூஸ் உதைபந்தாட்ட அணியில் விளையாடி இருந்தார்.

பொன் விழா காணும் வல்லை
புளூஸ் விளையாட்டுக் கழகத்தை
வாழ்த்துகின்றோம்

Sunshine Food
& Wine

378 Grove Road,
Mitcham, UK
0208 286 7788,
R.Thillainathan

## 138
### வல்லை புளூஸ் கழக வீரர்
# க.ராஜாராம்

வல்லை புளூஸ் கழக உதைபந்தாட்ட அணியில் விளையாட ஆரம்பிக்கும்போது மத்தியகள (Midfield) நிலையில் விளையாடிய ராஜாராம் அதன் பின்னர் வடமராச்சி பகுதிகளில் நடந்த சுற்றுப் போட்டிகளிலும், புத்தூர், யாழ்ப்பாணப் பகுதிகளில் நடந்த போட்டிகளிலும் இவர் விளையாடி இருந்தார். மிக நீண்ட காலம் வல்லை புளூஸ் உதைபந்தாட்ட அணிக்குத் தலைவராக (Caption) இவர் விளங்கியவர். 1991ல் நடந்த ஈழநாதம் வெற்றிக் கிண்ணப் போட்டியில் இவரின் விளையாட்டை ஈழநாதம் பத்திரிகை மிகவும் பாராட்டி எழுதி பெருமை கொள்ளத்தக்கது.

1972 இல் சீன அணிக்கும் PDFA இற்கும் இடையிலான போட்டியே வடமராச்சி பகுதியில் அதிக பார்வையாளர்கள் நேரடியாகப் பார்த்த போட்டியாகும். சுமார் இருபதாயிரம் (20000) பார்வையாளர்கள்.





## 139
### வல்லை புளூஸ் வீரர்
# வே. உதயகுமார்



உதைபந்தாட்ட அணியில் முன்கள வீரராக வேகமுடன் விளையாடும் திறன் கொண்டவர் இவர். வடமராச்சி பகுதிகளில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளில் இவர் வல்லை புளூஸ் அணிக்காக விளையாடினார்.

பொன் விழா காணும் வல்லை
புளூஸ் விளையாட்டுக் கழகத்தை
வாழ்த்துகின்றோம்

Tamilini Cash
and Carry

195, the Broadway,
Southall,
UK
0208 843 0003

## 140
### வல்லை புளூஸ் கழகம் பெருமை
### கொள்ளும் வீரர்
# பா. வசந்த்



வல்லை புளூஸ் கழகத்துக்கு பெருமை சேர்ந்த வீரர்களில் வசந்த் பாலேந்திரா முக்கியமானவர். உதைபந்தாட்ட முன்னணி வீரரான இவரின் உதைபந்தாட்ட தகமைகளும் பங்கும் மிகவும் சிறப்பானது. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியின் 17 வயதுக்கு உட்பட்டோர் அணியினதும் (2002), 19 வயதுக்கு உட்பட்டோர் அணியினதும் அணித் தலைவனாக விளையாடி இருந்தார். அத்துடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட அணியிலும் மூன்று வருடங்களாக (2003, 2004, 2005) பங்கு பற்றி இருந்தார். யாழ் மாவட்ட உதைபந்தாட்ட அணியிலும் இரண்டு வருடங்கள் (2003, 2004) விளையாடி இருந்தார். இவரின் உதைபந்தாட்டத்தின் உச்சமாக சிறீலங்கா தேசிய அணியிலும் (2005) இடம்பெற்றதுடன், 24.06.2005 அன்று மாலைதீவு நாட்டுடன் நடந்த போட்டியிலும் விளையாடினார். வல்லை புளூஸ் கழகத்தின் உதைபந்தாட்ட அணியிலும் ஏராளமான சுற்றுப் போட்டிகள் விளையாடினார். வல்லை புளூஸ் கழக துடுப்பெடுத்தாட்ட அணியில் இடம்பெற்று இருந்தார். அத்துடன் யாழ் மாவட்ட துடுப்பெடுத்தாட்ட அணியில் இரண்டு வருடங்கள் (2003,2004) விளையாடினார்.

## 141
# ச.பாலகுமார்



இவர் புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக பலபோட்டிகளில் விளையாடிய ஒரு முன்னணி வீரர்(இடது, வலது) ஆவார். புந்தை தனது காட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதும் மிகவும் நோத்தியான அடியும் இவரது திறமையின் வெளிப்படாக இருந்நது. வதிரி நெல்லியடி வசாவிளான் மைதானங்களில் இவர் சிறப்பாக விளையாடி இருக்கின்றார். வல்வையின் கிரிக்கெட் அணியிளும் இவர் சிறப்பாக விளையாடியவர். கரப்பந்தாட்ட அணியிலும் இவர் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

## 142
# சு.கந்தசாமி



இவர் வல்வை புளூஸ் அணிக்கு முன்னால் வீரராக(வலது) சிறப்பாக விளயாடியவர் .வதிரியில் நடைபெற்ற போட்டிகளில் கூடுதல் பங்கெடுத்தவர் வதிரிடயமன்ட் விளையாட்டுக்கழகத்தினால் நாடத்தப்பட்ட போட்டியில் ே.ஊ.ஊ அணிக்கு எதிரான ஆட்டத்தில் மிகவும் அபாரமாக விளையாடி புளூஸ் இன் வெற்றிக்கு வழிவகுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல் சிவானந்தா மைதனத்தில் நடைபொற்ற போட்டியில் தோல்வியில் இருந்த புளூஸ் அணியை சமநிலைக்கு வரவைத்த இவரது அபார விளையாட்டு மறக்கமுடியாத ஒன்று

## 143
# தி.முரளீதரன்

இவர் புளூஸ் அணிக்காக விளையாடிய பின்ணனி வீரர்களில் ஒருவர் (ஹுநகநஉெநஇர்யகநடைநெ) நெல்லியடி வசாவிளான் ஆகிய இடங்களில் நடைபெறும் போட்டிகளில் இவர் சிறப்பாக விளையாடியவர் வசாவிளானில் நடைபெற்றபோட்டிகளில் யாழ் சென்அன்ரனிஸ் அணியோடும். தெல்லிப்பழை வீமன்கழகம் அணியோடும் மோதிய ஆட்டங்களில் இவரது விளையாட்டு பாராட்டத்தக்கது. சிதம்பரக்கல்லுாரியின் உதைபந்தாட்ட அணியின் (முதல்பிரிவு) தலைவராகவும் 1974-75ம் ஆண்டுகளின் இவர்விளையாடி இருக்கின்றார். புளூஸ் விளையாட்டு கழகத்தின் அஞ்சடோட்டம் அணியிடம் இவர் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.



## 144
# சு.உதயகுமார்
## (பொட்டுக்கண்ணன்)



இவர் வல்வை புளூஸ் அணியில் 1997ம் ஆண்டு தொடக்கம் வடமராட்சிப் பகுதியில் நடந்த அனைத்து சுற்றுப் போட்டிகளிலும் மிகத் திறமையாக விளையாடினார் இவர் அணியின் பின் இடது, வலது(ஹுநகநஉெந) வீரராக வினையாடினார் இவரின் வலுவான அடி அனைவரையும் கவரக்கூடியது இவர் சாவகச்சேரியில் நடந்த ஒரு சுற்றுப்போட்டியிலும் கலந்து சிறப்பாக விளையாடினார் இவர் விளையாடும் காலத்தில் 2003ம் ஆண்டு மாசி மாதம் 18ம் திகதி யாழ் மாவட்டத்தில் பருத்துறை பிரதேச செயலாலர் பிரிவில் நடாத்தப்பட்ட உதைப்பந்நாட்ட சுற்றுப் போட்டியில் எமது உதைபந்தாட்ட அணி இறுதிச் சுற்றுக்கு தெரிவானது அதில் ஆதிசக்தி வளையாட்டுக் கழகத்தை எதித்து எமது அணி விளையாடியது அதில்-3.0என்ற கோல்க் கணக்கில் எமது அணி வெற்றி பெற்றுச் சாம்பியன் ஆனது இதில் இவர் மிகத் திறமையாக விளையாடியது மறக்கமுடியாத ஒன்று

## 145
# அ.செல்வமனேகரன்



இவர் புளூஸ் அணிக்காக 1990-91காலப்பகுதியில் . பருத்தித்துறை.நெல்லியடி.ஏழாலை உட்பட்ட இடங்களில் நடைபெற்றபோட்டிகளில் முன்னால் வீரராக விளையாடியவர்.பருத்துறையில் நடைபெற்ற வதிரிவிக்னேர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் இவரது ஆட்டம் பாராட்டுக்குரியதாக இருந்தது குறிப்பிடத்தக்கது. .இதைவிட இவர் 1998-2009 காலப் பகுதியில் லண்டன் புளூஸ் அணியிலும் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

---

## 146
# அ.சிவமனேகரன்



இவர் வல்வை புளூஸ் அணிக்காக 1990-93 காலப்பகுதியில் பருத்திதிதுறை, நெல்லியடி, .வசாவிளான் ஆகிய இடங்களில் நடைபெற்ற போட்டிகளில் முன்னணி வீரராகவும்.சுபைாவ ாயகந ஆகவும் விளையாடியவர் ஆவார் இவரது சிறப்பான தடுப்பாட்டம் குறிப்பிடத்தக்கது. இவர் 1997-98 காலப் பகுதியில் லண்டன் புளூஸ் அணியிலும் இடம்பெற்றிருந்தார்

# இன்றுவரை

வல்வை புளூஸ் கழகத்தின் ஐம்பதுஆண்டுகாலநீண்டவரலாற்றில் இக்கட்டான ஒரு காலகட்டமான தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் இருந்துவிளையாடியவீரர்கள் பலரின் தனித்திறமைகள், விளையாடிய போட்டிகளின் விபரங்கள் என்பன முழுமையாக சேகரிக்க உடனடியாக முடியாமல் இருக்கின்றது. ஆதலால் அவர்களின் பெயர்களைமட்டும் இந்தப் பகுதியில் பதிவுசெய்கின்றோம். வல்வை புளூஸ் கழக வரலாற்றில் இவர்களின் பங்களிப்பும், இவர்கள் காட்டியதிறமையும் தலைவணங்கத்தக்கது.

எதிர்காலத்தில் வெளிவரப்போதும் வல்வை புளூஸ் கழகத்தின் வரலாற்றில் நிச்சயமாக இவர்கள் சம்பந்தமான முழுமையான விபரக்கோர்வைகள் இணைக்கப்படும் என்றுநம்புகின்றோம்.

1. அ.சபானந்தமூர்த்தி
2. வே. தனபதி
3. ந.யோகராஜ்
4. அ.ரகு
5. அ.தேவானந்தா
6. த. மதிராஜ்
7. அ. கரிகாலன்
8. ச. ஜெகதீசன்
9. ஐ.அருளானந்தராஜா
10. இ.இராஜகோபால்
11. தே. தங்கேஸ்வரன்
12. த. பிறேமராஜா
13. சி. ஞானசோதி
14. இ. பாலச்சந்திரன்
15. இராஜேந்திரா
16. வில்லர்
17. நாதன்
18. வசந்தன்
19. சந்திரன்
20. நிதியன்
21. யோகன்
22. வாமன்னா
23. செல்லப்பா
24. ரவிசங்கர்
25. ரஜீவன்
26. காந்தன்
27. பூபால்
28. கணேஸ்
29. கண்ணன்
30. கீதன்
31. சிவா
32. காண்டீபன்
33. டைசன்
34. கிருபா
35. சதீஸ்
36. சிறி
37. லவன்
38. விக்கி
39. செந்தில்குமரன்
40. விசியப்பு
41. பகீர்
42. த.சிவலிங்கம்
43. குணம்
44. ரா.அசோக்
45. சி.ராஜ்குமார்
46. ந.நிரஞ்சன்
47. பா.ஆனந்
48. பு.விஜஜேந்திரன்
49. மு.சதீஸ்
50. தரு
51. த.சதீஸ்குமார்
52. இ.சாந்தகுமார்
53. சி.ஜெகப்பிரதாபன்
54. அருள்
55. தர்மேந்திரா
56. ஆர்.இரட்ணகுமார்
57. வை.மகேந்திரன்
58. வெ.ராஜேந்திரன்
59. எஸ்.குயிலன்
60. ஆர்ட்டி
61. ஜெயராம்
62. தே.பிறேமதாஸ்
63. எஸ்.தர்மேந்திரா
64. நீதி
65. எஸ்.கண்ணன்
66. அ.தயாபரன்
67. ச.சண்முதாஸ்
68. ம.மயூரன்
69. ஆ. அன்பழகன்
70. பா. பிரதீபன்
71. ச.கிரிதரன்
72. ந. சுதாகரன்
73. ந.நரேந்திரன்
74. ஜெ. உதயகுமார்
75. த.சிவகுமார்
76. த. சிவஞானம்
77. சி.ராஜ்குமார்
78. கி.தர்சன்
79. மோ.சங்கர்
80. வா.பிரணவன்
81. த. ஜெகதாஸ்
82. கி. கண்ணன்
83. தவனேஸ்
84. கிருபா
85. ஆ. பிரதீபன்
86. பி. நந்தகுமார்
87. பி.நகுலேஸ்வரன்
88. செ.சுவர்ணராஜ்
89. பி.பிரதீபன்
90. இ.முகுந்தன்
91. சி. ஜீவித்தன்
92. இ.விகர்ணன்
93. ஞா. பார்த்தீபன்
94. க. பாலேந்திரன்
95. பா. பார்த்தீபன்
96. இ. டபன்சன்
97. வி. திருலோகநாதன்
98. அ. செல்வமனோகரன்





# இந்தப் பொன்விழா ஆண்டில் இன்று வல்வையில் விளையாடிக் கொண்டிருக்கும் அணி வீரர்கள்


VVT 1


VVT 2


த.சிவலிங்கம்


தே.பிறேமதாஸ்


ச.சண்முகதாஸ்


ஆ.அன்பழகன்


பா.பிரதீபன்


இ.முகுந்தன்


த.சிவஞானம்


உ.லக்ஸ்மன்


ந.நரேந்திரன்


சி.ஜிவிந்தன்


ந.சுதாகரன்


இ.டயன்சன்


கிரிதரன்


இ.விகர்ணன்

# உயரம் X நிறை (Height & Weight)

யாழ் மாவட்டத்தில் யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, ஈவினை, குப்பிளான் ஆகிய இடங்களில் சாதனை படைத்துக் கொண்டிருந்த வல்வை புளூஸ் அணி உயர நிறை (Height & Weight) போட்டிகளிலும் 1972ம் ஆண்டுகாலடி வைத்தது. யாழ் மத்தியஸ்தர் சங்கத்தில் அங்கம் வகித்த ஜங்றோயல் விளையாட்டுக் கழக மத்தியஸ்தரும் உப தலைவருமாகிய ஏ.எஸ். தனபாலசிங்கம் அவர்கள் தான் உயர நிறைப் போட்டி நடாத்தப்பட வேண்டும் என்று யாழ் உதைபந்தாட்டச் சங்கத்திற்குப் பரிந்துரை செய்திருந்தார். அதன்படி 1972ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் காங்கேசன்துறை ஜங்றோயல் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட போட்டியில் முதன் முறையாக உயரம்Xநிறை போட்டி அறிமுகப்படுத்தப்பட்டது.

முதலாவது போட்டியில் வல்வை புளூஸ் அணியை எதிர்த்துக் குப்பிளான் விக்னேஸ்வரா அணி மோதியது. ஆட்டம் 1-1 என்ற கோல்க் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. ஏ.எஸ். தனபாலசிங்கம் அவர்களே அன்றைய போட்டிக்கு நடுவராக இருந்தது குறிப்பிடத்தக்கது.

போட்டிகள் இரண்டு பிரிவுகளாக நடாத்தப்பட்டது. உயரம்Xநிறை 620 ஆகவும், உயரம்Xநிறை 460 ஆகவும் இருந்தது. இந்தப் போட்டிகளில் வல்வை புளூஸ் அணி ஆறு தடவைகள் சாம்பியனாக வந்ததும் மறக்க முடியாது.

மகுடம் சூட்டுவதுபோல 1978 ஆம் ஆண்டு 6-0 கோல்கணக்கில் சாம்பியன் ஆனது சிறப்பம்சமாகும். (உயரம் X நிறை 460). திரு. வே. வேலாயுதபிள்ளையும், இ.சுப்பிரமணியம் அவர்களும் பயிற்றுனர்களாக இயங்கியது குறிப்பிடத்தக்கது.

வல்வை புளூஸ் அணிக்கு விளையாடி வெற்றிக் கிண்ணத்தை வென்றெடுத்த வீரர்கள். (யாருடைய பெயர்களாவது தவறவிட்டிருப்பின் தயவுசெய்து, உங்கள் விபரங்களை எமக்கு அறியத்தரவும்)

| | | |
|---|---|---|
| 1. க.முருகதாஸ் | 16. மகேந்திரன் | 31. தே.ஜெயச்சந்திரன் |
| 2. ஈ. கீருஸ்ணலிங்கம் | 17. கு.இரவீந்திரன் | 32. பா.இரகுகரன் |
| 3. கா.ஜீவதாஸ் | 18. ந. இரவீந்திரன் | 33. த.குலசிங்கம் |
| 4. இ.கோபாலகிருஸ்ணன் | 19. நா. யோகேந்திரன் | 34. ஆ.சுபாஸ்ரஞ்சன் |
| 5. வே. இராதாகிருஸ்ணன் | 20. சு.வேலாயுதபிள்ளை | 35. சி.வெல்சவ்சந்திரன் |
| 6. து.முகுந்தன் | 21. கு.பாலசூரியர் | 36. இ.இராசகோபால் |
| 7. த. உதயணன் | 22. ந.சோதிக்குமார் | 37. அர்ச்சுணன் |
| 8. செ.ஜெயமனோகரன் | 23. இ.மகேந்திரராசா | 38. எஸ்.இராமநாதன்துரை |
| 9. க. இரமணன் | 24. ச.ரூபகுமார் | 39. அகிலநாதன் |
| 10. க.தயாபரன் | 25. ச.ச.முத்து | 40. எஸ்.செல்வகிருஸ்ணன் |
| 11. கு.முரளி | 26. இ.கெங்காதரன் | 41. தி. செல்வக்குமார் |
| 12. த.ஜீவகன் | 27. சே. பிருதிவிராஜன் | 42. கு. ஜெயக்குமார் |
| 13. மு.பிறேம்குமார் | 28. ச.புத்திரசிகாமணி | 43. ஜெயக்குமார் |
| 14. சோ.கிருஸ்ணகுமார் | 29. மு.பிறேம்நசீர் | 44. நா. நிரஞ்சன் |
| 15. சோ.விஜயகுமார் | 30. சிவச்சந்திரன் | |



# பொன்விழா காணும் வல்வை புளூஸ்

# கரப்பந்தாட்டம்

வல்வை புளூஸ் பொன்விழா காணும் இவ்வேளையில் அதனுடைய சாதனை-களையும், சாதனையாளரையும் பதிந்து செல்கிறது இந்த நூல்.

புளூஸ் என்பது என்ன.. எல்லாக் கழகங்களுக்கும் இருப்பதைப் போன்ற ஒரு பெயரா? அல்லது நிறமா? அல்லது ஒரு காலத்தின் கருதுகோளுக்கு நிறமும் வடிவமும் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லை அது ஓர் இலட்சிய எல்லையா என்ற பல கேள்விகள் உள்ளன.

இள நீலமும் கட்டி நீலமும் கலந்து பறக்கும் வல்வை புளூஸ் கொடியை வடிவமைக்கும்போது அதை உருவாக்கியவர்கள் மனதில் ஓர் எண்ணம் ஓடியதாக பேராசிரியர் சபா. இராஜேந்திரன் கூறுவார்.

வல்வையில் இருந்து கடலையும், ஆகாயத்தையும் பார்த்தால் ஒன்று தண்ணி நீலமாகவும், இன்னொன்று கட்டி நீலமாகவும் தெரியும். அடிவானத்தின் கோடு பிரித்துத் தரும் நீலத்தின் இரண்டு நிறங்களுமே வல்வை புளூசின் கொடியாகிப் பட்டொளி வீசிப்பறந்தது என்று கூறுவார். இன்று பொதுவாக வல்வையின் நிறமே அதுதான் என்று கூறுமளவுக்கு அந்த இரண்டு நிறங்களும் புளூஸ் என்ற பெயருடன் மக்கள் மனதில் நிலைபேறு பெற்றுவிட்டது.

கடலையும் ஆகாயத்தையும் தேர்வு செய்த இவர்கள் எதற்காக தரையைத் தவிர்த்துக் கொண்டார்கள்.. தரையில் வாழும் மனிதனுக்கு காலங்காலமாக வெற்றிகொள்ள பெரும்



இடமிருந்து வலம: தங்கவேல் - செல்வச்சந்திரன் - குகப்பிரசாதன் - தேவசிகாமணி
கதிர்காமலிங்கம் - அமிர்தலிங்கம் - தங்கவடிவேல் - ஏ.வி.அருணாசலம் -
ஏ.ஆர்.ரத்தினசிங்கம்

சவாலாக இருந்தது கடலும் ஆகாயமுமே. சாதிக்கப்பிறந்த அவனுடைய இரண்டு கரங்களுக்கும் இரு பெரும் சவாலாக இருந்த இரண்டு பெரும் நிறங்களும் இவையே. அதேபோல நாம் சாதித்து முடித்துவிட்டோம் என்று முடிவுரை எழுத முடியாத நெடும்பயணத்தையும் இந்த நிறங்கள் குறிக்கின்றன. இப்படி இதன் வரையறைகள் நீண்டு செல்லும்..

மனத்திரையில் நீண்டு போகும் இந்த எண்ணங்கள் ஒரு புறம் இருக்க, இரட்டை வர்ணங்களும் இன்னொரு செய்தியையும் எடுத்துரைத்தன. வல்வை புளூசின் வரலாற்றில் பல்வேறு விளையாட்டுக்கள் இடம் பெற்றாலும், உதைபந்தாட்டமும் கரப்பந்தாட்டமுமே அதன் இரு பெரும் விளையாட்டுக்களாக இருந்தன. கட்டி நீலம் உதைபந்தாட்டமாக இருந்தால் தண்ணி நீலம் கரப்பந்தாட்டம் என்று கூறிக்கொள்ளலாம். கலவையற்ற ஒற்றை விளையாட்டான உதைபந்தாட்டம் கட்டி நீலமாக வும், செற் அப் கேம், ஓவர் கேம் என்ற இரு கலவைகளால் கரப்பந்தாட்டம் தண்ணி நீலமாகவும் கருதப்பட முடியும்.

வல்வை புளூசின் வரலாற்றில் உதைபந்தாட்டத்தில் இருந்த இறுக்கம் கரப்பந்தாட்டத்தில் இருந்ததாகக் கூறமுடியாது. கரப்பந்தாட்டம் மெல்லிய தளர்வுத் தன்மை கொண்டிருந்தது. அதிலும் ஓவர் கேம் கூடுதல் நெகிழ்ச்சித் தன்மை கொண்டிருந்தது. மேலும் வல்வையின் கரப்பந்தாட்ட வடிவமாக வல்வை புளூசே வல்வைக்கு வெளியில் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டது.

வெவ்வேறு கழகங்கள் வெவ்வேறு பெயர்களில் விளையாடினாலும், வல்வை என்ற பொதுப் பெயரும், புளூஸ் என்ற பொதுப் பெயரும் வல்வைக்கு வெளியில் கூடுதல் பாவனையில் இருந்தன. வல்வை புளூசின் கரப்பந்தாட்ட வரலாற்றை பதிவு செய்யும் போது அதில் பெரும்பாலான வல்வையின் கரப்பந்தாட்ட வீரர்கள் எல்லாம் இடம் பெற்றிருந்தார்கள்.

வல்வை புளூசின் கரப்பந்தாட்டமும் அதன் கொடியைப் போலவே இரண்டு பிரதான பிரிவுகளாக இருந்தது. ஒன்று செற் அப் கேம் எனப்படும் சர்வதேச ஆட்டம். இன்னொன்று ஓவர் கேம் எனப்படும் இலங்கை தமிழ் மக்களின் தேசிய கரப்பந்தாட்ட விளையாட்டு. இந்த இரண்டும் தனித்தனியாகப் பதிவு செய்யப்பட வேண்டியவை. இவற்றில் பல முக்கியமான ஆட்டங்களும், முக்கியமான நிகழ்வுகளும், முக்கியமான வீரர்களும் இடம் பெறுகிறார்கள். மிகப் பழைய கரப்பந்தாட்ட சாதனைகள் பதிவுகளில் இல்லை, செவிவழி செய்திகளாகவே உள்ளன. அவற்றை பதிவு செய்யும் முதல் முயற்சியாக இது இடம் பெறுகிறது.

யாழ் குடாநாட்டில் நடைபெறும் முக்கிய போட்டிகளின் கேடயங்களை வென்று வாகை சூடியது முதல், அகில இலங்கைப் போட்டிகளில் வெற்றி பெற்றதுவரை இதன் விஸ்த்தாரம் பரந்துபட்டிருக்கும். மேலும் 1961 ல் வல்வை புளூஸ் ஆரம்பிக்கப்பட முன்னரே சாதனை படைத்த வீரர்களும் வல்வை புளூசின் வரவிற்குப் பின்னர், அதன் வீரர்களாக இணைந்து கொண்டார்கள். அதற்கு முந்திய வல்வையின் நெடிய கரப்பந்தாட்ட வரலாற்றின் தொடர்ச்சியாகவே அவர்கள் இருந்தார்கள். வல்வையில் ஓடிய பல்வேறு ஆற்றல்களின் சங்கமமாகியது வல்வை புளூஸ்.








# வல்வை புளூஸ்
# சர்வதேச கரப்பந்தாட்டம்
## ( செற் - அப் - கேம் )

வல்வை புளூசின் செற்றப் கேம் நினைவுகளை எட்டிப் பிடிக்கும்போது மிகத் தொலை வில் நமது எண்ணங்களில் தட்டுப்படுவது வல்வை டைனமோஸ் பெற்ற அபார வெற்றியாகும். இந்தக் கரப்பந்தாட்ட அணி அகில இலங்கை செற் அப் கேமை வெற்றி கொண்ட சாதனை அணியாகும். அன்று டைனமோஸ் வீரர்கள் அகில இலங்கையின் புகழ் பெற்ற கரப்பந்தாட்ட அணியான கம்பஹாவுடன் மோதியுள்ளார்கள். வல்வையின் கரப்பந்தாட்ட வரலாற்றில் இந்த நிகழ்வு பொன் எழுத்துக்களால் பதியப்பட வேண்டிய செய்தியாகும்.

## கரப்பந்தாட்ட வீரர்
## திரு. எஸ். கதிர்காமலிங்கம்

சிங்களப் பகுதி ஒன்றில் வைத்து ஒரு சிங்கள அணியை வெற்றி கொண்டு அகில இலங்கைக் கேடயத்தை வெற்றி கொள்வதென்பது சாதாரணமான விடயமல்ல. அந்த வெற்றியை வல்வை புளூஸ் வீரர் எஸ்.கதிர்காமலிங்கம் நிகழ்த்திய விதம் இன்றும் மறக்க முடியாத நினைவுகளாக வல்வை மக்களால் பேசப்படுகிறது.



வல்வை புளூசின் வீரராக இருந்த இவர் அகில இலங்கை செற் அப் கேம் அணிக்கு தலைமை தாங்கியவர். இலங்கை அணி கரப்பந்தாட்டத்திற்காக பாகிஸ்தான் சென்றபோது, அந்தக் குழுவிற்கே தலைமைதாங்கி பாகிஸ்தான் அணியை சந்தித்த பெருமைக்குரியவர். உடம்பில் உள்ள செல் துணிக்கைகள் எல்லாம் கரப்பந்தாட்டத்திற்கு அமைவாகவே வடிவமைக்கப்பட்ட ஒருவர் என்று பழைய வீரர்கள் இவருடைய புகழை எடுத்துரைப்பார்கள். இப்படியொரு வீரனை காண்பது இலகுவான விடயமல்ல.

வல்வையின் கரப்பந்தாட்ட வரலாறு பதிவாக இல்லை. ஆனால் செவிவழிக் கதையாக கூறப்படும் மரபு விளையாட்டு மைதானங்களில் பின்பற்றப்படுவது அக்கால வழக்கம். பிரபலமான வீரர்கள் எல்லாம் சாதாரண மைதானப் பயிற்சிகள் ஆரம்பிக்க முன்னரும், முடிவடைந்த பின்னரும் முற்காலத்து சாதனைப் போட்டிகள் பற்றி மற்றைய வீரர்களுக்கு சொல்வார்கள்.

மபோர்க்கடம் சித்தப்பா, அனந்தண்ணா, பாலா மாஸ்டர், சிவநாதன் போன்றவர்கள் பழைய கரப்பந்தாட்ட வரலாற்றை திரைப்படம்போல விபரிப்பதில் கைதேர்ந்த வல்லவர்களாக இருந்தார்கள். இவர்களிடம் கரப்பந்தாட்டக் கதை கேட்கும்போது ஒரு சாகசத் திரைப்படத்தை அல்லது ஒரு டார்சான் கதை கேட்பது போல பெரும் பரவசமாக இருக்கும். கரப்பந்தாட்ட மைதானத்தில் நிலவின் ஒளியில் இந்தக் கதைகளைக் கேட்கும்போது நமக்கு பெரும் பரவசமாகவே

இருக்கும்.

கதையை ஆரம்பிக்கும் அனைவருமே தமது கதைகளைக் கரப்பந்தாட்ட வீரர் கதிர்காமலிங்கத்தில் இருந்தே ஆரம்பிப்பார்கள். அந்த வழியில் முத்துக்குமாரசாமி மாஸ்டர், சேற்கொடியோன் மாஸ்டர், சிவபெருமான், ஊரிக்காடு நிச்சாட் மாஸ்டர், பெரிய அரியம் மாஸ்டர், குகதாசன், இராமநாதன், அமிர்தலிங்கம், ஏ.வி. அருணாசலம், பொட்டுக்கட்டி, அனந்தண்ணா, சின்னத்துரை, தருமண்ணா, தாயுமானவர் போன்ற பல விளையாட்டு வீரர்களின் செய்திகளை எல்லாம் கூறுவார்கள்.

சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தில் உன்னதமான ஒன்றை விபரிக்க முடியாமல் தடுமாறும்போது, கற்பகத்தின் பூங்கொம்போ காமன் தன் பெருவாழ்வோ என்றும், முன்னே வந்துதித்த முருகனோ பெருகொளியால் தன்நேரில் மாரனோ என்ற வரிகளை பயன்படுத்துவார். வல்வை புளூசின் செற் அப் கேம் வரலாற்றுக்கு அப்படியொரு அற்புதத்துடனான வர்ணனையே அவசியமானது. அப்படி வர்ணனை கொடுக்கும்போது நம் கண் முன்னே இலங்கை இராணுவத்தில் இருந்த வல்வை புளூஸ் வீரர் எஸ். கதிர்காமலிங்கம் கண்முன் வந்து நிற்பார்.

இன்றுள்ள வல்வை மக்கள் இவருடைய அற்புதமான வரலாற்றைக் கதைகள் மூலமே கேட்டறிய முடிகிறது. கரப்பந்தாட்ட வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பதியப்பட வேண்டிய ஒரு வீரன் இன்று நம்மிடையே இல்லை என்றாலும், அவருடைய வரலாறு நம்மிடையே ஓர் அற்புதமான கதையாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது.

பொதுவாக யாழ். குடாநாடு முழுவதும் ஓவர் கேம் பல்கிப் பெருகி இருந்தபோது வல்வையில் மட்டும் செற் அப் கேம் அபார முன்னணி பெறுவதற்கு என்ன காரணம் என்று சிந்தித்தால் நம் கண்முன் வந்து நிற்பது வல்வை சிதம்பராக் கல்லூரிதான்.

அக்காலத்தே யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் கரப்பந்தாட்டப் போட்டி செற் அப் கேமாகவே இருக்கும். ஓவர் கேம் என்பது இலங்கை வாழ் தமிழினத்தின் தேசிய விளையாட்டு போன்றது. அதையும் பாடசாலைக் கரப்பந்தாட்டப் போட்டிக்குள் கொண்டுவர யாரும் முயலவில்லை.

சர்வதேசக் கரப்பந்தாட்டப் போட்டிக்கே மாணவரைத் தயாராக்க வேண்டும் என்ற கணிப்பே அங்கு முதன்மை பெற்றிருந்தது. நாம் சர்வதேச மயப்படுவது முக்கியம். அதேவேளை, நமது விளையாட்டு ஒன்றைச் சர்வதேச அரங்கிற்கு கொண்டு செல்வதும் முக்கியம் என்ற தூரப்பார்வை அப்போது இருந்ததாகக் கூறமுடியாது. பாடசாலை விளையாட்டுக் கல்விக்குள் ஓவர் கேம் நுழைய முடியாமல் போய்விட்டது. இன்றுவரை அந்த அவலம் தொடர்கிறது.

அக்காலத்தே பாடசாலைகளில் முதன்மை பெற்ற செற் அப் கேம் ஆட்டத்திற்கு சிதம்பராக் கல்லூரி மாணவர்களை தயார் செய்தது. சிறந்த விளையாட்டு வீரர்கள் நிறைந்த அப்பாடசாலையில் அக்காலத்தே 1500க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்தார்கள். அவர்களுக்குள் இருந்து திறமான கரப்பந்தாட்ட அணியை உருவாக்குவது அன்றைய காலத்தில் கடினமான காரியமாக இருக்கவில்லை.

அக்காலத்தே நடைபெறும் பாடசாலைக் கரப்பந்தாட்டப் போட்டிகளில் சிதம்பராக் கல்லூரி குறைந்த பட்சம் யாழ் மாவட்டத்தின் இறுதி ஆட்டத்தில் மோதுவது வழமை. யாழ். மாவட்டத்தில் சிங்கள மகாவித்தியாலயத்தின் வருகைக்குப் பின்னர், சிதம்பராவும் சிங்கள மகாவித்தியாலயமும் இறுதி ஆட்டத்தில் மோதுவதும் வழமையாக இருந்தது. அதுபோல குடாநாட்டை வெற்றி பெற்று அகில இலங்கை ரீதியான ஆட்டங்களிலும் சிதம்பரா முதன்மை பெற ஆரம்பித்தது. சாரணீயத்தில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் அகில இலங்கைக்கான மகாதேசாதிபதி கிண்ணத்தை வென்றது. இப்படி சிதம்பராக் கல்லூரி உருவாக்கிய சாதனையாளர்கள் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகமாக வெளியே வந்து அகில இலங்கை வரை முத்திரை பதித்தார்கள்.



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

# திரு. க. தேவசிகாமணி
## (பொட்டுக்கட்டி)



வல்வை புளூசின் கரப்பந்தாட்ட வரலாற்றில் எப்படி எஸ். கதிர்காமலிங்கம் முக்கியம் பெறுகிறாரோ அப்படியே கரப்பந்தாட்ட வீரர் பொட்டுக்கட்டிக்கும் முக்கியம் இருக்கிறது. இவரைப்போல ஏ.வி. அருணாசலம், தங்கவேல், தங்கவடிவேல், எஸ்.ஜெயபாலசிங்கம், பூரணச்சந்திரன், சபா அருட்பிரகாசம், சபா. இராஜேந்திரன் என்று பலருடைய சாதனைகள் வல்வை புளூசின் வரலாற்றுக்குள் கிளைத்துக் கிடக்கின்றன. முதலில் இது குறித்த பொட்டுக்கட்டி அவர்களுடைய நினைவலைகளைப் பார்ப்போம்.

யாழ்குடாநாட்டின் விளையாட்டு வீரர்களில் சிலருடைய பெயர்களைச் சொன்னால் அதிகமாக எல்லோரிற்குமே தெரியும் என்று கூறுவார்கள். இன்றும் புலம்பெயர்ந்து ஈழத்தமிழர்கள் வாழும் நாடுகளில் விளையாட்டுத்துறையோடு தொடர்புடைய அனைவரும் அறிந்த ஒருவராக பவனிவருபவர், வல்வை புளூஸ் விளையாட்டுக்கழக வீரர் பொட்டுக்கட்டி அண்ணாவாகும். இவர் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் செற்அப், ஓவர்கேம், கிரிக்கெற், பூப்பந்தாட்டம், நீச்சல், மெய்வல்லுனர் போட்டிகளில் குண்டெறிதல், தட்டெறிதல் (பரிதிவட்டம்) யவனின் (ஈட்டிஎறிதல்) நீளம்தாண்டுதல், ஓட்டம் ஆகிய பல விளையாட்டுக்களில் முத்திரை பதித்தவர். எனவேதான் அனைவரும் அறிந்த ஒருவராக இன்றும் இவர் வலம் வருகின்றார்.

30-12-1943ம் ஆண்டு பிறந்த இவரது இயற்பெயர் தேவசிகாமணி. செல்லப்பெயர் கட்டி. சிறுவயது முதலே கோவிலிற்கு சென்று நெற்றியில் பொட்டு வைத்துக்கொண்டுதான் பாடசாலை செல்வார். அதுபோல் பந்தடிக்கச் சென்றாலும் வேறு எங்கு சென்றாலும் அவரை நெற்றியில் பொட்டுடனேயே காணமுடியும். இதனாலேயே அனைவரும் இவரைப் பொட்டுக்கட்டி என்று அழைக்க ஆரம்பித்தனர்.

சிதம்பராக் கல்லூரியில் படிக்கும் காலத்தில் படிப்பில் உள்ள திறமை போல் விளையாட்டிலும் தனது திறமையைக் காட்டி வந்தவர். கைப்பந்தாட்டத்தில் செற்அப் 16வயதிற்குட்பட்டவர் பிரிவில் முதல் முதலில் சிவனேசன் தலைமையில் கரவெட்டி செகறட்காட் கல்லூரியுடன் விளையாடினார். அதுபோல உதைபந்தாட்டத்தில் 03 லெவனுக்காக சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் தேவராயாளி இந்துக்கல்லூரியுடன் விளையாடினார். அவர் பாடசாலைக்காக விளையாடியவர். கைப்பந்தாட்ட போட்டிகளில் இரண்டை எப்பொழுதும் நினைவு கூருவார்.

வடமராட்சி ரீச்சேஸ் அசோசியேசன் நடாத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இந்தப்போட்டியில் நெல்லியடி சென்றல் கல்லூரி கரவெட்டி ஞானசாரியாக்கல்லூரி, உடுப்பிட்டி அ.மி.கல்லூரி என்பவற்றை வென்று இறுதி ஆட்டம் பருத்தித்துறை காட்லிக் கல்லூரி மைதானத்தில் காட்லிக்கல்லூரியுடன் நடைபெற்றது.

சிதம்பராக்கல்லூரி சார்பாக தேவசிகாமணி (கட்டியண்ணா), கரிச்சந்திரன், தனபாலசிங்கம், சண்முகானந்தம், அமிர்தலிங்கம்,அருமைச்செல்வம், சக்திவேல் ஆகியோர் விளையாடினார்கள். ஹாட்லிக்கல்லூரி சார்பாக எங்கள் ஊரைச்சேர்ந்த சபா.இராசேந்திரன் (குட்டிமணிஅண்ணா)

இளம்பூரான் உட்பட பலர் விளையாடினர். போட்டி ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக இருந்தது. கட்டி அடித்தால் எதிர் அணியில் குட்டிமணி அடிப்பார். குட்டிமணி அடித்தால் எங்கள் அணியில் கரிச்சந்திரன் அடிப்பார். எங்கள் அணியில் கரிச்சந்திரன் அடித்தால் எதிர் அணியில் இளம்பூரான் அடிப்பார் இப்படிப்போட்டி கடுமையாக இருந்தது. சைடவுட்டுக்கள் மாறிமாறி மாறியதே தவிர, ஸ்கோர் ஏறுவதாக இல்லை. இரண்டு கோஸ்டியும் தலா 2-2 கேம் எடுத்திருந்தனர். ஐந்தாவது நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை வெளிச்சம் போதாமை பற்றி ஹாட்லிக்கல்லூரியின் புகாரை ஏற்று மத்தியஸ்தர் போட்டியை நிறுத்தி போட்டி திரும்ப இன்னொரு நாள் நடைபெறும் என அறிவித்து விட்டார்.

மறுமுறை குறிப்பிட்ட நாளில் ஹாட்லிக் மைதானத்தில் இரு கோஸ்டிகளும் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை அமிர்தலிங்கம் உங்க அம்மா ஐயா எல்லாம் மச் பார்க்க வந்திருக்கினம் என்று கூற, அவர் காட்டிய திசையைப் பார்க்கிறார் கட்டி. உண்மைதான் அவர் காட்டிய திசையில் கட்டியின் தாய தகப்பன் குடும்பமே நின்றுகொண்டிருந்தது. கட்டியரால் ஆச்சரியம் தாங்க முடியவில்லை "பந்தடி சோறு தராது..!" என்று அடிக்கடி கூறும் அவர் தாய் கூட, மகன் விளையாடுவதைப் பார்க்க வந்திருப்பதால் கட்டிக்குத் தலைகால் புரியவில்லை. போட்டி ஆரம்பமாகியது.

எதிர் அணியினர் போட்ட சேவீஸ் பந்தை கட்டி இலகுவாகப் பிரேக் பண்ணி அமிர்தலிங்கத்திடம் இலகுவாகக் கொடுக்க அமிர்தலிங்கம் அருமையான ஒரு லிப்ரிங் கொடுக்க கட்டி நல்லயம்பிங் நல்ல உயரத்தில் வைத்து ஒரு அடி எதிர் அணியினரின் தடுப்புச்சுவர்களை சட்டை செய்யாது பந்து அவர்களது முதல் லைனில் டம்என்ற சத்தத்துடன் நிலத்தில் விழுந்து பின் மேலெழுந்து பார்வையாளர்கள் கூட்டத்துக்குள் பாய்ந்தது. கைதட்டல், கைதட்டல், சிதம்பராக்கல்லூரி, வல்வெட்டித்துறை ஆதரவாளர்களின் கைதட்டல் என்றால் கேட்கவா வேண்டும்.

போட்டி தொடர்கிறது கட்டிக்கு 8 அடிநெற் 7அடிக்கு இறக்கப்பட்டதாக ஒரு பிரமை. கட்டி அடித்த பந்துகள் காற்றைக் கிழித்துக் கொண்டு சென்று நிலத்தை டும், டும் என்னும் சத்தத்துடன் தொடுகின்றன. காட்லிக்கல்லூரி வீரர்கள் நிலைகுலைந்து போனார்கள். சிதம்பரா ஆய்வாளர்கள் கட்டி அடி, கட்டி அடி என்று கோசமிட்டவாறே இருந்தார்கள். கட்டியும் தன் முழுத்திறமையையும் வெளிப்படுத்தி அடித்துக் கொண்டே இருந்தார். முதல் கேம் வெற்றி, இரண்டாம் கேம் வெற்றி, மூன்றாம் கேம் வெற்றி தொடர்ந்து மூன்று கேம்களையும் சிதம்பராக்கல்லூரி எடுத்து சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. எதிர் அணியினரால் ஒரு கேமைக்கூட எடுக்க முடியவில்லை.

போட்டி முடிவடைந்ததும் சிதம்பராக்கல்லூரியின் கோச்சர் திரு.தியாகராசா அவர்கள் கட்டி நின்ற இடத்திற்கு ஓடி வந்து கையைப்பிடித்துக்கொண்டு சொன்னது இப்படியென்று தெரிந்திருந்தால் சென்ற மாச்சிற்கே தேவசிகாமணியின் ஐயா அம்மாவைக் கூட்டிவந்திருப்போம் என்றார்.

கட்டி, கட்டி அண்ணாவாக மாறி யாழ்மாவட்டத்திலேயே சிறந்த கைப்பந்தாட்ட வீரனாக உருவெடுக்க முதல்படியாக அமைந்தது. இந்த சிதம்பரா எதிர் ஹாட்லிக் கைப்பந்தாட்டப்போட்டிதான். வடமராட்சி சாம்பியனாக வந்த காரணத்தால் சிதம்பராக்கல்லூரி அகில இலங்கை பாடசாலைக் கைப்பந்தாட்டப்போட்டியில் பங்குபெறும் தகமையைப்பெற்றது. கொழும்பு சென்று பாடசாலைக்கான கைப்பந்தாட்டப் போட்டியில் சிதம்பராக்கல்லூரி விளையாடியபோதும் கட்டியண்ணா தனது திறமையை வெளிப்படுத்த தவறவில்லை.

எங்கள் ஊரைச் சேர்ந்தவர்களும் போட்டியைப் பார்த்த மற்றவர்களும் கட்டியைப் பாராட்டி கைகொடுத்தார்கள். அகில இலங்கை கைப்பந்தாட்ட சம்மேளனம் தேவசிகாமணியை பாடசாலை இளைஞர் அணியில் விளையாட கொழும்பில் பயிற்சிக்கு அனுப்பும்படி சிதம்பராக்கல்லூரிக்கு கடிதம் மூலம் அறிவித்தல் அனுப்பியது. பாடசாலையில் கைப்பந்தாட்டப்பயிற்சி ஆசிரியர் திரு. தியாகராஜா அவர்கள் கொழும்பிலிருந்து வந்த கடிதத்தைக் காட்டி கொழும்பிற்கு பயிற்சிக்கு உன்னை அனுப்பும் நிலையில் பாடசாலை இல்லை. நீ விரும்பினால் பாடசாலை





கொடுக்கும் கடிதத்துடன் சென்று பயிற்சியில் பங்குபற்றலாம் என்று கூறிவிட்டார்.

கட்டி அண்ணா குடும்பத்தாரும் அவரை கொழும்பிற்கு பயிற்சிக்கு அனுப்பி செலவு செய்யும் அளவிற்கு வல்லமை இல்லாதவர்களாக இருந்தார்கள். பயிற்சியில் பங்கு பற்றாததனால் பாடசாலை இளைஞர் அணியில் விளையாட வெளிநாடு செல்லும் கட்டி அண்ணாவின் கனவு தகர்ந்தது. இன்று வரை கட்டிஅண்ணாவிற்கு இது மனச்சுமைதான். கட்டிஅண்ணாவிற்கு மட்டுமல்ல கட்டியண்ணாவைப் பயிற்றுவித்த ஆசிரியர் திரு.தியாகராஜா அவர்களிற்கும் வேதனைதான்.

இதுபற்றி கேள்வியுற்ற வர்ணகுலசிங்கம் மகன் அரசரத்தினம் அவர்கள் என்ன கட்டி நீ பார்த்த வேலை யாரிற்கும் கிடைக்காத சந்தர்ப்பம் உனக்கு கிடைத்தும் அதை நீ தவறவிட்டுவிட்டாய். என்னிடம் சொல்லியிருந்தால் நானே கொழும்பிற்கு அழைத்துச்சென்று பயிற்சி முடிய அழைத்து வந்திருப்பேன் என்று அன்பான வார்த்தைகளால் திட்டினார்.

இந்த அரசரட்ணம் அவர்கள் வல்லை புளூஸ் விளையாட்டுக்கழகம் ஆரம்பிக்க பாடுபட்டவர்களில் ஒருவராவார். இலங்கை பாடசாலை இளைஞர் அணியில் விளையாடாதபோதும், யாழ்மாவட்ட இளைஞர் அணியில் கப்டனாக விளையாடியது கட்டியண்ணாவிற்கு ஆறுதலே.

கட்டியண்ணா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. 1961ம் ஆண்டு கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது தலைவராக திரு.ஏ.வி அமிர்தேஸ்வரராசா உப தலைவராக முருகுப்பிள்ளை அவர்களும் செயலாளராக திரு. கதிர்காமர் அவர்களும் தெரிவானார்கள். கழகத்தை உருவாக்க முழு முயற்சி எடுத்தவர்கள் திரு.ஏ.வி.அருணாச்சலம் அவர்கள், திரு.வி. அரசரட்ணம் அவர்கள், திரு.ஆர். சுந்தரலிங்கம் அவர்கள், திரு.எஸ். தர்மரத்தினம் அவர்கள், திரு.எஸ். யோகச்சந்திரன் அவர்கள், திரு.வி. கார்த்திகேயன் அவர்கள், திரு.ஏ.எஸ். இராசேந்திரன் அவர்கள், திரு.எஸ். பூரணச்சந்திரன் அவர்கள் இன்னும் பலரது முயற்சியாகும்.

புளூஸ் விளையாட்டுக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோதே கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் இரண்டிலும் சிறந்த நிலையில் இருந்தது. 1962ம் ஆண்டு பருத்தித்துறை மாவட்டக் கைப்பந்தாட்ட கோஸ்டி தெரிவில் வல்வை புளூஸ் கழக வீரர்கள் திரு.எஸ். குகதாஸ், திரு.எ.எஸ்.அருட்பிரகாசம் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் ஏ.வி.அருணாசலம், கே.தேவசிகாமணி ஆகிய இருவரில் ஒருவரை அழைத்துச் செல்வதாகவும் இருவரில் யாரை அழைத்துச் செல்வது என்பதை புளூஸ் விளையாட்டுக்கழகம் முடிவு செய்யட்டும் என்று கூறிவிட்டார்கள்.

இந்த விடயம் பற்றி குகதாஸ் அவர்கள் கட்டியண்ணாவிடம் உன் நிலைப்பாடு என்ன என்று கேட்டபோது, அவர் அருணாச்சலம் அண்ணா தன்னை விடசிறந்த வீரர் எனவும் அவர் சேவிஸ் பிரேக் பண்ணுவதில் வல்லவர் என்றும் நல்ல லிப்ரர், எதிர் அணியினர் எத்தனை வேகமாக சேவிஸ்போட்டாலும் அதனை இலகுவாக பிறேக்பண்ணுவதில் வல்லவர் என்றும் எத்துணை வேகமாக அடித்துவரும் பந்துகளையும் பவரால் (மணிக்கூட்டிற்கும் முழங்கைக்கும் இடைப்பட்டபகுதி) ரிசீவ் பண்ணி நல்ல முறையில் லிப்ரரிடம் கொடுக்கும் ஆற்றல் கொண்டவர் என்றும், அவர் போடும் சேவிஸ் நிலத்திலிருந்து பனை உயரத்திற்கு மேல் சுருண்டபடி எழுந்து கீழ்நோக்கி எதிர் அணியினரின் எல்லைக்கோட்டினுள் வரும், வரும்போது காற்றின் வேகத்திற்கேற்ப சிறிது ஆட்டத்துடன் வரும்.

எதிர் அணியினர் ரிசிவ் பண்ணுவதற்கு கையைக் கொடுத்தால் கையில் பட்டு அங்கு இங்கு தெறித்துவிடும். இதனால் இந்த சேவிசிற்கு எதிர் அணியினர் மிரண்டு விடுவார்கள். (தற்போது இந்த சேவிஸ் தடைசெய்யப்பட்டுவிட்டது) இத்துடன் எத்தனை சிறந்த அணியாக இருந்தாலும் அருணாசலம் அண்ணா தயக்கம் அடையாது எங்கள் அணி வீரர்களை உற்சாகப்படுத்திக்கொண்டு கலகலப்பூட்டிக்கொண்டிருப்பார். அவருடன் ஒப்பிடுகையில் தான் கத்துக்குட்டிதான். எனவே திரு.அருணாசலண்ணை அவர்களையே அழைத்துச் செல்ல சொன்னார்.

கட்டியண்ணா கூறியதை குகதாஸ்

அண்ணா மூலம் கேட்ட அருணாசலம் அண்ணா கட்டியண்ணாவிடம் வந்து நீ என்ன விளையாடுகிறியோ..? இப்படித்தான் பள்ளிக்கூடத்தால் கொழும்பு செல்ல வந்த சந்தர்ப்பத்தையும் நீ யாரிடமும் சொல்லாது வீணடித்துவிட்டாய். இதனால் இங்கு எல்லோரும் உன்னைத் திட்டிக்கொண்டிருக்கினம் இப்பவும் என்னை கூட்டிச் செல்லும்படி குகதாசிடம் சொன்னாயா? இப்ப பருத்தித்துறை மாவட்ட ரீமிற்காக விளையாட கொழும்பு செல்லும் சந்தர்ப்பத்தையும் நழுவவிடப்பார்க்கின்றாய். நான் கொழும்பு போய் எத்தனையோ மச் விளையாடிவிட்டன். நீ வளரும் விளையாட்டு வீரன் கொழும்பு சென்று அங்கு நடைபெறும் கைப்பந்தாட்டப் போட்டியைப் பார்ப்பதே உனக்கு பயனுள்ளதாக இருக்கும்.

பாடசாலை யூத்ரீம் பயிற்சிக்கு பணம் இல்லாத காரணத்தால் செல்லாமல் விட்டாய். இது பருத்தித்துறை மாவட்ட கைப்பந்தாட்ட சங்கத்தின் செலவில்தான் சென்றுவர இருக்கின்றாய் கைச்செலவிற்கு நான் பணம் தருகின்றேன் நீ கொழும்பிற்கு சென்று வா குகதாசிடமும் நான் ஏற்கனவே உன்னை கூட்டிச் செல்லுமாறு கூறிவிட்டேன் என்று கூறிவிட்டார். கட்டியண்ணா எப்போதும் சொல்வது கட்டியண்ணா விளையாட்டு வீரராக வளர்ந்தார் என்பதை விட அரசண்ணா, அருணாசலண்ணா, தருமண்ணா, மாபோர்கடம் சித்தப்பா, மார்க்கண்டு அண்ணா போன்ற அபிமானிகளால் வளர்க்கபட்டார் என்பதே.

பருத்தித்துறை மாவட்ட கைப்பந்தாட்ட தலைவராக கரவெட்டியைச் சேர்ந்த கனகசபை (கனகு) கப்டனாகவும் வல்லை புளூஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த திரு.வ.குகதாஸ் அவர்கள் உதவிக் கப்டனாகவும் வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஏ.எஸ்.அருட்பிரகாசம், ச.க.தேவசிகாமணி (கட்டியண்ணா) கரவெட்டி ஞானசாரியாக் கல்லூரிக்காக விளையாடிய தம்பிராசா, ஸ்பேஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த இரத்தினசிங்கம், உடுப்பிட்டியைச் சேர்ந்த (சிதம்பராக்கல்லூரியின் பழைய மாணவர்) இராஜேஸ்வரன் இன்னும் சிலரும் கைப்பந்தாட்டப் போட்டியில் அங்கம் வகித்தனர்.

1962ம் ஆண்டு வல்வை புளூஸ் கைப்பந்தாட்ட அணி சிறப்பாக இருந்த காரணத்தினால் தான் எட்டுப்பேர் கொண்ட பருத்தித்துறை மாவட்ட கைப்பந்தாட்ட குழுவில் மூவரிற்கு இடம் கிடைத்தது. பருத்தித்துறை மாவட்ட கோஸ்டியைச் சேர்ந்தவர்கள் அவர்களிற்கு நடக்கவிருந்த போட்டி நாளிற்கு முதல்நாளே கொழும்பு சென்றடைந்தனர்.

முதல்நாள் மாலை நடைபெறும் கைப்பந்தாட்டப் போட்டியைப் பார்க்கச் சென்றனர். கவர்மன்ற் சேவிஸ் மைதானத்தில் ஐந்து பிரிவுகளாக போட்டி நடத்துவதற்காக ஐந்து கோட் போடப்பட்டு ஆயத்த நிலையில் இருந்தனர். பல மாவட்ட வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். ஒரு குழுவில் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஒருவரைப் பார்த்தபோது எங்களிற்கு ஒரே சந்தோசம் அவர் எங்கள் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவரும் சிதம்பராக்கல்லூரியின் பழைய மாணவரும் அகில இலங்கை கைப்பந்தாட்ட வீரருமாகிய திரு.சோ.கதிர்காமலிங்கம் அவர்களாகும்.

எங்களைக் கண்டதும் திரு.கதிர்காமலிங்கம் அவர்கள் ஓடிவந்து குகதாஸ் அண்ணாவின் கையைப் பிடித்துக்கொண்டு நலம் விசாரித்ததுடன் தங்கள் கல்லோயா அணியிற்கும் ஹம்பகா அணியிற்கும் போட்டி இருப்பதாகக் கூறினார். திரு.கதிர்காமலிங்கம் அவர்களும் குகதாஸ் அண்ணாவும் சிதம்பராக் கல்லூரியில் ஒன்றாகப் படித்து கைப்பந்தாட்ட உதைபந்தாட்ட போட்டிகளில் கல்லூரிக்காக ஒன்றாக விளையாடியவர்கள்.

இலங்கையில் அந்த நேரத்தில் மிகவும் பலம் வாய்ந்த கோஸ்ரிகள் கல்லோயாவும் ஹம்பகாவும். இரண்டு கோஸ்ரிகளும் பல அகில இலங்கை விளையாட்டு வீரர்களைக் கொண்டவை. மாறிமாறி சம்பியனாக வந்தவர்கள். எனவே, போட்டி பலமானதாக இருக்கும் என்னும் எதிர்பார்ப்புடன் நின்றுகொண்டிருந்தோம். போட்டி ஆரம்பமானது.

பக்கத்துப் பக்கத்து மைதானங்களிலும் போட்டிகள் நடந்தபோதும், கல்லோயாவும் கம்பகாவும் விளையாடும் போட்டியைப் பார்ப்பதற்கே ரசிகர்கள் அதிகமாக நின்றார்கள். நாங்களும் எங்கள் வீரரும் நின்று விளையாடுகின்றார் என்ற பெருமையோடு போட்டியைப் பார்த்துக்கொண்டிருந்தோம்.





எதிர்பார்த்தது போலவே போட்டி விறுவிறுப்பாக இருந்தது. கதிர்காமலிங்கம் அவர்களின் இடதுகை அடி, வலது கை அடி எதிர் அணியினரின் முதல் லைனில் பலத்த சத்தத்துடன் விழுந்து விழுந்து ரசிகர்களைத் தாண்டிப் பறந்து கொண்டிருந்தன.

அவரது இடதுகை வலதுகை அடியை எதிர் அணியினர் தடுக்க முயன்றபோதும் அது பலனளிக்கவில்லை. இடது கையால் அடிப்பார் என்று எதிர்பார்த்தபோது, வலதுகையால் அடித்துவிடுவார். வலது கையால் அடித்துவிடுவார் என்று எதிர்பார்த்தபோது, இடது கையால் அடித்துவிடுவார். இதற்கு முன்னர் நான் திரு. கதிர்காமலிங்கம் அவர்களின் விளையாட்டைப் பார்த்திருக்கின்றேன். அவருடன் கூட நின்று விளையாடியுமிருக்கின்றேன். ஆனால் இங்கு நான் பார்த்த அடி அப்பாடா சொல்லவே முடியாத அளவு வேகமான அடிகள். அதுபோலவே எதிர் அணியினரின் அடியை மறிப்பதிலும் சேவிஸ், பிரேக்கிங், ரிசீவிங் என்பனவற்றிலும் சிறந்து காணப்பட்டார்.

அன்று அவர்களின் விளையாட்டுப் பார்த்தபின்தான் ஒரு தமிழ் மகனிற்கு ஏன் அகில இலங்கை கப்டன்சிப் கொடுக்கப்பட்டது என்பதை உணரமுடிந்தது. எதிர் அணியினரும் சளைத்தவர்கள் அல்ல. அடிக்கு அடி கொடுத்துக் கொண்டுதான் இருந்தார்கள். இரண்டு கோஸ்ரிக்கும் ஆதரவாளர்கள் நிறைய இருந்தார்கள். ஆதரவாளர்களின் ஆரவாரம் கரகோசம் நிறைய இருந்தது. கதிர்காமலிங்கே என்று சிங்களத்தில் ஏதோ சொல்லி சத்தம் இடுகின்றார்கள்.

அவர்கள் கதிர்காமலிங்கம் அவர்களின் சிங்கள ஆதரவாளர்கள் என்பதை உணரமுடிந்தது. அவர் விளையாட வருகின்றார் என்று தெரிந்தாலே அவரது சிங்கள ஆதரவாளர்கள் வந்து குவிந்துவிடுவார்களாம். அவரை உற்சாகப்படுத்தி கதிர்காமலிங்கே கதிர்காமலிங்கே அடி அடி என்று சிங்களத்தில் சொல்லிக் கொண்டிருப்பார்களாம். இதனை அன்று எங்கள் கண் ஊடாகப் பார்க்க முடிந்தது.

வல்வெட்டித்துறையில் திரு.கதிர்காமலிங்கம் அவர்கள் கைப்பந்தாட்டப் போட்டிகளில் அடிக்கும் வேகத்தைப் பார்த்த அவரது நண்பர்கள் அவர் பந்தைக் கையால் அடிப்பதில்லை மட்டையால்தான் அடிக்கின்றார் என்று கூறுவார்களாம். அவரை மட்டையன் என்று அவரது நண்பர்கள் அவரை அழைத்தார்கள்.

இரண்டு அணிகளும் சமபலம் கொண்ட அணியாக இருப்பதால் ஆட்டம் அனல் பறந்து கொண்டிருந்தது. இதுபோன்று அனல் பறக்கும் போட்டியை இதற்கு முன் பார்த்ததில்லை. சேவிசிற்கு சேவிஸ், பிளக்கிங்கு பிளக்கிங், அடிக்கு அடி என இரு கோஸ்ரியினரும் ஒருவரிற்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதைக் காட்டிக் கொண்டிருந்தனர்.

இரண்டு அணிகளும் தலா 02-02 என்ற நிலையில் கடைசிக் கேம். இருபக்கமும் அடிகள் இடிபோல முழங்குகின்றன. 12ற்கு 11என்ற ஸ்கோர் நிலையில் ஹம்பகா முன்னிலையில் நிற்கின்றது. சைடவுட் மாறி திரு.கதிர்காமலிங்கம் அவர்கள் முன்னிலைக்கு வருகின்றார். ஆதரவாளர்கள் கைதட்டி உற்சாகப்படுத்தினார்கள். கதிர்காமலிங்கம் அவர்களின் அடி அனல் பறக்கின்றது. கோல் 12, 12, 12, 13, 14, 13, 14, 13, 15 மின்னல் அடியுடன் திரு.கதிர்காமலிங்கம் அவர்கள் வெற்றிப் புள்ளியைத் தொடுகின்றார்.

போட்டி முடிவடைந்ததால் ஆதரவாளர்கள் திரு.கதிர்காமலிங்கம் அவர்களிற்கும் மற்றவர்களிற்கும் கைகொடுத்து பாராட்டுக்களை தெரிவித்தனர். நாங்களும் திரு.கதிர்காமலிங்கம் அவர்களிற்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்தோம். இறுதிப்போட்டிக்குப் போக வேண்டிய ஹம்பகா முதல் ரவுண்டில் வெளியேறியது மனதிற்கு கொஞ்சம் சங்கடமாகத்தான் இருந்தது. அன்று திரு. கதிர்காமலிங்கம் அவர்கள் அடித்த அடி என்றும் என் நெஞ்சைவிட்டு நீங்காத நினைவாக இருந்து கொண்டிருக்கின்றது.

வல்வெட்டித்துறையில் பிறந்த திரு. கதிர்காமலிங்கம் அவர்கள் அகில இலங்கைக் கைப்பந்தாட்ட அணிக்கு கப்டனாக இருந்தார் என்பது வல்வைத் தாய்க்குப் பெருமை. சிதம்பராக்கல்லூரியின் பழைய மாணவன் அகில இலங்கைக் கைப்பந்தாட்ட அணிக்கு கப்டனாக இருந்தார் என்பது எங்கள் பாடசாலைக்குப் பெருமை. வல்வை புளூஸ் விளையாட்டுக்கழக வீரர் ஒருவர் அகில

இலங்கைக் கைப்பந்தாட்டக் குழுவிற்கு கப்டனாக இருந்தார் என்பது எங்கள் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் பெருமை.

இந்தச் சாதனைவீரர் கதிர்காமலிங்கம் அவர்கள் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. சோமசுந்தரம் இலட்சுமிப்பிள்ளை அவர்களின் புதல்வராவார். இவர் வல்வெட்டித்துறை திரு.செல்வச்சிவம் சிவரூபராணியைத் திருமணம் செய்து சேகர், மீரா எனும் செல்லக்குழந்தைகளிற்குத் தந்தையானவர்.

மறுநாள் முன்னரே அறிவித்தபடி பருத்தித்துறை மாவட்டத்திற்கும் நுவரெலியா மாவட்டத்திற்குமான போட்டி ஆரம்பம் முதலே விறுவிறுப்பாகத்தான் இருந்தது.

கட்டியண்ணா தன்னைக் கதிர்காமலிங்கமாக நினைத்து அடிக்க ஆரம்பித்துவிட்டார். குகதாஸ் அண்ணாவும் தம்பியா அடி தம்பியா அடி என்று கட்டியை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார். கட்டியும் நல்லா பிரேக்கிங் கொடுத்து கிடைத்த லிப்ரிங்கை அடித்தவண்ணமே இருந்தார். அத்துடன் நல்ல ரிசீவிங் நல்ல பிளக்கிங் என நன்றாக விளையாடிக் கொண்டிருந்தார். குகதாஸ் அண்ணா அனுபவம் மிக்க விளையாட்டு வீரர். கட்டியை விட சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்தார்.

அருட்பிரகாசம் அவர்களும் தன்பங்கிற்கு மற்றவர்களிற்கு சளைக்காமல் விளையாடிக்கொண்டிருந்தார். பருத்தித்துறை மாவட்ட வீரர்களும் தங்களால் முடிந்தவரை கஷ்டப்பட்டு விளையாடினார்கள். போட்டி விறுவிறுப்பாக இருந்தது. நுவரெலியா அணியில் விளையாடிய மணி என்னும் வீரர் மிகவும் திறமையாக விளையாடினார். அவரிற்கு ஈடுகொடுத்து விளையாடுவது கஷ்டமாகத்தான் இருந்தது.

இதனால் முதல் இரண்டு கேமையும் கடைசிப் புள்ளிவரை போராடித் தோற்றுவிட்டோம். இரண்டு கேமை இழந்தபோதும் சளைக்கவில்லை. மற்ற மூன்று கேம்களை வெல்வோம் என்ற நம்பிக்கையுடன் விளையாடினோம். மூன்றாவது கேமை பருத்தித்துறை மாவட்டம் எடுத்தது. இதனால் பருத்தித்துறை மாவட்ட வீரர்கள் உற்சாகம் அடைந்தார்கள். எதிர் நுவரெலியா அணியினரும் சுதாகரித்துக் கொண்டனர்.

இரு கோஸ்ரியினரும் மிகவும் அவதானமாகவும் சிறப்பாகவும் விளையாடிக் கொண்டிருந்தனர். பலத்தபோட்டியின் பின் நுவரெலியா அணி 18-20 என்ற டியுஸ் புள்ளியில் பருத்தித்துறை மாவட்டத்திடம் இருந்தது. நான்காவது கேமை வென்று 03-01 என்ற கேம் கணக்கில் வெற்றிபெற்றது. முதல் சுற்றிலேயே நாங்கள் வெளியேறினோம். தோல்வி கண்டு வெளியேறியபோதும், அருணாசலம் அண்ணா சொன்னதுபோல் கட்டியால் அங்கு விளையாடிய போட்டி பார்த்த போட்டிகளிலிருந்து நிறைய விடயங்களை அறிந்து கற்றுக்கொள்ள முடிந்தது.

கட்டி அண்ணாவிற்கு இந்த கொழும்பு சுற்றுப்பயணம் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. செற்றப் கேமைப் பொறுத்தமட்டில் வல்வை புளூஸ் ஆரம்பித்த காலத்திலிருந்து 1990ம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் கொடிகட்டிப் பறந்த பொன்னான காலம். இருந்தபோதும், 1962ற்கு முன் சிறந்த செற்றப் அணியாக இருந்தது.

ஆரம்பித்த காலத்தில் அரியாலை கைப்பந்தாட்ட அணியுடன் விளையாடி பல போட்டிகளில் தோற்றுள்ளது. அரியாலை கைப்பந்தாட்ட அணியில் திரு. சீவரெத்தினம், திரு. ஏகாம்பரமாஸ்ரர், சதாசிவ மாஸ்ரர் என பல திறமைமிக்க வீரர்களும் இருந்தார்கள். இவர்களில் திரு.சீவரத்தினம் அவர்கள் அகில இலங்கை கைப்பந்தாட்டத்தில் உள்ளார். அவர் பந்தை அடிக்க எழும்பும்போது தலை கழுத்துவரை நெற்றுக்கு மேலிருக்கும். அடியும் சொல்லமுடியாத வேகத்தில் நிலத்தில் வீழ்ந்து துள்ளும்.

மற்றவர்களும் குறைந்தவர்கள் இல்லை. இதனால் புளூஸ் ஆரம்பித்த காலங்களில் இவர்களுடன் விளையாடி வெல்வது கஷ்டமாக இருந்தது. இருந்தபோதும் நம்பிக்கையைக் கைவிடவில்லை. புளூஸ் அணி படிப்படியாக முன்னேற்றம் கண்டுகொண்டு வந்தது. 1965ம் ஆண்டளவில் காங்கேசந்துறைக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் இறுதிப்போட்டி எங்களிற்கும் அரியாலைக்கும். வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக குகதாசஸ் அண்ணா, அருட்பிரகாசம் அண்ணா, அருணாச்சலம் அண்ணா, திரு.யோகச்சந்திரன், கார்த்திகேயன், தேவசிகாமணி, அமிர்தலிங்கம், தங்கவேல் ஆகியோர் விளையாடினார்கள்.

ஆரம்பத்திலேயே போட்டி விறுவிறுப்பாக இருந்தது. எங்கள் ஊர் ஆதரவாளர்கள் மாத்திரமல்ல, காங்கேசந்துறை ஆதரவாளர்களும் எங்களிற்கே ஆதரவு தந்தார்கள். கட்டிஅடி, குகதாஸ் அடி, அருள் அடி என்ற ஆதரவாளர்களின் டானிக் எங்களை அந்தரத்தில் பறக்கவைத்தது. சீவரெத்தினம், பத்மநாதன் அடிக்கும் பதிலடியாக குகதாஸ், அருட்பிரகாசம், கட்டி ஆகியோர் மாறி மாறி அடித்துக் கொண்டிருந்தனர்.

போட்டி கடுமையானதாக இருந்தது. இரண்டு அணிகளும் கேம் எடுத்து நான்கு கேமில் 02-02 என்ற சமநிலையில் ஐந்தாவது வெற்றிதோல்வியை நிர்ணயிக்கும் போட்டியும் ஆரம்பமானது. ஆரம்பம் முதலே புளூஸ் விளையாட்டுக்கழகம் முன்னிலை பெற்று வந்தது. 14-10 ஒரு புள்ளி எடுத்தால் எங்கள் அணி வெற்றி. அரியாலை வீரர்கள் அடித்த பந்தை அருணாசலன் அண்ணா ரிசீவ்பண்ணி யோகச்சந்திரனிடம் கொடுக்க யோகச்சந்திரன் அழகானதொரு ரவல்செற்றிங் கொடுக்க அருட்பிரகாசம் அவர்கள் ஒற்றைக்காலில் எழும்பி ஒருஅடி சதாசிவம் மாஸ்ரரின் கையில்பட்டுத் தெறித்துக் கொண்டு எல்லைக் கோட்டிற்கு வெளியே சென்றது.

ஆதரவாளர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். வென்ற எங்களிற்கு கைகொடுக்கும் போது திரு.சீவரெட்ணம் அவர்கள் சொன்னது இனி உங்களை வெல்வது கஷ்டம்தான் என்றார். இந்த வெற்றி புளூஸ் விளையாட்டுக்கழகத்திற்கு மகத்தானதும் மறக்கமுடியாததுமான வெற்றியாகும். காரணம் திரு.சீவரட்ணம் அவர்கள் கூறியதுபோல, அந்தப்போட்டியின் பின் புளூஸ் கைப்பந்தாட்ட அணியை 1990ம் ஆண்டுவரை ஒருமுறையும் வெல்லவில்லை.

பின்நாளில் திரு.சீவரெத்தினம், திரு. ஏகாம்பரம் மாஸ்ரர், திரு.பத்மநாதன், திரு. குமாரையா ஆகியோர் யாழ். கைப்பந்தாட்ட சங்கக்கூட்டத்தில் திரு.கே.தேவசிகாமணி (கட்டியண்ணா) அவர்களைக் கைப்பந்தாட்ட பயிற்சியாளராக அறிவித்தனர். வை.எம். சி.ஏ நடத்திய பயிற்சி முகாம் யாழ் சென்ரல் கல்லூரியில் ஆண், பெண் இருபாலரிற்கும் நடைபெற்றபோதே முதன்முதலில் கட்டியண்ணா பயிற்றுவிப்பாளராக அழைக்கப்பட்டார். இந்த கைப்பந்தாட்ட முகாமில் நூற்றிற்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டார்கள்.

கட்டியண்ணா பயிற்சியாளராக அறிவிக்கப் பட்டது, கட்டியண்ணாவிற்கு மட்டுமல்ல, வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் அவர்கள் கொடுத்த கௌரவமே. உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம் இரண்டிலும் சிறந்து விளங்கிய பலர் தொழில் நிமித்தம் பிற ஊர்களிற்கு கப்பலிலும், வெளிநாட்டிற்கும் சென்றார்கள். அவர்கள் முக்கியமாக குகதாஸ் அண்ணா, அருட்பிரகாசம் அண்ணா, தர்மண்ணா, அழகண்ணா, கார்த்திகேயன், யோகச்சந்திரன் மாஸ்ரர், பூரணச்சந்திரன், ஏ.எஸ் இராஜேந்திரன், மயிலேறும்பெருமாள், சி.சந்திரலிங்கம், இந்திரலிங்கம் (பழம்), சின்னத்துரைராசா இன்னும் பலர். இவர்களில் சிலர் வல்வை வரும்போது கைப்பந்தாட்டம் உதைபந்தாட்டம் என்பவற்றில் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்திற்காக விளையாடி வந்தார்கள்.

தங்கவேல், அருணாசலம் அண்ணா, கட்டியண்ணா, தனபாலசிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோர் தொடர்ந்து விளையாடி வந்தனர். இவர்களுடன் எஸ்.ஜெயபாலசிங்கம், தங்கவடிவேல், செல்வச்சந்திரன், குகப்பிரசாதன், ஏ.இரத்தினசிங்கம், சிவசண்முகநாதன், ஜெயச்சந்திரன், எஸ்.நடனலிங்கம், இராதா இராதகிருஸ்ணன், கதிர்காமலிங்கம், பி.ரி. பாலச்சந்திரன் ஆகியோரும் பின்பு இணைந்து விளையாடினார்கள்.

# வல்வை புளூஸ் புகழ்பெற்ற ஆட்டங்கள்:

வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்திற்கு குடாநாட்டில் இருந்த தமிழர்களின் விளையாட்டுக்கழகங்கள் அதிகம் சவாலாக இருந்தன என்று கூறமுடியாது. புளூஸ் வீரர்கள் செற் - அப் கேம் ஆட்டத்தில் குடாநாட்டின் அனைத்துக் கழகங்களையும் வெற்றிபெற்று முதன்மை இடத்திற்கு வந்துவிட்டார்கள். ஒரு காலத்தில் அரியாலை வகித்த முதலிடமும் வீழ்ச்சியடைய அதன் பின்னர் மட்டுவில் மோகனதாஸ், அச்சுவேலி யுனைட்டட் போன்றன வல்வையுடன் பல ஆட்டங்களில் மோதியுள்ளன. ஆனால் இவர்கள் அனைவரும் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழத்தின் நல்ல நண்பர்களும் நல்ல ரசிகர்களாகவுமே இருந்தார்கள். கடும் போட்டிகளில் ஈடுபட்ட அதே நேரம் மிகச் சிறந்த நண்பர்களாக இன்றுவரை நீடித்தும் வருகிறார்கள். எல்லோருமே வல்வை வந்தால் புளூசின் நட்சத்திரவீரன் பொட்டுக் கட்டியை பார்க்காமல் போவது கிடையாது. ஆனால் முக்கியமான எதிரணிகளாக இருந்து மோதியவை இராணுவமும், போலீசுமே.

யாழ். குடாநாட்டிலும், கிழக்கு மாகாணத்திலும் நடைபெறும் போட்டிகளில் இறுதியாட்டங்களில் வல்வை புளூஸ் வி.கவுடன் மோதுவது ஒன்று இராணுவம் இல்லை போலீஸ். இதில் முக்கியமான ஆட்டம் ஒன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. ஈழநாடு பத்திரிகை நடாத்திய மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இதுவாகும். அன்றைய தினம் யாழ். கோட்டைக்குள் மாலை நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் வெற்றிபெற்றுக்கொண்டு இரவு மின்னொளியில் இராணுவத்துடன் மோதியது. அந்தப் போட்டிக்கு குடாநாட்டின் புகழ்மிக்க மத்தியஸ்த்தர் குமரையா விசில் செய்தார்.

இராணுவத்துடன் இறுதியாட்டம், பொட்டுக்கட்டி போட்ட சேவீஸ் அவருடைய உடலில் பட்டுவிட்டதெனக் கூறிய இராணுவம் போட்டியிட மறுத்தது. பின்னர் புள்ளி ரீதியாக முன்னணியில் நிற்கும் அணியே வெற்றிபெறும் என்று தெரிவித்துவிட்டார் மத்தியஸ்தர். புள்ளிகளில் பின்னணியில் நின்ற இராணுவம் போட்டியை தொடர்ந்தது. வல்வை புளூஸ் அமோக வெற்றிபெற்று சாம்பியனானது.

அடுத்த நாள் வெளியான ஈழநாடு பத்திரிகையின் முன்புறத்தில் நெற்றுக்கு மேலால் பாய்ந்து அடிக்கும் பொட்டுக்கட்டியின் படம் பிரசுரமாகியிருந்தது. அவருடைய மின்னலடியில் வல்வை புளூசின் அமோக வெற்றி

சாத்தியமானதென புகழ்ந்து எழுதியிருந்தது. அன்று வல்வை புளூஸ் அணியில் விளையாடிய வீரர்களின் வேகம், இலாவகம், துணிச்சல், வீரம் இவைகளை இன்று நினைத்தாலும் மயிர்க்கூச்செறியும்.

## லாலாசோப் கரப்பந்தாட்டப் போட்டிகள் :

ஈழநாடு, தினகரன், காணிவல்கள் என்று எங்கு பாரிய போட்டிகள் நடைபெற்றாலும் வல்வை புளூஸ் செற்றப்கேம் அணியின் சாதனை அங்கெல்லாம் முத்திரை பதிக்கும். இதுபோல எழுபதுகளில் பெரும் புகழ் பெற்ற ஆட்டமாக அமைந்தது மின்னொளியில் நடைபெற்ற லாலாசோப் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியாகும். இப்போட்டி மூன்று தடவைகள் பேரெழுச்சியுடன் நடைபெற்றது. மூன்று தடவையும் செற் அப் கேமில் இறுதியாட்டத்தில் வல்வை புளூஸ் விளையாடியது. மறுபுறம் இராணுவம், போலீஸ், நுவரெலியா மணியோசை, திருமலை சைனிங்ஸ்டார்ஸ் போன்ற கழகங்கள் இறுதியாட்டங்களில் விளையாடின.

அந்தப் போட்டிகளுக்கு வல்வையில் இருந்து லொறிகள், கார்கள் என்று ஏகப்பட்ட வாகனங்கள் அணிவகுத்துப் போகும். அத்தருணம் வல்வை புளூசை வென்றுவிட வேண்டும் என்பதே எதிரணியின் ஒரேயொரு





நோக்கமாக இருக்கும். இராணுவமோ தியத்தலாவை, அனுராதபுரம், கொழும்பு என்று சகல இடங்களிலும் அகில இலங்கை அணிக்கு விளையாடும் வீரர்களுடன் வந்து சேரும். ஆரம்ப ஆட்டங்களில் விளையாடிய வீரர்கள் எவரும் இறுதியாட்டத்தில் வல்வை புளூசுடன் விளையாடும்போது இருக்கமாட்டார்கள். நெற்றின் மேல் றிம்மை நெருங்கியபடி ஆஜானுபாகுவான உயரமான ஆட்டக்காரர்களோடு மைதானம் வந்திருப்பார்கள். வல்வை புளூஸ் மீது அவர்கள் கொண்ட அச்சத்தை அவர்கள் கொண்டு வந்திருக்கும் செலக்டட் அணியில் காணலாம்..

முதலில் ஒரு போட்டியில் விளையாட எழுதிக் கொடுத்த வீரர்களை தவிர பெயரை பதியாத புதிய வீரர்கள் வருவது மரபிற்குப் புறம்பானது. அன்று சேவீஸ் உடலில் உராய்த்துவிட்டதால் வல்வைக்கு எதிராக முறைப்பாடு கொடுத்த இராணுவ அணி முற்றிலும் புதியவர்களோடு இறுதியாட்டத்திற்கு வந்திருக்கும். அப்போதெல்லாம் வல்வை புளூஸ் முறைப்பாடு செய்து வெற்றியை தனதாக்க வழியிருக்கிறது. ஆனால் அதுவல்ல வீரம், எத்தனை பேர் ஒன்றாகச் சேர்ந்தாலும் நாம் ஒரே ஒரு அணி மாற்றமில்லாமல் உங்களை சந்திப்போம் என்ற விதியை வல்வை புளூஸ் எழுதியது. இதில் வெற்றி தோல்விகள் மாறி மாறி வந்துள்ளன. லாலாசோப் போட்டியின் போது பெருமளவு ஆதரவாளர்களை பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவம் இறக்கும். அப்போது ஆதரவாளரிடையே மெல்லிய முறுகல் நிலை இருக்கும்.

எப்படியோ வல்வை புளூஸ் தோற்கடிக்கப்பட வேண்டுமென்ற நோக்குடன் பல செலக்டட் அணிகள் செற் அப் கேமில் மோதியுள்ளன. அப்படி மோதுவோர் விளையாட்டு முடிவில் வல்வை புளூஸ் வீரர்களுக்குக் கை கொடுத்துவிட்டுப் போவார்கள். ஒரு சிறிய ஊரில் இத்தகைய சிறந்த வீரர்கள் ஒன்றாக இருக்கிறார்களே என்ற பெரு மூச்சுடன் அவர்கள் விடைபெறுவார்கள். அந்தளவு அற்புதமும், இளமையும், வீரமும் ஜொலிக்க விளையாடிய அவர்களுடைய ஆட்டங்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவையாகும்.

## மற்றைய ஆட்டங்கள் :

இவற்றில் முக்கியமானது வதிரி தமிழ் மன்றம் நடாத்திய கரபந்தாட்டப் போட்டி. அதில் ஏ.பி.சீ என்று மூன்று பிரிவுகளாக போட்டிகள் நடைபெற்றன. அதில் முக்கியமானது செற் அப் கேமாக இருந்தது. கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகத்தை ஐந்தாவது கேமில் சைபர் புள்ளியில் வெற்றிகொண்ட பின் வல்வை புளூஸ் அரையிறுதியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்துடன் மோதியது. அந்த ஆட்டத்திலும் வெற்றிபெற்று இறுதியாக யாழ். போலீசுடன் மோதியது. அக்காலத்தே அகில இலங்கை போலீஸ் அணியில் பெர்ணாண்டோ என்ற வீரர் இருந்தார். அவருடைய உயரம் ஆறடிக்கும் மேலாக இருக்கும். அவருக்கு வரும் முதல் மூன்று லைன்களிலும் மோசமான தாக்குதலை நடாத்துவார். பந்து முதலாவது லைனில் விழுந்து பறக்கும். அந்த நெருப்பு ஆட்டத்தை மயிர்க்கூச்செறிய வல்வை புளூஸ் சந்தித்தது.

பெர்ணான்டோவின் பந்துகளை பிளக் பண்ணுவது ஒரு புறம், அடிக்கு அடி கொடுத்து கரவொலியை ஏற்படுத்துவது மறுபுறம் என்று வல்வை வீரர்கள் அன்று அகில இலங்கை



போலீஸ் அணியை சந்தித்தார்கள். அதன் பிறகுதான் இராணுவம் ஆடுகளம் வந்தது. அந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக காலஞ்சென்ற யாழ். மேயர் அல்பிரட் துரையப்பா வந்திருந்தார். அவர் பரிசளித்து வல்வை புளூஸை வாழ்த்திப் பேசும்போது இது சாதாரண கரபந்தாட்டமல்ல. முக்கயமான ஊர் ஒன்று இலங்கை அரச படையை சந்தித்திருக்கிறது என்று கூறினார்.

இதுபோல குடாநாட்டின் பல மைதானங்களில் வல்வை புளூஸ் தனது சாதனைகளைப் படைத்தது, திருமலை சைனிங்ஸ்டார் செற் அப் கேம் ஆட்டமொன்றில் புகழ்பெற்ற வீரர் எஸ். கதிர்காமலிங்கம், பொட்டுக்கட்டி ஆகியோர் வியைாடிய மயிர்க்கூச்செறியும் ஆட்டம் ஒன்றும் நடைபெற்றுள்ளது.

இந்த இடத்தில் எப்படி வல்வை புளூஸ் அணி இப்படியான சாதனைகளைப் படைக்க ஆரம்பித்தது என்று நோக்க வேண்டும். முதலாவது வல்வை புளூஸ் உருவாக்கத்திற்கான நவீன சிந்தனை. வல்வை முழுவதும் உள்ள சிறுசிறு விளையாட்டுக்கழகங்களில் இருந்து ஒளி காட்டும் வீரர்களை ஒன்றாக இணைக்க எடுத்த முயற்சியின் தாக்கம் இதுவாகும். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற தத்துவம் புளூஸ் உருவாக்கத்தில் வெளிப்படையாகத் தெரிந்தது.

இத்தோடு இன்னொரு முக்கியமும் இருந்தது. வல்வையின் பொருளாதாரத்திற்கு இணையாக இலங்கையில் வேறொரு ஊர் இருந்திருக்கும் என்று கூற முடியாது. வல்வையின் வடக்குப் புறத்தே உள்ள பாக்குநீரிணை பொருளாதாரத்திற்கு உதவியது. மட்டுமல்ல, புரதச் சத்துள்ள மீனை நல்லுணவாக வழங்கியது. தெற்குப் புறத்தே உள்ள பகுதிகளில் இருந்துவந்த உடன் மரக்கறி வகைகள் இன்னொரு பக்கம் சத்துணவாக அமைந்தன. ஆரோக்கியமான பிள்ளைகளின் பிறப்பிற்கு பொருளாதாரம், உணவுவகை, விளையாட்டு என்பன பெரிதும் உதவின. இதன் காரணமாக ஆற்றல் உள்ள தலைமுறைகள் படிப்படியாக உருவாக ஆரம்பித்தார்கள்.

வீரம் வல்வை மக்கள் வாழ்வில் மாற்றமில்லாத வேதமாக இருந்தது. அதேவேளை, ஒருவரை மற்றவர் மிக இலகுவாகப் புரியக்கூடிய ஒற்றுமைத் தன்மை ஒன்றும் இருந்தது. மேலும் மற்றய ஊர்களில் ஜாதிப் பிரிவுகள் இருந்து, ஒற்றுமைக்கு மாபெரும் தடையாக இருந்துவந்தன. வல்வைக்கு அப்படியொரு சிக்கல் இல்லாத காரணத்தால் ஜாதி என்ற அரக்கனால் சமுதாயம் பிளவுபடாமல் போய்விட்டது. இன்றுவரை வல்வை என்ற சொல் பெறும் சக்திக்கு இதுவே முக்கிய காரணமாகும்.

வல்வையின் வரலாற்றில் விளையாட்டு என்பது பிரிக்கப்பட முடியாத அம்சமாக இருந்தது. எதை எடுத்தாலும் அங்கு விளையாட்டு வந்து சேரும். பந்தடியாதவர்கள் அங்கு வாழ்வது கடினமாகவே இருக்கும். இதன் காரணமாக யாழ். குடாநாட்டின் வரலாற்றிலேயே பந்தடியாதோர் சங்கம் என்று ஒரு சங்கம் தோன்றுமளவுக்கு அதன் விளையாட்டின் தாக்கம் இருந்தது. அதே பந்தடியாதோர் சங்கத்திலும் சிறந்த பந்தடி வீரர்கள் இருந்தது இன்னொரு சிறப்பம்சமாகும். ஆனால் வல்வை உதைபந்தாட்டத்திற்கு ஒரு கலாச்சார மரபும், கரபந்தாட்டத்திற்கு இன்னொரு கலாச்சார மரபும் இருந்தது. கரபந்தாட்டவீரர்கள் எவரும் வல்வைக்கு வெளியே போகும்போது வல்வை புளூஸ் என்ற கணிப்பை புறந்தள்ளி நடக்க விரும்பவில்லை. எல்லாப் புகழும் இறைவனுக்கே என்பதுபோல எல்லாக் கரபந்தாட்ட வீரர்களும் வல்வை புளூசாகவே வல்வைக்கு வெளியில் பார்க்கப்பட்டது வரலாறு. இந்த இரகசியம் வல்வைக்கு வெளியில் சென்று பிரபலமான கரபந்தாட்டப் போட்டிகளை ஆடியவர்களுக்கே தெரியும். இனி செற் அப் கேம் வீரர்கள் சிலருடைய விபரங்களை நோக்குவோம். இவைகள் தற்போதைக்கு நம்மால் சேர்க்க முடிந்த தகவல்கள் மட்டுமே. இது மேலும் விரிவாக எழுதப்பட வேண்டிய பணியாகும்.



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

# மாபெரும் விளையாட்டு வீரர்
# ஏ.வி.அருணாசலம்

செல்லமான உடம்பு, கட்டையான தோற்றம் போல இவருடைய உருவம் தெரியும். அவருடைய மடிப்புக் குலையாத ஆடை, தலையில் சுருண்டோடும் கேசம், அவர் வைத்திருக்கும் ஏதோ ஒரு வாகனம், கையில் உள்ள கைக்குட்டை இவைகளை பார்ப்போர் அவரை ஒரு விளையாட்டு வீரர் என்று இலகுவில் சொல்லிவிட முடியாது. ஆனால் வல்வையில் ஏறத்தாழ எல்லாவிதமான விளையாட்டுக்களையும் தெரிந்த ஒருவர் என்றால் இவராகத்தான் இருக்க முடியும்.



உதைபந்தாட்டம் நடைபெறும் காலத்தில் அங்கு நிற்பார், கரபந்தாட்டம் செற் அப் கேம் நடைபெறும்போது அந்த இடத்தில் நிற்பார். இரவு நூல் நிலையத்தில் டாம், கரம், செஸ் போட்டிகள் நடைபெறும்போது அதில் வெற்றியாளராக நிற்பார். பாட்மன்டன், டெனிஸ், கிரிக்கட் என்று திரும்பின இடமெல்லம் ஒருவர் விளையாடிக் கொண்டே இருப்பார், அவர்தான் ஏ.வி. அருணாசலம்.

செற் அப் கேம் போலவே ஓவர் கேமிலும் இவருக்கு பாரிய வரலாறு உண்டு. செற் அப் கேமில் இவருக்கு இரண்டு சாதனைகள் உண்டு. முதலாவது சேவீஸ், இவர் அடிக்கும் சேவீஸ் பந்து ஒரு பனை உயரத்தையும் தாண்டி மேலே எழும்பிவிடும். மின்னொளியில் ஆட்டங்கள் நடைபெறும்போது ஆகாய இருட்டில் பந்து வானத்தில் தொலைந்து போய்விடும். எதிரணியினர் ஓய்வெடுத்து அண்ணார்ந்து பார்த்திருக்க பந்து ஆடியாடி வந்து சேரும். இடப்பக்கம் கையை நீட்ட சரக்கென வலப்பக்கமாக ஆடி விழுந்துவிடும்.

இது அருணாசலம் அவர்களிடமும் அவருடைய மூத்த சகோரர் குமாரசாமி அவர்களிடமும் இருந்த ஆற்றலாகும். இது ஓர் அபாரத்திறமை, எல்லோருக்கும் அந்தக் கணிப்பு வாய்க்காது. ஓவர் கேமில் பந்தை உயரமாக அடிப்பார். அது அவுட் லைனுக்கு வெளியால் விழுவதுபோல உயரத்தில் பறந்து போகும். அவுட் என்று நினைக்க அப்படியே டெத் போலாகி நின்று பந்து லைனில் செங்குத்தாக விழும். அல்வாய் யூனியன் போன்ற பிரபல கழகங்களையே கணிப்புக் கூற முடியாத அடிகளால் வீழ்த்திய சிறந்த ஆட்டக்காரர்.

எதிரணியின் ஓர் அடி எங்கே வரும் என்ற கணித அளவீடு வீரனுக்கு அவசியம். எந்தக் கணக்கையும் இலாபம், நட்டம், வட்டி, முதல் ஆகியவற்றுடன் கணினி இல்லாமலே மூளையால் கணித்துவிடக் கூடியவர் அருணாசலம். இதனால் பந்தின் ஒவ்வொரு சுழற்சியும் அவருக்குத் தெரியும். அரை, கால், முக்கால்வட்ட சுழற்சிகளை எல்லாம் தெரிந்து பவர் பண்ணி பந்தை மறிப்பார். அடிப்பதற்கு வலுவாக உயர்த்திவிடுவார், அடிக்க வருபவர் யம்ப் செய்து நாற்புறமும் தலையை சுழற்றி மறுபக்கமுள்ள பிளேசை அளவெடுத்து, புளொக்கிங்களை தவிர்த்து பந்தை செப்பமாக இறக்கக் கூடியவாறு இவருடைய செற்றிங் இருக்கும். தோட் லைனில் இருந்தே செற்றிங் அமோகமாக வரும். அப்படியொரு செற்றிங்கில் அடிக்க கொடுத்து வைப்பவன் பாக்கியவானாக இருப்பான். பொட்டுக்கட்டி போன்றவர்களின் அபார அடிகளுக்கு அடிப்படை கொடுப்பது இவரது செற்றிங் ஆகும்.

வாழ்க்கை முழுவதையும் மைதானத்தின் விதிகளுக்குள்ளேயே கழித்த சிறந்த வீரர் இவர். இப்படிப்பட்ட ஒருவர் சாலை விதிகள் எதையுமே வரையறை செய்யாத சென்னையின் வீதியில் விபத்தில் சிக்கி இவ்வுலக வாழ்வை நீத்தார். வல்வை புளூஸ் வரலாற்றில் மறக்க முடியாத இழப்பு இவருடைய இழப்பாகும்.

# கரப்பந்தாட்ட அணியில் வீரர் தங்கவடிவேல்



தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்துவரும் இவர் வல்வை புளூஸ் உதைபந்தாட்ட வரலாற்றில் முத்திரை பதித்துப் போற்றப்பட வேண்டிய வீரர். அதுமாத்திரமல்லாமல் வடமாகாணத்தின் உதைபந்தாட்ட வரலாற்றிலும் ஓர் நாயகனாகப் போற்றப்பட வேண்டியவர். அவருக்குக் கரப்பந்தாட்ட வரலாற்றிலும் ஒரு சிறந்த பக்கம் இருக்கிறது.

வல்வை புளூஸ் செற்றப் கேம் அணியில் பொட்டுக்கட்டியின் அபாரமான மூன்று லைன்கள் முடிவடைந்து அவர் தேர்ட் லைனுக்கு போகும்போது, அணி பலவீனமாகிவிடுமோ என்ற அச்சம் பார்வையாளருக்கு ஏற்படும். அந்த அச்சம் தேவையில்லை என்று நினைக்கும்படியாக ஆரம்பிக்கும், தங்கவடிவேல் மற்றும், எஸ்.ஜெயபாலசிங்கம் ஆகியோருடைய ஆட்டங்கள்.

தங்கவடிவேல் மெல்லிய உடல்வாகு கொண்டவர் நீண்ட கரங்கள், கால்கள், ஒட்டிய வயிறு யாவும் மற்றவருக்குக் கிடைக்காத உடலியல் வாய்ப்புக்களாகும். நெற்றுக்கு மேலாக இவர் பாய்ந்து எழும்பும்போது கீழேயிருந்து பார்ப்பவர்களுக்கு அவருடைய உடலின் அரைப்பங்கு நெற்றுக்கு மேலே இருப்பதுபோல தெரியும்.

இவருடைய அடிக்கு முள்ளந்தண்டு பாரிய பலமாக இருக்கும் முள்ளந் தண்டைப் பின்புறமாக வளைத்து முழு உடல் பலத்தையும் கைகளுக்குச் செலுத்தி வலுவை பந்தில் இறக்குவார். மற்றவர்கள் பந்தடிக்கும்போது முழு உடம்பும் பாவனைப்படுத்தப்படுவது வெளியில் தெரியாது. ஆனால் இவர் அடிக்கும்போது அது முழுமையாகத் தெரியும். அடியின் வேகம் குறைவாக இருந்தாலும் பந்து சரியாக மைதானத்தில் விழும். இவர் மேலே எழும்பவே எதிரணிக்கு பயத்தில் காற்சட்டை மெல்ல நெகிழ ஆரம்பிக்கும் என்று சிலர் வேடிக்கையாகக் கூறுவார்கள்.

வல்வை புளூஸ் வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான சேவீஸ் இருக்கும். இவருடைய சேவீஸ் பந்தை மேலே உயர்த்தி அடிக்கும் ஒலிம்பிக் முறை சார்ந்ததாக இருக்கும். சேவீஸ் பந்து வானில் உயரும்போதே முள்ளந்தண்டுடன் உடலைப் பின்புறமாக வளைப்பார். வல்வை புளூசில் சேவீசில் குறைவான பிழை விடுவோரில் இவரும் ஒருவராகும். இவரைப்போன்ற பல்துறை வீரர் கிடைப்பது ஓர் அணிக்கு பாரிய வரப்பிரசாதமாகும்.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
Timoshonco Engineering (uk)
1 Oakcroft road, Chessington, KT9 1BD
UK





# ஆற்றலாளர் தங்கவேல்

முத்துப்போல கரிய உருவம், படியவாரிய கேசம், சிறிது பருமனான உடம்பு, சலனமற்ற முகம் இவைகள் விளையாட்டு வீரர் தங்கவேலின் வெளிப்புறத் தோற்றமாகும். அதிகமாகக் கதைக்கமாட்டார், ஆனால் அவருக்குள் அழகான கற்பனை ஓடிக் கொண்டிருக்கும். வல்வை புளூஸ் செற்றப் அணியின் பிரதான லிப்டராக இருந்தவர். இவர் பந்தை அடிக்கும் ஸ்பைக்கராக இல்லாவிட்டாலும், இவருடைய சேவீஸ்கள் ஒரு ஸ்பைக்கரின் அடியைவிட வேகமாக வரும். அதை மறித்து செற்பண்ணுவது எதிரணிக்குப் பாரிய சிரமமாகிவிடும். அவர்கள் பந்தைத் திருப்பி அனுப்பினாலே போதும் என்ற நிலைக்கு இவருடைய சேவீஸ் அடி இறங்கும். அதன் நெருப்புத் தன்மைக்கு ஏற்ப தவறுகளும் ஏற்படுவதுண்டு. ஒரு ரொக்கட்டை ஏவுவது போல ஏவுவார். அதனால் ரொக்கட்டுக்கள் போல சில தவறுவதும் உண்டு.



செற் அப் கேமில் மட்டுமல்ல, ஓவர் கேமிலும் இவர் மிகச்சிறந்த வீரராவார். பொதுவாக ஆட்டத்தில் புள்ளிகளை இழந்துவிட்டால் வீரர்கள் சிறிது ஆட்டம் கண்டுவிடுவார்கள். மிகவும் கவனமாக விளையாட வேண்டும் என்ற நெருக்குதல் அவர்களுக்கு ஏற்படும். ஆனால் கடைசிப் புள்ளியின் கடைசிச் சைடவுட்தான் மீதமிருக்கிறது என்ற நிலை வந்தாலும் கடுகளவும் தோல்வியைப்பற்றி அலட்டாமல் பிளேஸ் அடிக்கக்கூடிய துணிச்சல் இவருக்கு மட்டுமே இருக்கும். எதிரணியினர் எதிர்பாராதவிதமாகக் கடைசி நேரத்திலும் மடக்கலும் பிளேசும் அடிக்கும் இவரை வாதவருத்தமற்ற விளையாட்டு வீரர் என்று மற்றவர்கள் கூறுவார்கள். ஆனால் அப்படி ஒரு விளையாட்டுக் கற்பனை அவருடைய உள்ளத்தில் இருக்கும். வெற்றி தோல்விகளால் பாதிப்படையாது விளையாட்டை விளையாட்டாகவே எடுக்கும் வீரராக இன்றும் வலம் வருகிறார்.

# பல்துறை வீரர் எஸ். ஜெயபாலசிங்கம்

எஸ்.ஜெயபாலசிங்கம் வல்வை செற்றப் கேம் அணி தோல்வியடையாமல் வெற்றிபெறக் காரணமாக இருந்த ஒரு வீரர். சுருண்ட கேசம், கோபத்தால் சிவக்கும் கன்னம், அடிக்கு அடி கொடுக்காமல் ஓயாத தன்மானம், ஒரு விளையாட்டுவீரனுக்கு எது அழகோ அத்தகைய வீர அழகு கொண்டவர். வல்வை புளூஸ் அணியில் அவர்



இடம்பெறும்போது அதில் ஒரு வீர ஒளி வீசும்.

பந்து செற்றப்பண்ணி மேலே எழும்பும்போது குருவிபோல பந்துடன் எழும்புவார் எழுந்த பந்து உருண்டு கீழே வரமுன்னரே அடித்துவிட்டு இவர் தரைக்கு வந்துவிடுவார். தேர்ட் லைனுக்கும், செக்கன்ட் லைனுக்கும் இடையில் இவருடைய பந்துகள் விழும். பந்தை வேகமாக அடிப்பதும்,

வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

ஒரு பந்து குத்தென விழுந்ததும் அது போல தொடர்ந்தும் அடிக்க பலர் முனைவார்கள். ஆனால் அடிப்பது அவசியம். அதைவிட, அவசியம் பந்து நெற்றில் விழாமலும், அவுட்டில் விழாமலும் இருக்க வேண்டியதாகும். ஜெயபாலசிங்கத்திடம் அந்தத் திறமை இருந்தது என்று அவரைப்பற்றிப் பொட்டுக்கட்டி கூறுவார்.

பிரபலமான செற்றுப் கேம் ஆட்டங்களில் எல்லாம் இவரும் விளையாடியுள்ளார். வல்வை புளூஸ் வெற்றி வரலாற்றை பொன்னெழுத்துக்களால் எழுதிய வீரர்களில் இவர் முக்கியமானவராவார். ஓவர் கேமிலும் சிறந்த வீரராக இருந்தவர். இவருடைய செற்றுப் கேம் சேவீஸ்கள் வேகமாக வரும், ஆனால் அதற்கு முற்றிலும் மாறுபட்டது ஓவர்கேம் விளையாட்டு.

இவருடைய கைபிடி ஓவர் கேமில் மிகமிக வித்தியசமானது. வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்தில் விளையாடிய இவரும் காலம் சென்ற எஸ்.அருட்பிரகாசம் அவர்களும் கைபிடியில் ஒரு நடன வடிவத்தை இணைத்த வீரர்களாவர். யாழ். குடாநாட்டில் மற்றெந்த ஒரு அணியிடமும் இவர்களின் நடனப்பாங்கான கைபிடியைக் காண முடியாது. பந்து தொடர்ந்து வலப்பக்கமாக சுருண்டு வந்தபடியே இருக்கும். இறுதிவரை சோர்ந்துவிடாமல் விளையாடிக் கொண்டிருப்பார். தோல்வியடைந்தால் அனைவரையும் உற்சாகப்படுத்தி மறுபடியும் தயாராக வலு கொடுப்பார். அதேவேளை ஆட்டம் ஆரம்பிக்க முன்னரே இத்தனை புள்ளிகளால் வெல்கிறேன் பார் என்றுவிட்டு இறங்கி அப்படியே வென்றுவிட்டு வரும் நம்பிக்கையாளர். தற்போது கனடாவில் வாழ்ந்து வருகிறார்.

## செல்லண்ணா எனப்படும்
## செல்வச்சந்திரன்



வல்வை புளூஸ் உதைபந்தாட்ட அணியில் கோல்காப்பாளராக, முன்னணி வீரராகச் சாதனை படைத்த இவருக்கு புளூஸ் செற்றுப் கேம் வரலாற்றிலும் மகத்தான பங்குண்டு. புளூஸ் எட்டித் தொட்ட வெற்றி ஆட்டங்களில் எல்லாம் இவர் முத்திரை பதித்துள்ளார்.

கரப்பந்தாட்ட அணியில் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு துறையில் பதிந்து செல்லும்போது இவரை மட்டும் எந்த அணிக்குள்ளும் சேர்க்க முடியாத நிலை வரும். காரணம் அணியில் எங்கு எப்போது எவ்வாறான வெற்றிடம் வருமோ அங்கு அந்த வெற்றிடத்தை இவர் நிரப்பிவிடுவார்.

சில நேரங்களில் சிலருடைய அடிகள் பிழைக்கத் தொடங்கிவிடும், அல்லது மறு பக்கத்தில் புளொக்கிங் கடுமையாக இருக்கும். இந்த நேரம் பொட்டுக்கட்டி இலாவகமாக செல்லண்ணாவின் பக்கம் பந்தை எழுப்பிவிடுவார். இன்னொரு பொட்டுக்கட்டிபோல வானில் எழுந்து அபாரமாக அடிப்பார், எதிரணி திகைத்துவிடும்.

செல்லண்ணாவின் சிறப்பம்சம் பொறுமையான குழப்பமற்ற நேர்த்தியான விளையாட்டாகும். தோல்வியால் பதட்டமடையாமலும், வெற்றியால் அளவுக்கு அதிகமான வீறு கொள்ளாமலும் தனது பாத்திரத்தை நிதானமாக நிறைவு செய்வார். வல்வை புளூஸ் வரலாற்றில் மறக்க முடியாத அற்புதமான வீரராகவும், மனிதராகவும் இவர் ஒளிகாட்டியவர். இவருடைய திடீர் இழப்பு புளூஸ் வரலாற்றில் பேரிழப்பாக உள்ளது.

## எழுச்சி ஆட்டக்காரர்
## ஏ.எஸ். அருட்பிரகாசம்



புளூஸ் கரபந்தாட்ட வரலாற்றில் ஆரம்ப கால வீரர்கள் பலர் பதிவு செய்யப்பட வேண்டியவர்கள். அவர்களில் இன்றைய தலைமுறையினரும் காணக் கூடியவாறு மைதானத்தில் வலம் வந்தவர் காலம் சென்ற ஏ.எஸ்.அருட்பிரகாசமாகும். வல்வை புளூஸ் செற்றுப் கேம் அணியில் நுவரேலியா மணிஓசையை சந்தித்த காலம்வரை இவருடைய விளையாட்டுக்கள் கொடிகட்டிப் பறந்தன.

ஓவர் கேமிலும் அழகான விளையாட்டு ஒன்றை அரங்கப்படுத்தியவர். புறங்கைகள் இரண்டும் இரண்டு துடைப்பகுதிகளையும் உரச, கைகளை மறைத்து வைத்திருக்கும் வாள்போல வெளியால் உருவி எடுத்து தரையைப் பார்க்க கோர்த்து, மெல்லிய சுழற்சி கொடுத்து, பந்தை உருட்டிவிடுவார். சிறந்த நாடக நடிகரான இவரது விளையாட்டின் அழகு பார்வையாளருக்கு இதமாகவும், சுகமாகவும் இருக்கும். ஆனால் ஒரு பரதநாட்டியம் போல அபிநயம் காட்டி ஒவ்வொரு பந்தையும் அடிக்கும்போது மேலதிக சக்தியை செலவிட வேண்டி வரும், அது களைப்பை ஏற்படுத்தவும் வழியுண்டு. ஆனால் அதுபற்றி கடுகளவும் சிந்திக்காது விளையாடியவர்.

ஆட்டம் என்று எதற்காக பெயர் வந்தது, ஆடும்போது அதற்கு ஓர் அழகு இருக்க வேண்டும். அந்த அழகை அனந்தண்ணா போன்றவர்கள் கால்களாலும் கைகளாலும் கொடுக்க கைகளாலும் உடலின் மேற்புறத்தாலும் கொடுத்தவர் இவர். டென்மார்க்கில் பல காலம் வாழ்ந்த இவர் டென்மார்க் ஓஸ் விளையாட்டுக்கழகத்திலும் நால்வர் கரபந்தாட்டப் போட்டிகளில் ஆடி சாதனை படைத்தவர். திருமலை வைனிங்ஸ்டார் நால்வர் கொண்ட ஓவர் கேம் ஆட்டத்தை ஆரம்பித்தபோது ஆரம்ப கால வீரராக ஆடி முத்திரை பதித்த ஆட்டக்காரர். பல கரபந்தாட்டப் போட்டிகளுக்கு மத்தியஸ்த்தராக கடமையாற்றிய இவர் இன்று நம்மிடையே இல்லாதது கவலை தரும் இழப்பாகும்.

## வல்வை நேசர் குட்டிமணியண்ணா



சபா.இராஜேந்திரன் என்ற பெயருடைய குட்டிமணியண்ணா வல்வை புளூஸ் தாபகர்களில் ஒருவர். வேதியல் படிப்பில் முனைவர் பட்டம் பெற்று நமது வீரர்களின் கல்விப் பின்புலத்திற்கும் சிறப்புத் தந்தவர். வல்வையில் எது நடந்தாலும் அவரைத் தவிர்த்து செய்ய முடியாதளவிற்கு ஊர் நேசம் கொண்டவர். இன்றும் தனது கடவுச் சீட்டில் வல்வை என்ற பெயரை மாற்றாமல் வல்வைக்கான கற்பனைகளைச் சுமந்து வாழ்பவர். தன்னிடமுள்ள அபாரமான மைய ஆற்றலை அதே பெறுமானத்துடன் சகல விளையாட்டுக்களிலும் மாற்றிப் போடக்கூடிய திறமையாளர். தமிழகத்தில் தி.மு.கவிற்கு அறிஞர் அண்ணா போல

வல்லைக்கு அறிஞர் குட்டிமணியண்ணா.

எந்த விளையாட்டானாலும் அவருடைய திறமையை எதிரணியினர் கடப்பது இலகுவான காரியமல்ல. இவர் ஹாட்லிக் கொலிஜ் மாணவராக இருந்து அவர்களின் செற் அப் அணியில் விளையாடி சாதனை படைத்தவர். பின்னர் புளூஸ் வி.கவின் ஆரம்பகால வெற்றி முத்திரைகளைப் பதித்த வீரர். சிறந்த ஓவர் கேம் ஆட்டக்காரராகவும் திகழ்ந்தார். மைதான ஒழுக்கம், சிறந்த நாகரிகமான தமிழ் வார்த்தைகளை ஆடுகளத்தில் பிரயோகித்தல், நேர்த்தியான விளையாட்டு என்று இவர் விளையாடும் அழகு எங்கும் காணமுடியாத அழகாக இருக்கும். பலர் பேராசிரியராக வந்துவிட்டால் மைதானத்தை மறந்துவிடுவார்கள். ஆனால் மைதானத்தில் நின்ற பேராசிரியர் என்ற புகழ் இவருக்கு உரியது.

புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வல்லையில் மட்டும் உருவாக்குவதில் இவர் முன்நின்ற ஒருவரல்ல, உலகம் முழுவதும் அது நிலைபேறுபெற ஓடியோடி வலுக் கொடுத்தவர். உலகளாவிய வல்லை புளூஸ், வல்லை ஒன்றியங்கள், வல்லை நலன்புரிச்சங்கங்கள் தமது ஆரம்ப வரலாறுகளை இவருடன் இணைந்தே ஆரம்பித்திருப்பதை எளிதாகக் காணலாம். வல்லை புளூஸ் பொன்விழா கொண்டாடும் வேளையில் பொன்போல மனதில் ஒளிகாட்டுகிறது இவரது கரப்பந்தாட்டத் திறமைகளாகும். நமது கரபந்தாட்ட வீரர்களில் எழுத்தாற்றல் மிக்க ஒருவராகவும் இருக்கிறார், பல நூல்களை எழுதியுள்ளார்.

## நளினமான ஆட்டக்காரர்
## ஆர். அமிர்தலிங்கம்

வல்லை புளூஸ் வரலாற்றில் மட்டுமல்ல வல்லையின் கரப்பந்தாட்ட வரலாற்றில் செற் அப், ஓவர்கேம் இரண்டிலும் தவறாது பதியப்பட வேண்டிய நுட்பமான வீரர் இவர். இவருடைய சகோதரான ஏ.ஆர். இரத்தினசிங்கமும் இவரும் இணைந்து கரபந்தாட்டம் விளையாடும் காட்சிகள் அழகான விளையாட்டுக்கு அடையாளமாக இருக்கும்.



அதிகமாகப் பேசாமல், அதிகமாக உணர்ச்சி வசப்படாமல் மிக அமைதியாக விளையாடிக் கொண்டிருப்பார். மைதானத்தில் இறங்கிவிட்டால் வெளிக் கோடுகளையும், நெற்றையும் அவர் குறிவைத்து விடுவார். அதன் பிறகு அவர் பந்துடன் விளையாடுவார். தேர்ட் லைனில் இருந்து நெற்றின் இரண்டு கோணர்களுக்கும் பிளேஸ் பண்ணி இவரைப் போல பந்தை அடிக்க எவராலுமே முடியாது. பந்தை நெற்றின் றிபனுக்கு மட்டும் குறிவைத்து அடித்து அது றிபனுடன் துள்ளிச் சுருண்டு விழும்படியாக அடிப்பார்.

செற் அப் ஆட்டத்தில் நெடிய வரலாறு கொண்டவர். எதிரணியில் யாராவது தனது இடத்தில் இருந்து விலகி நின்றால் ஓரக்கண்ணால் குறிவைத்து அந்த இடத்திற்கு ஓசை இல்லாமலே பந்தை அனுப்பி வைப்பார். ஓவர் கேமில் பிளேஸ் என்ற சொல்லை நினைப்போர் எல்லாம் இவரை நினைக்காமல் இருக்க முடியாது. யார் மீதும் கோபப்படாது விளையாட்டை ரசித்து விளையாடும் ஒருவர்.



வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகம்

## மகத்தான சாதனையாளர்
## ஏ.ஆர். இரத்தினசிங்கம்

அகில இலங்கைப் புகழ் பெற்ற உதைபந்தாட்ட வீரர் கோல் காப்பாளர் என்ற பெருமைக்குரியவர் இவர். இன்று கூட உலக நாடுகளில் கோல் காப்பாளர்களாக இருப்பவர்கள் இவரைப்போல அழகு காட்டிப் பந்தைப் பிடிக்க முடியுமா என்பது கேள்விக்குறி. கோல் காப்பில் இவரைப்போல அழகான காவியத்தை வடிவமைத்த வீரர்களைக் காண்பது கடினம். அதுபோலவே செற் அப் ஆட்டத்திலும் இவருக்கு ஓர் அழகு இருந்தது. வல்லை புளூஸ் ஆட்டங்களில் அதிகமாக இவரைக் காண முடியாவிட்டாலும் ஒற்றைக்காலில் கச்சிதமாக துள்ளி அடிக்கும் இவருடைய கவர்ச்சி விளையாட்டுக்களைப் கரபந்தாட்டமும் சந்தித்துள்ளது.



இவருடைய புகழை உதைபந்தாட்டத்தில் காணலாம். பந்தடிக்கக் களமிறங்கும் ஒவ்வொரு வல்லை வீரனும் கண்டிப்பாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டிய காவிய வீரன் இவர். ஏ.ஆரின் ஆட்டங்களை நினைத்தால் இப்படியொரு திறமையாளன் நமது ஊரவரா என்று தேகமே புல்லரிக்கும்.

## வைத்தியர் பூரணச்சந்திரன்

வைத்தியராக இருந்து கொண்டு விளையாட்டுக்கும் நேரம் ஒதுக்குவது எல்லோராலும் முடியாத காரியமாகும். ஆனால், வல்லையைவிட்டு வெளி மாவட்டத்தில் பணியாற்றினாலும் வல்லை வந்தால் செற் அப், ஓவர்கேம் ஆட்டங்களில் தவறாமல் பங்கேற்பார்.



நல்ல உயரம், காற்றில் பறக்கும் தலைமுடி, உயர்ந்து, காற்றுக் கொடுத்து தலையை பின்புறம் சரித்து அடிப்பதில் வல்லவர். வல்லை புளூஸ் என்றும் மறக்க முடியாத வீரராக இவர் இருப்பது மட்டுமல்ல வல்லை புளூசை எப்பொழுதும் மறக்காத வீரர் என்ற பெருமையோடு விளையாடிச் சாதனை படைத்தவர்.

ஓவர் கேமில் விரல்களை ஒன்றாகக் கோர்த்தும், பின் விலத்தியும் சற்று வித்தியாசமாக அடிப்பார். இருபது முப்பது பந்துகள் பறந்த பின்னர்தான் இவருடைய கையில் இருந்து மடக்கல் வரும். உயரமாக இருக்கும் காரணத்தால் பந்தை மடக்க வேண்டிய தேவை இல்லை. நின்ற நிலையிலேயே கைகளை தலைக்கு மேல் உயர்த்தி அடிப்பார். ஆனாலும் இவருடைய பந்துகள் உயரமாகவே போகும். ஏன் என்று விசாரித்தால் ஆள் உயரமாக இருந்தால் அடி இறக்கமாக இருக்கும் என்ற கோட்பாட்டை மாற்றி ஆட வேண்டும் என்று கூறுவார். உலகின் எந்த மூலைக்குப் போனாலும் புளூஸ் வி.கவை மறக்காமல் இருக்கும் இரண்டு வீரர்கள் யார் என்று கேட்டால் கண்டிப்பாக பூரணச்சந்திரன், குட்டிமணிஅண்ணா என்று இருவரைக் கூறலாம்.

# சட்டத்தரணி காண்டீபன்

பிரபலமான தடகள விளையாட்டு வீரர். சிதம்பராக் கல்லூரியின் செற் அப் கேம் அணியில் இருந்து வல்வை புளூசிற்கு வந்தவர். வேகமான ஓட்டக்காரரான இவர் மாவட்ட ஓட்டப்போட்டிகளில் சரித்திரம் படைத்தவர். கரபந்தாட்டம் என்பது ஓடி விளையாடும் விளையாட்டல்ல, பாய்வது அதில் மிக முக்கியம். தனது தடகள விளையாட்டின் பாய்ச்சல் வலுவை, கரப்பந்தாட்டத்தில் நுழைத்து சாதனை படைத்தவர்.

ரைமிங், யம்பிங், நேர்த்தியாக அடி ஆளில்லாத இடத்தில் சத்தமில்லாமல் விழும் பந்து என்று ஆட்டத்திற்கு ஓர் அழகு கொடுத்தவர். இந்தியாவில் சீக்கிய அணி விளையாடும்போது சத்தமில்லாமல் அடிப்பது போல இவர் அடிகள் இருக்கும். ஒவர்கேமிலும் இவருடைய சிறப்பு இப்படியே இருக்கும். ஆட்டத்தில் கவனத்தைக் குவித்து, வெற்றிக்குப் பங்கம் வராமல் ஆடும் சிறந்த ஆட்டக்காரராக இருந்தார்.

## வேக அடி வீரர் ராதா
## ராதா கிருஷ்ணன்

தற்போது சுவிற்சலாந்தில் வாழ்ந்துவரும் வீரர் ராதா ராதா கிருஷ்ணன். வல்வை புளூஸ் செற் அப் கேம் ஆட்டங்களில் பல தடவைகள் களமிறக்கப்பட்டுள்ளார். கரிய நிறம், நெடுமையான தோற்றம், நீளமான கைகள் என்று செற் அப் கேம் விளையாட்டுக்கு ஏற்ற உடல்வாகு கொண்டவர். இவருடைய கைகள் எப்பொழுதும் வியர்த்துக் கொண்டே இருக்கும். மறுமுனையில் இருந்து பந்தைத் தடுத்தால் அதில் ஈரம் கசியும். பந்தடிக்கும்போது அவரிடம் ஒரேயொரு இலட்சியம் மட்டுமே இருக்கும் அது வேகமான அடி.

இவருடைய அடி மைதானத்திற்குள் விழுந்துவிட்டால் பின்னர் அதைத் தடுப்பது இயலாத காரியம். ஆனால் அடி உள்ளே விழுந்தால் புள்ளிகள் எப்படிக் குவியுமோ அதுபோல சேதாரமும் இருக்கும். ஆட்டம் வாய்த்து கை படிந்துவிட்டால் வெற்றியை தடுக்க இயலாது. வல்வை வீரர்கள் கப்பலில் மாலுமிகளாக வெளிநாடு செல்வதால் அவர்களுடைய விளையாட்டு அவ்வப்போது தடைப்படும். கப்பலில் சென்ற காரணத்தால் எத்தனையோ ஆட்டங்களில் இவர் விளையாட முடியவில்லை. ஊரில் இருந்து விளையாட்டை மட்டும் கவனத்துடன் ஆடியிருப்பாராக இருந்தால் இவருடைய விளையாட்டுக்கு ஈடு இணை இருந்திருக்காது. வல்வை புளூஸ் கரப்பந்தாட்டம் மறக்க முடியாத வீரர்.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
Top Fish Ltd
London, UK
0742 905 8469, அ.நவஜீவன்





# திறமை ஒளிரும் வீரர் ரீ.சக்திவேல்



வல்வை புளூஸ் செற்றப் கேம் ஆட்டத்தில் பிற்காலத்தில் சிறப்போடு விளையாடிய இளைய வீரர்களில் முக்கியமானவர் ரீ. சக்திவேலாகும். அளவான திடகாத்திரமான தேகம், கரப்பந்தாட்டத்திற்கு ஏற்ற உடல்வாகு, களைப்பின்றி ஆடும் திறமைகள் ஒன்று சேர்ந்த வீரர் இவராவார். நன்கு உயரமாக எழுந்து பந்தை இறுக்கமாகத் தாக்கி அடிப்பதில் வல்லமை பொருந்தியவர். ஒவர்கேமிலும் மிகச்சிறந்த வீரராக இருந்தார். கைகளை ஒரு தடவை மணிக்கட்டுப் பக்கமாகக் குலுக்கி இலாவகமாக அடிப்பார். ஒரு தடவை திருமலை சைனிங்ஸ்டார் நால்வர் கரப்பந்தாட்டத்திற்காக வல்வை வந்தது. அவர்களைத் தனது விளையாட்டால் திகைக்க வைத்த சிறந்த ஆட்டக்காரர். களைப்பின்றிப் பந்துகளை அனுப்புவார், தவறில்லாமல் அவை சுழன்று போகும். கப்பலில் செல்வது போன்ற வெளிநாட்டுப் பயணங்கள் இல்லாவிட்டால் இவருடைய சிறந்த விளையாட்டு மேலும் மெருகேறியிருக்கும்.

# கரபந்தாட்ட ஆர்வலர் க.தியாகலிங்கம்



வல்வை புளூஸ், செற்றப் கேமில் பல்வேறு வீரர்களை பிற்காலத்தில் அறிமுகம் செய்தது. பொட்டுக் கட்டியண்ணாவின் நேரடியான பயிற்சியில் இவர்கள் களமிறங்கினார்கள். இவர்களில் க. தியாகலிங்கம் மிகவும் குறிப்பிடப்பட வேண்டியவர். பல்வேறு பெரிய ஆட்டங்களில் ஆடியவர். பந்தை மறித்து அழகாக செற் பண்ணுவதில் வல்லமை கொண்டவர். மட்டுவில் மோகனதாஸ் போன்ற பெரிய அணிகளுடன் எல்லாம் விளையாடியுள்ளார். இவரைப்போல எம்.ரீ.ரீ மணி, குகநாதன், கதிர்காமலிங்கம் என்று ஏகப்பட்ட இளைஞர்கள் பிற்கால வரலாற்றை அலங்கரித்துள்ளார்கள். இவர்களைப் பற்றிய விபரங்கள் மேலும் செப்பமாக பதிவு செய்யப்பட வேண்டியவை. வல்வை புளூசின் செற் அப் கேம் வரலாற்றில் கண்டிப்பாக இவருக்கு ஓரிடம் உண்டு.

பொன் விழா காணும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தை வாழ்த்துகின்றோம்
Vannamakka Catering service
23, Letchworth street , Tooting, SW17 8SX,UK
0208 767 1411

# வல்வை புளூஸ் ஓவர் கேம்

வல்வை புளூஸ் ஓவர் கேம் என்பது செற் அப் கேமில் இருந்து முற்றாக வேறுபட்ட வடிவம் கொண்டது. வல்வை புளூசில் இணைவு பெறாத சில கழகங்கள் வல்வையில் இருந்தன. ஆனால் ஓவர் கேம் என்பது வல்வைக்கு வெளியே போகும்போது அதனுடைய வடிவம் புளூஸ் என்பதாகவே இருக்கும். வல்வை முழுவதும் உள்ள பெரிய வீரர்கள் எல்லாம் விளையாடுவார்கள். இது ஏறத்தாழ வல்வையில் ஓவர் கேம் விளையாடிய எல்லோருடைய பெயர்களையும் பதிவு செய்ய வேண்டிய பாரிய பணியாகும்.

அனந்தராசா, சின்னத்துரை, பழவன்போஸ், இரத்தினவடிவேல் மாஸ்டர், தங்கவடிவேல் மாஸ்டர், மபோர்க்கடம் சித்தப்பா பாலசுப்பிரமணியம், ஞானி, அப்புஅண்ணா, சனிற்றரி துரைசிங்கம், இராசரெத்தினம், குமாரசாமி என்று இந்த முதற்கட்ட வீரர்களின் வரலாறு கண்ணுக்குள் தெரிகிறது.

வல்வை புளூஸ் வீரர்கள் அதற்கு முன்னர் டைனமோஸ் என்ற பெயரில் விளையாடி படைத்த சாதனைகள் ஓவர் கேமில் குடாநாட்டின் பொன்னெழுத்துக்களாக இருக்கின்றன. இவர்களுடைய காலத்து வெற்றிகளை மறுபடியும் கொண்டுவர பிற்காலங்களில் வல்வை புளூஸ் பெரும் போராட்டமே நடாத்தியிருக்கிறது.

பொதுவாக வல்வையில் கரப்பந்தாட்டத்தை விளையாடுவதில் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு மைதானம் புகழ் பெறும். அந்தப் புகழ் பெற்ற இடத்தில் எல்லோரும் கூடுவார்கள். தீருவில், தெணியம்பை, மதவடி, நெடியகாடு, வேவில், ரேவடி, ஊரிக்காடு, காட்டுவளவு என்று காலத்திற்குக் காலம் மைதானங்கள் மாற்றமடையும். ஆனால் இந்த மைதானங்கள் மாறினாலும் விளையாட்டு வீரர்கள் மாற மாட்டார்கள். அவர்கள் குருவிகள் போல சகல இடங்களுக்கும் காலத்திற்குக் காலம் பறந்து கொண்டிருப்பார்கள். மாலை நேரம் வல்வைச் சந்தியில் சந்தித்து கரபந்தாட்ட மைதானம் நோக்கிப் போகும் அழகே அழகாக இருக்கும்.

காலை வேலைக்குப் போகும்போதும், மதியம் சந்தைக்குப் போகும் போதும், எங்காவது விழாக்களுக்குப் போகும் போதும் மறக்காமல் பந்தடிக்க வந்துவிடு என்று ஒருத்தருக்கு மற்றவர் கூறிப்போவது அன்றாட வழமையாக இருக்கும். மேலும் இவர்களுக்குள் ஒரே குடும்பம்போன்ற இனம்புரியாத உறவு இருக்கும். ஒருவர் மீது மற்றவர் அதி உயர் மரியாதையும் பாசமும் கொண்டிருப்பார்கள். இவர்களுடைய மைதான வாழ்வு கட்டியமைத்த உயர் நெறியாக இது இருந்தது. மதுபானம் அருந்துவதை தவிர்த்தல், புகைப் பிடிக்காதிருத்தல் போன்ற பழக்கங்கங்கள் கூட பெரும்பாலான புகழ் பெற்ற புளூஸ் வீரர்களால் கடைப்பிடிக்கப்பட்டமை இங்கு கவனிக்கத்தக்கது.

## அழகான விளையாட்டுவீரர் அனந்தண்ணா

கட்டையான உருவம், ஆனால் தனது தேகத்தை இயற்கையோடு கலந்து உலாவவிடுவதில் அபாரமான திறமை கொண்டவர் அனந்தண்ணா. கரப்பந்தாட்டத்திற்கு எது விதி என்று கேட்டால் தெளிவான தூய அடி என்று கூறுவார். கரபந்தாட்டம் என்பது கைகளால் விளையாடப்படுவதால் வந்த பெயர். ஆனால் கால்களை எங்கே எப்போது எப்படிப் போட வேண்டும் என்பதே கரப்பந்தாட்டத்தின் மிகப்பெரிய இரகசியமாகும்.

நடனத்தில் வரும் அரைமண்டி, கால்மண்டி போல அலங்காரமாக இருந்து பந்தை அனுப்புவதில் அனந்தண்ணா அபார திறமை கொண்டவர். முட்டுக்காலில் இருந்து பின்புறக் கையை மடித்து சீவிவிடுவதில் அவருக்கு இணையான அழகு கொண்டவர்களை யாழ். குடாநாட்டில் ஓரிடத்திலும் காண முடியாது. நெற்றில் இருந்து கிளீன் பற்றிங்காக பந்தை



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

அனுப்புவது, இரண்டு பக்க ஒற்றைக் கைகளால் பந்தை அனுப்புவது, சிலாங்காக சீவி விடுவது என்று தனக்காகவே ஒரு கலையை வகுத்துக் கொண்டவர். மிகச்சிறந்த நாடக நடிகரும், இயக்குநருமான இவர் ஒரு நாடகக் காட்சி போலவே தனது ஆட்டத்தை நவரச பாவங்களுடன் அரங்கப்படுத்துவார். அவருடைய நாடகங்களும், அவருடைய பந்தடியும் வேறு வேறானவை அல்ல. கரபந்தாட்டத்திற்கான தமிழை தானாகவே வடிவமைத்து பேசுவார். உசார் என்ற சொல்லை மைதானத்தில் உஜார் என்று அலாக்காகக் கூறுவார். ஓவர் கேமில் முக்கியமான விடயம் பந்து யாருக்கு என்று பேசி விளையாடுவதாகும்.



உலகத்திலேயே பேசி விளையாடும் ஒரே விளையாட்டு நமது தமிழினத்தின் ஓவர் கேம் ஒன்று மட்டும்தான். அந்த விளையாட்டுக்கான பேச்சு மொழி மிகவும் வித்தியாசமானது. அதை அதி நவீனப்படுத்திப் பேசிய அழகான வீரர். தலைக்கு மேல் இரு கரம் கூப்பி ஆண்டவனை வழிபட வேண்டும் என்பார்கள். இரு கரம் கூப்பி வணங்கியபடியே விளையாடும் அந்தத் தெய்வீக விளையாட்டை நடராஜரின் நடனம்போல ஆடி அனந்தண்ணா காட்டும் அழகே அழகு.

## மடக்கல் வீரர் சின்னத்துரை

காலஞ்சென்ற சின்னத்துரை ஓவர் கேமில் மடக்கல் என்றால் எப்படியிருக்கும் என்பதற்கு இலக்கணம் வகுத்த அற்புதமான விளையாட்டு வீரர். ஆஜானுபாகுவான உயரம், வழிந்தோடும் கேசம், எப்போதும் விறுவிறுப்பாகக் காணப்படுவார். இடது பக்கத்தால் மட்டும் பந்தை அடிப்பார். வலது புறத்தைப் பாவிக்கவே மாட்டார். அதேநேரம் கீழ்க்கையும் அவருக்கு அவ்வளவு நல்லாக வருவதில்லை. கை எப்போதும் நெற்றுக்கு மேலாக தெரியும்.

பந்து வருவதற்கு முன்னரே வேகமாக ஓடிவந்து மறித்துவிடுவார், இதனால் கீழ்க்கைக்கு வருவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும். உடலை வலப்பக்கமாக நகர்த்தி வலக்கைக்கு பந்து வராமலே தடுத்துவிடுவார். ஒரு பக்கத்தாலேயே சிறப்பாக விளையாடி சாதனை படைத்த ஜேர்மனிய டேனிஸ் வீராங்கனை ஸ்ரெபி கிராப் போல ஒரு பக்க விளையாட்டு. ஆனால் அடி தொடர்ந்து இறுகிக் கொண்டே செல்லும். முதலாவது பந்தில் இருந்து இரண்டாவது பந்து வேகம் குறைவாக வரும் என்ற பேச்சே கிடையாத குடாநாட்டின் ஒரேயொரு வீரன் சின்னத்துரைதான்.

தனது முதற்கட்ட விளையாட்டை முடித்துக் கொண்ட இவர் எழுபதுகளில் மறுபடியும் ஆடுகளம் வந்தார். இளைஞர்கள் எல்லாம் அதிரடி மன்னனாக அவரை அவதானித்துக் கைகொட்டினார்கள். லாலா சோப் ஆட்டத்தில் இமையாணன் கழகத்தை நோக்கி முப்பதுக்கும் மேற்பட்ட பந்துகளைத் தொடர்ந்து மடக்கிக் கலங்கடித்தார். எதிரணியினர் தமக்கு வெற்றி வேண்டாம் அவருடைய அடிகளைப் பார்த்தாலே போதும் என்று கூறுவார்கள். லாலா சோப்பில் அவர் விளையாடிய ஆட்டத்தைப் பார்த்த பின்னர், அவருடைய புகழைப் பேசாதவர் என்று எவருமே இல்லை. சின்னத்துரை மைதானத்தில் நின்றால் அவரே நிலவு மற்ற அனைவருமே நட்சத்திரங்கள்தான். அவருடைய அடிகளை வீடியோ செய்து ஆவணப்படுத்தவில்லையே என்ற கவலை இன்று மனதை நெருடுகிறது.

# கரப்பந்தாட்டமே கண்ணாக வாழ்ந்த மகோர்க்கடம் சித்தப்பா

வீரர் சின்னத்துரையின் சகோதரியை மணமுடித்தவர் மகோர்க்கடம் சித்தப்பா. தனது சகலனைப் போலவே உயரமான தோற்றமும் மனித இயல்புகளும் கொண்டவர். கரப்பந்தாட்டத்தைப் பலருக்குப் பழக்கி வல்வையின் புகழ் பெற்ற வீரர்கள் பலரை உருவாக்கியவர். எங்கு கரப்பந்தாட்டம் நடந்தாலும் அங்கு சென்று பார்த்து அனைவரையும் உற்சகாப்படுத்துவார். வல்வையின் புகழ் மிக்க வீரர்கள் அனைவருடைய உயர்ச்சியிலும் இவருடைய தாக்கம் இருக்கும். மகோர்க்கடம் சித்தப்பாவைத் தவிர்த்து தனது ஓவர் கேம் வரலாற்றை சொல்ல எவராலுமே முடியாது என்றளவுக்கு எல்லார் மீதும் பாதிப்புச் செலுத்தியவர்.

கைகளைக் கன்னத்தின் ஓரமாக மேலே உயர்த்தி ஆகாயத்திலேயே பந்தைத் திருப்பி அனுப்பிவிடுவார். வலம், இடம், முன், பின், கரை வெட்டு, எழுந்து பந்தை அடித்தாலும் அதுவும் வெட்டுத்தான், அடியாக இருக்காது. கரப்பந்தாட்டத்தில் கூர்மையான கொடுவாள் கத்தியால் இளநீரை ஆகாயத்தில் எறிந்துவிட்டு சீவினால் எப்படிச் சுழன்று போகுமோ அப்படிச் சுழன்று வரும் இவருடைய அடிகள். குடாநாட்டிலேயே குத்துச் சண்டையில் குத்துவது போல சேவீஸ் பந்தைக் குத்தி அனுப்புவார். அதுவும் அவருடைய சீவல் அடிகளைப் போலவே சர்ரெனப் போகும்.

ஆனால் இவருடன் விளையாடும்போது சேவீஸ் பிழை விட்டால் தப்பமுடியாது, அதேபோல சேவீஸ் பந்து எதிரணியில் இருந்து திரும்பும்போதும் அடிக்கக் கூடாது. சீரான ஓர் ஆட்டத்தை நடாத்திச் சமநிலை அடைந்த பின்னரே பிளேஸ், மடக்கல் போன்ற விடயங்களை நினைக்க முடியும். எப்போதுமே பந்தை எதிர்ப்பக்க சென்டரின் இடது, வலது பக்கங்களை நோக்கி அடிக்க வேண்டும், மாற்றி மாற்றி அடிக்க வேண்டும் என்பார். ஒன்றில் இருந்து ஐந்து புள்ளிகள் வரை அடிக்க விடமாட்டார், அதுபோல பத்தில் இருந்து பதினைந்துவரையும் அடிக்க விடமாட்டார். நாம் புள்ளியில் பின்னணியில் நின்றாலும் அடிக்க முடியாது. அடிக்க வேண்டிய பந்தென்று சில பந்துகள் வரும், அவற்றை அடிக்காமல் கிளப்பினாலும் திட்டுவார்.

கரப்பந்தாட்டம் என்பது கவனமாக ஆடப்பட வேண்டியது என்பதே இவருடைய கோட்பாடாகும். வாணம் செய்வதில் வல்லமை மிக்கவர். செய்யப்படும் வாணம் முன்னரே வெடித்துவிட்டால் எல்லாமே நாசமாகிவிடும். அதுபோலவே கரப்பந்தாட்டம் என்னும் கேமை அவுட் வாணம்போல கருதினார். சரியான நேரத்தில் அது வெடிக்க வேண்டும். சரியாக விளையாடாத வீரர்கள் மட்டுமல்ல மத்தியஸ்தர் சரியாக மத்தியஸ்தம் செய்யாவிட்டாலும் இவரால் சகித்துக் கொள்ள முடியாது. மிகச்சிறந்த கரப்பந்தாட்ட வீரர் மட்டுமல்ல நேசரும் கூட.








# தெணியம்பை அப்பு அண்ணா

அதிக உயரமில்லை, படிய வாரிய தலைமுடி, கோபம் வராத நிதானம், எல்லோரையும் உற்சாகப்படுத்தி வெற்றியை நோக்கி முன்னகர்த்தும் அமைதியான ஆட்டக்காரர் அப்பு அண்ணா. வெள்ளை நிற சங்கு மார்க் பழையகாட் சாரத்தை நேர்த்தியாக மடித்துக்கட்டி, கால்களுக்கு சப்பாத்துப் போட்டு ஆடுவார். அக்காலத்தே அவர் விளையாடும் அழகுக்கு எல்லோருமே ரசிகர்கள்தான்.

அமைதியான நதியினிலே ஓர் ஓடம் போனால் எப்படிப் போகுமோ அப்படிப் போகும் இவருடைய விளையாட்டு. சிம்பிளான அடிகள் ஆர்பாட்டமில்லாமல் பறந்து கொண்டிருக்கும். சரியான தருணம் கிடைத்ததும் அடிப்பார். அந்த அடி நெற் றிம்மில் பட்டு சரேலென சுழன்று விழும். அந்த நேரம் றிம்மில் இருந்த றிபன் டிப்.. டப்பென்று ஒருவித ஓசை கொடுக்கும். அப்படியொரு அடிக்குச் சொந்தக்காரர் அப்பு அண்ணா. இன்று நம்மிடையே அவர் இல்லை என்றாலும் மனத்திரையில் அவர் அடிக்கும் றிம் அடிகளின் ஓசை மட்டும் அழிய மறுத்து அடம் பிடிக்கிறது.

# கரப்பந்தாட்டத்தின் புதுமை வீரர் சிவநாதன்



யாழ். குடாநாடு மட்டுமல்ல குடாநாட்டுக்கு வெளியிலும் சிவநாதன் வருகிறார் என்றால் எதிரணியினருக்கு நடுக்கம் எடுக்க ஆரம்பித்துவிடும். அவருடைய கையில் இருந்து வெற்றி யைப் பறிப்பது இலகுவான காரியமல்ல. வல்வை ஊறணி ஆஸ்பத்திரியில் பிரதான நிர்வாகியாக இருந்தவர்.

நாம் இந்த ஆட்டத்தை இப்படித்தான் வெற்றி பெறலாம் என்று கூறினால் தப்பு, இப்படித்தான் விளையாட வேண்டும் என்று மாற்றிக் கூறுவார். அவர் சொல்வதைப் பார்க்க நமக்கு ஏதோ விதண்டாவாதம் போல இருக்கும். ஆனால் அவர் காட்டிய வழியில் விளையாடினால்தான் தெரியும் அது விளையாட்டல்ல ஒரு சிற்பக் கூடம் என்று. கரப்பந்தாட்டத்தின் அதி நுட்பமான இரகசியங்களை துறைபோக அறியாத எவரும் அவருடன் அருகில் நின்று விளையாட முடியாது. பாடசாலை மாணவனாக இருக்கும்போதே வல்வைக்காக விளையாடியவர்.

கம்பராமாயணம், மகா பாரதம் போல யாழ். குடா நாட்டின் ஓவர் கேம் வரலாற்றை அற்புதமான கதையாக வர்ணனைகளுடன் சொல்வார். பந்தடி முடிந்ததும் சுமார் ஒரு மணி நேரமாவது இவருடைய கரப்பந்தாட்ட வரலாற்றுக் கதைகளை கேட்காமல் வீடு போக மனம் வராது. வல்வையின் கரப்பந்தாட்ட வரலாற்றுக்கு ஒரு பெருமை இருக்கிறது. அது செவிவழி கதைகளாக தலைமுறை தலைமுறையாக தகவல்களைக் கடத்திக் கொண்டிருக்கிறது. மபோர்க்கடம் சித்தப்பா, சிவநாதன், பாலாமாஸ்டர் போன்றவர்களிடம் கரப்பந்தாட்டக் கதைகளை கேட்பது திரைப்படங்கள் பார்ப்பதைவிட பேரின்பமாக இருக்கும்.

கடா ஆடு அருகில் உள்ள பனை மரத்தில் கட்டப்பட்டிருக்கும், வென்ற அணிக்கு அது பரிசு. பந்தடி தொடங்க மழை சோனாமாரியாக

பொழியத் தொடங்கியது. தலையை அறுத்து வீசியதுபோல மழையில் தோய்ந்த பந்து பாரமேறிச் சிலாவிப் பறந்து கொண்டிருக்கும். தரையில் வெள்ளம் பாயும் இரண்டு மணி நேரம் ஆகியும் ஒரு கேம் முடியவில்லை. இப்படி நாளுக்கொரு கரபந்தாட்டக் கதை கூறுவார். அன்று பெய்த மழை, அதற்குள் விளையாடிய வீரர்கள், வென்றவர் என்று சிவநாதனிடம் கரபந்தாட்டக் கதை கேட்டால் நாமும் மழையில் நனைவோம். அற்புதமான கரபந்தாட்ட வீரர் மட்டுமல்ல கரபந்தாட்டக் கதைக் கலைஞரும் கூட. இவருக்கு வடமராட்சி முழுவதும் ரசிகர்கள் உண்டு.

கதைபோலவே விளையாட்டையும் வடிவப்படுத்துவார். செக்கன்ட் லைன் நெற்றுக்கு அருகாமையில் நிற்க வேண்டும், குடை போல வளைந்து. தலைக்கு மேல் பந்து தெரிந்தாலே போதும் தேர்ட் லைனுக்கு விட்டுவிட வேண்டும். தேர்ட் லைனில் நிற்பவரே ஓடியாடி விளையாட வேண்டும். சேவீஸ் டிங் என்ற ஓசையுடன் நெற்றுக்கு அருகாமையில் றிம்மோடு மோதுவது போல விழும். எதிரணி முழங்கால் போட்டு மேலே கிளப்ப, அவ்வளவுதான் இந்தா பிடி என்று சத்தம் கேட்கும். அடி பிளேசில் விழுந்து, கரைக்கோட்டோடு வெட்டிப் பறக்கும்.

பிளேஸ், அடி, சுருள், வேகமான காற்று அடிகள் என்று இவர் பந்தை அடிக்கும் முறையில் மற்ற எவராலுமே அடிக்க முடியாது. திருமலை சைனிங்ஸ்டார் முற்றவெளியில் நடாத்திய அகில இலங்கைக்கான ஓவர் கேமில் தனது அடிகளாலும், அபார ஆட்டத்தாலும் வல்வைக்கு அந்தக் கேடயத்தை பெற்றுத் தந்த திறமையாளர். சுமார் பதினைந்து ஆண்டுகளாக இமையாணன். அல்வாய் யூனியன் ஆகிய கழகங்கள் ஓவர் கேமில் வகித்த தனியுரிமையை உடைத்துத் தகர்த்து மறுபடியும் வல்வையின் வரலாற்றை பொறிக்கக் காரணமான வீரர்.

# விளையாட்டை எழுத்தாக்கிய செல்லத்துரை மாஸ்டர்



வல்வை புளூஸ் அணியில் முக்கிய மான வீரராக விளையாடியவர். அனந்தண்ணா, சின்னத்துரை, மபோர்க்கடம் போன்ற வீரர்களுடன் இணைந்து விளையாடியபோது அவர்களால் சிறந்த வீரராக அறியப்பட்டு, அணியில் சேர்க்கப்பட்டவர். கரப்பந்தாட்டமே வாழ்வு என்று கூறுமளவுக்கு அதன் மீது நேசம் கொண்டவர். பிற்காலத்தில் இமையாணன் கலைமகள் உட்பட இலங்கையின் முக்கிய ஓவர்கேம் கழகங்களை எல்லாம் வெற்றிபெற்றபோது அதில் முக்கிய ஆட்டக்காரராக இருந்தவர். இவருடைய சிறப்பம்சம் கைபிடி, பந்து சுழன்றபடி தேர்ட்லைன் போகும், பார்த்துக் கொண்டிருக்க நெற்றின் வலது இடது மூலைகளால் உருண்டு போகும். எல்லாவிதமான வித்தைகளையும் பிரயோகிக்கும் ஆற்றல் இவரிடம் இருந்தது. தோல்வி உறுதியாகிவிட்டால் · இறுதி மூன்று நிமிடங்கள் இருக்கும்போது வாத்தி வித்தையைக் காட்டு என்று பொட்டுக் கட்டியும், சிவநாதனும் குரல் கொடுப்பார்கள். அவர்கள் இருவரும் அனுமதி கொடுத்த பிறகு ஆட்டத்தையே மாற்றக்கூடிய மின்னல் தாக்குதல்களை நடாத்த வல்லவர். தற்போது டென்மார்க்கில் வாழும் இவர் அங்கும் கரப்பந்தாட்டத்தில் ஈடுபட்டு, முப்பத்தைந்திற்கும் மேற்பட்ட கேடயங்களை வென்ற முன்னணி ஆட்டக்காரர். கரப்பந்தாட்டத்திற்காகவே இரண்டு தடவைகள் ஏ.எல். பரீட்சையின் தோல்வியை விரும்பி ஏற்றவர். வல்வையின் கரப்பந்தாட்ட வரலாற்றை இணையத்தில் தொடராக எழுதி அதற்கு புதிய இரத்தம் பாய்ச்சி வருபவரும் இவரே.





# ஒற்றையடி வீரர் திருமலை சைனிங் ஸ்டார் சிவஞானசுந்தரம்

திருமலை சைனிங் ஸ்டார் விளையாட்டுக்கழகத்தில் பெயர்போன ஞானி அவர்கள் வல்வையைச் சேர்ந்த சிறந்த விளையாட்டு வீரராவார். உயரம் குறைவாக இருந்தாலும், அவரைப்போல தெளிவாக விளையாடக்கூடிய விளையாட்டு வீரர்கள் குடாநாட்டிலேயே ஒரு சிலர்தான் இருந்தார்கள். விளையாட்டுக்கு உடம்பு குறைவாக இருக்க வேண்டும், நிறை குறைவாக இருக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்டு வருவோரையெல்லாம் துவம்சம்செய்து காட்டும் இவருடைய உடம்பின் அசைவும், துருதுருப்பும். ஒரு கேமில் ஒரே ஒரு அடி, அதுதான் ஞானி. அந்த அடி படீர் என்ற சத்தத்துடன் இறங்கும். பந்து வருவது கண்களுக்கு தெரியாது, நிலத்தில் விழும்போதுதான் அதைப் பார்க்க முடியும். ஞானி என்றால் அக்காலத்தே விளையாட்டு வீரரிடையே ஓர் அச்சம் இருக்கும். அவருடைய மடக்கல்கள் அவரை அறிந்தவர் மனங்களில் இருந்து என்றும் விலகாது. வல்வை முத்துமாரி அம்மன் ஆலய திருவிழா ஆரம்பித்தால் திருமலையில் பணியாற்றிய வல்வையர்கள் ஊர் வந்துவிடுவார்கள். அப்போது மெல்லிய சோளகத்தில் களைகட்டும் ஓவர் கேமில் வல்வை புளூஸ் உறவுகளாக இவர்கள் மாறிவிடுவார்கள். வல்வை ஒன்றியம் வல்வையின் முதலாவது தலைவராக இருந்தவரே இந்த ஞானியாவார்.

# திருமலை சைனிங் ஸ்டார் கனகரட்ணம்

சைனிங்ஸ்டார் கனகு அவர்கள் தற்போது இங்கிலாந்தில் வாழ்ந்துவருகிறார். வல்வை வந்தால் கரபந்தாட்ட மைதானத்திற்கு வந்துவிடுவார். வல்வை புளூஸ் ஓவர் கேம் அணியில் பல தடவைகள் விளையாடியுள்ளார். சிறந்த செற்றப்கேம் ஆட்ட வீரர், ஓவர்கேமில் அமைதியான, அழகான நேர்த்தியான சீவல்களாக இவருடைய பந்துகள் பறந்து போகும். விளையாட்டுக்குள் ஓர் அமைதியை வைத்து விளையாட முடியுமா என்ற கேள்வி பலருக்கு இருக்கும். பெரும்பாலான வீரர்கள் உணர்ச்சியின் பிம்பங்களாக இருப்பார்கள். ஆனால் அதையெல்லாம் தாண்டி உணர்ச்சி வசப்படாமல் பந்தை விளையாடவல்ல சாதனையாளர்.

# ஓடக்கரை சின்னத்தம்பி

இவர் பருத்தித்துறை ஓடக்கரையில் வாழ்ந்த காரணத்தால் அப்படி அழைப்பார்கள். முன்னர் குறிப்பிட்ட திருமலை சைனிங்ஸ்டார் ஞானியின் சகோதரர். பருத்தித்துறை அல்வாய் யூனியனில் புகழ் பெற்ற விளையாட்டுக்காரராக இருந்தவர். பின்னாளில் வல்வை தீருவிலில் வாழ்ந்துவந்தார். அப்போது வல்வைக்காக அமைக்கப்பட்ட கரப்பந்தாட்ட அணியில் இவரை இணைத்துக் கொண்டார்கள். இவரும் சிவநாதனும் வந்தது வல்வைக்கு புதியதோர் இரத்தம் பாய்ச்சியது. லாலா சோப் இறுதியாட்டங்கள் பலவற்றில் ஆடிய அற்புதமான ஆட்டக்காரர். நிலத்தில் இருந்து பந்தை தொடர்ந்து அனுப்பிக்கொண்டே இருப்பார். நாலு பேர் ஆட்டத்தில் இரண்டுபேர் ஒரு பந்துகூட பிழை விடாமல் ஆட வேண்டும் என்பது விதியாக இருக்கும். அந்த இருவரில் ஒருவராக

சின்னத்தம்பி இருப்பார். சின்னத்தம்பியிடம் ஒரு குணம் இருந்தது, எந்தக்காலத்திலும் ஏ.பீ என்று இரண்டு அணிகளாக பதிவு செய்வதை விரும்பமாட்டார். ஒரே அணி, இமையாணன் போன்ற பெரிய கழகங்களுடன் இறுதி ஆட்டத்தில் மோதாமல் முதலாவது ஆட்டத்திலேயே மோதி முடித்துவிட வேண்டும் என்ற வீறாப்பு கொண்டவர். தன்னம்பிக்கை மிக்க அற்புதமான ஆட்டக்காரர். இவரோடு இணைந்து விளையாடும்போது கரபந்தாட்டமே புதிய சுகம் பெறும்.

## கலகலப்பாக விளையாடும் எம்.ரீ.ரீ மணி



வல்வைக்காக பல ஆட்டங்களில் களமிறங்கியவர். செற் அப் கேமிலும் அதிக நாட்டம் கொண்டவர். விளையாட்டையும், வாழ்வையும் ஒன்றாக்கிய சிறந்த மனிதர். வாழ்வை நகைச்சுவையாக்கி அணிக்கு புதிய தெம்பு தருவார். இரண்டு கைகளில் ஒன்றை இலகுவாக சரித்து வைத்திருப்பார். அதற்கமைவாக பந்து சுருண்டு போகும். வேகமான மடக்கலை தவிர்த்து அனைத்தையும் மடக்கல்போல அடித்துக் கொண்டே இருப்பார். பல மணிநேரங்கள் முடிந்து போகாமல் நீண்டு போகும் ஆட்டங்களில் மணி விளையாடினாலும்கூட அத்தனை பந்துகளும் சுருண்டு கொண்டே போகும் ஒரு வீரர். வாழ்வையும் விளையாட்டையும் ஒன்றாக நேசித்த நேசர்.

## களைப்பின்றி விளையாடும் ஏ.ரீ மணி

வல்வையின் கரப்பந்தாட்ட வரலாற்றில் மிக நீண்ட பிணைப்பைக் கொண்டவர் ஏ.ரீ.மணி. தனது உடலை எப்படி கச்சிதமாக பயன்படுத்தி ஆடுவது என்ற இலக்கணத்தை இவர் சொல்வதில்லை. ஆனால் ஆடும்போது அது அழகாக வெளிப்படும். எல்லோருடைய கைகளும் பொத்தப்பட்டு அடிகள் பயணிக்கும், ஆனால் இரண்டு கரங்களையும் விரித்து பந்தை அடிக்கும் ஒரேயொரு வீரர் இவர். தாமரை மொட்டுப்போல பந்தை அடிப்போரிடையே மலர்ந்த தாமரையால் பந்தை அடிப்பது போன்றது இவருடைய அடி. சுமார் ஆறேழு பந்துகளுக்கு ஒரு பந்து மடக்கலாக வரும். பல வெற்றி ஆட்டங்களில் விளையாடி வல்வைக்கு புகழ் தேடித்தந்த சிறந்த வீரராவார். அனந்தண்ணா, ஏ.வீ.அருணாசலம் போன்றவர்களுடன் இவரும் மைதானத்தில் நின்று விளையாடும்போது ஆட்டத்தின் தோற்றம் முற்றிலும் மாறுபடும். எதிரணியினர் அறுகோணத் தாக்குதல்களைச் சந்திக்க நேரும். மற்றய அணிகளில் ஆறுபேரும் ஒரு விதமாக விளையாடுவார்கள், ஆனால் வல்வையில் ஆறுபேரும் ஆறு விதமாக விளையாடுவார்கள். இதனால் எதிரணியினர் ஆட்டத்தை புரிய முன்னரே வெற்றிக்குள் இவர்கள் போய்விடுவதும், வெற்றியைப் பெற்றுவிடுவதும் தனியான கலையாகும்.





## அமைதியான வீரர் ஆசிரியர் பா. குமாரசீறீதரன்



தற்போது இங்கிலாந்தில் வாழ்ந்துவரும் ஆசிரியர் பா. குமாரசிறீதரன் சிறந்த ஆட்டக்காரராவார். இவர் உதைபந்தாட்டத்திலும் வல்லமை பொருந்தியவர். இவருடைய கைபிடி மிகவும் வித்தியாசமானது, ஒவ்வொரு அடிக்கும் பலமான ஓசை கேட்கும். பந்து வேகமாகவும், சுழன்று கொண்டும் வந்து தாக்கும். கரப்பந்தாட்டத்தில் தொடர்ந்து தன்னை இடையறாது இணைத்துக் கொண்டவர். சிதம்ஸ் போன்ற இளைஞர்கள் கழகத்திலும் இவர் முத்திரை விளையாட்டு வீரராக வலம்வந்தவர். வாழ்நாள் முழுவதும் ஆசிரியராகவும், வல்வையின் விளையாட்டுக்கள் மேலோங்கவும் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருப்பவர். இங்கிலாந்திலும் வல்வை புளூஸ் மேம்பாட்டிற்காக இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. வல்வையின் கரப்பந்தாட்ட மைதானங்கள் மறந்துபோக முடியாத வீரர். அதைவிட முக்கியம் சிறந்த வீரர்களை அடையாளம் கண்டு அவர்களின் எதிர்காலத்தைக் கூறி உற்சாகப்படுத்துவது இவரது திறமையாகும்.

## நெருப்பு வீரர் நடனசிகாமணி

எஸ்.ஜெயபாலசிங்கத்தின் சகோதரர் நடனியின் விளையாட்டுக்கள் மிகவும் சூடானவை. இவர் மைதானம் வந்துவிட்டால் உலையில் போட்ட இரும்புபோல ஆடுகளம் சூடு பிடித்துவிடும். கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், கிட்டியடித்தல், கபடி என்று எதற்குப் போனாலும் நடனியை அழைத்துப் போனால் வென்றுவிடலாம் என்றளவுக்கு உடல்வாகு கொண்டவர். வலம், இடம், முன், பின் என்று எத்தனை பக்கத்தால் பந்துகளை செலுத்தினாலும் அதை ஓடி எடுப்பதில் அவருக்கு இணை அவர் மட்டுமே. கற்பனை பண்ண முடியாத வேகத்தில் தேர்ட்லைன் கோணரில் உராயும் பந்தையும் எடுப்பார் அதே வேகத்தில் நெற் நிம்மில் விழுந்து உருளும் பந்தையும் வேகமாகச் சீவிவிடுவார். வல்வையில் இருக்கும்போது சுமார் பதினைந்து ஆண்டுகள் வரை ஆடுகளத்தில் ஒரு சவால் வீரராகவே இருந்தார். தற்போது தமிழ்நாடு திருச்சியில் வாழ்ந்து வருகிறார். வல்வை புளூஸ் கரப்பந்தாட்டத்திற்கு ஒரு வீர முகத்தை கொடுத்தவர்களில் இவரும் ஒருவர்.

## தங்கமாக அடிக்கும் வீரர் தங்கம்

வல்வை புளூஸ் ஓவர்கேமில் பல ஆட்டங்களில் தங்கம் விளையாடியுள்ளார். உயரமான தோற்றம், தனது சகோதரர் சின்னண்ணா போன்ற உருண்டையான கைபிடி தலைக்கு மேல் கைகளை வைத்து பந்தை அடிப்பார். உயரமான தோற்றமுடைய இவர் சிறந்த கோல்காப்பாளரும் கூட. ஆட்டம் சூடு பிடித்தால் இவருடைய திறமை மேலும் மேலும் மெருகேறும். களைக்கக் களைக்க, வியர்த்து வடிய வடிய இவர் ஆடும் ஆட்டம் மிக அழகானது. இவர் வல்வை புளூஸ் ஓவர் கேமில் மறக்க முடியாத வீரராக திகழ்ந்தவர். பந்தடி முடிந்தவுடன் அவருக்கு ஒரு நெக்ரோ சோடா வேண்டும் என்பார். அதற்கேற்ப அவருடைய தேகத்தில் களைப்பிருக்கும். இவருடைய இழப்பு வல்வையின் ஒட்டுமொத்த விளையாட்டுத் துறைக்குமே பேரிழப்பாகும்.

## சுருள் அடி வீரர் அப்பாச்சாமி தயாநிதி

காட்டுவளவை சேர்ந்த இவர் கரப்பந்தாட்டத்தில் ஒரு மஜிக் போன்ற வேகம் கொண்ட வீரராக திகழ்ந்தவர் என்பது பலருக்கு தெரியாது. வல்வை புளூஸ் கரப்பந்தாட்டத்தில் குடாநாட்டின் ஓவர் கேம் கிண்ணங்களை எடுக்கத் தொடங்கியபோது இரண்டு இறுதி ஆட்டங்களில் விளையாடியுள்ளார். களைப்படையாத, வேகமாக கைகளை இயக்கக் கூடிய ஆட்டக்காரர். பந்தை றிம்மோடு றிம்மாக விழச் செய்யவும், அப்படி விழும் பந்தை நெற்றின் கீழே பின்புறமாக விழுந்து, ழுழு வட்டமாகச் சுழன்று எடுத்து றிம்மிலேயே அடித்து மறுபக்கம் விழுத்த யாராவது இருக்கிறார்களா என்றால் அது அப்பாச்சாமி தயாநிதி ஒருவர் மட்டும்தான். அவருடைய சிறப்பு மற்றவருக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தும். கரப்பந்தாட்டத்தில் ஸ்பீட் என்றால் அவர்தான்.

## அமைதியான ஆட்டக்காரர் ராதா

ராதா ஜெயபாலசிங்கத்தின் மைத்துனர் அழகான விளையாட்டு வீரர், கரபந்தாட்டத்திற்காகவே வாழ்ந்தவர். தற்போது கனடாவில் இருக்கும் இவருடைய விளையாட்டு அற்புதமானது. ஓவர்கேமில் அழகான ஓர் ஆட்டத்தை அறிமுகம் செய்து ஆடிய ஆட்டக்காரர். செற் அப் கேமில் செற் பண்ணுவதில் சிறந்த பவரிங் உடையவர். கரபந்தாட்டத்தின் இருவர் ஆட்டங்களில் அபாரமாக விளையாடக் கூடியவர். இவரிடம் வேகமாக அடித்தோ, பிளேஸ் செய்தோ புள்ளிகளை எடுக்க முடியாது. தாயகம் அமைதியாக இருந்திருந்தால், இவருடைய கரப்பந்தாட்ட ஆளுமை மேலும் ஒளி வீசிப் பிரகாசித்திருக்கும் இப்படி எண்ணற்ற வீரர்களின் வரலாறுகள் மேலும் பதியப்படவுள்ளன.





வல்வை புளூசின் கரபந்தாட்ட வரலாற்றை எழுதும் முயற்சியில் இது சிறியதோர் முன்னுதாரணமே. சுந்தரமூர்த்தி நாயனாரால் திருக்குறிப்பு தொண்டர் புராணத்தில் பதினொரு பாடல்களை மட்டும் எழுதி வழிகாட்ட, பிற்காலத்தில் சேக்கிழார் சுவாமிகள் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறு கொண்ட பெரிய புராணத் தைப் பாடினார். சுந்தரர் பாடியது போல இதுவும் சிறிய தொகை மட்டுமே. இதில் விடுபட்ட பல வீரர்கள் உண்டு, அவர்களில் பலர் இங்கு குறிப்பிடப்பட்ட வீரர்களைப்போல சிறந்தவர்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். அனைவரையும் இணைத்த மாபெரும் தகவல் களஞ்சியம் விரைவில் வெளிவரும். நமக்குக் கிடைத்த, நமது அறிவுக்கு எட்டிய வீரர்களை முதற்கட்டமாக பதிவு செய்கிறோம். இந்த முயற்சி மேலும் செம்மைப்படுத்தப்பட வேண்டியது என்பதை நாம் மறுக்கவில்லை. இரு கரம் கூப்பி ஏற்றுக் கொள்கிறோம். இந்நூல் வெளி வந்த பின்னர் பல கருத்துக்கள் வரும். அவற்றை ஆதாரமாக வைத்து பணியை மேலும் செம்மைப்படுத்தலாம். ஒன்றையுமே செய்யாமல் விடுவதைவிட ஏதோ ஒன்றை செய்து ஒரு பணியை ஆரம்பித்து வைக்கலாம் அல்லவா..?




வல்வை புளூஸ் என்பது அதன் நிறங்களைப் போலவே கடல் போன்ற ஆழமானது. அங்கே எண்ணற்ற மீன்களாக விளையாட்டு வீரர்கள் உண்டு. அதேபோல வல்வை புளூஸ் வழங்கிய ஆகாய நீலத்தில் எண்ணற்ற தாரகைகள் மின்னிக் கொண்டிருக்கின்றன. மீன்களையும், தாரகைகளையும் எண்ணி எழுதுவது போன்ற ஒரு முயற்சியில் நாம் இறங்கியிருக்கிறோம். எழுதினாலும் எழுதாவிட்டாலும் தாரகைகள் தாரகைகளே என்பதை மரியாதையுடன் ஒப்புக் கொள்கிறது இந்த நூல்.

சரித்திர புருஷர்களை பதியாமல் இருப்பதைவிட, பதிய ஆரம்பிப்பது உயர்ந்த பணியாகும். நாம் நடக்க நடக்கத்தான் பாதை உருவாகும். மன்னர்களையும், புலவர்களையும் மட்டுமே எழுதிய தமிழ் வரலாற்றில் விளையாட்டு வீரர்களின் வரலாறு மூலமாக நமது வரலாற்றைப் பதிந்து செல்லும் இம்முயற்சி இலங்கை வரலாறு எழுதுகையில் புதியதோர் முயற்சியாகும். இதை ஆதரிப்பதும், மேலும் வளர்ப்பதும் அனைவரதும் கடனாகும்.



# வலைப் பந்தாட்டம்

வல்வை மாணவிகள் பலர் (சுகன்யா பாலேந்திரா, ஜானகி யசோதரன், மீரா லிங்கராஜா, வசந்தினி கனகலிங்கம், செந்தமிழ்ச்செல்வி துரைரட்ணம், நளாயினி தேவராசா) பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் பிரதான வலைப்பந்தாட்ட அணியில் பங்குபெற்று பாடசாலைகளுக்கு இடையேயான யாழ் மாவட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலிடம் பெற்றதுடன் கொழும்பு மாநகரத்தில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியான போட்டிகளில பங்குபற்றியிருந்தார்கள்.

வல்வை மகளிர் கல்லூரி 1972ல் ஆரம்பிக்கப்பட்டாலும் 1976ல் வலைப்பந்தாட்ட அணி உருவாக்கப்பட்டது. படிப்படியாக முன்னேறி வல்வை மகளிர் கல்லூரி வல்வை மகளிர் மகாவித்தியாலயமாக 1980களின் முற்பகுதியில் தரமுயர்த்தப்பட்டது. இக்காலகட்டத்தில் வல்வை மாணவிகள் அயல் நகரப் பாடசாலைகளைத் தவிர்த்து, வல்வை மகளிர் மகாவித்தியாலத்தில் தமது உயர் கல்வியைக் கற்றுப் பாடசாலையின் கல்வித்தரத்தையும், விளையாட்டுத்தரத்தையும் உயர்த்தி இருந்தனர். அதன் பயனாக 1991ம் ஆண்டு பாடசாலைகளுக்கிடையேயான வலைப் பந்தாட்டப் போட்டியில் வடமராட்சியில் முதலாமிடத்தைப் பெற்று யாழ் மாவட்டரீதியிலான போட்டியில் கலந்து விளையாடி வலைப்பந்தாட்டத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தை வல்வையில் ஏற்படுத்தினர். இப்பெருமைக்கு முக்கியமானவர்கள் அன்றைய அதிபர் திருமதி.ரு. அரியரத்தினம் அவர்களும் விளையாட்டு ஆசிரியை செல்வி. சத்தியவதி முத்துச்சாமியும் ஆகும்.



நிற்பவர்கள் இடமிருந்துவலமாக: சாந்திசெல்வச்சந்திரன், சாதனா ஸ்ரீரங்கநாதன், மலைமகள் அரசரட்ணம், சத்தியா சுந்தரலிங்கம், குமுதா ஈஸ்வரபாதம், சுபாஜினி தேவராஜா.

இருப்போர் இடமிருந்துவலமாக: வடமராட்சி வலைப்பந்தாட்டப் போட்டிப் பொறுப்பாளர் சத்தியவதி முத்துச்சாமி (விளையாட்டு ஆசிரியை வல்வை மகளிர் மகாவித்தியாலயம்) லட்சுமி அரசரட்ணம் (அணித்தலைவி) மு.தங்கவேல் (பொறுப்பாளர்)







நிற்பவர்கள்: ஜெயசகிலா குகநாதன், ராகினி சிறீதரன், ஜானகி யாசோதரன் சுகன்யா பாலேந்திரா, லட்சுமி சிவநேரு, தனுஜகா ஸ்ரீகுமார்

இருப்பவர்கள்: ரேச்சல் நந்தகோபன், அர்ச்சனா செல்லத்துரை, ஜெகதேவி குகாணந்தஜோதி ,மாதவி உதயணன்.

வலைப்பந்தாட்டம் பாடசாலைகளால் மட்டுமல்லாது கழகங்களாலம் பெரிதும் விரும்பப்பட்டு விளையாடத் தொடங்கிய இக்காலகட்டத்தில் வல்வையில் ஒரு வலைப்பந்தாட்ட அணியை உருவாக்குவதற்குத் தூண்டுதலாக இருந்தவர் திரு.மு.தங்கவேல் அண்ணா என்றால் அது மிகையாகாது.

தமிழ் மக்கள் குறிப்பாக வல்வை மக்கள் பெருமளவு துன்பங்களையும் சிரமங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில், ஒரு வலைப்பந்தாட்ட அணியை உருவாக்க நாம் மிகவும் சிரமப்பட்டோம். இருப்பினும் பெற்றோரின் ஆதரவும் தீராத முயற்சியும் வலைப்பந்தாட்ட அணியை நிறுவ எமக்குப் பேருதவியாக இருந்தது. அக்காலகட்டத்தில் வடமராட்சியில் சகல இடங்களுக்கும் துவிச்சக்கர வண்டியிலேயே பிரயாணம் செய்து போட்டிகளில் பங்குபற்றினோம். இந்த ஊக்கத்தினாலும் தீராத முயற்சியினாலும் 1992ம் ஆண்டு வல்வை மகளிர் மகாவித்தியாலய மைதானத்தில் வடமராட்சிக் கழகங்களுக்கு இடையேயான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் அல்வாய் பொம்மேர்ஸ் அணியைத் தோற்கடித்து வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டோம் என்பதனை பெருமையுடன் எழுதிக் கொள்கின்றேன்.

ஒரு அணியின் வெற்றி அவ்அணியின் அனைத்து வீரர்களையுமே சாரும். ஆகவே புகைப்படத்தில் இல்லாத இரண்டு வீராங்கனைகள் இராஜேஸ்வரி மோகனசுந்தரம், சுதர்சினி கிருஸ்ணசாமி அகியோர் தவிர்க்க முடியாத காரணங்களினால் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ள முடியாத காரணத்தால் அவர்கள் புகைப்படத்தில் இடம்பெறவில்லை.

எங்கு சென்றாலும் எங்கு வாழ்ந்தாலும் எமது மனங்களில் பசுமரத்தாணிபோல பதிந்து போன பொற்காலம் எமது பிறந்த மண்ணில் வாழ்ந்த அந்தக் குறுகிய காலம்தான் என்பதும் உண்மை. வல்வையில் தொடர்ந்தும் வாழ முடியாமல் விதிவசத்தால் அனேகமானோர் பலநாடுகளுக்கு சிதறடிக்கப்பட்டார்கள்.

இவ்வாறு சிதறடிக்கப்பட்டவர்களில் கணிசமான தொகையினர் பிரித்தானியாவில் வாழ்ந்து வருகின்றனர். இலங்கையில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் தத்தமது அணிகளை உருவாக்கிய போன்று வல்வை மகளிர் மகாவித்தியாலய அணியும் இங்கு உருவாக்கப்பட்டது. தாயகத்தில்



நிற்பவர்கள்: தனுஜகா ஸ்ரீகுமார், கார்த்திகா சாந்தகுணாளன், சபீனா பாலேந்திரராஜா, கஜைஜா தெய்வசந்திரன்.
இருப்பவர்கள்: கிறிஸ்ஸனா நந்தகோபன், பவித்திரா ராஜ்மோகன், கீர்த்தனா பாலேந்திரராஜா, மாதவி உதயணன்.

வெவ்வேறு பாடசாலைகளில் படித்திருந்தாலும் இங்கு வல்வை மகளிர் மகாவித்தியாலய அணிக்காகவே விளையாடி ஊருக்குப் பெருமை சேர்த்தனர். அத்தோடு எமது அடுத்த தலைமுறையினருக்கும் வல்வைப் பெண்களின் திறமையைத் தெரிய வைத்து அவர்களுக்கும் எமது ஊர்ப்பாடசாலைகள் மீதும் ஆர்வத்தையும் பற்றையும் ஏற்படுத்தினோம்.

எமது அணியில் இருபதிற்கும் மேற்பட்ட வீராங்கனைகள் பங்குபற்றி ஆர்வமாகப் பயிற்சியில் கலந்து கொண்டனர். அதன் பயனாக 2003ம் ஆண்டு தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (ஐஇ) நடாத்திய போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. அதே ஆண்டு தாயகத்தில் இருந்து வடமாகாணத் தமிழ் வீராங்கனைகள் அடங்கிய ஒரு வலைப்பந்தாட்டக் குழு லண்டனுக்கு விஜயம் செய்தது.

அவ்வணியினர் பிரித்தானியாவில் உள்ள அனைத்துத் தமிழ் பாடசாலை அணிகளுடனும் மோதி அனைத்துப் போட்டிகளிலும் வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது. தாயகத்தில் விளையாட்டு மேம்பாட்டுக்காக ஒரு காட்சிப் போட்டியை நடாத்தி நிதியும் சேர்த்துக் கொடுத்தது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பின்னர் எமது பழைய மாணவிகள் ஓய்வு பெறப் புதிய தலைமுறை வீரங்கனைகள் தொடர்ந்தும் பயிற்சி பெற்றுத் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (ஐஇ) நடாத்தியபோட்டியில் இரண்டாம் இடத்தை மீண்டும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

எமது புதிய தலைமுறை வீராங்கனைகளை வழிநடத்தி அவர்களைப் போட்டிகளில் பங்குபெறச் செய்து உதவியமைக்கு திருமதி ரேச்சல் நந்தகோபனுக்கு வல்வை மகளிர் வலைப்பந்தாட்டக் குழு சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதே நேரம் தற்பொழுது வலைப்பந்தாட்ட பயிற்சிகள் எதுவும் நடைபெறுவதில்லை. பெற்றோரும் வீராங்கனைகளும் ஆர்வமுடன் முன்வந்தால் உடனடியாக பயிற்சிகளை ஆரம்பிப்பதற்கு ஆவலாக உள்ளோம் என்பதை இங்கிலாந்து வாழ் அனைத்து வல்வை மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**லட்சுமி அரசரட்ணம் சிவநேரு**
**வல்வை வலைப்பந்தாட்டக் குழு**



# வல்வை புளூஸ் பொன்விழா மலர்க் குழுவின் குறிப்பு

புலம்பெயர்நாடுகளில் பெண்களுக்கான தனித்த சுற்றுப்போட்டிகள் எதுவும் பெரிய அளவில் நடை பெறுவதில்லை. விளையாட்டுப்போட்டிகளிலும் பெண்களுக்கான தடகளநிகழ்வுகளுடன் மைதான விளையாட்டாக வலைப்பந்தாட்டம் மட்டுமே நடாத்தப்பட்டு வந்துகொண்டிருக்கின்றது.




இந்தநிலையில் புலம்பெயர்நாடுகளில் உள்ள வல்லைபுளூஸ் கழகங்கள் வல்வைப்பெண்களுக்கான வரலப்பந்தாட்டத்தில் இன்னும் ஆழமான ஈடுபாடும்,கவனமும் செலுத்தவேண்டி இருக்கின்றது.

ஏராளமான வல்வைபெண் பிள்ளைகள் வலைப்பந்தாட்டத்தில் ஆர்வமும் திறமையும் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு முறையான பயிற்சியும் ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்பட்டால் அவர்கள் புலம்பெயர் தமிழரின் சுற்றுப்போட்டிகளில் மட்டும் இல்லாமல் மற்றைய போட்டிகளிலும் வெற்றிகளையும் சாதனைகளையும் ஈட்டமுடியும்.

உதைபந்தாட்டத்துக்கும்,கரப்பந்தாட்டத்துக்கும்,துடுப்பெடுத்தாட்டத்துக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை பெண்களின் வலைப்பந்தாட்டத்துக்கும் கொடுப்பதன்மூலமே அதனை நாம் வளர்த்தெடுக்க முடியும்.

இந்த பொன்விழாஆண்டிலிருந்து அதனை செயற்படுத்த ஆரம்பிப்போம் என்று உறுதியெடுப்போம்.

# கிரிக்கெட்

வல்வையில் திரு. ஞானசம்பந்தம் பிள்ளை (சாம் அண்ணா) அவர்களின் முயற்சியால் 1970 களிற்கு முன்பே வல்வை புளூஸ் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட ஆரம்பித்துவிட்டது. விசயன் மாஸ்டர், அருள் சுந்தரம் போன்றவர்களின் உதவியினால் சிறப்பாக வளர்ந்தது. நடேசுதாசன், சிவநேசன், யோகச்சந்திரன் மாஸ்டர், திலகரட்ணம், குணநாதன், ரூபநாதன், விமலநாதன், ஸ்ரீதரன் மாஸ்டர், சுபாஷ், ஜெயபாலசிங்கம் ஆகியோர் ஆரம்பகாலங்களில் சிறப்பாக விளையாடியவர்களாவர்.



இவர்களுடன் ஜெயமோகன், அருள்பிரகாசம், ஏ.எஸ்.ராஜேந்திரம், அரசரட்ணம் ஆகியோரும் சிறப்பாக விளையாடினார்கள்.

இக்காலத்தில், வடமராட்சியிலுள்ள எல்லாக் கிரிக்கற் விளையாட்டுக் கழகங்களுடனும், சிறப்பாக விளையாடிப் பலவெற்றிக் கிண்ணங்களைப் பெற்றோம்.

1976ம் ஆண்டு ஏ.ஜி.ஏ. பிரிவில் நடந்தசுற்றுப் போட்டியில் பங்குபற்றிவெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தோம்.

கற்கோவளம் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட சுற்றுப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றோம்.

அரியாலையில் நடத்தப்பட்டசுற்றுப் போட்டியிலும் பங்குபற்றிச் சிறப்பாக விளையாடினோம்.

பின் புகுணநாதன் தலைமையில் விளையாடியபோது, நடேசுதாசன், ரூபநாதன், குகநாதன், விமலநாதன், ஜெயமோகன் போன்றவர்களின் சிறப்பான ஆட்டங்களால் பலவெற்றிக் கிண்ணங்களைப் பெற்றோம். அடுத்தகட்டகமாகப் பல இளைஞர்களும் ஆர்வம் காட்டி விளையாட ஆரம்பித்தனர். குறிப்பாக உதைபந்தாட்டம் மிகப் பிரபல்யம் அடைந்திருந்ததால் இதனை யாரும் பெருமளவில் ஊக்குவிக்கவில்லை. இருப்பினும் 83ம் ஆண்டளவில் உதைபந்தாட்ட வீரர்களில் கிருஷ்ணகுமார், சுப்பிரமணியம், இந்திரலிங்கம் ஆகியோர் விளையாட ஆரம்பித்தனர். அக்காலகட்டத்தில் துரைச்செல்வம் இத்துறைக்குப் பலவழிகளில் ஊக்கமளித்தது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் பந்துவீச்சாளர்களாக கிருஷ்ணகுமாரும் முரளியும் சிறப்பாகப் பந்துவீசினார்கள். இவர்களுக்குக் கல்லூரி அனுபவம் இருந்ததும் குறிப்பிடத்தக்கது. திரு. திலகரட்ணம் அவர்கள் பாராட்டுக்குரியவர். அவர் தான் இதில் மிகவும் Senior ஆவார். அவர் வீரர்களுக்குப் பயிற்றுவிப்பாளராக இருந்தார். துடுப்பாட்டத்தில் செல்வன், தனஞ்சயன், ரவி (வல்வெட்டி), கோபால், சுப்பிரமணியம் ஆகியோரும் சிறப்பாக விளையாடி வந்தனர்.

இதனைத் தொடர்ந்து 1983ம் ஆண்டுஒக்டோபர் பகுதியளவில் கிரிகெட் Leather Ballல் விளையாடஆரம்பித்தனர். அதற்கு அனுசரணையாக இருந்த திரு. தேவசிகாமணிஅவர்களின் மகன்





முரளியும் (ராம் குமார்), RGV குடும்பத்தை சேர்ந்த பாபு அண்ணாவும் நன்றிக்குரியவர்கள் ஆவார்கள். இக்குழுவில் திலகரட்ணம், சுரேஷ், கிருஸ்ணகுமார், முரளிதரன், இந்திரலிங்கம், பாபு, ராம்குமார், ஆனந்த், சுப்பிரமணியம் ஜீவன், வசந்தன் ஆகியோரும் அடங்குவர். அக்காலட்டத்தில் சென்.ஜோன்ஸ்,யாழ் இந்துக் கல்லூரி, யாழ் பல்கலைக்கழகம் போன்ற அணிகளுடன் விளையாடிய அனுபவம் இன்றும் எம்மால் மறக்கமுடியாத ஒன்றாகத் திகழ்கின்றது.

அதன் தொடர்ச்சியானது 1985, 1986, 1987களில் இந்தியாவிலும் தொடர்ந்தது குறிப்பிடத்தக்க சிறந்த அம்சமாகும். அங்கு பலசுற்றுப் போட்டிகளில் விளையாடியவை குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் ஆகும். அக்குழுவில் மேலும் A.V. அருணாசலம், இந்திரலிங்கம், சுப்பிரமணியம்,பிரேம், ஹரிகரன், ஜீவன், சங்கர், செல்வக்குமார், நிரஞ்சன், உதயணன், கோபி போன்றனர் அங்கம் வகித்தனர். இது திருச்சியில் ஓர் அங்கமாகம். சென்னையிலும் பல இடங்களில் வல்வை அணி பங்கெடுத்தது. அங்கு பாலகுமார், அருணாசலம், சிவகுமார், தெய்வேந்திரன், மணிவர்மா ஆகியோரும் இணைந்து விளையாடி வந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

1991ம் ஆண்டுதிரு. இந்திரன் தலைமையில் வல்வை புளூஸ் என்றபெயரில் லண்டன் மாநகரில் ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் எந்த ஒரு Tournaments ம் ஆரம்பிக்கப்படவில்லை. அதனால் நாங்கள் Friendly போட்டிகள் மட்டுமே விளையாடி வந்தோம். அந்தவேளையில் எமதுஅ ணியில் திரு ஜீவன், திரு. பிரபாகரன், திரு. கிசோக், திரு. குமாரசாமி, திரு.இந்திரலிங்கம், திரு. செல்வக்குமார், திரு. ஞானசுந்தரம், திரு. சதீஸ், திரு.ஹரிஹரன், திரு. கண்ணன், திரு. குணாலன், திரு.மோகனவேல், திரு. பாலு,திரு. இளந்திரையன், திரு.முகுந்தன், திரு.சுரேன், திரு.பாபு ஆகியோர் அடங்கியிருந்தனர்.

1993ஆம் ஆண்டுப் பகுதியில் முதன் முறையாக லண்டனில் SRILANKAN SUNDAY LEAGUE இல் இணைந்துவிளையாடஆரம்பித்தோம். அந்தஆண்டுக் காலப் பகுதியில் மேலும் திரு. அரவிந்தன், திரு. குமார், திரு.வசி, திரு.திருக்குமார்,திரு. ஜெயக்கிருஷ்ணா, திரு. ராஜ்குமார், திரு.ராஜ், திரு.மேனன் ஆகியோரும் எங்கள் அணியில் இணைந்து மேலும்அணியைப் பலப்படுத்தினார்கள்.



1996

1995ஆம் ஆண்டுகாலகட்டத்தில் SRILANKAN LEAGUE விளையாடத் தொடங்கிய நாங்கள் 1996இல் செரண்டிப் (SERANDIP SPORTS CLUB) விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பெற்ற 7 நபர் கொண்ட போட்டியில் முதன்முறையாக வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக் கொண்டோம். அந்த வெற்றியானது எமதுமுன்னேற்றத்திற்கு மிகவும் ஊன்றுகோலாக அமைந்ததென்றே கூறலாம். அதேவேளை மேலும் திரு.ரிச்சேர்ட், திரு.குமரன், திரு. காண்டீபன், திரு. திருக்குமார் ஆகியோரும் எங்களுடன் இணைந்தனர்.

1998 இல் SRILANKAN SUNDAY LEAGUE இல் இரண்டாவது (Runners up) இடத்தைப் பெற்றோம். அதனைத் தொடர்ந்து 2001 இல் கல்லூரிகளுக்கிடையில் நடைபெற்ற 7 நபர் கொண்டபோட்டியில் நாங்கள் சிதம்பராக் கல்லூரி என்றபெயரில் முதன்முறையாகஅரை இறுதிப் போட்டியில் ST. JOHNS பாடசாலையிடம் தோல்வியடைந்தோம்.

2002 இல் SRILANKAN LEAGUE ஆல் நடத்தப்பெற்ற KNOCKOUT LEAGUE இல் லண்டனில் அந்தக் காலப்பகுதியில் ஜாம்பவான்களாக விளங்கிக் கொண்டிருந்த நொதன்ஸ் (NORTHANS) அணியை இறுதிப் போட்டியில் வென்று வெற்றிக் கோப்பையைக் கைப்பற்றினோம். 2004ம் ஆண்டுகாலப் பகுதியில் திரு.கஜேந்திரா, திரு.ரிசி, திரு. தயா, திரு.வெற்றி, திரு. அருள், திரு. திருக்குமார் ஆகியோரும் எங்கள் அணியில் இணைந்திருந்தனர்.

2004ம் ஆண்டு SRILANKAN LEAGUE இல் தெற்குப் பகுதியில் பத்துஅணிகளுக்கிடையிலான LEAGUE போட்டியில் சாம்பியனாகவும் (CHAMPIONS) வந்திருந்தோம். அதேநேரம் திரு. நீலா, திரு. பிரதீஸ், திரு. ரமேஸ், திரு. லவன், திரு.சிறி, திரு.ராகவன், திரு. வினோத், திரு.குமரன், திரு.சீலன், திரு. நிர்மல் அணியில் சேர்ந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து 2005ம் 2006ஆம் ஆண்டுகளிலும் தொடர்ந்து LEAGUE CHAMPIONS ஆகவும் வந்தது. அந்தக் காலகட்டத்தில் எங்கள் அணியென்றாலே எதிர் அணிகளுக்கிடையில் தனிப்பயம் ஏற்பட்டிருந்த காலம் அது. இதனைத் தொடர்ந்து TSSA ஆல் நடத்தப்பட்ட 7 நபர் கொண்ட போட்டியில் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்து இரண்டாவது இடத்தைப் பிடித்திருந்தோம்.



2007






2011

2008 இல் மீண்டும் TSSAஆல் நடத்தப்பட்டபோட்டியில் இறுதிப் போட்டியில் நடுவரின் சதியால் வெற்றிக் கிண்ணத்தை வென்றெடுக்கும் வாய்ப்பை இழந்தோம். அதேநேரம் திரு.ரஜீவன், திரு. ஜனா, திரு. துவா, திரு. துசா மேலும் அணியில் சேர்வதற்கு முன்வந்தனர்.

ஒவ்வொருவருடமும் TSSAஆல் நடாத்தப்படும் வெளிநாட்டுஅணியுடன் விளையாடும் லண்டன் அணியில் விளையாடுதவதற்காகவெவ்வேறுகாலப் பகுதியில் எங்கள் அணியில் இருந்துதிரு. பிரபாகரன்,திரு. கஜேந்திரா,திரு. நிர்மல் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டதுஎங்கள் அணிக்குமேலும் பெருமையைத் தேடித்தந்ததென்றேசொல்லலாம். அதேநேரம் எங்கள் அணிஆரம்பித்தகாலத்திலிருந்துஅணியைத் தலைமைதாங்கிநடத்தியவர்களில் திரு. இந்திரன் (Canada), திரு. பாலு,திரு. ஜீவன்,திரு. பிரபாகரன்,திரு. திருக்குமார்,திரு. கிசோக்,திரு. கஜேந்திரா,திரு. ரிசிஆகியோரின் பங்குஅதிகமாக இருந்ததென்றே கூறலாம். அதனைப் போல் எமதுகழகம் ஆரம்பித்தகாலத்தில் திரு. ஞானசுந்தரம் துடுப்பாட்டஅணிக்குமனேஜராகவும் (Manager) அதன்பின் திருசுப்பிரமணியம்,திரு. ஜீவன்,திரு. கிசோக் ஆகியோர் தங்கள் பணியைநல்லபடியாகநடத்தியிருந்தார்கள்.

2011 இல் திரு.கஜேந்திராவின் தலைமையிலும் திரு. வசியின் ஒழுங்கமைப்பிலும் திரு. ரிசி,திரு. ராகவன்,திரு. பிரபாகரன், திரு.சிறி, திரு. லவன், திரு. துவா, திரு. ஜனா, திரு. நிர்மல், திரு. பரணி, திரு. ராஜ்குமார், திரு. ரஜீவன் ஆகியோரும் அணியில் விளையாடி வருகின்றனர்.

1961 - 2011 VALVAI BLUE'S GOLDEN JUBILEE SPORTS CLUB






# ரொறொன்ரோ புளூஸ்

## ஒரு கால் நூற்றாண்டுப் பதிவு



வல்வை நகரம்: இந்து மாக்கடலின் அலையில் நனைந்தபடி உலகப் புகழ் பரப்பி வீற்றிருக்கும் ஒரு வலிமையான சிறு நகரம். நிலப்பரப்பில் சிறுநகரம்தான். ஆனாலும் பல பெரிய மனிதர்களை உலகிற்களித்ததனால் பெயரளவில் பெருநகரம். பல்துறை விற்பன்னர்கள் வாரி வழங்கிய வள்ளல்கள் அன்பில் சிறந்த மக்கள் என்ற வல்வையின் அழகணிகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

விளையாட்டுத் துறையிலும் வீர விளையாட்டுக்களிலும் வல்வையின் ஈடுபாடு அலாதியானது. விளையாட்டுக்களில் எத்தனை இருந்தாலும் உதைபந்தாட்டம் மட்டும் வல்வையின் செல்லப்பிள்ளை. எல்லா விளையாட்டுக்களையும் கையைப் பிடித்தபடி நடந்த வல்வை, உதைபந்தாட்டத்தை மட்டும் தன் மார்போடு இறுக அணைத்தபடி எப்போதும் அன்பாக வைத்துக் கொண்டது.

திரும்பிய திசையெல்லாம் எத்தனை விளையாட்டுக் குழுக்கள் ஓடிப்பிடிக்க ஒரு வெட்டை இருந்தால் போதும் அங்கே ஒரு உதைபந்தாட்டக் குழு. ஊருக்குள்ளேயே பலமான ஐந்து அணிகள். எத்தனை அற்புதமான விளையாட்டு வீரர்கள் எத்தனை தலை சிறந்த நிர்வாகிகள்! அப்பப்பா! கால மாற்றத்திலும் நினைவை விட்டகலா பெயர்கள்தான் எத்தனை! காட்டாற்று வெள்ளம் போல் பாயும் இளைஞர் சக்தியை ஆற்றுப்படுத்தி நதிகளாக்கும் பணியில் உதைபந்தாட்டம் மிக வலிமையானது. அந்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளை அழகிற திருவிழாக்களாக்கும் வல்வையர்களின் ஆளுமை பெருமைக்குரியது.

ஊருக்குள்ளே பல அணிகளாக மோதிக் கொள்ளும் ஊரவர்கள். ஊருக்கு வெளியே போகும் போது எல்லா அணிகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்களின் தொகுப்பாக ஓரணியாகச் செல்வது வழமை. அந்த அணிக்கு ஒரு பெயர் வைத்தாக வேண்டுமே. பெயர் தேடிய சிந்தனை இடம்பெற்ற இடம் கடற்கரை. வல்வையில் வேறெங்கே இருந்துவிட முடியும். கரையில் தொடங்கிய கடல் வானத்தோடு தொட்டு நிற்கிறது. வானத்தைக் கடல் தொடவில்லை என்பது அறிவுக்குத் தெரியும். ஆனால் தொடுவதாக கண் சொல்லுகிறது. பொய் என்பது கவிதைக்கு மட்டுமல்ல, காட்சிக்கும் அழகுதான். அந்தக்காட்சி அறிவுப் பொறியில் ஏறி அமர்ந்து கொள்ள ஊரின் உதைபந்தாட்ட அணியின் பெயருக்கான தேடலும் முடிந்து போனது. கடல் காட்டிய நிறமும் நீலம். கடல் தொட்டு நின்ற வானம் நீலம். ஆனாலும் இரு வேறு நீலங்கள் வல்வை நீலங்கள். இந்த நூற்றாண்டின் வீரியமிக்க மொழியான ஆங்கிலத்தையும் உள்வாங்கிய சிந்தனையாக வல்வை புளூஸ். இந்தச் சிந்தனைக்கு வயது ஐம்பது.

புலம்பெயர்ந்து விழுந்தோம். விழுந்த இடம் ரொறொன்ரோ. விழுந்த இடத்திலும் புளூஸ் விதையாகியது. வாழிடச் சூழல் வல்வையர்கள் மாத்திரமே கொண்ட அணியாகக் கிளை பரப்பும் சாத்தியமற்ற சூழ்நிலை. வானம் தொட்ட கடலையும் மறக்க முடியாது. வாழ வந்த வட அமெரிக்க நகரத்தையும் மறுக்க முடியாது. காலமாற்றம்- இடமாற்றம்- விளை பெயர் ரொறோன்ரோ புளூஸ்.... இந்தச் சிந்தனைக்கு வயது..... 25.

ரொறொன்ரோவில் தோன்றிய மூத்த கழகங்களுள். அதே கட்டமைப்போடு இயங்கும் ஓரிரு கழகங்களுள் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது. ரொறொன்ரோ புளூஸ்..... என்பதன் அரம்பம் என்று ஆரம்பித்தாலே இருவர் பெயர் நினைவில் வந்து நிற்கும். விசாகு துரை, சந்திரி. விசாகு துரை ஆரம்பக்காரனாகவும் சந்திரி முதலாவது மனேஜராகவும் இந்த கால் நூற்றாண்டு சரித்திரத்தைக் கனடிய மண்ணில் ஆரம்பித்து வைத்தார்கள். 1986 ஆம் ஆண்டு Toronto Tamils என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு, 1987ஆம் ஆண்டு Toronto blues என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1989 ஆண்டு மொன்றியால் நகரில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முதன் முதலில் ரொறொன்ரோ புளூஸ் வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. அதனைத் தொடர்ந்த வெற்றிக் கிண்ணப்பட்டியல் நீளமானது. கீழ்வரும் கழங்கள் மற்றும் அமைப்புக்களால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் அனைத்திலும் ரொறொன்ரோ புளூஸ் பல வெற்றிகளைப் (Champion) பெற்றுள்ளது.

Victoria Montreal (இந்த கழகத்தால் நடாத்தப்பட்ட சுற்றுப் போட்டியிலேயே 1989 ஆண்டு முதன் முதலில் ரொறொன்ரோ புளூஸ் வெற்றிக்கிணத்தைத் தனதாக்கிக் கொண்டது)
C.T.S.A (Canadian Tamil Soccer Association)

| | | |
|---|---|---|
| Kumaran | Kokuvil | Jarvis |
| Mississauga Panthers | St. Anthony’s | Sunrise |
| Malesian | St. Joshep | Young Henry’s |
| E.N.A | Singing Fish | Ariyalai |
| Islanders | Applewood | |

1991 இல் முதன்முதலில் அனைத்துத் தமிழ் உதைபந்தாட்டக் கழகங்களில் இருந்தும் சிறந்த வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு ஒரு தமிழ் அணியாக வேற்றன அணிகளோடு மோதும் சந்தர்ப்பம் ஒன்று

உருவாக்கப்பட்டது. அந்தத் தெரிவுக் குழுவில் ரொறொன்ரோ புளூஸ் உதைபந்தாட்டக் குழுவில் இருந்து பல வீரர்கள் தெரிவாகிப் போட்டிகளில் கலந்து கொண்டு வல்லை மண்ணுக்குப் பெருமை சேர்த்து வருகின்றார்கள்.

சுந்தரலிங்கம் நடனசிகாமணி (சந்திரி)
முத்துக்குமார் தாமோதிரம்பிள்ளை
உலகுருநாதன் ராஜ்குமார் (தாஸ்)
தில்லையம்பலம் விஜயசிகாமணி (லண்டன்)
சிறிதரன் தங்கராஜா (மடப்பளி)
தாமோதிரம்பிள்ளை முரளிதரன் (முரளி)
மயில்வாகனம் பிரேமராஜன் (பிரேம்)
பிரேமச்சந்திரன் சதாசிவம்
தாஸியஸ் ஆபிரகாம் (ரெஜி)
குருசந்தமூர்த்தி யோகராஜ் (யோகா)
தங்கராசா அருட்செல்வன் (செல்லப்பா)
சிவசுப்பிரமணியம் ரெட்நீந்தரன் (ரமேஸ்)
யோகச்சந்திரன் வேலுப்பிள்ளை (வேலைக்குட்டி)
கதிர்காமலிங்கம் சேகர்
அமுதேஸ்வரராஜா கணேஸ்
சாந்தகுணசிங்கம் முரளி
தாமோதிரம்பிள்ளை பகீரதன்
கதிர்காமர் புருஷோத்தமன்

ஆகியோர் கடந்த 25 வருடங்களில் குறிப்பிட்ட காலப்பகுதிகளில் ரொறொன்ரோ புளூஸ் உதைபந்தாட்ட அணியின் பொறுப்பாளர்களாக (Manager) இருந்து அணியை வழிநடத்தியுள்ளனர்.

1988 இல் இருந்தி தியாக தீபங்கள் என்ற பெயரில் ஒரு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை ரொறொன்ரோ புளூஸ் வருடா வருடம் நடத்தி வருகிறது. போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கு மாத்திரமின்றி பார்க்க வரும் பார்வையாளர்களுக்கும் உணவளித்து உபசரித்து அனுப்பும் சிரமமான பணியையும் சேர்த்தே ரொறொன்ரோ புளூஸ் சுற்றுப்போட்டியை நடத்தி வருகிறது.

விளையாட்டை விசுவாசிக்கும் வீரர்களும் அனுசரணைகளை அள்ளி வழங்கும் வள்ளல்களும் விலாசங்களை எதிர்பார்க்காமல் ஊரை நேசிக்கும் உள்ளங்களும் என்ற அற்புதமான மனிதவள வட்டத்தால்தான் இந்த கால் நூற்றாண்டு சரித்திரம் சாத்தியமாகியது. பல அற்புதமான மனிதர்களைப் பார்க்கவும் அவர்களோடு பழகவும் வாய்ப்புகளைத் தந்த உதைபந்தாட்டம் என்ற உன்னத்திற்கு ஒரு கோடி வந்தனங்கள் உரித்தாகட்டும்.

ரொறொன்ரோ புளூஸ் கால் நூற்றாண்டு கடந்தும் கால் பதிக்கும்.



ரொரண்டோ புளூஸ் அணி 1989 ஆம் ஆண்டு வெற்றிக் கிண்ணங்களுடன்



வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகம்



ரொரண்டோ புளூஸ் அணி 1990 களில்



ரொரண்டோ புளூஸ் அணி 1990களில்




ரொரண்டோ புளூஸ் அணி 1994 இல்



ரொரண்டோ புளூஸ் அணி 1993 இல்



வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்




1995 ஆம் ஆண்டு தியாக தீபங்கள் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற (Champaion)
ரொரண்டோ புளூஸ் அணி



ரொரண்டோ புளூஸ் அணி 2009



ரொரண்டோ புளூஸ் அணி 2009



ரொரண்டோ புளூஸ் அணி 2009





# வாழ்த்துக்கள்...

வல்வையர் என்று எங்களை அடையாப்படுத்தும் பெயர்களில் வல்வை புளூஸ் கழகமும் ஒன்று. வல்வை புளூஸ் கழகம் என்பது கனவு ஒன்றின் தொடக்கம். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் உன்னதமான ஒரு கனவு ஒன்றுடன் ஆரம்பமான கழகம் பொன்விழாவில் பெருமை கொள்ள நிற்கிறது.

வல்வை நலன்புரிச் சங்கம் இங்கிலாந்து கிளையாகிய நாம் வல்வை புளூஸ் கழகத்தின் பொன்விழா ஆண்டை மனம் நிறைந்த மகிழ்வுடனும், பூரிப்புடனும் வரவேற்கிறோம். இன்றும் புலம்பெயர்ந்த நாடுகளில் வல்வை புளூஸ் என்பது யாராலும் தவிர்த்து விடமுடியாத ஒரு பெரும் பெயராக விளங்கி வருகின்றது. இந்த வெற்றிகளுக்கும், சாதனைகளுக்கும் பின்னால் ஏராளம் வீரர்களின் விடாமுயற்சியும், விளையாட்டின் மீதான தணியாத தாகமும் தெரிகிறது. இவர்கள் அனைவரையும் இந்த பொன்விழா ஆண்டில் நன்றியுடனும், எங்கள் ஊரவர் என்ற உணர்வுடனும் தலை வணங்கி வாழ்த்துகின்றோம்.

தமிழர்களுக்கிடையிலான ஒற்றுமை உணர்வுக்கும், தேசிய ஒற்றுமைக்கும் விளையாட்டு மிகவும் ஆழமான பங்களிப்பை செய்து வருகின்றது. விளையாட்டில் எங்களை ஊரவர்களை உற்சாகமூட்டி, மைதானத்தில் சாதனை நிலைநாட்டி வைத்துவரும் வல்வை புளூஸ் கழகத்தை வாழ்த்துவதில் இங்கிலாந்து வல்வை நலன்புரிச் சங்கமாகிய நாம் மிகவும் பேருவகை அடைகின்றோம்.

நன்றி
**வல்வை நலன்புரிச் சங்கம்**
இங்கிலாந்து



## வாழ்த்துக்கள்...

எங்கள் தாய்க் கழகமான வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம் தனது பொன்விழாவைக் கொண்டாடி நிற்கிறது- மிகவும் சந்தோசமானதும் பெருமிதம் கொள்வதுமான பொழுது இது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் உன்னதமான கனவு ஒன்றுடன் ஆரம்பிக்கப்பட்டு இன்று கடல் கடந்தும் தனது கிளைகளையும், விழுதுகளையும் ஆழமாக ஊன்றி நிற்கிறது.

வல்வை புளூஸ் கழகமானது உதைபந்தாட்டத்தில் மட்டுமன்றி, வல்வையின் விளையாட்டுக்கள் அனைத்தையும் வளர்ப்பதில் இன்றுவரை, ஐம்பது ஆண்டுகளாக சேவை ஆற்றி வருகின்றது. அகில இலங்கை ரீதியான, யாழ் மாவட்ட ரீதியான, பருத்தித்துறை வட்டார ரீதியான சுற்றுப் போட்டிகளில் எங்கள் ஊரின் பெயரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு போனதில் வல்வை புளூஸின் பங்கு மகத்தானது.

இங்கிலாந்து, வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகமாகிய நாம் எமது தாய்க் கழகத்தில் விளையாடிய போது பெற்றுக் கொண்ட அனுபவங்களிலும், கிடைத்த பயிற்சிகளில் அடைந்த திறமைகளிலும்தான் இன்றைய நிர்வாகத்தையும், விளையாட்டையும் நடத்தி வருகின்றோம்.

பிரமாண்டமான வல்வை புளூஸ் கழக ஆலமரத்தின் விழுதுகளில் ஒன்றான இங்கிலாந்து வல்வை புளூஸ் கழகத்தின் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமையும், பெருமிதமும் அடைகின்றோம்.

வல்வை புளூஸ் வியைாட்டுக் கழகம்
**இங்கிலாந்து**







1961ம்ஆண்டில் வல்வையில் ஒரு கனவாக ஆரம்பிக்கப்பட்ட வல்வைபுளூஸ் விளையாட்டுக்கழகம் இன்று வல்வையர் அதிகமாக வாழும் நாடுகளிலெல்லாம் கிளைபரப்பி நிற்கின்றது. எழுத்துக்களும் மொழிகளும் தோன்றுவதற்கு முன்பிருந்த காலத்தில் இருந்து அண்மைய காலம் வரைக்கும் உலக வரலாற்றின் பக்கங்களில் எல்லாம் எண்ணற்ற இடப்பெயர்வுகளும், புலப்பெயர்வுகளும் நிகழ்ந்திருக்கின்றன. இந்த இடப்பெயர்வுகளின் போதெல்லாம் மக்கள் தமது உயிரை பாதுகாக்க வேறு இடம் போகும் போதெல்லாம் தமதுஅடையாளங்களையும் காவிச்சென்று இருக்கின்றார்கள். அவர்களின் நம்பிக்கை சார்ந்த அடையாளங்களை தமது மனங்களுக்குள் அடைகாத்து தம்முடன் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

அத்தகைய ஒரு அடையாளமாகவே எங்கள் ஊரவர்கள் தாம் செல்லும் இடங்களுக்கு எல்லாம் தமது வல்வைபுளூஸ் கழகம் என்ற விதையை காவிச்சென்று இருக்கிறார்கள். தாம் பாதம் பதித்த இடங்களிலெல்லாம் வல்வைபுளூஸையும் பதியம் வைத்து வளர்த்துவருகிறார்கள்.

இங்கிலாந்துக்கு அதிகமான அளவில் எங்கள் ஊரவர்கள் வந்து சேர்ந்துகொண்டிருந்த எண்பதுகளின் இறுதிகளில் ஓய்வுக்காகவும், பொழுதுபோக்குக்காகவும் தமக்கு அண்மித்த இடங்களில் லண்டனில் உதைபந்தாட்டம் விளையாட எங்கள் ஊரவர்கள் ஆரம்பித்தார்கள். அப்படி விளையாட ஆரம்பித்தவர்களில் பலர் வல்வையில் வல்வைபுளூஸ் விளையாட்டுகழகத்தின் உதைபந்தாட்ட அணியில் விளையாடியவர்களாகவே இருந்தார்கள். ஆதனால் வல்வைபுளூஸ் என்ற பெயருடனேயே இங்கும் விளையாடும் கருத்தும் எண்ணமும் தோன்றியது. இதற்கு ஏற்றவகையில் வல்வையை சேர்ந்த உதைபந்தாட்ட வீரர்களில் அதிகமானவர்கள் லண்டனின் ரூட்றிங், மிட்சம் பகுதிகளிலேயே வசித்துவந்ததால் இவர்களால் ஒருமித்து பயிற்சி எடுக்கவும் ஒன்றாகவே அடிக்கடி சந்தித்துக்கொள்ளவும் முடிந்திருந்தது. இதுவும் ஒரு முக்கிய காரணமாகும். இலண்டனில் 90ம்ஆண்டு வல்வைபுளூஸவிளையாட்டுகழகம் அங்குரார்ப்பணமாகியது.

இன்றைக்கு இருபத்தியொரு ஆண்டுகளுக்கு முன்னர் 1990ம்ஆண்டு இங்கிலாந்தில் வல்வைபுளூஸ் என்றகழகம் அங்குரார்ப்பணமாகியது,குறிப்பிட்டஒருவருக்கோ இருவருக்கோ ஏதோ ஒரு கணத்தில் பளிச்சிட்ட எண்ணம் என்று குறிப்பிடுவதைவிட அந்தநேரத்தில் உதைபந்தாட்டம் விளையாடிக் கொண்டிருந்த வல்வையருக்கும், உதைபந்தாட்டத்தை ஆதரித்துக் கொண்டிருந்தவர்களுக்கும் தோன்றிய எண்ணம்தான் வல்வைபுளூஸ் விளையாட்டுக்கழகமாக இங்கிலாந்தில் உருவானது.

எங்களுக்கு கிடைத்த தரவுகளின் படி வல்வைபுளூஸ் விளையாட்டுகழகம் என்பதன் முதலாவது நிர்வாகக்குழுவில் ஞானசுந்தரம் விஸ்ணுசுந்தரம் தலைவராகவும், அதன் செயளாளராக இந்திரன் தில்லைநடராஜாவும் ,பொருளாளராக செல்வகுமார் தியாகலிங்கமும் நிர்வாக அங்கத்தவர்களாக ஈ.கிருஸ்ணலிங்கம், இ.அருணாசலம் த.உதயணண், போன்றோர் பொறுப்பேற்று கழகத்தை சிறந்த முறையில் முன்னெடுத்தனர்.

ஆரம்பகால விளையாட்டு வீரர்களாக பா.பாலேந்திரா, த.உதயணன், சு.இந்திரலிங்கம், செ.வெற்றிவேல், ச.முகுந்தராஜ், அன்ரு (S.Anto), தி.செல்வக்குமார், மா.மகேந்திரன், வே.ஸ்ரீமுரளிதரன். ப.ராஜன், க.ஜீவாகரன், சு.கரிகரன், ச.பிரபாகரன், உ.மணிவண்ணன், ரா.சதீஸ் ஆகியோர் விளையாடஆரம்பித்தார்கள் .திரு.செ.குமாரசாமி அவர்கள் ஆரம்பத்தில் இருந்து சுமார் பத்து வருடங்கள் அணியின் பொறுப்பாளராக இருந்து, சிறந்தமுறையில் அணியை வழி நடத்தினார்.

வல்வைபுளூஸ் இங்கிலாந்தின் வளர்ச்சிக்கும்,அதன் வெற்றிகளுக்கும் 90ம்ஆண்டில் முதல் அடி எடுத்துவைத்த இவர்கள் அனைவரையும் இந்த பொன்விழா ஆண்டில் நன்றியுடனும் பெருமிதத்துடனும் நினைத்துக் கொள்ளுகின்றோம்.

திரு.செ.குமாரசாமி அவர்களை தொடர்ந்து பா.பாலேந்திரா, த,உதயணன், சு.இந்திரலிங்கம், தி.திருக்குமார், சு.கரிகரன், ச.குமார் ஆகியோர் அணிப் பொறுப்பாளர்களாக சிறந்தமுறையில் கடமையாற்றிஉள்ளனர்.

1993 ஆம் ஆண்டுமுதல் இளம் விரர்களுக்கானஅணிகள் வல்வை புளூசில் ஆரம்பிக்கப்பட்டன. சு.சுரேந்திரன், ப.புஸ்பராஜா, த.உதயணன், சி.தேவராஜா, ஒ.செல்டன், கு.ஜெயக்குமார், சு.இநதிரலிங்கம், தி.செல்வக்குமார், சு.கரிகரன், ஆ.குகானந்த ஜோதி, வே.மதிவண்ணன், செ.ஆனந்தராஜன், கு.பிறேம்குமார், சி.சுதர்சன், ச.வசந்தகுமார், வே.ஜெயக்குமார், த.தருமகுலசிங்கம் (தறுமி), பா.சதாசிவம், மு.பிறேம்பாபு, ச.குமார் ஆகியோர் இளம் வீரர்களின் பயிற்சியாளர்களாக் கடமையாற்றியுள்ளோர். இன்றைய இங்கிலாந்து வல்வைபுளூசின் வளர்ச்சியில் இவர்களுடைய சேவை மகத்தானது. இன்று நூற்றுக்கு மேற்பட்ட வீரர்களை வல்வை புளூஸ் கொண்டிருப்பதற்கு இவர்களது பங்களிப்பு மிக முக்கியமானது. இவர்கள் அனைவரும் நன்றிக்குரியவர்கள்

ஆரம்பித்த வருடங்களிலேயே தனது முத்திரையை ஆழமாக இங்கிலாந்து தமிழரின் உதைபந்தாட்ட வரலாற்றில் பதிந்தபடியே வல்வைபுளூஸ் தனது பயணத்தை ஆரம்பித்தது. இன்று இருபத்தியொரு வருடமாகிறது. இந்த இருபத்தியொரு வருடத்தில் எத்தனையோ வெற்றிகளையும், சிறப்புகளையும், சாதனைகளையும் இது பதிந்துள்ளது. அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றோம்.

1991 ஆம் ஆண்டே தமிழரின் உதைபந்தாட்ட வரலாற்றில் முதலாவது உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி லண்டன் நகரில் செபிட்டன் விளையாட்டுகழகத்தால் நடாத்தப்பட்டது. இந்தசுற்றுப் போட்டியிலேயே எமது ஆரம்பகால விளையாட்டு வீரர்களால் வெற்றிக்கிண்ணம் வெற்றி கொள்ளப்பட்டது

இங்கிலாந்தில் சுமார் இருபது வருடங்களாக TRO, TSSA என்ற இரண்டு பாரம்பரிய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றது. இதில் TRO சுற்றுப்போட்டியில் ஐந்தமுறை, 1993,1995,1997,2003,2004 ஆம் ஆண்டுகளில் வெற்றிபெற்றோம். TSSA சுற்றுப்போட்டியில் நாலுமுறை, 1995,1996,2003,2004 ஆம் ஆண்டுகளில் வெற்றிபெற்றோம். இது இங்கிலாந்துதமிழரின் உதைபந்தாட்டவரலாற்றில் வல்வைபுளூசின் மகத்தான சாதனைஆகும்.

மேலும் வல்வைநலன்புரிச்சங்கம் நடாத்திய சுற்றுப்போட்டியில் 2010 ஆம் ஆண்டு வெற்றிபெற்றோம். லீக் முறையில் நடாத்தப்படும் சுற்றுப்போட்டியில் இரண்டுமுறை2004/2005, 2006/2007 ஆம் ஆண்டுகளில் வெற்றி பெற்றோம். வயதுக் கட்டுப்பாட்டு பிரிவுகளிலும் எமது இளைஞர்களும், சிறுவர்களும் பலவெற்றிகளை பெற்றுள்ளனர்.

இவை எல்லாவற்றையும் விட வல்லைபுளூஸ் என்பது இங்கிலாந்தின் தமிழர்களின் விளையாட்டு நிகழ்வுகளில் தவிர்க்கமுடியாத ஒருபெயராக இன்று விளங்குகிறது. இப்போது வல்வைபுளூஸ்கழகம் உதைபந்தாட்ட அணி என்பதில் இருந்து விரிந்து துடுப்பெடுத்தாட்டஅணி, கரப்பந்தாட்ட அணி என்று வளர்ந்து நிற்கின்றது. அத்துடன் பலநூறு சிறுவர்கள் பங்கேற்கும் உதைபந்தாட்ட அணிகளை உள்ளடக்கிய ஒரே கழகம் என்ற பெருமையும் இங்கிலாந்து தமிழர்கழகங்களில் வல்வைபுளூஸ்க்கு உண்டு.

இத்துடன் வருடாவருடம் மிகவும் சிறப்பானமுறையில் இலண்டனில் நடைபெறும் வல்வைபுளூஸ் கழகத்தின் மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டியும் எமது ஊரவர்களை இணைக்கும் இன்னொருசிறப்பானபாலமாகும்.

வல்வையில் எழுபதுகளின் ஆரம்பத்தில் திரு.சபா.அருட்பிரகாசத்தின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு வருடாவருடம் நிகழ்த்தப்பட்டு வந்த புளூஸ்நைற் என்ற நிகழ்வினை ஒத்ததாக இங்கிலாந்திலும் வல்வை புளூஸ்கழகத்தால் புளூஸ்நைற் நடாத்தப்பட்டு வீரர்களும், சாதனையாளர்களும் கௌரவிக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்தை பொறுத்தவரையில் வல்வை புளூஸ் கழகமானது வெறுமனே விளையாட்டுடனும், மைதானத்துடனும் நின்றுவிடாமல் வல்வைசம்பந்தமான அனைத்து நிகழ்வுகளிலும், எமதுமக்கள் சம்பந்தமான எல்லாவகை செயற்பாடுகளிலும் தன்னையும் ஈடுபடுத்தி வருவது பாராட்டதக்கது. நாம் நிச்சயமாக இங்கிலாந்து வல்வைபுளூஸின் சாதனைகளுக்காக பெருமைப்படலாம்

**“பத்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களில் இருந்து நாற்பது வயதுக்கு மேற்பட்டோர் வரையான அணிகளில் பலநூற்றுக்கணக்கான விளையாட்டு வீரர்களை கொண்ட கழகம் இது”**

“உதைபந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம், கரப்பந்தாட்டம் என்று பல விளையாட்டுக் களுக்கான அணிகளை உள்ளடக்கிய கழகம் இது”

“அதிகமான வெற்றிக் கிண்ணங்களை வென்று கொண்ட கழகங்களில் இதுவும் ஒன்று”

“வல்வைபுளூஸ் என்றால் வல்வெட்டித்துறை என்ற அடையாளத்தை மிகவும் ஆழமாக வெற்றிகளுடன் பதிந்த கழகம் இது”

இன்னும் இன்னும் வெற்றிகளையும் விளையாட்டில் சாதனைகளையும் இது பதியும் என்றநம்பிக்கையை இது கடந்துவந்தகாலத்தின் சுவடுகளில் இருந்துபெற்றுக்கொள்ளுவோம்.

ஆரம்பகாலத்தில் இருந்து, இன்றுவரை எமது பெரியோர் (Adults) அணியிலும், நாற்பதுவயதிற்கு மேற்பட்டோர் அணியிலும் விளையாடிய வீரர்களின் பெயர் விபரங்களை எம்மால் இயன்றவரையும், அதற்கு அப்பாலும் திரும்பத் திரும்ப சேகரித்து இதில் பதிவு செய்துள்ளோம். எமது கவனத்திற்கும், எமது தரவுக்கும் கிடைக்காமல் சில பெயர்கள் விடுபட்டு இருப்பதாக யாராவது கருதினால் தயவு செய்து எமது மின்னஞ்சல்களுக்கு தரவுகளை அனுப்பிவைத்தால் மறுபதிப்புக்களில் நிச்சயமாக சேர்த்துக்கொள்வோம்.

# வல்லை புளூஸ் U.K

1. பா. பாலேந்திரா
2. த.உதயணன்
3. சு. இந்திரலிங்கம்
4. தி. செல்வக்குமார்
5. க. ஜீவகரன்
6. S.அன்ரு
7. செ.வெற்றிவேல்
8. ப. ராஜன்
9. பா. மகேந்திரன்
10. ச.முகுந்தராஜ்
11. ச.பிரபாகரன்
12. உ.மணிவண்ணன்
13. சு.கரிகரன்
14. வே. ஸ்ரீமுரளிதரன்
15. நா.சதீஸ்
16. த.ஜீவகன்
17. இ.மகேந்திரன்
18. தி. திருக்குமார்
19. ஒ.செல்ட்டன்
20. அருணாசலம்
21. ஈ.கிருஸ்ணலிங்கம்
22. க.சேகர்
23. கு.ஜெயக்குமார்
24. மு.பிரகாஷ்
25. சி.அருள்சிவன்
26. ர.பத்மநாதன்
27. வே. ஸ்ரீலஷ்மன்
28. வ.பிரபாகரன்
29. ச.குமார்
30. ச.வசிகரன்
31. ச.ஜெயக்கிருஷ்ணன்
32. அ.பார்த்தீபன்
33. சா.ஜதீஸ்வரன்
34. ஒ. மதியழகன்
35. சி.பகிரதன்
36. பா. ரிஷிசந்திரன்
37. பூ.குமரன்
38. சி.சுதர்சன்
39. ர.தில்லைநாதன்
40. மா.மதிவண்ணன்
41. மா.மணிவாசகம்
42. ஞா.புஸ்பராஜ்
43. கு.அருள் ஆனந்தவேல்
44. ரா.திவாகர்
45. ஜெ.திருக்குமரன்
46. தி. மதிராஜ்
47. இ. சதீஸ்குமார்
48. ந.சுதர்சன்
49. சி.துவாரகன்
50. சி.செந்தூரன்
51. சி.வாசு
52. சி.விஷ்ணு
53. சி.வசந்தன்
54. சி.பிரபு
55. ச.சரவணமுத்து
56. சா.சோதிலிங்கம்
57. இ. சுப்பிரமணியம்
58. ப.புஸ்பராஜ்
59. ம. சிறிபாஸ்கர்
60. செ. ஆனந்தராஜன்
61. சு. இளங்கோ
62. இ. குகதாஸ்
63. தி. கிருஸ்ணகுமார்
64. வே.ஜெயக்குமார்
65. பா. பவிகரன்
66. ம.பிருந்தன்
67. த.கிசோர்
68. கு.சிறிசர்வானந்தா
69. பு. பிரகலாதன்
70. பு. பிரியரஞ்சன்
71. சு. குமரன்
72. ஞா. ரிஷிசுந்தரம்
73. பி.மதன்
74. ஜெ.ஜெசிதரன்
75. சி.இளையராஜா
76. சி.மோகன்
77. செ.ரமணீதரன்
78. செ.தினேஷன்
79. உ.மதன்
80. உ.கதிரவன்
81. ச.அஸ்வின்
82. அ.நிவேதனன்
83. அ.நிர்மலன்
84. அ.கதா
85. ர.மயூரன்
86. நைல்ராஜ்
87. தெ.நிவாசர்
88. A.சாம்
89. A.சேன்
90. சு.கடம்பன்
91. ச.மாதவன்
92. ஹ. பிரேமானந்தன்
93. ஹ. செவ்வானந்தன்
94. சி. சதீஸ்குமார்
95. சி. திலீபன்
96. பி. சிறிஜெயந்
97. ச. கார்த்தி
98. ச.லவதீபன்
99. த. ஆனந்தவேல்
100. ம. ஜனேந்திரன்
101. தி. கெங்காதரன்
102. சி.சந்தோஸ்
103. கு.அர்ஜுன்
104. ஜெ.திருக்குமரன்





## வல்வை புளூஸ் விளையாட்டு கழகம் இங்கிலாந்தில் நடைபெறும் மூன்று பாரிய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் பெற்ற வெற்றிகள் ஒரே பார்வையில்.

| YEAR | TRO | TSSA | League |
|---|---|---|---|
| 1992 | | | |
| **1993** | **Valvai Blues** | Jaffna Central College | |
| 1994 | | Hartley College | |
| **1995** | **Valvai Blues** | **Chithambara College** | |
| 1996 | | **Chithambara College** | |
| **1997** | **Valvai Blues** | Kokuvil Hindu College | |
| 1998 | | Mhajana College | |
| 1999 | | Trinco Hindu College | |
| 2000 | | Trinco Hindu College | |
| 2001 | | Kokuvil Hindu College | |
| 2002 | | Nadeswara College | |
| **2003** | **Valvai Blues** | **Chithambara College** | |
| **2004** | **Valvai Blues** | **Chithambara College** | |
| 2005 | | Vavuniya Central College | **Valvai Blues** |
| 2006 | | Vavuniya Central College | |
| 2007 | | Upputhanni Pillaiyar | **Valvai Blues** |
| 2008 | | Myliddy Kalaimakal | |
| 2009 | | Mahajana College | |
| 2010 | | Trinco Hindu College | |
| 2011 | | | |

TRO = Tamil Rehabilitation organisation
TSSA = Tamil Schools Sports Association
League = League tounement in points system (10 teams, 18 Matches)



1990 ஆம் ஆண்டு. ஆரம்ப கால விளையாட்டு வீரர்கள்



1990 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற முதலாவது தமிழர் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்கள். எதிர் அணியுடன் கலந்து நிற்கின்றனர்







2004 ஆம் ஆண்டு. இந்த ஆண்டும் வல்வை புளூஸ் மூன்றாவது தடவை ஒரே ஆண்டில் TRO, TSSA இரண்டு பாரிய சுற்றுப் போட்டிகளிலும் வெற்றி பெற்றனர்



2007 ஆம் ஆண்டு லீக் (League) சுற்றுப் போட்டியில் இரண்டாவது முறையாக வெற்றி பெற்ற போது




2011 ஆம் ஆண்டு 10 வயதிற்கு உட்பட்ட அணி




2011 ஆம் ஆண்டு 12 வயதிற்கு உட்பட்ட அணி








2011 ஆம் ஆண்டு 12 வயதிற்கு உட்பட்ட அணி




2011 ஆம் ஆண்டு 14 வயதிற்கு உட்பட்ட அணி



2011 ஆம் ஆண்டு 16 வயதிற்கு உட்பட்ட அணி




2011 ஆம் ஆண்டு பெரியோர் (Adults) அணி




2011 ஆம் ஆண்டு 19 வயதிற்கு உட்பட்ட அணி



2011 ஆம் ஆண்டு 40 வயதிற்கு மேற்பட்டோர் அணி



# வல்வை விளையாட்டுக் கழகம் பிரான்ஸ்

வல்வை மண்ணில் பிறந்த வீரத்தோடும் வல்வையில் பிறந்தோம் என்று சொல்லிக் கொள்ளக் கூடிய பெருமை மிக்க வாழ்வோடும், புலம்பெயர் தேசத்திலும் எங்கள் திறமைமிக்க கலை வளர்ச்சியுடன் கூடிய ஒவ்வொரு துறைகளிலும் உயர்வான நிலையிலும் வல்வையர்கள் உள்ளார்கள் என்பதை நினைத்தால் உள்ளம் மகிழ்கின்றது. அவ்வகையில் பிரான்சில் வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகம் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாக பிரான்ஸ் மண்ணிலும் தங்கள் திறமைகளையும் படிப்படியான வளர்ச்சிகளினூடாக வெளிக் கொணர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எமது கழகத்தினை தலைமை ஏற்று நடாத்தும் வல்வை, தலைவர் சிவா, செயலாளர் குட்டி, அணித்தலைவர் வசந்தமேனன், விளையாட்டு வீரர்களான ஜெசுதன், தீபன், ஜெகன், சத்தியன், சண்முகம், தாசன், அசோக், தயா, சின்னவன், முகுந்தன், மயூரன், வசந்தமேனன், சுதர்சன், குமரன், கண்ணன் ஆகிய வீரர்கள் சிறப்பான முறையில் பங்குபற்றி வருகின்றனர்.



வல்வை புளூஸ் பிரான்ஸ அணி





# இராமேஸ்வரம் மண்டபம் முகாமினுள் வல்வைபுளூஸ்

நாங்கள் எங்குசென்றாலும், எமது ஊரை விட்டு எவ்வளவு தூரம் கடந்து போனாலும் எமக்குள்ளே எந்த நேரமும் தணல் வீசிக்கொண்டிருக்கும் எமது ஊரின் நினைவை போலவே, எத்தனை பத்தாண்டுகள் கடந்து போனாலும் எமது மூச்சுக்குள்ளே இன்னும் இருந்து கொண்டிருக்கும் எமது ஊரின் புழுதி வாசத்தை போலவே எமது நினைவுகளுக்குள் ஒவ்வொரு போதும் திரும்ப திரும்ப வந்து போய்க்கொண்டிருக்கும் எமது வல்வைபுளூஸ் நினைவுகள். வல்வையர் ஒவ்வொருவரின் விளையாட்டு முயற்சிகளின் ஆரம்ப புள்ளியாக



வல்வை புளூஸ் அணி இராமேஸ்வரம்

ஏதாவது ஒருதருணத்தில் வல்வைபுளூஸ் கழகமே இருந்து கொண்டிருக்கிறது.

அப்படியான ஒரு முயற்சிதான் தமிழ்நாட்டின் மண்டபம் பகுதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ்மக்களுக்கான அகதிகள் முகாமில் திரு.இராசகுமார் (நேசன்மாமா) அவர்களால் 1999ம் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்பட்டு வந்து கொண்டிருக்கின்றது.

எமதுஊரில்ஏற்பட்டயுத்தநிலைமைகளால் புலம்பெயர்ந்துகடல்கடந்து இராமேஸ்வரம் மண்டபம் முகாமில் தற்காலிகமாக தங்கிவிட்ட எமது ஊரவர்களில் நேசன்மாமா, சிறீ, சிவா, படையப்பா, பாஸ்கரன், ரமேஸ், குமார், சிவா, தாஸ், ரூபன் ஆகியோர் இணைந்து 1999ம் ஆண்டு தீபாவளிநாளில் வல்வைபுளூஸ் கழகத்தின் இன்னொரு விழுதாக மண்டபம் முகாமில் வல்வைவிளையாட்டுக்கழகத்தைஆரம்பித்தார்கள்.

ஆரம்பத்தில் இதன்தலைவராக நேசன்மாமாவும், இதன் அணித்தலைவராக கண்ணனும் செயற்பட்டார்கள்.தொடங்கப்பட்ட போது உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், மற்றும் தடகளவிளையாட்டுக்களிலேயே கவனம் செலுத்தி விளையாட ஆரம்பித்தனர்.

அதன் பின்னர் 2001ம் ஆண்டில் முகாமுக்குள்ளேயே ஒருநாள் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளை நடாத்தி உதைபந்தாட்ட ஆற்றலை முகாம் சிறுவர்களுக்குள்ளும், இளைஞர்களுக்குள்ளேயும் வளர்ப்பதில் வல்வைகழகம் முன்னின்றது.

2006ம்ஆண்டுப்பகுதியில் அகதிகளின் வருகை மிகவும் அதிகரித்ததால் மண்டபம் முகாமினுள் விளையாட்டுப் போட்டிகளையும், உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளையும் நடாத்துவதில் பெருத்தசிரமங்களும் தடைகளும் ஏற்பட்டதால் சுற்றுப்போட்டிகள் நிறுத்தப்பட்டு விளையாட்டுப் போட்டிகளை ஒவ்வொருவருடமும் வல்வைபுளூஸ்கழகம் நடாத்துவது இன்றும் தொடர்கின்றது.

மண்டபம்முகாமினுள்ளே இருக்கும் வல்வை விளையாட்டுக்கழகம் தனித்து விளையாட்டுக்களில் மட்டும் தனது கவனத்தையும், செயற்பாட்டையும் வைத்து இருக்காமல் முகாமினுள் இருக்கும் மக்களின் கல்வி அறிவு, உயர்கல்வி என்பனவற்றிலும் மிகுந்த ஈடுபாடும், கவனமும் செலுத்தி வருவது தலைவணங்கி வாழ்த்த தகுந்தது.



இராமேஸ்வரத்தில் விளையாட்டுப் போட்டி பரிசளிப்பின் போது

வருடாவருடம் அங்குள்ள மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குவது, அதிகபுள்ளி எடுக்கும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கி கௌரவிப்பது, கல்விக்கான உதவித் தொகை வழங்குவதுஎன்றுஅற்புதமான செயற்பாடுகளை மண்டபத்தில் உள்ள வல்வைகழகம் செய்து வருகின்றது.

அத்துடன் அந்தமுகாமில் வசிக்கும் மன்னார் மாவட்டத்தை சேர்ந்தசெல்வன். விஜயரெத்தினம் என்ற மாணவனின் உயர்கல்விக்கான முழுப்பொறுப்பையும் வல்வைகழகமே ஏற்று இன்று அம்மாணவன் பட்டப்படிப்பு மூன்றாம் ஆண்டில் பயின்று கொண்டிருக்கின்றான் என்பது எம் எல்லோருக்கும் பெருமையான விடயம்.

முகாமில் வழங்கப்படும் மிகசொற்பமான உதவி தொகையுடனும், மிகமிக அரிதான குறைந்த வளங்களை வைத்துக் கொண்டு அற்புதமான சேவையையும், செயற்பாட்டையும் தனது நோக்கமாக கொண்டு செயற்படும் மண்டபம் முகாம் வல்வை விளையாட்டுக்கழகத்தின் முயற்சிகள் ஊரவர்கள் அனைவராலும் தலைவணங்கி பாராட்ட வேண்டிய மிகப்பெரிய ஒரு விடயமாகும்.

விளையாட்டு,மற்றும் கல்விஎன்பனவற்றுடன் மட்டுமேநின்றுவிடாமல் எங்களூரின் காவல்தெய்வமான வல்வை முத்துமாரியை போல ஒரு செல்வமுத்துமாரியை முகாமினுள் ஸ்தாபித்து அந்த ஆயிரம் கண்ணுடையவளுக்கு விஜயதசமி மற்றும் வாழைவெட்டும் திருவிழாக்களையும் வல்வை விளையாட்டுக் கழகமே செய்துவருவது இங்கு ஆழமாக நோக்கத்தக்கது.

அதிகமான வசதிகளும், அரசாங்க உதவிகளும், மக்களின் நிதி உதவியும் குவிந்துள்ள ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலிய மண்ணில் மட்டும் அல்லாமல் மிகவும் வசதி, வாய்ப்புகள் குறைந்த, அகதிமுகாம்களில் கூட எமதுஅடையாளங்களை பேணியும் செயற்படுத்தியும் வரும் இவர்களை இந்தபொன்விழாஆண்டில் தலை வணக்கத்துடனும், பெருமையுடனும் பாராட்டுகின்றோம்.



# சாதனையாளர்களும் சாதனை முயற்சிகளும்

## பாக்குநீரிணையைமுதன்முலில் நீந்திக் கடந்த சாதனை வீரன் நவரத்தினசாமி

வல்வை புளூஸ்கழகம் ஆரம்பிப்பதற்கு முன்னரும்கூட வல்வையில் சாதனைகளும், வழமையை விட விசேடமாக ஏதாவது சமூகத்துக்கு செய்தாக வேண்டும் என்ற ஆன்ம வேகமும் இருந்து வந்து கொண்டே இருக்கின்றது. வல்வையின் கரையை தொட்டு தொட்டு திரும்பும் அந்த அலையைப் போன்று ஓய்வொழிச்சல் இன்றிய தேடலும் சாதிக்க வேண்டும் என்றஆர்வமும் வேகமும் இந்த மண்ணுடன் கூடவே பிறந்தது.

வல்வையையும் இந்தியாவையும் பிரித்து நிற்கும் இந்த அலைகடலை எங்களுக்கு முந்திய எத்தனை தலைமுறையினர் பாாத்துப் பார்த்து நின்றிருப்பார்கள். அந்த அலைகடலை கடந்து பாய்க் கப்பல்களிலும், வள்ளங்களிலும், இயந்திர படகுகளிலும் அடுத்த தேசங்களுக்கு சென்றிருக்கிறார்கள்.

ஆனால் அதனை நீந்திக் கடக்க வேண்டும் என்ற எண்ணமும், அதற்கான திண்ணமும் முருகுப்பிள்ளை நவரெத்தினசாமியிடம் தான் முதலில் தோன்றியது. தோன்றியது மட்டுல்ல. அதனை சாதித்து காட்டியவரும் அவர்தான்.



வல்வெட்டித்துறையின் எல்லையூரான தொண்டமானாற்றை பிறப்பிடமாகக் கொண்டவர் நவரத்தினசாமி அவர்கள். இவர் படிக்கும் போது ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த வெள்ளையர் ஒருவரின் சாதனையைப் பற்றி இவரின் ஆசிரியர் படிப்பித்த போதுதான் இவருக்குள்ளும் ஒரு சாதனைக்கான முதற் பொறி தூவப்பட்டிருக்கிறது. அன்றிலிருந்து நீண்டதுாரம் நீந்துவதற்கான பயிற்சிகளை தினமும் செய்யத் தொடங்கினார்.

தனது பத்தொன்பதாவது வயதில் படிப்பை முடித்துக் கொண்டு அரசாங்க விவசாயத் திணைக்களத்தில் உத்தியோகம் பெற்ற போதிலும் நீந்தும் முயற்சியையும், நீச்சல் பயிற்சியையும் இவர் விட்டுவிடவில்லை. விவசாயத் திணைகள உத்தியோகத்தில் பதவி உயர்வுகளும், வாழ்க்கை தரமும் உயர்ந்து கொண்டே போன போதிலும் இவரின் மனதுக்குள் இருந்த சாதனை வெறி அடங்கிப் போகவில்லை. சாதனையைத் தொடங்குவதற்கான நாளைப் பாாத்துக் கொண்டே இருந்தார்.

அந்தநாளும் வந்து சேர்ந்தது. 1954ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம்திகதி வல்வை ரேவடிக் கடற்கரையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி நின்று வாழ்த்து தெரிவிக்க 31.5 மைல் நீளமான பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் முயற்சியில் நவரத்தினசாமி பிற்பகல் 2மணியளவில் கடலில் இறங்கினார். பாக்குநீரிணை என்பது பல விதமான நீரோட்டங்களும், அலைகளும், காற்றும் சேர்ந்த ஒரு வித்தியாசமான கடல். இந்தியாவின் கோடிக்கரையை நோக்கிய நீச்சல். ஓய்வற்ற வகையில் கைகளால் நீரை கிழித்து நீந்தியபடியே இருந்தார் நவரத்தினசாமி.

நீந்தத் தொடங்கி இருபது மணித்தியாலங்கள் அமைதியாக இருந்த கடல் கோடிக்கரைக்கு ஏழுமைல்கள் இருக்கும் போது உக்கிரம் கொண்டு விடுகிறது. அலைகள் மலைபோல எழுந்தன. நீரோட்டம் சீரற்று சுழியாடியது. காற்றும் எதிராக வேகம் கொண்டது. ஆனாலும் நவரத்தினசாமி பின் வாங்காமல் நீந்திக்கொண்டே இருந்தார்.

> “நீந்த தொடங்கிய நேரத்திலிருந்து சொற்ப நேரமும் ஓய்வெடுக்காது தொடர்ந்து நீந்தி தனது சாதனைக் கனவான கோடிக் கரையை 1954 மார்ச் 26ம்திகதி இரவு 7 மணிக்கு அடைந்து வெற்றியை நாட்டினார்.”

இவரின் அருகாகவந்த இயந்திரபடகுகளே அந்த அலைகளை பிளந்து செல்ல தள்ளாடி நின்ற போது நவரத்தினசாமி அஞ்சாமல் நீந்திக் கொண்டே இருந்தார்.

ஒருகட்டத்தில் கறண்ட நீரோட்டம் என்று சொல்லப்படும் நீரால் இவர் பலமைல்கள் வேறுதிசையில் இழுத்து செல்லப்பட்டபோது இவரின் அருகாக உதவிக்கு வந்தவர்களின் வேண்டுகோளின்படி படகில் ஏறினார். ஆனாலும் அந்தநேரத்தில் நிகழ்த்தப்பட்டு இருந்த உலகசாதனையை அப்போதே நவரத்தினசாமி உடைத்திருந்தார். இருபத்துமூன்று மணித்தியாலம் முப்பதுநிமிடங்கள் தொடர்ச்சியாகக் கடலில் மிதந்து நீந்தி இருந்தார். 35 கடல்மைல்கள் நீந்தி கடந்துள்ளார்.

ஆனால் இந்த தரவுகளாலும், புள்ளி விபரங்களாலும் நவரத்தினசாமி சமாதானம் அடைந்துவிடவில்லை. தான் நினைத்த சாதனையான வல்வெட்டித்துறையில் இருந்து நீந்திச் சென்று இந்தியாவின் கோடிக்கரையில்

ஏறுவதென்ற முயற்சியை அவர் மீண்டும் செயற்படுத்த கடலில் இறங்கினார்.

1954ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம்திகதி பிற்பகல் 4:10க்கு மீண்டும் கடலில் நீந்த ஆரம்பித்தார். இம்முறை சென்ற முறையைவிட அதிகமான மக்கள் வந்திருந்ததுடன் பருத்தித்துறை பாரளுமன்ற உறுப்பினர் ரி.இராமலிங்கம் தானே நேராக வந்திருந்து நீச்சலைஆரம்பித்து வாழ்த்தினார்.

நீந்த தொடங்கிய நேரத்திலிருந்து சொற்ப நேரமும் ஓய்வெடுக்காது தொடர்ந்து நீந்தி தனது சாதனைக் கனவான கோடிக்கரையை 1954 மார்ச் 26ம்திகதி இரவு 7 மணிக்கு அடைந்து வெற்றியை நாட்டினார்.

நீச்சல்வீரன் நவரத்தினசாமி பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து கோடிக்கரையை அடைந்துவிட்ட வெற்றிச் செய்தியை, முதலாக பாக்கு நீரிணையைக் கடந்தவர் என்ற தலைப்பில் உடனே தமது செய்தியில் இலங்கை வானொலி அறிவித்ததும் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் வெடிகளும், சந்தோச அதிர்வேட்டுகளும் முழங்கின.

மறுநாள் வெளிவந்த இலங்கை இந்திய பத்திரிகைககள் யாவும் நவரத்தினசாமி அவர்களின் சாதனையையே தலைப்பிட்டு படங்களுடன் வெளியிட்டு பெருமை தேடின.

இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, இலங்கைப் பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவல போன்றோரிடம் இருந்து வாழ்த்துக்கள் வந்து குவிந்தன.

நீச்சல் வீரன் நவரத்தினசாமியின் முதலாவது வரவேற்பு நிகழ்வு கோடிக்கரையில் நிகழ்ந்தது. அதன் பின்னர் அவரும் அவருடன் சென்றிருந்த படகுகளும் தாயகம் திரும்பிய போது வல்வெட்டித்துறையில் இருபத்தையாயிரத்துக்கும் அதிகமான மக்கள் திரண்டு நின்று மாபெரும் வரவேற்பு ஒன்றை அளித்தனர். அந்த காலத்தில் இருபத்தையிரம் மக்கள் திரள்வது என்பது அற்புதத்திலும் அற்புதம்தான். அத்துடன் பருத்தித்துறை பாராளுமன்ற பிரதிநிதி, சாவகச்சேரி பாராளுமன்ற பிரதிநிதி, தற்காலிக இந்தியதூதர், திரு.சி.எஸ்.பார்குமாரகுலசிங்கம், திரு.வி.நல்லையா, டாக்டர்.என்.எம்.பெரேரா ஆகியோர் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள்.

அத்துடன் இவருக்கு வடமாகாண மக்களாலும், இலங்கைப் பொதுமக்களாலும் இரு வேறு பொதுவரவேற்புகளும் நடாத்தப்பட்டன. யாழ் மேஜர். தங்கப்பதக்கமும், தங்கச்சங்கிலியும் அளித்துக் கௌரவித்தார். இலங்கைப் பிரதமர் வெள்ளி கேடயம் வழங்கி கௌரவித்தார்.

எல்லாவற்றிலும் மேலாக நீச்சல் வீரன் நவரத்தினசாமிக்கு இங்கிலாந்து ராணியால் கௌரவ பதக்கம் வழங்கப்பட்டது.

நீச்சலில் மட்டும் அல்லாமல் பல் துறைகளிலும் நவரத்தினசாமி திறமையும் ஆற்றலும் கொண்டவராக விளங்கினார். 1950ம் ஆண்டில் இலங்கை வானொலியில் இவர் பல இலக்கங்களை இன்னொரு பல இலக்க எண்ணால் உடனே பெருக்கி சரியாக கூறி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியவர்.

இவர் விவசாயதிணைக்களத்தில் சேவையாற்றும் போது விவசாயத்துக்கு தேவையான தானியங்கி இயந்திரங்களை வடிவமைப்பதிலும் அதற்குஅரசாங்க உரிமை பெற்றுக் கொள்வதிலும் முன்னின்று உழைத்தவர்.

1944ம் ஆண்டிலிருந்து 1946ம் ஆண்டுவரையான காலப்பகுதியில் விவசாயதிணைக்களத்தில் வேலை செய்தபோது உழுகின்ற இயந்திரம் (Ploughing), விதை தூவும் இயந்திரம் (Seed Drill) போன்ற இயந்திரங்களை நவீனப்படுத்தி அரசாங்கத்திடம் வழங்கினார். அத்துடன் 1950ம் ஆண்டளவில் நாற்று நடும் இயந்திரத்தை செய்து முடித்து அதன் உரிமையை (Patent) அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

தான் எடுத்துக் கொண்ட ஒரு இலட்சியத்தின் வெற்றிக்காக எத்தனை முறை முயன்று தன்னும் அதனை அடைந்த நீச்சல் வீரன், சாதனையாளன் நவரத்தினசாமியின் வரலாறு என்றும் வல்வை புளூஸ் கழகத்துக்கு அது தொடரப்போகும் பாதையில் ஒளியாக இருக்கும்.





# சாதனைகளின் உச்சியில் நின்ற
# ஆழிக்குமரன் ஆனந்தன்
## வல்வை புளூசின் இனனொரு முகம்

ஈ.கே.ராஜகோபால், (ஆசிரியர்- புதினம்)

வல்வெட்டித்துறைமண் விடா முயற்சிக்கும், பொங்கி வந்து ஓயாமல் அடித்துக கொண்டு இருக்கும் அலையுடன் போராடி கடலோடும் ஆற்றலுக்கும் மட்டும் சொந்தமானது அல்ல.

வல்வெட்டித்துறைமண் விளையாட்டைக்கூட ஒருயாகமாக,ஒருநேர்த்தியானஉணர்ச்சியாக,

போற்றும் ஒருஅற்புதமானமண். அந்தமண்ணோடு சேர்ந்த வல்வெட்டிஎன்ற மண்ணில் பிறந்ததைப் பெருமையாகக் கருதிக் கொண்டிருப்பவன். அந்தத் தனித்துவத்தோடு நம் காலத்திலும் தனித்துவமாகப் பெருஞ் சாதனையீட்டி வரலாறு படைத்த பலரையும் எண்ணிப் பார்க்கிறேன். மெய்சிலிர்க்கிறேன்.



இலங்கைக்கு விஜயம் செய்த இங்கிலாந்து எலிசபெத் மகாராணியால், ‘உலகநீச்சல் வீரர்’ என்று பாராட்டப்பட்ட நவரத்தினசாமிக்குச் சொந்தமான மண். பல்வேறு உலக சாதனைகளை நிகழ்த்தி ஆங்கிலக் கால்வாயில் தன் உயிர் நீத்த ஆழிக்குமரன் ஆனந்தன் மற்றொரு மறத்தமிழன்.

‘கப்பலோட்டிய தமிழர்கள்’ சிதம்பரத்தில் மட்டுமல்ல, வல்வெட்டித் துறையிலும் வாழ்ந்து சாதனை செய்திருக்கிறார்கள். இரண்டாவது உலகமகா யுத்தத்தின் போது திரைகடலோடிக் கப்பல் கப்பலாகப் பொருட்களைக் குவித்து, மக்களின் இல்லாதகுறையை இல்லை என்று பூர்த்தியாக்கிய வீராதி வீரர்கள்.

இங்கு குறிப்பிடும் சம்பவம்- 1930ம் ஆண்டளவில் நிகழ்ந்தது. நேஷனல் ஷேர்ட்டும், வெள்ளை வேட்டியும் கட்டிய தமிழர்களைப் பண்டிதர்கள் என்று அழைக்கப்பட்ட அந்தக் காலத்தில், வேட்டி கட்டிய வல்வெட்டித்துறைத் தமிழர்களை அமெரிக்கமக்கள் கூடி நின்று வரவேற்றார்கள். அன்று அப்படியெல்லாம் ‘ புதினம்’ பார்க்க வந்த அமெரிக்க மக்கள், அமெரிக்காவின் பிரசித்திபெற்ற ‘குளொசெஸ்ரர்’ என்ற துறைமுகத்தில் கூடி நின்றபோது, அந்த அமெரிக்கா வரை கப்பலோட்டிய சாதனையாளர்களான இந்த ஈழத் தமிழர்களாம் வல்வெட்டித்துறை வீரர்களுக்கே வியப்பாகப் போய்விட்டது.

கீழைத் தேசத்தவர்களின் ஒப்பரிய சாதனையைக் கண்ட அமெரிக்கர்களோ, பெரும் வியப்போடு பார்த்தார்கள்.

புதிதான நல்லசெய்தி விளாசிவிட்டார்கள்:

‘இலங்கைத் தீவின் முதல் உத்தியோகப் பற்றற்ற தூதுவர்கள், அமெரிக்க நாட்டுக்கு வந்துள்ளார்கள். வல்வெட்த் துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டி வந்த இவர்கள் இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள்’- நியூயோர்க்கிலிருந்து வெளியாகிக் கொண்டிருந்த ‘பொஸ்ரன் குளோப்’ என்ற தினசரிப் பத்திரிகைதான், இவ்வாறு செய்தியைக் கொட்டை எழுத்தில் பிரசுரித்தது. இத்தனைக்கும் இந்தத் தமிழர்கள் என்ன செய்தார்கள்?

பரந்துபட்ட பசுபிக் சமுத்திரத்தைத் தாண்டி, பனை உயரத்துக்கும் மேலாக அலை அடித்து, எழுந்து கொந்தளித்துக் கொண்டிருக்கும் அத்திலாந்திக் சமுத்திரத்தினூடாக, ஐந்துமைல்

ஆழமுள்ள சமுத்திரங்களில் வீரசாகசப் பயணம் செய்த அந்த வரலாற்று நாயகர்களான நம் தமிழர்களின் வீரதீரத்தை, அஞ்சா நெஞ்சத்தை, அவர்கள் தம் கதையை, நமது காலத்தில் மறந்தாலும், அந்தக் கடந்த காலச் சரித்திரம், நிகழ் காலத்தின் ஊற்றுக் கண்ணாகத் திகழும். இந்த மகாசமுத்திரங்கள் மறைக்கமாட்டா, மறுக்கவும் மாட்டா!

உள்ளூரில் விருட்சமான வேப்பமரங்களில் உருவான அந்த வல்வெட்டித்துறைக் கப்பல் இந்த அபாயங்களை எல்லாம் தாண்டி அமெரிக்கக் கண்டம் சென்றடைந்திருக்கின்றது. கண்டம் விட்டும் கண்டம் சென்றடைந்திருக்கின்றது.

இந்தக் கப்பலை உருவாக்கியவர், மேல்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மேதைகளோ, நிபுணர்களோ அல்லர். வல்வெட்டித் துறையில் பிறந்து வளர்ந்த சுந்தரமேஸ்திரியாரால் அழகாக, நேர்த்தியாகவே அமைக்கப்பட்டதே இந்த இரட்டைப் பாய்மரக் கப்பல். இந்தக் கப்பல்தான் அன்று அமெரிக்காவரை ஓயாத நீண்ட பயணம் செய்தது.

இந்தப் பெரும் சமுத்திரங்களில் கப்பல் செலுத்திய வல்வெட்டித்துறை தமிழர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக இதை மேற் கொண்டார்களா? அதுதான் இல்லை.

இதை ஒரு பரிசோதனையாக நடாத்தியிருக் கிறார்- கடலில் மூழ்கியே பிராப்தம் செய்திருக்கி றார்கள்.

இப்படியாக அடலேறுகளாகப் பவனி வந்த அந்தக் கதை அந்தச் சரித்திரம் இன்றும் வியந்து கூறப்படுவதற்குக் காரணம், தமிழர்கள் எந்த வாய்ப்பினையும் நினைவில் கொள்வதற் கேயன்றிவேறில்லை.

வாஸ்கொடகாமா, கொலம்பஸ் போன்ற மாவீரர்களின் பயணம் அமெரிக்காக் கண்டத்தைக் கண்டுபிடிக்க உதவியது. இன்று அமெரிக்காவின் ராஜாங்கம் நடாத்தும் அதிபர்களுக்கு வாஸ்கொடகாமா, கொலம்பஸ் போன்ற தியாகச் சீலர்கள், மேதாவிகள், அந்த மேதாவிகளின் நாமங்களை இன்றைய உலகம் மறந்துவிட்டது! ஆனால் வரலாறு மறக்கவில்லை. மறந்துவிடவுமில்லை. அதுபோன்று இந்த வல்வெட்டித்துறை தண்டையல்களின் கப்பலோட்டிய வரலாறுமாகும்.

வல்வெட்டித்துறைத் தமிழர்களின் சாதனை வளர்ச்சியைப் பூரணமாகப் பாவிக்கத் தெரியாத காலத்தில் நிகழ்ந்திருக்கின்றது. இதனால்தான் இந்தச் சாதனை முக்கியத்துவம் பெறுகின்றது. இயல்பாகவே நிலவும் சீர்நிலையை அறிந்து அதற்குத் தக்கமுறையில் பாய்மரக் கப்பலை அமெரிக்கா வரை ஓட்டிய இந்தத் தமிழர்கள் சிறந்த மாலுமிகளாகவும், வானநிலைகளை ஆகாயத்தைப் பார்த்து அறியும் யுக்தியையும், தெரிந்து கொண்டிருந்தார்கள். வடக்கே காற்றுக் கிளம்பினால், தெற்குப் பக்கமாக மாலுமி கப்பல் முகத்தைத் திருப்பும் வல்லமையைப் பெற்றிருந்தார்கள். இப்படியாக மாலுமிகள் தெரிந்திருக்க வேண்டிய உத்திமுறைகளையும் வானத்தைப் பற்றிய நுண்ணறிவுகளையும் வெற்றிகொண்டு கப்பலோட்டுவதிலும் 'தனிக் காட்டு ராஜா'க்களாகத் திகழ்ந்தார்கள்.

என் வாழ்நாளின் முக்கால்வாசிப் பகுதி பத்திரிகைத் துறையோடு கழிந்துவிட்டது. ஆயினும் 'வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்' என்ற சாதனை நூலை எழுதிவெளியிட்டதே என் மனதுக்கு நிறைவைத் தருகின்றது. இதேபோன்று வல்வெட்டித்துறையில் பிறந்து, பல்வேறு சாதனைகளைப் புரிந்த ஆனந்தனைப் பற்றியும் 'ஆழிக்குமரன்' என்ற பெயரில் நூல் ஒன்றை எழுதிவெளியிட்டதும் மறக்க முடியாது.

சாதனைக்கு மேல் சாதனை செய்தவன். ஒன்றன் பின் ஒன்றாக வந்த சோதனைகளைத் தாங்கிக் கொண்டவன். மனித உணர்வுகளைப் புரிந்துகொண்டு வாழந்தவன். நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவன். அவருடன் எனக்கு இருந்த நெருக்கமான பிணைப்பு என்றென்றும் அழியாத உறவுகள்.

பதினெட்டு வயதில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து முதலாவது உலக சாதனையை நிலைநாட்டினான். அப்போது, 'ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடப்பேன்' என்று சபதமிட்டார். இருபது ஆண்டுகளுக்குப் பின்னால் அதே ஆங்கிலக் கால்வாயில் தன் சாதனையை நிறைவேற்ற முயற்சித்த போது, தன் வாழ்வை முடித்தார்! அவர் நிகழ்த்திய சில சாதனைகளின் போது கூடவே இருந்திருக்கிறேன். தலை மன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கும், தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கும் இருவழியாக நீந்திச் சாதனை செய்தபோது, பத்திரிகையாளனாகப் படகு ஒன்றில் சென்று வந்த நினைவுகள், முப்பத்தைந்து ஆண்டுகள் கழிந்துவிட்ட போதிலும் இப்போதும் பசுமையாக நினைவில் நிற்கின்றன.

தலைமன்னார் கிராமத்தின் கடலோரத்தில் இருந்து ஆனந்தன் தனது நீச்சலை ஆரம்பித்து தனுஷகோடிக்கரையை அடைந்து, மீண்டும் தனது திட்டப்படி திரும்பவும் உடனடியாகத் தலைமன்னாருக்கு நீந்தி இக்கரை சேர்ந்தார். ஐம்பத்திரண்டு மணிநேரத்தில் இச் சாதனையைச் செய்துமுடித்தார். இப்படி ஆழிக்குமரனை நினைக்க வைக்கும் சாதனைகள் பல. அவர் மனம் விட்டு என்னோடு பேசுவார். 'வல்வைமகன் என்ற உணர்ச்சியே எனது வெற்றிக்குத் திறவுகோல்' என்று பெருமையோடு கூறுவார்.

ஆங்கிலக் கால்வாயை நீந்துகின்ற தனது சாதனைப் பயணத்தில் கலந்து கொள்ளப் பத்திரிகையாளரான என்னை பிரிட்டன் வர அனுமதிக்கும்படி, இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்துக்கு கடிதம் ஒன்று எழுதிவிசா' எடுத்துக் கொண்டு வருமாறும், தனது நான்கு வழிச் சாதனைப் பயணத்தைப் பற்றியும் கடிதம் எழுதியிருந்தார்.

அப்போது நான் கொழும்பில் 'தினகரன்' பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். விடுமுறை எடுத்து, லண்டனுக்கு அவர் விரும்பியது போல அவர் அழைப்பை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனினும் 'தினகரன்' பத்திரிகையில் 'ஆங்கிலக் கால்வாயில் ஆழிக்குமரன்' என்று தலைப்பிட்டு அவரது நீச்சல் படங்களுடன் முழுப் பக்கக் கட்டுரை ஒன்றை எழுதினேன். 'ஆங்கிலக் கால்வாயை அவர் நீந்தி முடிப்பார். அல்லது அந்தக் கால்வாயிலேயே அவர் செத்துமடிவார்' என்று கட்டுரையில் இறுதியில் முடித்திருந்தேன்.

அவரை எனக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான் அப்படி எழுதினேன். எழுதிய சிலநாட்களில் அந்த மாவீரன் ஆங்கிலக் கால்வாயில் குதித்தான்.

அவரது மரணச் செய்திதான் வந்தது.

ஆங்கிலக் கால்வாயை நீந்தும் முயற்சியை இடையில் ஆனந்தன் கைவிட்டிருந்தால் அது அவரது வீரத்துக்கு ஏற்பட்ட 'கறை'யாகிப் போயிருக்கும்.

மாவீரன் ஒருவனுடைய வீரமரணமாகவே அதனை நான் கருதினேன். வல்வெட்டித்துறை மண்ணின் மானத்தைக் காத்தமாவீரன்- உலகசாதனை வீரன்.

ஆனந்தனின் வாழ்வு முழுதும் எதனையும் சாதிக்க வேண்டும், தனது சாதனைகள் தனது மண்ணுக்கு பெருமை சேர்ப்பதாக அமைய வேண்டும் என்ற பேரெழுச்சி கொண்டதாகவே இருந்திருக்கின்றது.

உலகசாதனைகளை ஆவணப்படுத்தும் ' கின்னஸ்' ரெக்கோர்ட்' புத்தகத்தில் ஒரு சமயத்தில் அதிக சாதனைகளை நிகழ்த்தி பதியப்பட்டிருந்த ஒரே மனிதனாக ஆழிக்கு மரன் ஆனந்தன் விளங்கி இருக்கிறார். அதற்காக வல்வை மண்ணும், ஆனந்தனின் உருவாக்கத்துக்கு ஒரு உந்துசக்தியாக இருந்த வல்வைபுளூஸ் கழகமும் என்றென்றும் பெருமையும் தலைநிமிர்வும் கொள்ளலாம்.

ஆழிக்குமரன் ஆனந்தன் தான 'மட்டும் சாதனைகள் செய்வதிலும், அதற்கான முயற்சிகள் செய்வதில் மட்டும் கவனம் செலுத்தாமல் மற்றவர்களும் இதனை தொடர வேண்டும் என்றும் இதனை பழகவேண்டும் என்றும் பெருவிருப்பம் கொண்டிருந்தார். இதன் வெளிப்பாடகவே அவரால் 'அட்வென்சேர்ஸ் கிளப்' (சாதனை செய்பவர்கள் கழகம்) உருவாக்கப்பட்டது. இதில் ஏராளமான வல்வை இளைஞர்கள் இணைந்து பலவித மான விளையாட்டு நுட்பங்களையும் சாதனை செய்வதற்கான மனவளத்தையும் பெற்றுக்கொண்டனர்

ஆனந்தனின் பதியப்பட்ட சாதனைகளுக்கு பின்னால் எழுத்தில் எழுதிவிடமுடியாதஆயிரம் சம்பவங்கள் அவரின் ஓர்மத்துக்கும், விடாமுயற்சிக்கும், எடுத்துவிட்ட முயற்சியை அடைந்தே தீருவதென்ற லட்சிய வெறிக்கும் உதாரணமாக இருக்கின்றன.

80களின் ஆரம்பத்தில் ஆனந்தன் தொடர்ச்சியாக நடக்கும் சாதனை முயற்சி ஒன்றை சென்னை தி.நகரில் உள்ள பனகல் பூங்காவை சுற்றி நடக்க ஆரம்பித்தார். முதல் நாள் எந்தவிதமான பிரச்சனையும் இருக்கவில்லை. மறுநாள் அடைமழை. வீதி எங்கும் வெள்ளம். நிற்காமல் தொடரும் மழை. ஆனால் ஆனந்தன் நிறுத்தவில்லை.அவரின் சப்பாத்துக்குள் மழைநீர் எந்தநேரமும் சென்று கொண்டே இருந்தது. காலுக்கும் நீர் தேங்கிகால் முழுதும் புண்ணாக்கிவிட்டது.

ஆனந்தனை பரிசோதிக்கும் மருத்துவர் கூட ஆனந்தனை கேட்டுக்கொண்டார் அந்த சாதனை முயற்சியை நிறுத்தும்படி. ஆனால் ஆனந்தன் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்ததுதான் அவரது ஓர்மம்.

இப்படியான மனிதர் எங்களுக்குள் வாழ்ந்தார் என்பதே எமக்கான பெருமை தான். ஆனால் நாம் அவருக்கான பெருமையாக எதனை செய்ய போகின்றோம். அவருடைய விடாமுயற்சியும், செய்தே தீருவதென்ற வேகமும் வருங்காலத்தில் சாதனைகளுக்கான முதல் வரிகளாக இருக்கட்டும். இந்த பொன்விழாவில் எமது கழக முன்னோடியான அவரைநாம் பெருமையுடனும், வார்த்தைகளால் வரிக்க முடியாத தலை நிமிர்வுடனும் வணங்குகின்றோம்..

வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

## அலையின் மடியில்

# அசையாத யோகண்ணா

## ஒரு வரலாற்றுப்பதிவு...

**தமிழ் நீ. பொன். சிவகுமாரன்**

அன்னபூரணியில் அமெரிக்கா சென்று சாதனைநிகழ்த்திய வல்வைக்கடலோடிகளின் தொடர்ச்சியான நவரத்தினசாமி ஆழிக்குமரன் ஆனந்தன் வரிசையில் அலைகடலில் சாதனைபுரிந்தவர் யோகண்ணா என அழைக்கப்பட்ட துரைரெத்தினராசா யோகரெத்தினராசா. அலைகடலும் வல்வெட்டித்துறையும் ஒன்றுடன் ஒன்று பிரிக்கப்பட முடியாதவை என்பதை மேற்படி சாதனைகள் காலத்திற்கு காலம் நிருபித்தவாறு தொடர்ந்து வருகின்றன. இவ்வகையில் யோகண்ணாவின் சாதனை மிகவும் காத்திரமானது.



28.03.1980 பிற்பகல் 4.46 இற்கு கடலில் இறங்கிய யோகண்ணா 31.03.1980 அதிகாலை 2.13 வரை மணிவரை கடலில் மிதந்து உலகசாதனை ஒன்றை நிலைநாட்டினார். கைால்களை முன்பின்னாக கட்டிய நிலையில் உடலை சமநிலையாக்கி பல மணித்தியாலங்கள் கிடையாக மிதந்தும் தலைமட்டும் நீரிற்கு மேலாக தெரியும் நிலையில் செங்குத்தாக நிமிர்ந்தும் பலவித நிலைகளில் அவரது இச்சாதனை தொடர்ந்தது. அசைவற்ற குளத்தில் கைகால்களை தவளைபோல் அசைத்து நிகழ்த்தும் சாதனைக்கு மாற்றாக அலையடிக்கும் கடலில் கைகால்களைக் கட்டி அசைவற்று கிடக்கும் மிகவும் கடினமான சாதனையாக இவரது சாதனை நடந்தேறியது.

ஓடுவதற்கென உருவாக்கப்பட்ட மிதிவண்டியை ஒரேஇடத்தில் எவ்வாறு நகர முடியாமல் நிறுத்தமுடியாதோ அதேபோன்றதே நீரில்அசையாமல் ஒரேஇடத்தில் மிதப்பது மாகும். சாதாரணமான எவரும் பயிற்சியினால் நீச்சலினை கற்றுக்கொள்ளமுடியும். ஆனால் மூச்சைக்கட்டுப்படுத்தி நீரில் மிதப்பதென்பது ஒரு யோகநிலை. இங்கு மூச்சைக்கட்டு வதென்பது மனதையும் சேர்த்து கட்டுப்படுத்துவதையே குறிப்பதாகும். உடலின் வெளியுறுப்புகளினை அசைத்தோ அசைக்காமலோ மூச்சைப் பிடிக்கும்போது உடலின் உள்ளுறுப்புகள் வேகமாக இயங்கி மனிதனின் உடல் விரைவில் களைப்புறுகின்றது. நீண்டதூர மரதன் ஓட்டவீரர்களை விட குறுந்தூரமான 100மீற்றர் ஓட்டவீரர்களின் உள்ளுறுப்புக்களும் வேகமாக இயங்குவதாலேயே அவர்கள் விரைவில் மூச்சு வாங்குகின்றனர். இதனால் மூச்சையும் பிடிக்காமல் கைகால்களையும் அசைக்காமல் மௌனநிலையில் முனிவர்களும் யோகிகளும் செய்யும் தவம்போன்றதே இச்சாதனை யாகும். ஆனால் யோகண்ணா சூழ இருந்தோரிடம் கதைத்தவாறே இச்சாதனையை நிகழ்த்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. காற்றிலும் கடலிலும் மனிதர்கள் மிதக்கும் அசாதரணநிகழ்சிகள் உலகில் எப்போதோ ஒருமுறைதான் நடைபெறகின்றன. ஒருநிமிடம் கூட நீரில் மிதக்கமுடியாததுதான் உயிருள்ள மனிதவுடல். ஆனால் யோகண்ணா 57 மணித்தியாலங்கள் 27நிடங்கள் அசைவற்று மிதந்து ஒருவரும் எப்போதும் செய்யமுடியாத சாதனையை வரலாற்றில் பதிவுசெய்தார்.

மேலும், நீச்சல்குளத்தில் நீண்டநேரம் மிதப்பதற்கும் அலை கடலில் நீண்டநேரம் மிதப்பதற்கும் பாரிய வேறுபாடுகள் இருக்கின்றன.கடலில் மிதப்பது என்பது சாவல்கள் அதிகமாக நிறைந்தது. அபாயமானது. கடல்நீரின் உப்பு எரிச்சலும், நேரத்துக்கு நேரம் மாறுபடும் அலையின் தன்மையும், வேகமும் என பலவிதமான பிரச்சனைகள் கடலில் மிதக்கும்போது தோன்றுகின்றன. இவற்றை எதிர்பார்த்தே யோகண்ணாவும் இந்த சாதனையில் இறங்கினார். யோகண்ணாவின் இந்த சாதனை முயற்சி என்றென்றும் தலைவணங்கி ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்று.

வரலாற்றின் பக்கங்களில் எப்போதாவது தோன்றும் ஒரு அபூர்வநிகழ்வாக எமது மண்ணின் சாதனையாளன் யோகண்ணா கடல்நீரில் மிதந்து நிகழ்த்திய சாதனையை எமது வல்வை மண்ணின் பெருமைக்குரிய இன்னொரு புதல்வனான ஆழிக்குமரன் ஆனந்தன் அவர்கள் சென்னையின் அண்ணாநீச்சல் தடாகத்தில் நீண்டநேரம் மிதந்து கின்னர்ஸ் புத்தகத்தில் பதிந்து யோகண்ணாவின் ஆசையை நிறைவேற்றி வைத்தார்.

இவர்நிகழ்த்திய சாதனைபோல் யாரும் எங்கும் சாதனை புரியவில்லை. ஏற்கெனவே இருக்கும் சாதனைகள் புதியசாதனைகளாக மாற்றப்பட்டால் தமதுகருத்தில் கொள்ளும் 'கின்னஸ்' உலகசாதனைப் பதிவாளர்கள் புதியசாதனைகளை பெரிதும் கண்டு கொள்வதில்லை என்பது உலகளாவிய குற்றச்சாட்டு. அதுபோலவே யோகண்ணாவின் சாதனையும் பதிவாளர்களினால் உடனடியாக பதிவுக்கு உள்ளாக்கப்படவில்லை. எனினும் அக்கால பத்திரிகைக் குறிப்புகள் என்றும் எம்மை வியப்பிலாழ்த்தும். ஆழிக்குமரன் ஆனந்தனுடைய பதினான்கு உலகசாதனைகள் கின்னஸ் புத்தகத்தில் பதியப்படவில்லை என்பது இங்கு நாம்தரும் மேலதிகதகவலாகும்.

> **“யோகண்ணாக்களும் ஆழிக்குமரன் ஆனந்தன்களும் வெறுமனே ஒரு சாதனைப் புத்தகத்தில் பெயர் பதிவதற்காக இந்த சாதனைகளை செய்யவில்லை.”**

யோகண்ணாக்களும் ஆழிக்குமரன் ஆனந்தன்களும் வெறுமனே ஒரு சாதனைப் புத்தகத்தில் பெயர்பதிவதற்காக இந்த சாதனைகளை செய்யவில்லை. இந்த சமூகத்தின், இந்த ஊரின் மறுக்கமுடியாத சாதனைத்தாகத்தின் வெளிப்பாடாகவே அவர்கள் கடலிலும், தரையிலும் சாதனைகளை நிகழ்த முயற்சித் தார்கள். சாதனைகளை நிகழ்த்தினார்கள்.

# மெய்வல்லுனர் போட்டிகளில் சாதனை படைத்தவர்கள்

## திரு.கே. எஸ். சிவனருள்சுந்தரம்



1963 ஆம் வருடம் வடமராடசி ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் 13 வயதிற்கு கீழ்ப்பட்டோர் பிரிவில் வல்வை சிதம்பராக் கல்லூரியின் சார்பில் கலந்து கொண்டு 100 யார் ஓட்டப் போட்டியில் 12.7 செக்கனில் ஓடி முடித்து புதிய சாதனை நிலைநாட்டினார்.

அதேவருடம் யாழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் பங்கு கொண்டு உயரம் பாய்தலில் 4 அடி 9அங்குலம் பாய்ந்து புதிய சாதனை படைத்தார்.

1965 ஆம் வருடம் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் 15 வயதிற்குட்பட்ட பிரிவில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளிலும் நீளம் பாய்தலிலும் முதலாம் இடத்தைப் பெற்றதோடு மட்டுமல்லாமல் இதேவருடம் யாழ் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளிலும் பங்கு பற்றி முதலாம் இடங்களைப் பெற்றதோடு 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தினை 25.3 செக்கனில் ஓடி முடித்து புதிய சாதனையையும் படைத்தார். அதே வருடம் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையயேயான போட்டியில் பங்கு பற்றி நீளம் பாய்தலில் முதலாம் இடத்தையும் 200 மீற்றர் ஓட்டபோட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று எமது ஊருக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துக் கொண்டார்.

## திரு. என். ரி. நாகேஸ்வரன்



1969 ஆம் வருடம் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட மெய்வல்லுனர்ப் போட்டியில் 19 வயதிற்குக் கீழ்ப்பட்ட பிரிவில் வல்வை சிதம்பராக் கல்லூரியின் சார்பில் கலந்து கொண்டு 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் பந்தயத் தூரத்தை 56.2 செக்கனில் ஓடி முடித்து புதிய சாதனையை நிலை நாட்டி பாடசாலைக்கும் பிறந்த ஊருக்கும் பெருமை சேர்த்தார் இந்த சாதனை இன்றுவரை முறியடிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவருடம் யாழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் பங்கு கொண்டு 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தையும் தட்டிக் கொண்டார்.

## திரு. கி. நிரஞ்சன்

1971 ஆம் வருடம் வடமராட்சிஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட மெய்வல்லுனர்ப் போட்டியில் 19 வயதிற்குக் கீழ்ப்பட்ட பிரிவில் வல்வை சிதம்பராக் சல்லூரியின் சார்பில் கலந்து கொண்டு பரிதிவட்டம் எறியும் போட்டியில் பங்கு கொண்டு முதலாம் இடத்தைப் பெற்றதோடு புதிய சாதனையையும் படைத்துதான் படித்த பாடசாலைக்கும் பிறந்த ஊருக்கும் பெருமைசேர்த்தார்.





## திரு. ஏ. அருள்பகவான்



1970 ஆம் வருடம் வடமராட்சிஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட மெய்வல்லுனர்ப் போட்டியில் 19 வயதிற்குக் கீழ்ப்பட்ட பிரிவில் வல்வை சிதம்பராக் கல்லூரியின் சார்பில் கலந்துகொண்டு 1500 மீற்றரமற்றும் 800 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்றதோடு 800 மீற்றர் ஓட்டத்தில் புதிய சாதனையை நிலைநாட்டினார். அதேவருடம் யாழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டியிலும் கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியான போட்டிகளிலும் கலந்து கொண்டு இரண்டு போட்டிகளிலும் முதலாம் இடத்தைப் பெற்றுதான் படித்த பாடசாலைக்கும் பிறந்த ஊருக்கும் பெருமை சேர்த்தார்.

## திரு. எஸ். விஜயராஜா



1971 ஆம் வருடம் வடமராட்சிஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட மெய்வல்லுனர் போட்டியில் வல்வை சிதம்பராக்கல்லூயின் சார்பில் கலந்து கொண்டு 17 வயதிற்குட்பட்ட பிரிவில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளிலும் நீளம் பாய்தலிலும் முதலாம் இடத்தைப் பெற்றதோடு மட்டுமல்லாமல் இதேவருடம் யாழ் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளிலும் பங்கு பற்றி முதலாம் இடடங்களைப் பெற்றதோடு புதிய சாதனைகளையும் படைத்தார்.

1974 ஆம் வருடம் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட மெய்வல்லுனர் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் சார்பில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்ப் போட்டிகளிலும் நீளம் பாய்தலிலும்முதலாம் இடத்தைப் பெற்றதோடுமட்டுமல்லாமல் இதேவருடம் யாழ் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளிலும் பங்குபற்றி முதலாம் இடங்களைப் பெற்றதோடு புதிய சாதனையையும் படைத்தார். அதேவருடம் கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையேயான போட்டியில் பங்கு பற்றி 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்று எமது ஊருக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துக் கொண்டார்.



## திரு. ப. வரதாரஜன்

1976 ஆம் வருடம் வடமராட்சிஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்டமெய்வல்லுனர் போட்டியில் பருத்தித்துறை ஹாடலிக் கல்லூ யின் சார்பில் கலந்துகொண்டு 17 வயதிற்குட்பட்டபிரிவில் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றதோடு மட்டுமல்லாமல் பந்தயத் தூரத்தை 11.26 செக்கன்களில் கடந்து புதிய சாதனையையும் படைத்து படித்த பாடசாலைக்கும் பிறந்த ஊருக்கும் பெருமை சேர்த்துக் கொண்டார்.

## திரு. ம. மயூரன்



2011 ஆம் ஆண்டு பருத்தித்துறை பிரதேச மட்டத்தில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் கலந்து கொண்டு ஈட்டி எறிதல் போட்டியில் 48m 86 cm எறிந்து புதிய சாதனை படைத்து கழகத்திற்கும் ஊருக்கும் பெருமைசேர்த்தார்.

## சாதனை முயற்ச்சியாளரும்
## வல்வைபுளுசின் அபிமானியும்
# சி.கிருஷ்ணானந்ததேவர்



தேவரை இளம் பாராயத்தில் கண்டபோதே அவரில்பொதிந்திருந்த திறமைகளை காணலாம் வல்வையின் மைந்தன் ஆழிக்குமரன் ஆனந்தன் பல உலக சாதனைகளை படைத்துள்ளார். அவர்போல் இவரும் 1978ம் ஆண்டு 6நாட்களுக்கு மேல் தொடர்ந்து இடைவிடாது டுவிஸ்ட் நடனமாடி உலக சாதனை ஒன்றை நிகழ்த்தி கின்னஸ் சாதனை புத்தகத்தில் தனது பெயரை பதிவு செய்ய முயன்று கொண்டிருந்தார். ஆன்று அவர் சாதனையைப் படைத்தாலும் கின்னஸ் வரைமுறைகளுக்கு அமைய அதைச் செய்து ஒழங்குபடுத்த போதிய உதவிகள் இன்மையால் அவர் பெயர் பதியப்படாமல் போனது வருத்தமானது.

இருப்பினும் தேவர் தனது திறமைகளை பல வழிகளில் வெளிப்படுத்தினார். உள்ளூர் மற்றும் வெளியூர் மரதன் ஓட்டப்போட்டிகளில் கலந்து கொள்வது. வல்வை பாரத் கலா மன்றத்தின் நாடக நடிகராக, புலம் பெயர்ந்து லண்டனிலே புத்தகங்கள் எழுதி வெளியிட்டும் பாடல்கள் எழுதி இறுவட்டுக்களாக வெளியிட்டும் மற்றும் நடிகராக, கவிஞராக, பாடலாசிரியராக, எழுத்தாளராக, பேச்சாளராக ஆற்றி வரும் பணிகள் ஆயிரம் ஆயிரம். தன்னலம் கருதாது தேசபக்தி நிறைந்த உண்மைக் கலைஞராக திகழ்ந்து வருகின்றார். இவர் சிதம்பராக் கல்லூரியின் பழைய மாணவரும் வல்வை புளுஸ்சின் அபிமானியும் ஆதரவாளரும் ஆவார்.



## கராத்தே விளையாட்டில் சாதனை புரியும்
## வல்வை இளைஞன்
# முரளி திவாகர்

வல்வெட்டித்துறை தெணியம்பையை சேர்ந்த முரளி திவாகர் என்ற இளைஞன் கராத்தே விளையாட்டில் யாழ்மாவட்டரீதியாகவும்,அகில இலங்கை ரீதியாகவும் வெற்றிகளையும் தங்கப்பதக்கத்தையும் பெற்றிருக்கின்றார்.

இவர் 1997ம்ஆண்டு எக்ஸ்ர்கைய் (Exerkai karate) என்ற வகையை சேர்ந்த கராத்தேயை பயிலஆரம்பித்தார். இந்த கராத்தேயில் முதலாவது கறுப்புபட்டியை (black belt) 2000ம்ஆண்டு பெற்றுக்கொண்டார். 2001ல் சொட்டோகன் (Shotokan karate) என்ற கராத்தேயை பயில ஆரம்பித்தார்.

ஆரம்பநிலை பட்டிகளை பெற்று தேர்ச்சிஅடைந்து 2010ல் இந்த சோட்டோகன் கராத்தேயிலும் கறுப்புபட்டியை பெற்றுக்கொண்டார். 17.10.2010 இலங்கைதேசிய கராத்தே சம்மேளனம் நடாத்திய வடமாகாண கராத்தே சுற்றுப்போட்டியில் காட்டா (kata) போட்டியில் முதலாம்இடத்தை பெற்று தங்கப்பதக்கம் பெற்றார். இதே சுற்றுப்போட்டியில் சண்டைபோட்டியில் மூன்றாம் இடத்தைபெற்று வெண்கலப்பதக்கம் பெற்றார்.

2010 நவம்பரில் தேசியரீதியில் வென்னப்புவ உள்ளரங்கில் நடாத்தப்பட்ட கராத்தேபோட்டியில் காட்டாகுயிற்றே போட்டிகள் இரண்டிலும் சிறப்பாக விளையாடி சிறந்த எண்மர் என்ற சான்றிதழ் பெற்றார்.

19 டிசம்பர் 2010ல் கம்பகா நவலோக உள்ளரங்கில் கனின்யுக்தா அகில இலங்கை கராத்தே போட்டியில் சண்டைப்பிரிவில் வெற்றிபெற்று முதலாம் இடத்தை பெற்று தங்கப்பதக்கமும் பெற்றுக்கொண்டார். (18வயதுபிரிவில்)

இதன்மூலம் சிறீலங்காவில் நடைபெறும் 10வது சர்வதேச எஸ்.கே.ஏ கராத்தே சாம்பியன்போட்டியில் (10th International S.K.A Karate Championship) கலந்துகொள்ளும் தகுதியும் பெற்றார். திவாகர் தொடர்ந்து பல சாதனைகள் புரிய வாழ்த்துகின்றோம்.







## கராத்தே பள்ளியில் Black Belt எடுத்துச்
## சாதனைகள் நிகழ்த்தும்
## வல்வை இளைஞன்
# சிவஅன்பு ஆனந்

வல்வெட்டித்துறை மதவடியைச் சேர்ந்த சிவஅன்பு ஆனந் என்பவர் 24/10/2006ல் (International Okinawa Issltinrya Karata-) என்னும் கரேத்தே பள்ளியில் பயிற்சி பெற்றார்.

02/12/2007-ல் தஞ்சாவூரில் நடந்த Yellow Belt-க்குரிய போட்டியில் மூன்றாம் இடத்தை வென்று வெண்கலப்பதக்கமும் சான்றுதலும் பெற்றார்.

03092008-ல் சென்னை குளத்தூரில் நடந்த Orange Belt-க்கு ஆன போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கமும் சான்றுதலும் பெற்றார்.

23, 24/09/2008-ல் தஞ்சாவூரில் நடந்த Orange Belt-க்கு உரிய Open Champion Karata போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்று வெள்ளிப்பதக்கமும் சான்றுதலும் பெற்றார்.

7,8/02/2009-ல் Paris gold-ல் நடந்த Purple Belt-க்கான போட்டியில் Bamboo Aikido என்னும் போட்டியில் மூன்றாம் இடத்தை பிடித்து வெண்கலப்பதக்கமும் சான்றுதலும் பெற்றார்.

13/05/2012-ல் அவர் கற்று வரும் பள்ளியில் Black Belt முடித்துள்ளார் சான்றுதலும் பெற்றார்.

05/09/2012-ல் சென்னை ஆவடியில் All Style Karata Open Champion Black Belt போட்டியில் மூன்றாம் இடத்தை பெற்றார். அவருக்கு கேடயம் (Shield) சான்றுதலும் பெற்றார்.

வரும் 05/12/2012-ல் பூனேயில் (இந்தியா) நடைபெறும் Open Karata போட்டியில் பங்கு பெற இவர் பயின்று வரும் பள்ளி ஆசிரியர் கரேத்தே சக்திவேல் அவர்கள் முடிவு செய்துள்ளார். ஆனந் தொடர்ந்து பல சாதனைகள் புரிய வாழ்த்துகின்றோம்.




1961 இல் வல்வை புளூஸ் அஞ்சல் ஓட்ட வீரர்கள்



# நன்றி சொல்வோம்...

இந்த பொன்விழா மலர் இன்று உங்கள் கைகளில் இருப்பதற்கு உதவியாக இருந்த அனைவரும் நன்றிக்குரியவர்களே.

இந்த மலரை உருவாக்குவதற்கு எமக்கு அனுமதி அளித்ததன் மூலம் எம்மையும் வல்வைபுளூசின் ஐம்பதுவருட சரித்திரத்தின் ஓர் இடத்தில் பதிவு செய்வதற்கு சந்தர்ப்பம் அளித்த எமது தாய்க் கழகமான வல்வைபுளூசுக்கும், வல்வை புளூஸ் இங்கிலாந்திற்கும் எமது நன்றிகள் பல.

1961 இல் வல்வை புஸ் என்ற பெயரில் ஓடிய முதலாவது அஞ்சல் ஓட்டத்தில் பங்குபற்றிய சுந்தரிஅண்ணாவும், குட்டிமணி அண்ணாவும் நாம் கேட்டவுடன், புத்தகத்திற்கு ஆசிச் செய்தியும் எழுதித் தந்தனர். சிவகுருதாத்தா 90 வயதிலும் ஆசிச் செய்தியுடன் தனக்கு ஞாபகத்தில் இருந்த விடயங்கள் அனைத்தையும் 10 பக்கங்களில் கட்டுரையாக எழுதித் தந்திருந்தார். வல்வை புளூஸ் ஆரம்பித்த காலத்தில் இருந்து வல்வையில் வல்வை புளூசுக்காக அதிககாலம் விளையாடிய வீரரான கட்டிஅண்ணா எமக்கு ஆசிச் செய்தி எழுதியதுடன் பல ஆரம்பகால விளையாட்டு வீரர்களுடைய கட்டுரைகளையும் எழுதித் தந்துள்ளார். நாட்டு நிலைமை சீரற்று இருந்த பொழுதும் தளராது வல்வைபுளூசை இன்று வரை முன்னின்று நடாத்திவரும் தங்கவேல் அண்ணாவும் ஆசிச் செய்தியுடன் வல்வையில் இருந்த தகவல்களைத் தருவதற்காக எப்பொழுதும் எம்மோடு இணைந்திருந்தார். இவை எல்லாம் நாம் பெருமை கொள்ளும் விடயங்களாகும்.

Dr.மயிலேறும் பெருமாள், அமிரதலிங்கம் அண்ணா, தங்கவடிவேல் அண்ணா, காண்டீபன் அண்ணா, A.R. அண்ணா, சந்திரலிங்கம் அண்ணா, சிறிமாஸ்டர் ஆகியோர் பொன்விழா மலருக்காகத் தமது நினைவுகளை சிறந்தமுறையில் கட்டுரைகளாக எழுதித் தந்திருந்தார்கள்.

இப்படிப் பெரியவர்கள் எல்லோரும் எமக்கு அளித்த ஆதரவு நாம் இந்தவேலைத் திட்டத்தை வேகமாக முன்னெடுப்பதற்கு உதவியாக இருந்தது.

பன்முகம் கொண்ட செல்லத்துரை மாஸ்டர் கரப்பந்தாட்டத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட காரணத்தினால் கரப்பந்தாட்டப் பகுதி முழுவதையும் மிகச் சிறப்பாக எழுதித் தந்திருந்தார்.

Netball பகுதியை திருமதி லட்சுமிசிவநேரு அவர்கள் அழகாகப் பதிவு செய்து தந்துள்ளார்.

கிரிக்கெட் பற்றிய விபரங்களை சுபாஸ் அண்ணா (கனடா), மணி அண்ணா (கொழும்பு),

ஜீவன் (லண்டன்) ஆகியோர் எமக்கு தந்து உதவினார்கள். ஆனந்தசிகாமணி (வென்சுக்குட்டி) மூலம் இராமேஸ்வரம் புளூஸ் பற்றிய விபரங்களையும், அசோக் மூலம் வல்வை புளூஸ் பிரான்ஸ் விபரங்களையும் பெற்றுக் கொண்டோம்.

ஆழிக்குமரன் ஆனந்தன் அண்ணாவின் கட்டுரையை ராஜகோபால் அண்ணாவும் (புதினம் ஆசிரியர்), யோகண்ணாவின் கட்டுரையை கனடாவில் இருந்து பொன். சிவகுமார் அண்ணாவும் எழுதித் தந்தனர்.

வல்வை புளூஸ் இங்கிலாந்து கட்டுரையை நாம் எழுதுவதற்கும், பெயர்களைத் தொகுப்பதற்கும் முரளிஅண்ணா முழு ஈடுபாட்டுடன் எமக்குஉதவிபுரிந்தார்.

அவுஸ்ரேலியாவில் இருந்து வேலாஅண்ணா, அன்புழகன் அண்ணா, சக்திவடிவேல் மாஸ்டர் ஆகியோர் எமக்கு மிகவும் அனுசரணையாக இருந்தனர்.

கனடாவில் இருந்து நடனசிகாமணி அண்ணாவும் லண்டனில் மாமாச்சியும் (செ. தெய்வச்சந்திரன்) அவர்களும் பழைய புகைப்படங்களைத் தந்துதவினர்.

வல்வைநலன்புரிச் சங்கம் இங்கிலாந்து எமது வேலைத் திட்டங்களுக்கு எல்லாவகையிலும் உதவியாக இருந்தனர். குறிப்பாக செயலாளர் ஞானம் அண்ணா எமதுபுத்தகத்தினுடைய தரம் (Quality) சிறப்பாக இருக்கவேண்டும் என்ற எங்களுடைய விருப்பத்திற்குமிகவும் ஆதரவாக இருந்தார். அதேபோல் vvtuk. com எமது அறிவித்தல்களை இணையம் மூலம் வல்வை மக்களிடம் எடுத்துச் சென்றனர்.

இந்த புத்தகம் மிகச் சிறப்பான வடிவமைப்புடன் உங்கள் கைகளில் தவழ்வதற்கு காரணமானவர்களில் நிசாகுலனும் சக்தியும் மிகவும் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

நிசாகுலன் இதனை ஒரு ஊதியத்துக்காக செய்யும் வேலைபோல கருதாமல் தனது சொந்த புத்தகம் போலக் கருதி தனது முழு ஆளுமையையும் அழகுபடுத்தலையும் செய்து அற்புதமாக வடிவமைத்துள்ளார். அவருக்கு எமது மனங்கனிந்த நன்றிகள்.

அதனைப் போலவே சக்தியும் இந்த புத்தகம் பார்ப்பவர்களின் முதல் பார்வையிலேயே கவரப்பட வேண்டும் என்று தனது உழைப்பைச் செலுத்தியுள்ளார். அவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்

ரொரண்டோ புளூஸ் பற்றிய விபரங்களை சின்னரவி அண்ணா, பகீர் ஆகியோர் முன் நின்று சேகரித்து, செல்வக்குமார் மூலம் கட்டுரை தொகுத்து எமக்கு அனுப்பி வைத்தனர்.

எமது புத்தகத்தை நாம் சரியான முறையில் வடிவமைப்பதற்கு மலர் ஆக்கக் குழு ஆறு பேரும் இடைஞ்சல்கள் இன்றி இருந்து எழுத்து வேலைசெய்வதற்கு ஓர் இடம்





பசீரதன்

தேவைப்பட்டபொழுது, மணிவண்ணன் அவர்கள் கோயில் மண்டபத்தை நாம் பலநாட்கள் பாவிப்பதற்கு கட்டணங்கள் ஏதும் இன்றி எமக்கு அனுமதிதந்திருந்தார்.



மணிவண்ணன்

இறுதியாக இரண்டு இளையவர்கள் பற்றி நாம் இங்கு கட்டாயம் குறிப்பிட வேண்டும். முதலாவது வல்வையில் வசிக்கும் மயூரன், இந்தமலருக்கு 50வீதத்தி ற்கு மேற்பட்ட தரவுகளை நாம் வல்வெட்டித்துறையில் இருந்தே பெறவேண்டி இருந்தது. நாம் கேட்கின்ற விடயங்களைஎல்லாம் தங்கவேல் அண்ணாவிடமும், கட்டி அண்ணாவிடமும் சென்று பெற்றுக் கடையில் தொகுத்து தமிழில் ரைப் செய்து விரைவில் எங்களுக்கு அனுப்பிவைப்பார். அதேபோல் வல்வையில் இருந்துவந்த புதிய படங்கள் எல்லாமே மயூரன் எடுத்து எமக்கு அனுப்பியவையே. தற்பொழுது நடந்த நகரசபைத் தேர்தலில் வெற்றி பெற்று நகரசபை அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மயூரனுக்கு எமது வாழ்த்துக்களும் நன்றிகளும்.



மயூரன்

அடுத்ததாக எமது நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர் செல்வி.சகானா சங்கர் ஆவார். இந்த புத்தகத்தை செய்வதற்கான முயற்சியின்போது புத்தக ஆக்ககுழுவின் மின்னஞ்சலுக்கு 500க்கும் மேற்பட்ட மின்னஞ்சல்களும், ஏறத்தாள 200க்கும் மே ற்பட்ட பழைய புதிய புகைப்படங்களும் வந்திருந்தன. வித்தியாசமான அளவுகளில் வந்திருந்த புகைப்படங்களை ஒழுங்குபடுத்தி அவற்றை புத்தகத்துக்கு ஏற்றவிதத்தில் சரி செய்து சகானா மிகவும் சிறப்பான பணியை செய்து தந்திருக்கின்றார். இங்கிருந்து அச்சிடுவதற்காக அனுப்பப்பட்ட ஆவணங்களை நிரைப்படுத்தி, தரவுப்படுத்தி அற்புதமான உதவியை செய்த அவருக்கு எமது பாராட்டுக்களுடன் நன்றிகளும். வல்வெட்டித்துறையை புகைப்படங்களிலும், கூகிள் செய்மதிபடங்களிலும் மட்டுமே பார்த்திருந்த சகானா மிக ஆர்வமுடன் இந்த வேலைகளை நுண்ணிய பொறுப்புடனும் அழகாகவும் செய்து முடித்திருக்கிறார். இதனால் அவரின் குடும்பத்தினர் அனைவரும் மிக்க மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கின்றனர்.



சகானா

அனைத்திற்கும் மேலாக இந்த புத்தகம் வெளிவருவதற்கான நிதியை வழங்கியவர்கள், அனுசரணையை நல்கியவர்கள், ஆலோசனை கூறியவர்கள் என்று அனைவரையும் நன்றியுடன் இந்த பொன்விழா புத்தகத்தின் ஊடாக வணங்குகின்றோம்.

நன்றி

வல்வை புளூஸ் 50 பொன்விழா நூல் ஆக்கக் குழு சார்பில்

**சங்கர் தேவசிகாமணி**

சாதனைப் பதிவுகள்...



1966 ஆம் ஆண்டு வடமராச்சி சாம்பியன்



1985-1988 பருத்தித்துறை வட்டார சாம்பியன்



1972 ஆம் ஆண்டு J.F.A. சாம்பியன்



கடந்த 20 வருடங்களாக வல்வை புளூசால் இங்கிலாந்தில் விளையாட்டுப் போட்டி நடாத்தப்படுகிறது

சாதனைப் பதிவுகள்...

சாதனைப் பதிவுகள்...



திரு. தங்கவடிவேல் அவாகள் வல்வை புளுசின் அணித்தலைவராக (Caption) இருந்தபோது



திரு. நவரத்தினசாமி அவர்கள் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை புரிந்த போது







ஓர் இறுதிப் போட்டியில், இரு அணியினரையும் மைதானத்திற்குள் வரவேற்பதற்கு தயாராக ரொரண்டோ புளூஸ் முக்கியஸ்தர்கள் மற்றும் நடுவர்கள்.



1993 இல் ரொரண்டோ புளூஸ்சின் பெண்கள் உதைபந்தாட்ட அணி வெற்றிக் கிண்ணங்களுடன்

சாதனைப் பதிவுகள்...



வல்வை புளூஸ் அணி நோர்வேயில்



திருச்சியில் 1985ல்




2011 இல் ரொரண்டோ புளூஸ்சின் 25 ஆவது வருட கொண்டாட்டத்தின் போது



திருச்சியில் 1986இல் Reserve Police அணியினருடன் விளையாடிய ஒரு போட்டியில்

சாதனைப் பதிவுகள்...

சாதனைப் பதிவுகள்...




வல்வையில் 1992, 1993 ஆம் ஆண்டுகளில் வெற்றி பெற்ற கேடயங்களுடன் அணி வீரர்கள்.



வல்வையில் 1994 ஆம் ஆண்டு வெற்றிக் கிண்ணங்களுடன் வீரர்கள்

சாதனைப் பதிவுகள்...



சாதனைப் பதிவுகள்...



1993இல் ரொரண்டோ புளூஸ்சின் பெண்கள் உதைபந்தாட்ட அணியினர் எதிர் அணியினருடன் இணைந்து




இங்கிலாந்து புளூசின் வலைப்பந்தாட்ட அணி

சாதனைப் பதிவுகள்...



1990களில் வல்வை புளூஸ் அணி இங்கிலாந்தில்



1992 இல் வல்வை புளூஸ் அணி இங்கிலாந்தில்

சாதனைப் பதிவுகள்...



சாதனைப் பதிவுகள்...




1996 இல் Netball வீராங்கனைகள் வல்வையில்



Netball வீராங்கனைகள் வெற்றிக் கிண்ணங்களுடன் இங்கிலாந்தில்

சாதனைப் பதிவுகள்...

## சாதனைப் பதிவுகள்...




திரு. ஆழிக்குமரன் ஆனந்தன் அவர்களுக்கு இலங்கை அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட முத்திரை



திரு. ஆழிக்குமரன் ஆனந்தன் அவர்களைப் பாராட்டி திரு. செல்வநாயகம் அவர்கள்

சாதனைப் பதிவுகள்...



சாதனைப் பதிவுகள்...

1961 - 2011 VALVAI BLUE'S GOLDEN JUBILEE SPORTS CLUB




Dr.மயிலேறும் பெருமாள் தஞ்சாவூரில் (இந்தியா) பல்கலைக்கழக அணியில் விளையாடிய போது

திரு. ஆழிக்குமரன் ஆனந்தன் அவர்கள் இங்கிலாந்தில் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்கும் முயற்சிக்கு முன்னர்



1961 - 2011 VALVAI BLUE'S GOLDEN JUBILEE SPORTS CLUB

சாதனைப் பதிவுகள்...



வல்லையில் இன்றைய புளூஸ் அணி 2



வல்லையில் இன்றைய புளூஸ் அணி 1

சாதனைப் பதிவுகள்...